T.N.L.C Debates

Official Report

1984

Vol: 208

D
211,32 'N84
N84.208.1-2
143899

ஆணையர்
ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
11 APR 19
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர் சென்னை-8.
2464 அது/85
278

# தமிழ்நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# அதிகாரபூர்வமான வெளியீடு
# OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 28, 1984—தொகுதி 208-எண் 1
Wednesday, 28th March 1984—Volume 208 - No. 1

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT,
Fort St. George, Madras - 600 009.

விலை ரூ. 2.75]

# பொருளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| | தமிழ் நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | i—viii |
| | தமிழ் நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. .. | ix |
| | தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட (பட்டியல்) .. .. | xi— xiv |
| 1. | வினாக்கள்—விடைகள் .. .. .. | 1—21 |
| 2. | சட்ட மன்ற மேலவை விதி 82-ன் கீழ் அமைச்சரின் அறிக்கை. .. .. .. .. 23-3-1984 தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஆற்றிய உரைக்குத் திருத்தம் குறித்து. | 22 |
| 3. | கவன ஈர்ப்பு— இராமநாதபுரம் மாவட்டத்தில் மூளைக் காய்ச்சல் பரவுதல் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து. .. .. .. .. | 22— 24 |
| 4. | அரசின் தீர்மானம்— தொழிற் கொள்கையும், திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். .. .. .. .. .. | 24—94 |
| 5. | அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள். .. .. | 95 |

143899

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU.

THIRU SUNDAR LAL KHURANA.

*Members of the Council of Ministers.*

1. The Honourable Dr. M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology, Excise and Prohibition excluding grant of Liquor Permit.

2. The Honourable Dr. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Legislature, Elections, Food, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. The Honourable Thiru S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control.

4. The Honourable Thiru K. A. KRISHNASWAMY, Minister for Dairy Development, in charge of Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The Honourable Thiru S. D. SOMASUNDARAM, Minister for Revenue, in charge of Revenue, Commercial Taxes and Census.

6. The Honourable Thiru R. M. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests, Cinchona and Grant of Liquor Permits.

7. The Honourable Thiru C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education including Technical Education and Official Language.

8. The Honourable Dr. K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. The Honourable Thiru C. PONNAIYAN, Minister for Law and Industries, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits, Large Scale Industries and Mines and Minerals.

10. The Honourable Thiru P. KOLANDAIVELU, Minister for Local Administration, in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. The Honourable Thiru S. RAGHAVANANDHAM, Minister for Labour, in charge of Labour, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. The Honourable Dr. H. V. HANDE, Minister for Health, in charge of Health.

13. The Honourable Thiru S. MUTHUSAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

14. The Honourable Thiru S. THIRUNAVUKKARASU, Minister for Handlooms and Co-operation, in charge of Textiles, Handlooms and Co-operation.

15. The Honourable Thiru S. N. RAJENDRAN, Minister for Environmental Pollution Control, in charge of Environmental Pollution Control and Passports.

16. The Honourable Thiru M. VIJAYASARATHI, Minister for Adi Dravidar Welfare, in charge of Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes, Bonded Labour and Employment and Training.

17. The Honourable Thiru R. SOUNDARARAJAN, Minister for Nutritious Meals, in charge of Nutritious Meals.

18. The Honourable Thiru S. R. E. RADHA, Minister for Public Works, in charge of Public Works Department and Establishment matters relating to Public Works Department, Housing and Slum Clearance Board.

19. The Honourable Thiru M. R. GOVENDHAN, Minister for Backward Classes, in charge of Backward Classes.



20. The Honourable Thirumathi GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

21. The Honourable Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY, Minister for Khadi, in charge of Khadi.

22. The Honourable Thiru Y. S. M. YUSUF, Minister for Irrigation and Wakf, in charge of Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. The Honourable Thiru R. ARUNACHALAM, Minister for Rural Industries, in charge of Rural Industries, including Village and Cottage and Small Industries.

24. The Honourable Thiru K. KALAIMANI, Minister for Fisheries, in charge of Fisheries.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு சுந்தர் லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் இதர அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல், ஆயத்துறை மற்றும் மது விலக்கு, மது அருந்த அனுமதிச்சீட்டு வழங்கல் நீங்கலாக.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

நிதி, சட்ட மன்றம், தேர்தல்கள், உணவு, இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம் மற்றும் இரும்பு, எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (பால்வளத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பால், பால்பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வருவாய், வணிக வரிகள் மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. சே. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் வேளாண் பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றிய சட்டம், குழுமங்கள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், பெருந் தொழில்கள் மற்றும் சுரங்கமும், கனிவளமும்.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சி நிர்வாகம், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராம தானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர் நலம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. க. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.



14. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நெசவாலைகள், கைத்தறி மற்றும் கூட்டுறவு.

15. மாண்புமிகு திரு. சோ. மா. இராசேந்திரன் (சுற்றுப்புறச் சூழல் தூய்மைக்கேடு தடுப்புத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சுற்றுப்புறச் சூழல் தூய்மைக் கேடு தடுப்புத் துறை மற்றும் கடவுச் சீட்டு.

16. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

ஆதி திராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், செய்தித் தாள் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் (சத்துணவுத் திட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சத்துணவுத் திட்டம்.

18. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொதுப் பணித் துறை, பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியம்.

19. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பிற்பட்டோர் நலன்.

20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, இரவலர் இல்லம், அனாதை இல்லம், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கதர்.

22. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (நீர்ப்பாசனத் துறை மற்றும் வக்ஃப் அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட நீர்ப் பாசனம் மற்றும் வக்ஃப்.

23. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

24. மாண்புமிகு திரு. க. கலைமணி (மீனளத் துறை அமைச்சர்) கீழ்க் கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மீனளம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

---

மாண்புமிகு மேலவைத் தலைவர் :

டாக்டர் ம. பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :

திரு. ஜி. சுவாமிநாதன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :

1. திரு. சி. இராமலிங்கம்.
2. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
3. திரு. ஏ. ஜே. தாஸ்.
4. திரு. க. அருணாசலம்.

மேலவைச் செயலாளர் :

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர் :

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்சி., பி.எல்.

விவாதப் பதிப்பாளர் :

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

தலைமை திருபர் :

திரு. ச. சுவாமிநாதன் எம்.ஏ.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 1. அங்கமுத்து. திரு. பா. | நியமனம் |
| 2. அருணாசலம், திரு. க. | நியமனம் |
| 3. ஆறுமுகம், திரு. சோ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 4. ஆனந்தம், திரு. வி. வி. வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 5. இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 6. இராதா. திரு. எஸ். ஆர். (பொதுப் பணித்துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 7. இராமமூர்த்தி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 8. இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 9. கண்ணப்பன், திரு. காடுவெட்டி | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 10. கலைமணி, திரு. க. (மீன்வளத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 11. கோலப்பா. திரு. சி. ஆர். | நியமனம். |
| 12. சங்கரலிங்கம், திரு. ம. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 13. சந்தோஷம், திரு. த. | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 14. சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 15. சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 16. சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு மேலவைத் தலைவர்) | நியமனம் |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 17. சித்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 18. சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம் |
| 19. சுப்பிரமணியம், திரு. எம். பி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 20. சுவாமிநாதன், திரு. ஜி. (மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்) | தமிழ் நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 21. தாமஸ், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 22. தாமோதரன், திரு. வ. ஆர். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 23. தாரா செரியன், திருமதி. | நியமனம் |
| 24. நாஸ், திரு. வ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 25. நல்லசிவன், திரு. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 26. மாசிலாமணி, திரு. மு. | நியமனம் |
| 27. மாணிக்கம், திரு. ம. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 28. மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 29. மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 30. முத்து, திரு. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 31. முத்துசாமி, திரு. செ. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 32. முனுசாமி, திரு. பி. | நியமனம் |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 33. யூசுப், திரு. யா. சை. மு. (நீர்ப்பாசனத் துறை மற்றும் வக்ஃப் அமைச்சர்.) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 34. லீலாவதி, செல்வி ஆ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 35. லெட்சுமிகாந்தன், திரு. [illegible] | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 36. வசந்த[illegible], திரு. வி. | சென்னை மாநகர் பட்டதாரிகள் தொகுதி. |
| 37. வலம்புரி ஜான், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 38. வள்ளிநாயகம், திரு. [illegible] | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 39. வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 40. வெங்கடேசன், திரு. ந. எம். | நியமனம் |
| 41. ஜேப்பியார், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 42. ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) | சென்னை மாநகர் பட்டதாரிகள் தொகுதி. |
| 43. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 45. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 46. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 47. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 48. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 49. வெற்றிடம் | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50. வெற்றிடம் | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 53. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 55. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59. வெற்றிடம் | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60. வெற்றிடம் | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 63. வெற்றிடம் | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

புதன்கிழமை, 1984 மார்ச் 28.

பங்குனி 15, ருத்ரோத்காரி—திருவள்ளுவராண்டு 2015.

(இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான, தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் அறுபத்தி ஐந்தாவது கூட்டத் தொடர்.)

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

நட்சத்திரக் குறியிட்ட வினாக்கள்.

### *Tourist and Industrial Fair.*

* 124. *Q*.—Thiru E. S. VENKATESAN and Dr. T. R. JANARTHANAM: Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state :

*(a)* the district centres in which the Government run annually Tourist and Industrial Fairs like the one, run in Madras City every year ; and

*(b)* the profit earned during the year 1981, and so far in 1982, in Madras City and in each of the district centres ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: 'அ' மற்றும் 'இ' ஆகியவற்றிற்கான விடை [illegible] வைக்கப்படுகின்றது.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவரவர்களே, ஆண்டுதோறும் தொடர்ந்து பொருட்காட்சிகளை நடத்தும் யோசனை அரசுக்குண்டா? சென்னை நகரில் [illegible] பொருட்காட்சிகளை நடத்தும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவரவர்களே, சென்னை நகரில் [illegible] ஆண்டுதோறும் பொருட்காட்சிகளை நடத்தும் திட்டத்தின் அடிப்படையில்தான் இப்போது தொடங்கி, நடத்தப்பட்டு வருகிறது. சென்னை நகரில் இப்போது சுற்றுலா வளர்ச்சிக் கழகத்

[illegible] வைக்கப்படுகின்றது.

தின் சார்பிலே நடத்தப்படும் பொருட்காட்சித் திடலிலே நிரந்தரமான பொருட்காட்சியை அமைப்பதற்கும் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அதற்கான திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** தலைவரவர்களே, இன்றைய தினம் சுற்று லாப் பொருட்காட்சிகள் மக்களிடையே செல்வாக்கும், வரவேற்பும் பெற்றிருக் கின்றன. அவை நல்ல லாபம் ஈட்டிக் கொடுக்கின்றன. 1982-க்குப் பிறகு அரசுக்கும் இதனால் நல்ல லாபம் கிடைத்திருக்கும். பொருட்காட்சிகளை அமைக்க நிரந்தரமான திட்டம் இருக்கிறதென்று அமைச்சரவர்கள் சொன் னார்கள். அதை நிரந்தரமாக அமைக்க என்னென்ன திட்டங்கள் இருக் கின்றன? நிரந்தரமாக நாடகக் கொட்டகை, சினிமா தியேட்டர் ஆகியவை கட்ட யோசனை இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவரவர்களே, ஆண்டு தோறும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பொருட்காட்சி நடத்தும் அந்தத் தீவுத் திடலில் நிரந்தரப் பொருட்காட்சி நடத்தும் கொள்கையை அரசு ஏற்றுக் கொண்டு, அதற்காக முதல் நிதி ஒதுக்கீட்டையும் அனுமதித்திருக்கிறது. அந்த இடத்திலே எப்படி பொருட்காட்சியை நிரந்தரமாக்கலாம் என்பதற்கு வரைபடங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. அதற்குரிய நிபுணர்கள் அதைப் பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே நிரந்தரமான கலை யரங்கு ஒன்றை, இப்போது பொருட்காட்சி நேரங்களிலே கலையரங்காகப் பயன்படுத்தும் அந்த இடத்திலேயே நிரந்தரத் திறந்த வெளி கலையரங்காக வைக்கலாமென்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தின் சார்பில் டிரைவ்-இன்-ரெஸ்டாரன்ட் என்று அழைக்கப்படும், மாலை நேரத்திலே பயணிகள் அங்கே வந்து, வாகனங்களிலேயே இருந்து சிற்றுண்டி அருந்த வசதியாக, இப்போது உணவு விடுதி சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பிலே அமைக்கப்பட்டிருக்கிறது. அதைத் தவிர, எப்படி அரங்குகளை நிரந்தரமாக அமைக்கலாம் என்பதற்கு வரை படங்களைத் தயாரிக்க ஆணை யிடப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, அரசு பொருட் காட்சியை நடத்துவதுபோல், தனியாரும் பொருட்காட்சிகளை நடத்த முன் வருகிறார்கள். அவர்கள் நடத்தக் கூடாதென்று தடை செய்வதாகச் சொல் கிறார்கள். அது உண்மையா ? இனிமேல் தனியார் நடத்தும் பொருட் காட்சிகளுக்கு அனுமதி வழங்க அரசு முன்வருமா ?





**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவரவர்களே, நீண்டகாலமாக தமிழகத்தைப் பொறுத்தவரை, இந்தப் பொருட்காட்சிகளை நடத்துவதில் தனியார் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். சில இடங்களிலே நகரசபைகள் நடத்தி வந்திருக்கின்றன. அப்படி நகரசபைகள் நடத்தி வந்த இடங்களிலும் பின்னாலே தனியாருக்குக் குத்தகைக்கு விட்டுவிட்டு, நகரசபைகள் ஒதுங்கிக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட பொருட்காட்சிகளை தனியார்கள் நடத்தும்போது, பொருட்காட்சி என்ற பெயராலே ஒரு சூதாட்டக் களமாக நடத்துவதால், பல்லாயிரக் கணக்கான மக்கள் தினசரி சூதாடும் நோக்கத் தோடு அந்தப் பொருட்காட்சியிலே கலந்து கொண்டு, ஆயிரக் கணக்கான ரூபாய்களை தினசரி இழந்து, அவல நிலைமைக்கு ஆளாகும் வருந்தத்தக்க சமுதாயக் கொடுமை அந்தப் பொருட்காட்சி என்ற பெயராலே நடைபெற்று வருகின்றது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்பதற்காகத்தான் அரசு தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் எல்லாம் இப்படிப்பட்ட பொருட்காட்சிகளை அரசின் சார்பிலே, மக்களுக்குப் பயன் விளையும் வகை யிலே திட்டமிட்டு, ஆரம்பித்து, மிகச் சிறப்பாக அவைகள் நடைபெற்று வருகின்றன. அப்படி நடத்தப்படுகிற பொருட்காட்சியிலே கூட "ஸ்கில் கேம்" என்கிற பெயரிலே அனுமதித்தால், அதை சூதாட்டக் களமாக மாற்றி விடுகிறார்கள் என்பதால், அப்படிப்பட்ட பெயரில் சூதாட்டத்தை நடத்து வதற்கு நாம் அனுமதிப்பதில்லை. சில தனியார் பொருட்காட்சி என்ற பெயரால் மக்களைச் சுரண்டுகிற நிலை இருக்கிறது. பொருட்காட்சி என்கிற பெயரால் இப்படி சூதாட்டம் நடைபெறுவதை அரசு தடுத்து நிறுத்தியபோது, அவர்கள் வழக்குமன்றத்திற்குப் போய் தடை ஆணை பெற்று, நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்படி நடைபெறுவதைத் தடுத்து நிறுத்த, தேவையானால் அரசு ஒரு சட்ட முன்வடிவு கொண்டுவருவதுபற்றிப் பரிசீலித் துக்கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதேநேரத்தில் நியாயமான முறையில் கல்வி நிறுவனங்கள் போன்ற சில அமைப்புகள் அல்லது நகராட்சிகள் அல்லது பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியங்கள் போன்றவைகள் எல்லாம் இப்படிப்பட்ட பொருட்காட்சிகளை நடத்துவதற்கு அரசு அனுமதி வழங்கி வருகிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாவட்டத் தலைநகரங்களில் இப்படிப்பட்ட பொருட்காட்சிகளை நடத்துவதால், அவர்களுக்கு வருமானம் கிடைக்கிறது. இனிமேல் ஊட்டி போன்ற சிறிய மாவட்டத் தலைநகரங்களிலும் இப்படிப் பட்ட பொருட்காட்சிகளை அரசு நடத்துமா ?

[1984 மார்ச் 28

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாவட்டத் தலைநகரங்களில் வருவாய்ச் செலவினங்களை ஈடுகட்டுகின்ற வகையில் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. அடுத்த கட்டமாக சிறிய மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்பட வேண்டுமென்ற திட்டமும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அது தவிர செய்தித் துறையின் மூலமாக சில குறிப்பிட்ட ஊர்களில் எல்லாம் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. அதையும் ஒரு குறிப்பிட்ட அளவில் மக்களைக் கவர்கிற அளவில், தரத்தை உயர்த்துகிற வகையில், நடத்த வேண்டுமென்ற திட்டமும் செய்தித் துறையினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** சென்னையில் நிரந்தரமாகப் பொருட்காட்சி நடத்தப் போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எப்போது முதல் நிரந்தரமாக ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அரசு அதற்கு அனுமதி வழங்கியிருக்கிறது. அதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தனிக் கேள்வி கேட்டால், முழு விவரமும் தரப்படும்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** காங்கிரஸ் மைதானத்தில் நடைபெறுகிற பொருட்காட்சியில் இப்படிப்பட்ட சூதாட்டங்கள் நடைபெறுவதாக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா ? அப்படி இதுவரை தகவல் வரவில்லையென்றால், இதையே நான் தகவலாகத் தருகிறேன். அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா கேட்ட கேள்விக்குத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்கள் இப்பொழுது விளக்கம் தந்துகொண்டிருக்கிறார். (சிரிப்பு)

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** காங்கிரசை நான் எதிர்க்கவில்லை. காங்கிரசால் அந்தப் பொருட்காட்சி நடத்தப்படவில்லை. தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் அந்தப் பொருட்காட்சி தனியாரால் நடத்தப்படுகிறது.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்களும் அந்தப் பொருட்காட்சியை காங்கிரஸ் கட்சி நடத்துவதாகக் குறிப்பிடவில்லை. காங்கிரஸ் மைதானத்தில் இப்படி பொருட்காட்சி என்கிற பெயரால் சூதாட்டக் களம் நடைபெறுகிறது. சென்ற ஆண்டு இம்மாதிரி நடைபெற்றபோதும், நாங்கள் நடவடிக்கை எடுத்தவுடன், நீதிமன்றத்திற்குப் போய் தடை ஆணை பெற்றுவிட்டார்கள். தொடர்ந்து நடத்தினார்கள்.



1984 மார்ச் 28]

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பாராட்டி, நாட்டிலுள்ள லட்சக்கணக்கான மக்கள் எல்லாம் பாராட்டி, போற்றுகிற வகையில், நம்முடைய சுற்றுலாத் துறை நடத்திய பொருட்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, அதற்குப் போட்டியாக அவர்கள் பொருட்காட்சி என்கிற பெயரால் சூதாட்டத்தை நடத்திக்கொண்டிருந்தார்கள். சமீபத்தில் காவல் துறையினர் அங்கே நுழைந்து பலரைக் கைது செய்திருக்கிறார்கள். அப்பொழுது பொருட்காட்சி என்கிற பெயரால் சூதாட்டத்தை நடத்தியவர்கள் காவல் துறையினரையே தாக்குகிற அளவுக்கு பலம் பொருந்தியவர்களாக இருந்திருக்கிறார்கள் என்றால், இப்படி சூதாட்டம் நடத்தி சம்பாதிப்பவர்களுக்கு சிலர் பின்னணியாக இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் வலுவாக இருக்கிறார்கள். ஒரு வேளை அரசு ஆணைகளின்மூலம் இதனைத் தடுத்துநிறுத்த முடியவில்லை என்றால், சட்ட முன்வடிவு ஒன்று கொண்டுவந்து அதன்மூலமாவது இந்தத் தீமைகளை ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை, நான் முன்னரே தெரிவித்ததை, மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## வனவிலங்குகள்.

* 125. **வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகக் காடுகளில் வாழும் யானை, புலி, காட்டெருமை போன்ற மிருகங்களின் எண்ணிக்கையை, ஆண்டுதோறும் கணக்கு எடுப்பதுண்டா ?

(இ) ஆம் எனில், 1982-83ஆம் ஆண்டு கணக்கெடுப்புப்படி மேற்கண்ட மிருகங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(உ) மேற்படி மிருகங்களில், குறிப்பாக யானைகள் பெருமளவுக்கு கேரள, கர்நாடக மாநிலக் காடுகளுக்குச் செல்லுவதாகச் சொல்லப்படுவது உண்மையா ?

(எ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: (அ) இல்லை. ஆயினும், புலிகளின் கணக்கெடுப்பு ஐந்தாண்டிற்கு ஒருமுறையும், மற்ற வனவிலங்குகளின் கணக்கெடுப்பு தேவை மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்து இரு ஆண்டுகளுக்கு ஒரு முறையும் நடைபெறுகின்றன.

(இ) யானைகள்—2,179 (30—4—1983-ம் தேதிய கணக்கெடுப்பு)

புலி—65 (1979-ம் ஆண்டு கணக்கெடுப்பு)

காட்டெருமை—2,244 (30—4—1983-ம் தேதிய கணக்கெடுப்பு)

(உ) மற்றும் (ஏ) பெரியார் மாவட்டத்தில் உள்ள யானைகள் 1983-ல் நிலவிய கடும் வறட்சியால் ஏற்பட்ட தண்ணீர் தட்டுப்பாட்டின் காரணமாக கர்நாடக மாநிலத்திற்குச் சென்றன. இவைகள் நீர் வசதி, புல், தழை, வசதி பெருகியவுடன் திரும்ப வரக்கூடும். வறட்சியின் காரணமாக யானைகள் சென்றதால், வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் சுமார் ரூ. 40 இலட்சம் செலவில் வனவிலங்குச் சரணாலயங்கள் மற்றும் காப்புக் காடு பகுதிகளிலும் அதன் அருகில் உள்ள பகுதிகளிலும் நீர் நிலைகள் வெட்டி வருங்காலத்தில் நீர் தேக்க ஏற்பாடுகள் முடிந்தவரை செயல்படுத்தப்பட்டுள்ளன.

(முற்பகல் 10—10.)

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, காட்டெருமை கோவை மாவட்டத்தில் ஆனைமலைப் பகுதியில் அதிகமாக இருக்கிறது. இந்தியாவிலேயே வேறு எங்கும் அதுமாதிரி இனம் இல்லையென்று சொல்கிறார்கள். காட்டுக்குள்ளே பல பேர் புகுந்து காட்டெருமைகளை வேட்டையாடி, சுட்டு அரசாங்கத்திற்கு நஷ்டத்தை உண்டு பண்ணுகிறார்கள். அதைப் பாதுகாப்பதற்காக அந்த ஆனைமலைப் பகுதியை விலங்குகள் சரணாலயமாக ஆக்குவதற்கான திட்டம் ஒன்று ஏற்கெனவே இருந்தது. அதை துரிதப் படுத்தி, அப்படி காட்டெருமையை வேட்டையாடி அழிக்கிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: தலைவர் அவர்களே, ஆனைமலைப் பகுதியே இப்போது வனவிலங்குகள் சரணாலயம் என்ற முறையில் அறிவிக்கப் பட்டு, அது இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அது பாதுகாப்பு சரணாலயம்தான். அந்தப் பகுதியில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதைப் போன்று மிக அற்புதமான ஜாதியாக அந்த காட்டெருமைகள் இருக்கின்றன. அதுமட்டுமல்ல, பல மிகச் சிறந்த உயிரினங்கள் அந்தப் பகுதியில் இருப்பதாகவும், அதைப்போலவே எந்த வனப்பகுதியும் இந்தியாவிலேயே கூட அப்படிப்பட்ட இயற்கைச் சூழலில் இல்லையென்றும், அது பல்வேறு ஜாதி மரங்கள், பல்வேறு தாவர இன அமைப்புகளைக் கொண்ட காடுகள் நிறைந்த பகுதியாக இருக்கிறது என்றும்



சொல்லி, அதை ஒரு தேசியப் பூங்காவாக அமைக்க வேண்டுமென்று மத்திய அரசு நம்மைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. அதை மாநில அரசும் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அப்படி ஒரு தேசியப் பூங்காவாக அறிவிக்கிறபோது, சிறந்த முறையில் பாதுகாக்க முடியும். ஆனால் இப்போது மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் மிருகங்களை வேட்டையாடிக் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவைகளைப் பொழுதுபோக்காகவும், சாப்பிடவும் கொல்கிறார்கள். காரணமே இல்லாமலும் கொல்லு கிறார்கள். அப்படிக் கொல்லுகிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்காக இப்போது வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின்படி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அப்படி பலரும் பிடிக்கப்பட்டு தண்டிக்கப் பட்டும் வருகிறார்கள். இன்னும் கடுமையான முயற்சிகள் மேற்கொண்டு அந்த உயிரினங்களைக் காக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஊட்டி-மைசூர் சாலையில் முதுமலை சரணாலயம் சாலைக்குப் பக்கத்தில் இருப்பதால், போகிற வாகனங்கள் ஒலி எழுப்புகிற காரணத்தால், புலிகளே கிலி அடைந்து ஓடிவருவதாகச் சொல்கிறார்கள். அதனால் வேகக் கட்டுப்பாடு, ஒலி எழுப்பக்கூடாது போன்ற கட்டுப்பாட்டினைச் செய்யும் யோசனை அரசுக்கு உண்டா? மேலும் கேரளாவிற்கு யானைகள் போவதற்குக் காரணம் ஒருவேளை கேரள அரசின் சின்னம் யானையாக இருப்பது, ஒரு கவர்ச்சியாக இருக்கிறது என்று அரசு கருதுகிறதா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவர் அவர்களே, யானையைப் போன்ற விலங்கினங்கள் இயற்கையின் நியதிக்குக் கட்டுப்பட்டு அற்புதமான வாழ்க்கையை நடத்திக்கொண்டு வருகின்றன. பகுத்தறிவு படைத்த விஞ்ஞானம் தெரிந்த அறிஞர்களாக வாழ்கிறோம் என்று கூறிக்கொள்கிற மனிதர்களுக்கு ஒரு மிகச் சிறந்த எடுத்துகாட்டாக அதனுடைய வாழ்க்கை முறை அமைந்திருக்கிறது. இன்றைக்கு நாமெல்லாம் அதைத் தெரிந்து கொண்டிருக்கிறோம். இப்போது என்ன நடக்கிறது? கர்நாடகத்தில் என்ன நடக்கிறது? தமிழகத்தில் என்ன நடக்கிறது? வேறு மாநிலங்களில் என்ன நடக்கிறது? மனிதர்களை மனிதர்கள் எப்படி துவேஷமாக, குரோதமாகப் பார்க்கிறார்கள், எப்படிக் கொடுமைப்படுத்துகிறார்கள், கொலை கூட செய்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். ஆனால் விலங்கினங்கள் அப்படி அல்ல. இங்கேயிருந்து கேரள எல்லைக்குப் போகின்றன. கர்நாடக எல்லைக்குப் போகின்றன. அங்கிருந்து மறுபடியும் இங்கே வந்துவிடுகின்றன. இந்த விலங்கினங்களைப் பொறுத்தவரையில் இந்த நிலப்பரப்பெல்லாம் எல்லோ

ருக்கும் சொந்தம். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று புலவர்கள்தான் சொன்னார்கள். ஆனால் அதை விலங்கினங்கள்தான் நடைமுறைப்படுத்திக் காட்டுகின்றன. அதைப் பார்த்தாவது நாம் ஒற்றுமையாக இருந்தால், இந்த நாட்டுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கடும் வறட்சியின் காரணமாக தண்ணீர் கட்டுப்பாட்டின் காரணமாக, கேரள-கர்நாடக மாநிலங்களுக்கு யானைகள் சென்றிருப்பதாகவும் அந்த வறட்சியைப் போக்கும் அளவில் இங்கே நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதால் அவைகள் இங்கே திரும்பி வரும் என்றும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். வேறு வேறு மாநிலங்களுக்குச் சென்றிருக்கக்கூடிய யானைகள் நம் நாட்டின் சொத்துதானே. அவைகள் திரும்ப வர சிறப்பான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது அவைகள் தானாகவே திரும்பி வரட்டும் என்று இருக்கிறார்களா? அப்படி சிறப்புத் திட்டம் இருந்தால் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதுகூட [illegible] நாடு [illegible] கான் சிட்டிசன்ஷிப் நம்மிடம்தான் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, முதுமலை வன விலங்கு சரணாலயத்தின் வழியாகத்தான் நீலகிரி—மைசூர் நெடுஞ்சாலை போகிறது. நீண்ட நெடுங்காலமாக அந்தப் பாதை இருக்கிற காரணத்தால், அதை இப்போது தடுத்து நிறுத்த முடியாது. போக்குவரத்தைத் தடுத்தால், அது வேறு சில பிரச்சினைகளை மக்களுக்கு எழுப்பிவிடக்கூடியதாக அமைந்துவிடும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேகக் கட்டுப்பாடு அல்லது ஒலி எழுப்புவதற்கான தடைகளை ஏற்படுத்தலாமே என்று யோசனை தெரிவித்தார்கள். நாம் ஒரு உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும். நம் நாட்டு மிருகங்கள் சில ஒலிகளையும் சத்தங்களையும் கேட்டுப் பழக்கப்பட்டுவிட்டால், பிறகு அவைகளுக்காக அந்த மிருகங்கள் பயப்படுவதில்லை. அவைகள் மனிதனைக் கண்டுதான் பயப்படுகின்றன. எனவே அந்தப் பகுதிகளில் மனித நடமாட்டத்தைத்தான் குறைக்க வேண்டுமே தவிர, ஒலிகளைக் குறைப்பதால் பயன் ஏதும் இராது. காரணம் மனிதர்களைக் கண்டுதான் மிருகங்கள் பயப்படுகின்றன. எப்போதும் வனவிலங்கு சரணாலயத்திற்குப் போகும்போது—நான் சொல்வது உங்கள் வழக்கம் இருக்கிற முறையாகும்—"தயவுசெய்து அதிகமாகச் சத்தம் போட்டுப் பேசாதீர்கள்' என்கிறார்கள். காரணம் மனித சத்தத்தைக் கேட்டுத்தான், அவைகள் அவ்வளவு ஒலி பிடிக்காமல் போய்விடுகின்றன, பயந்து போய்விடுகின்றன.



ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கின்றன.

அடுத்து, கேரளாவில் யானையை அவர்கள் சின்னமாக வைத்திருக்கிறார்கள் என்ற காரணத்தால்தான் அவைகள் அங்கே கவர்ச்சியாகப் போய்விடுகின்றனவோ என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் யானைச் சின்னத்தை வைத்திருப்பதாலேயே யானையைக் கொன்று விடுவார்களோ என்று அந்த யானைகள் பயந்து அங்கே போகாமலும் இருக்கக்கூடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஊட்டி-மைசூர் போன்ற இடங்களுக்கு வனவிலங்குப் பகுதிகளில் சாலை வசதி செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சாலை வழியாகத்தான் அங்கெல்லாம் சென்றடைய வேண்டியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால், அந்தப் பாதையில் செல்லும்போது ஒலி எழுப்பக்கூடாது என்று தோன்றுகிறது. அந்த வகையில் உத்தரவு போடப்பட்டு விடுமோ என்று எண்ணுகிறேன். உண்மையில் மனிதன் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அந்தப் பாதையில் ஒலி எழுப்பினால்தான், யானை, புலி போன்றவைகள் ஓடும். பஸ் ஹாரன் சத்தம் மூலமாகத்தான் அவைகளை ஓடச் செய்ய முடியும். எனவே அதைத் தடை செய்யும் உத்தரவைப் போடாமலிருக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்த அனுபவம் வரவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். அந்த ஒலியைக் கேட்டு அந்த மிருகங்கள் ஓடுவதே இல்லை. சாலைகளின் குறுக்கே யானை போன்ற மிகப் பெரிய மிருகங்கள் வந்துவிட்டாலே, அவர்கள் சொல்லுகிற யோசனையே "அமைதியாக இருங்கள்", "சத்தம் போடாமல் இருங்கள்", "அவைகளுக்குத் தொந்தரவு விளைவிக்காமல் இருங்கள்", "அப்படியானால்தான் அவைகள் தாமாகவே போகும். நீங்கள் ஏதாவது தொல்லை கொடுப்பதாக அவை நினைத்தால்தான், அவை உங்களை எதிர்த்துத் தாக்க ஆரம்பிக்கும்" என்பார்கள். யானை எதிர்த்துத் தாக்க ஆரம்பித்தால், மனிதன் தாக்குப் பிடிக்க மாட்டான். அப்படிப்பட்ட சம்பவங்கள்தான் சமீபத்தில் இரண்டு நடைபெற்றிருக்கின்றன. ஸ்ரீரங்கத்தில் நீண்டகாலமாக யானையோடு பழகிய மாவுத்தன் ஒருவன்—அவனும் மனிதப் பிறவிதானே—எல்லாத் தவறுகளையும் செய்வதற்குத்தானே

மனிதனுக்கு இந்த மிக உயர்ந்த பிறவியே கிடைத்திருக்கிறது!—அவன் நன்றாகக் குடித்துவிட்டு, குடித்ததன் சேஷ்டையை அந்த யானையிடமே காட்டியிருக்கிறான். உடனே அது அவனைத் தன் காலின்கீழ் போட்டு மிதித்துவிட்டது. யானையின் மாவுத்தனுக்கே இந்த நிலை. அதைப் போலத்தான் மன்னார்குடியில் நடைபெற்றது. நல்ல பழகிய யானைதான் அதுவும் அவன் அதைக் கூப்பிட்டுக் கொண்டு போகிறான். அங்கேயும் ஒரு புண்ணியவான்—அவனும் மதுவுக்கு அடிமையாகியிருக்கிறான். அவன் மணியமோ, கணக்குப்பிள்ளையோ சரியாக நினைவில்லை—அவன் குடித்துவிட்டு சும்மா இல்லாமல் யானையைப் போய் கட்டிப்பிடித்து முத்தம் கொடுக்கிறேன் என்று வம்பு செய்திருக்கிறான். அதுவும் அவனைப் போட்டு மிதித்துவிட்டது. . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அது பெண் யானையோ! (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** ஆகவே ஒலிகளை எழுப்பி மிருகங்களை எல்லாம் மிரள வைப்போம் அல்லது ஓட்டி விடுவோம் என்ற முறையே தவறு. அமைதியாக இருந்து, அந்த மிருகங்களை அவைகளின் போக்கிலேயே விட்டுவிட்டால், அவை மனிதனை ஒன்றும் செய்யாமல் அவைகளின் போக்கிலேயே போய் மறைந்து ஒதுங்கிக்கொள்ளும். ஆகவே சூழ்நிலைக்கு ஏற்பதான் ஆணைகள் பிறப்பிக்கப்படுமே தவிர, வேறல்ல. மனித உயிர்களுக்கு ஆபத்து விளைவிக்கிற வகையில் அவை இருக்காது. என்ன தவறு செய்தாலும், நாம் மனித இனத்தைப் பாதுகாத்துத்தான் தீர வேண்டும். எனவே அதற்கான முறையில்தான் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யானைகள் எவ்வளவு, புலிகள் எவ்வளவு காட்டு எருமைகள் எவ்வளவு என்றெல்லாம் இங்கே கணக்குச் சொன்னார்கள். இந்தக் கணக்கு எப்படி எடுக்கப்பட்டது? வனவிலங்குகளில் தமிழகத்தைச் சேர்ந்தவை என்றும் கேரளத்தைச் சேர்ந்தவை என்றும் கருநாடகத்தைச் சேர்ந்தவை என்றும் எவ்வாறு கண்டுபிடிப்பது? அதற்காகத் தனியாக வழிவகைகள் ஏதேனும் இருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, வனங்களில் விலங்குகளைக் கணக்கெடுப்பதற்கு ஒரு முறையை வைத்திருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயித்துக்கொள்கிறார்கள். ஒவ்வொரு பகுதியாய் வனத்தைப் பிரித்துக்கொண்டு ஆங்காங்கே அதிகாரிகளை நிறுத்துகிறார்கள். அப்படி ஒரே காலத்தில் அந்தந்தப் பகுதிகளில் கண்ணுக்குத் தென்படுகிற விலங்குகளையெல்லாம் உடனே கணக்கெடுத்துக் கொள்கிறார்கள்.



(முற்பகல் 10-20)

இப்படி ஒரு அடிப்படையை வைத்துக்கொண்டுதான் கணக்கு எடுக்க முடியும். அதைத் தவிர நம்மாலே வேறு எதையும் செய்ய முடியாது. முறையாகக் கணக்கு எடுக்கிற மனிதர்களில் ஓர் இடத்தில் இரண்டு கணக்குகள் சொல்லுகிறார்கள். ஆனால் மிருகங்கள் அப்படிச் செய்வதில்லை. இயற்கையாக அதன் நடமாட்டத்தைக் கணக்கிட்டு, பகுதி பகுதிகளாகப் பிரித்து, ஆங்காங்கே அதிகாரிகளை நிறுத்தி, குறிப்பிட்ட நேரத்திற்குள் அந்தப் பகுதிக்குள் எத்தனை மிருகங்கள் வருகின்றன என்ற கணக்கு எடுக்கப்படுகிறது. தொடர்ந்து கணக்கிடும்போது, தமிழகத்திலே எத்தனை ஆண்டுதோறும் வருகின்றன என்ற கணக்கை வைத்து தமிழகத்து யானை என்றும், கர்நாடகா யானை என்றும் கணக்கு எடுக்கிறோம்.

## எண்ணெய் வித்துக்கள்.

*126 வினா.—**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு வேளாண்மைத் துறை, கோடைகால சாகுபடித் திட்டத்தின்கீழ், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை 25 சதவிகிதம் உயர்த்த, திட்டமிட்டிருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்குரிய குறியீட்டு அளவு ( Target ) எவ்வளவு?

(உ) குறியீட்டு அளவை அடைய, அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) ஆம்.

(இ) கோடைப்பருவத்தில் நிலக்கடலை, எள் மற்றும் சூரியகாந்தி எண்ணெய் வித்துக்கள் 5.16 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் 5.775 இலட்சம் மெட்ரிக் டன்கள் உற்பத்தியினை அடைய தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(உ) குறியீட்டு உற்பத்தியை அடைய தரமான எண்ணெய் வித்துக்கள் அதிகமான அளவில் விதைப் பெருக்கம் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

[1984 மார்ச் 28

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத்தை எந்தெந்த மாவட்டங்களில் நடைமுறைப்படுத்த அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பரவலாக தமிழகம் முழுவதும்.

### புதிய வேளாண்மைப் பல்கலைக் கழகம்

* 127. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தமிழகத்தில், புதிய வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்றைத் தொடங்கும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) இல்லை.

(இ) வினாவிற்கிடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : பல்கலைக் கழகம் இல்லையென்றாலும் கல்லூரி அளவிலாவது ஏற்படுத்தும் உத்தேசம் அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் காளிமுத்து : அடுத்த ஆண்டு புதிய கல்லூரி திருநெல்வேலி மாவட்டம் கிள்ளிக்கூடத்தில் துவங்கப்படுகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்தியாவில் உள்ள சில மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழகத்திற்குத்தான் இன்னும் மூன்று, நான்கு வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் தேவைப்படுகின்றன என்ற கருத்துரையை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு வந்தபோது, நிபுணர் குழு கொடுத்துவிட்டுச் சென்றிருக்கிறது. வேளாண்மைப் பல்கலைக் கழகம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கல்லூரியைக் கூட ஒரே ஒரு மாவட்டத்திலே ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக விவசாய உற்பத்தியில் முன்னணியில் இருக்கின்ற மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம். ஆகவே வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரியை ஆரம்பிக்கும் உத்தேசம் இருக்கிறதா ?



1984 மார்ச் 28]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது போல, வேளாண்மைப் பட்டதாரிகள் நிரம்பத் தேவைப்படுகிறார்கள். பல்வேறு செயல் திட்டங்களை நிறைவேற்ற அப்படி பட்டதாரிகள் தேவைப்படுகிறார்கள் என்பது உண்மை. ஆனால் நம்முடைய நிதிநிலைமை, ஒரு புதிய கல்லூரியைத் தொடங்க ஆகும் செலவு ஆகியவைகளை கணக்குப் பார்த்து, திட்டத்தைச் செயல்படுத்த வேண்டியிருக்கிறது. இப்போது நெல்லை மாவட்டத்திலே தொடங்கப்படாமலும், தஞ்சையை அடுத்து இருக்கின்ற காட்டுத் தோட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்திலும் தொடங்குகிற செயற்குறிப்பும் அரசிடம் இருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய வேளாண்மைக் கல்லூரி வரவிருக்கிறது என்று சொன்னார்கள், மகிழ்ச்சி. நீலகிரி மாவட்டத்திலே மலைப் பயிர்களுக்காக தனிப் பயிற்சி கொடுக்க வேண்டும் என்பதை அரசு உணர்கிறதா ? இப்போதுள்ள பயிர்கள் மழை, வறட்சி ஆகியவற்றால் பாதிக்கப்படுவதால், அதற்கேற்ற புதிய பயிர் வகைகளைக் கண்டுபிடிக்கிற வகையில் தொடர்ந்து ஆராய்ச்சி செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : நீலகிரி மாவட்டத்திலே போதுமான அளவிற்கு அலுவலர்கள் இருந்து பணியாற்றி வருகிறார்கள். ஆகவே உடனடியாகத் தேவையேதுமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: புதிதாக வேளாண்மைக் கல்லூரியை வருகின்ற ஆண்டிலே திருநெல்வேலி மாவட்டத்திலே தொடங்க இருப்பதாகவும் அதற்கடுத்த ஆண்டிலே தஞ்சை மாவட்டத்திலே தொடங்க உத்தேசித்திருப்பதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விவசாயத்திற்கு முக்கியமான இடமாகக் கருதப்படுவது தஞ்சை மாவட்டம். கல்லூரியை ஆரம்பிப்பதிலே தஞ்சை மாவட்டத்திற்கு இரண்டாவது இடம் கொடுத்திருக்கிறார்கள். என்றாலும் அங்கே பல்கலைக் கழகமாகவே தொடங்க நடவடிக்கை எடுக்க—இப்போது செயற்குறிப்பு இல்லாவிட்டாலும்கூட—அரசு மீண்டும் பரிசீலித்து செயற்குறிப்பை உருவாக்குகிற முயற்சியில் ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : எதிர்காலத்திலே சிந்திப்போம்.

**திரு. சி. இராமலிங்கம் :** தினை என்ற தானியம் இருந்தது. தினை மாவும் முருகனுக்கு வள்ளி கொடுத்ததாக வரலாறு. தேனும் வாகு என்று ஒரு பொருள் இருந்தது. இவையெல்லாம் இப்போது அதைப் போலவே கிறதா? மேலும் கலப்பு இனத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யும்போது, இருக் யையும் ஆராய்ச்சி செய்து மக்களுக்கு அளிப்பார்களா? தினை தினையும், வாகும் நல்ல சத்துணவு. ஏனென்றால் அதற்குரிய ஆராய்ச்சி வேளாண்மைத் துறையிலே செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, அவைகள் எல்லாம் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அத்தகைய உணவுப் பழக்கத்தை இப்போதும் மேற்கொண்டால், அவைகளைக் கொடுப் பதற்கு முயலும். அவர்களே அத்தகைய வழக்கத்தைப் பின்பற்றவில்லை என்று கருதுகிறேன். அவர்களுக்குத் தேவைப்பட்டால், அவைகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

**தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்கள்.**

*** 128 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு சுற்றுப்புற சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்களினால் ஏற்படும் விளைவுகள் பற்றி ஆராய்ந்து அவற்றை நீக்கு வதற்கான வழிமுறைகளைக் கூறுவதற்காக அமைக்கப்பட்ட மேல் மட்டக் குழு, அதன் அறிக்கையை தமிழக அரசுக்கு அனுப்பி உள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** (அ) ஆம்.

(இ) அறிக்கையின் பரிந்துரைகளை அரசு பரிசீலித்து 12—11—1983 நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண் 7-ல் ஆணை பிறப்பித்துள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான விவரங்களை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?



**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்:** தலைவர் அவர்களே, இக் குழு, தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கழிவு நீரை வெளியேற்றுவதுபற்றிக் கலந்து ஆராய்ந்து கழிவு நீரைச் சுத்திகரித்து வெளியேற்றுவது பற்றியும், இதனைச் செயல்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைகள் பற்றியும் ஆராய பல்லாவரம், குரோம்பேட்டை ஆகிய இடங்களில் அமைந்துள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளைப் பார்வையிட்டது. இக் குழு 18—1—1983 தனது அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்தது. இவ்வறிக்கையிலே செய்யப் பட்ட பரிந்துரைகளை அரசு ஆராய்ந்து சில மாற்றங்களுடன் 12—11—1983 நாளிட்ட அரசு ஆணை எண். 7ல் ஆணை பிறப்பித்தது. இதன்படி தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அனைத்தும் தமிழ் நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதல் பெற, இவ்வாணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும். தமிழ் நாடு மாசுக் கட்டுபாடு வாரியத்தின் ஒப்புதல் பெற்ற ஓராண்டுக் காலத்திற்குள் தொழிற்சாலை கழிவு நீர் சுத்திகரிப்பு உபகரணங்களை நிறுவ வேண்டும். தொழிற்சாலைகளுக்கு பொதுவாக 31—5—1984 வரை இசைவு பெறவும், விண்ணப்பங்கள் அனுப்ப அவகாசமும் வழங்கப்பட்டு இவ்வாணைகளை அமுல்படுத்துவதில் ஒவ்வொரு தொழிற்சாலையும் எந்த அளவில் முன்னேறி இருக்கிறதென்பதைத் தமிழ் நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்கள் ஆற்று நீரில் கலந்து, அதன் காரணமாக ஏற்பட்டிருக்கின்ற, உருவாக்கப்பட்டிருக் கின்ற வியாதிகளைச் சமாளிக்க முடியாமல் மருத்துவர்கள் திணறுகிறார்கள். ஆகவே இந்த அரசு ஆணை வெளியிடப்பட்ட பிறகு, இந்த ஆணையில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்கி, சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் நடவடிக்கைகள் எடுக்க முன் வந்திருக்கின்றனவா? வட ஆற்காடு மாவட் டத்தில் இவ்வாறு நிறையத் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கிருந்து வெளியேற்றப்படுகிற கழிவுப் பொருட்கள் பாலாற்று நீரில் கலந்து, அதே பாலாற்று நீரைக் குடி நீராக மக்கள் பயன்படுத்துகின்ற காரணத்

தினால், பரவலாக அவர்கள் நோய்களுக்கு ஆளாகின்றார்கள் என்ற ஒரு புகாரும் இருக்கின்றது. ஆகவே கடந்த காலத்தில் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட தோல் தொழிற்சாலைகளுக்கும் இந்த நிபந்தனைகள் பொருந்துமா? அந்த நிபந்தனைகள் பொருந்தும்படியான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, இது சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட வாரியமாக இருக்கிற காரணத்தினால், இந்தக் குழுவினுடைய பரிந்துரையின் அடிப்படையில், கருவிகளைப் பொருத்த வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. புதிதாக தோல் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்க வேண்டுமென்றால், வாரியத்தின் அனுமதி பெற்ற பின்னர் தான் லைசென்ஸ் கொடுக்கிறார்கள். ஏற்கெனவே ஆரம்பித்து நடந்துகொண்டிருக்கிற தொழிற்சாலைகளுக்கு 'அல்டிமேட்டம்' மாதிரி ஒரு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். 31—5—1984-க்குள் வாரியத்தில் பதிந்து கொள்ள வேண்டும். அதன் பின்னர்தான் அவர்களுக்கு அறிவுறுத்தல் கொடுக்கப்படும். இந்த மாதிரி உபகரணங்களை மாற்ற வேண்டும், சுத்திகரிப்பாகத் தண்ணீர் வெளிவர வேண்டும் என்று சொல்லக் கூடிய அறிவுறுத்தல்கள் கொடுக்கப்படும். ஓராண்டுக்குள் அந்தக் கருவிகளை அந்தத் தொழிற்சாலைகள் நிறுவ வேண்டும். இதைப் பற்றி யார் யார் பதிவுசெய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தொடர்ச்சியாக வாரியம் கவனித்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, பொதுவாக தொழிற்சாலையை விரிவாக்க வேண்டுமென்று சொன்னால், அது வாரியத்தினிடத்திலே அனுமதி பெற்றாக வேண்டும். ஆனால், ஏற்கெனவே வாரியத்தினிடத்திலே அனுமதி பெறாமல் நடந்து கொண்டிருக்கிற தொழிற்சாலைகளின் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையைக் கட்டுப்படுத்துவதற்காக, நிலம், நீர், காற்று என்ற அடிப்படையிலே ஏர் பொலூஷன் ஏற்படுத்துகின்ற, காற்றை மாசுபடுத்துகின்ற தொழிற்சாலைகளுக்கு ஏற்கெனவே 6 மாதம் தவணை கொடுக்கப்பட்டு, 31—3—1984க்குள் திருத்த வேண்டும் என்ற வரையறை கொடுக்கப்பட்டு காலம் முடிகிறது. இப்படிப்பட்ட கழிவு நீரையெல்லாம் சரிப்படுத்துவதற்கு என்று 6 மாதம் தவணையாகக் கொடுக்கப்பட்டு, காலம் 31—3—1984-ல் முடிகிறது. இப்படிப்பட்ட தொழிற்சாலைகளையெல்லாம் பதிவு செய்ய வேண்டும் என்றும் சட்டத்தில் வழிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப் பதிவு செய்ய வேண்டும் என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்தும், பல்வேறாகப் பேசப்பட்டும், அதிகாரிகள் மூலம் சொல்லப்பட்டும் இருக்கின்றது. அப்படியும் அதைப் பதியாமல் அலட்சியப்படுத்துகின்ற தொழிற்சாலைகளை நாம் பக்குவமாக அணுக வேண்டியிருக்கிறது. காரணம் அது ஒரு 'சென்சிடிவ் பிராப்ளம்'. தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது, தொழிற்சாலைகளும் மூடப்பட்டுவிடக்கூடாது. அதே நேரத்தில் நிலம், நீர், காற்று சுத்தப்படுத்தப்பட வேண்டும். இதற்குப் பொறுப்பாக இருப்பவர்கள் தொழிற்சாலை அதிபர்கள்தான், 'ஓனர்ஸ்' தான்., 'புரோப்ரைட்டர்ஸ்', 'மேனேஜிங் டைரக்டர்ஸ்' தான் இதற்கு 'ரெஸ்பான்சிபில்'. ஆலை தொடங்கும்போது இதைச் செய்திருக்க வேண்டும். அப்படி அப்போது செய்யத் தவறிய காரணத்தினால், இப்போது அச்சுறுத்திச் சொல்கிறோம். அப்படியும் இந்த வாரியத்தில் பதிவு செய்யவில்லை என்றால், விதி 24, 25-ன் கீழ் கிரிமினல் கோர்ட்டிலே, பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலே வழக்குப் போடுகின்றோம். லேபரர்ஸ் மேலேயல்ல. தொழில் அதிபர்கள் மேல் வழக்கு தொடுத்து அவர்களை கோர்ட்டுக்கு முன் வரவழைத்து, தவறு இருக்கும் என்றால், அவர்களுக்கு இரண்டு ஆண்டுக்காலம் கடுங்காவல் தண்டனை கொடுக்கக்கூடிய அளவுக்கு வழிவகை செய்யப்பட்டிருக்கின்றது. அந்தத் தொழில் அதிபர்கள் இந்த குறிப்பிட்ட கால வரையறைக்குள் பதிவு செய்துகொள்ள

வேண்டும். பதிவு செய்யாவிட்டாலும், அதற்கு தண்டனை கொடுக்க சட்டத்திலே வழிவகுக்கப்பட்டிருக்கின்றது. அப்படியும் செய்யாமல் இருந்தால், அச்சுறுத்தியும் செய்யாவிட்டால், அது 'கன்டினிவல் அஃப்பன்ஸ்' என்று சொல்லப்படும். அந்தத் தொழிலதிபர்கள் சுத்தப்படுத்துகின்றவரை, நிறைவேற்றும்வரை, இந்தச் சட்டம் அவர்களை விட்டுவைக்காது. அந்தத் தொழிலதிபர்களும் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து உடனடியாகப் பதிவு செய்ய வேண்டும் என்பதுதான் இந்த வாரியத்தின் நோக்கம்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, சுற்றுப்புற சுகாதாரத்திற்காக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். நேற்றுகூட அதிகப் புகையை விட்டு இடையூறாக இருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள். அதைப்போலவே புதிய தொழிற்சாலைகள் போதிய சுத்தப்படும் இயந்திரங்கள் வைத்துக் கொள்ள முடியாத நிலையில் இருக்குமானால், அப்படிப்பட்ட நிலை ஏற்படுமானால், அரசே அதைச் செய்து அவர்களிடமிருந்து தனியாக அந்தக் கட்டணத்தைப் பெறுகின்ற முயற்சியை மேற்கொள்ளுமா? இங்கிலாந்தில் வாகனங்களில் புகைபோகாமல் இருந்தால், அதற்குத் தக்க இயந்திரத்தை அங்கேயே பொருத்திப் பார்த்து, கட்டணத்தை, தண்டனைத் தொகையை வசூலிக்கின்றார்கள். அப்படிச் செய்து, சுற்றுப்புற சுகாதாரத்தைக் காக்கின்ற முயற்சியை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : தலைவர் அவர்களே, இந்த வாரியம் ஆரம்பிக்கப்பட்டது சமீபத்தில்தான். சிறு தொழில்கள் செய்கின்றவர்களுடைய தொழில்களிலும் புகை வரக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. ஆனால் அதை மாற்றி சுத்தப்படுத்துவதற்கு ஏற்ற கருவிகளை பொருத்துவதற்குரிய சக்தி இல்லாதவர்களும் இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட சிறு தொழிற்சாலைகளுக்கு மானியமாகவோ, கடனாகவோ மத்திய அரசிடமிருந்து ஏதாவது கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றதா என்பதைப் பற்றி மத்திய அரசிடம் வாரியம் கேட்டிருக்கிறது.



திரு. காடுவெட்டி. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தோல் தொழிற்சாலையிலிருந்து வருகின்ற கழிவு நீர் வெளிவந்து ஆற்று நீரையும் அதன் சுற்றுப்புறச் சூழ்நிலையையும் அசுத்தம் செய்வது மட்டுமல்ல. குறிப்பாக பள்ளிபாளையத்திலே, சேஷசாயி பேப்பர் மில்லிலே இருந்து வருகின்ற கழிவு நீர், பள்ளிபாளையத்திற்குக் கீழேயுள்ள பகுதி, ஏறத்தாழ 30, 40 கிலோமீட்டர் வரையில் ஆற்றுக்கு இரண்டு புறங்களிலும் உள்ள மக்களுடைய சுகாதாரத்தைப் பாதிக்கின்றது. அது மட்டுமல்ல, அந்தப் பகுதி நிலத்தடி நீரைக் கூட பாதிக்கின்ற ஒரு மோசமான சூழ்நிலையை அது அங்கே உருவாக்கிக்கொண்டிருக்கின்றது. எனவே இந்தத் தோல் தொழிற்சாலைக்கு மட்டும் தான் இந்த விதிகள் பொருந்துமா? அல்லது இதுபோன்ற பெரிய தொழிற்சாலைகளையும் கட்டுப்படுத்துவதற்கு இந்த விதிகளை பொருந்தச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : கேள்வி தோல் தொழிற்சாலையைப் பற்றி இருந்தாலும்கூட அவர்கள் சேஷசாயி பேப்பர் மில்ஸ் பற்றி கேட்டிருக்கின்றார்கள். சேஷசாயி மில்ஸ் அதிபருக்குச் சொல்லியிருக்கிறோம். 'டிரீட்மெண்ட் கொடுத்து அந்த நச்சு நீரை நல்ல நீராக ஆக்கி ஆற்றிலே விடவேண்டும்' என்று அறிவுறுத்தியிருக்கிறோம். அவர்கள் அதை ஏற்காத காரணத்தினால், அந்தத் தொழில் அதிபர் மீது கிரிமினல் வழக்கு ஒன்று போட்டு அது பெண்டிங்கிலே இருந்துகொண்டிருக்கின்றது.

### மீனவர்கட்குக் கடனுதவி.

* 129. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் மீனவர்களுக்குக் கடனுதவி வேண்டும் என்று, மீனவர்கள் சங்கம் அரசுக்கு 5—3—1982 அன்று கோரிக்கை ஏதும் கொடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. கலைமணி : (அ) மற்றும் (இ) 5—3—1982 தேதியிட்ட கோரிக்கை மனு மீனவர்கள் சங்கங்களிடமிருந்து பெறப்படவில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 5—3—1982 அன்று மீனவர் சங்கத்தின் கோரிக்கை மனு பெறப்படாவிட்டாலும், வேறு தேதியிலே கோரிக்கை மனு பெறப்பட்டிருக்கிறதா? அப்படி பெறப்படாவிட்டாலும், மீனவர்களுக்குக் கடன் வசதி செய்து கொடுக்கக் கூடிய சலுகையை அளிக்க வேறு எந்த வகையிலேயாவது அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றதா? அதைப்பற்றிய விவரங்களை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. கலைமணி:** தலைவர் அவர்களே, மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாவட்டம் தோறும் உள்ள மத்திய கூட்டுறவு வங்கிகளின் மூலம் கடன் வழங்குகின்ற திட்டம் அரசிடம் இருக்கின்றது. மேலும் மீனவர்களுக்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து கடன் வழங்குகின்ற திட்டம் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்குக் கடன் வழங்குகின்ற திட்டம் உள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, இதுவரையிலே கடந்த ஓராண்டு காலத்திலே மீனவர்கள் இந்தக் கடன் வழங்கும் திட்டங்களினாலே பெற்ற கடன் வசதிகள் எவ்வளவு? அதனால் பயன் அடைந்தவர்கள் எத்தனை பேர்? அதைக்கொண்டு எந்தவகையில் முன்னேறியிருக்கிறார்கள் என்பது குறித்து தகவல் ஏதும் அரசிடம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. கலைமணி:** தலைவர் அவர்களே, தகவல் எதுவும் தற்போது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் தரப்படும்.

## வழிகாட்டி விளக்குகள்.

* 130 வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தின் கடற்கரையோரங்களில் உள்ள வழிகாட்டி விளக்குகளை (Guide Lights) அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) தஞ்சாவூர் மாவட்டத்தில் தற்பொழுது உள்ள வழிகாட்டி விளக்குகள் எத்தனை?

(உ) இம்மாவட்டத்தில் மேலும் வழிகாட்டி விளக்குகளை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா?



**மாண்புமிகு திரு. க. கலைமணி:** (அ) தற்போது இல்லை.

(இ) தஞ்சாவூர் மாவட்டத்தில் மொத்தம் 17 இடங்களில் வழிகாட்டி விளக்குகள் நிறுவ ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(உ) தற்போது இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் தற்போது பதினேழு இடங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. கலைமணி:** தலைவரவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழ்க்கண்ட 17 இடங்களில் வழிகாட்டும் விளக்குகள் அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன :—

1. மல்லிப்பட்டினம்
2. செந்தலைவாயல்
3. ஏரிப்புரக்கரை
4. வானமாதேவி
5. காரையூர்
6. கோடிக்கரை
7. காழமணகுடா.
8. சோமநாதபட்டினம்
9. விழுந்தமாவடி
10. வேளாங்கண்ணி
11. காமேஸ்வரம்
12. ஆற்காட்டுத்துறை
13. சேதுபாவாசத்திரம்
14. செண்பகமாதேவிபட்டினம்
15. பழையார்
16. திருமுல்லைவாசல்
17. தரங்கம்பாடி

ஆகியவை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் (**

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. சட்டமன்ற மேலவை விதி 82-ன் கீழ் அமைச்சரின் அறிக்கை.

23—3—1984 தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஆற்றிய உரைக்குத் திருத்தம் குறித்து.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 23—3—1984 அன்று பகல் 12-35/12-40 மணிக்கு நான் இந்த அவையில் பேசிய பேச்சு கீழ்க்கண்டவாறு பதிவாகியுள்ளது:—

"கோவை பஞ்சாலையைப் பொறுத்தவரையில் 10-பிஐக் கொண்டுவந்து தொழிலாளர்கள் பெற்றுவந்த போனஸைப் பெறும்படி செய்தோம். சட்ட மன்றத்தில் தவறான தகவலைச் சொல்ல முடியாது. தொழிலாளர்கள் வாங்கிக்கொண்டிருந்த போனஸை வாங்கிக்கொடுத்தோம். இனிமேல் என்ன போனஸ் கொடுக்கவேண்டும் என்பதுதான் ரெபரன்சுக்கு போயிருக்கிறது."

அது கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும்:—

"கோவை பஞ்சாலையைப் பொறுத்தவரையில், 10-பி-ஐக் கொண்டு வந்து தொழிலாளர்கள் பெற்றுவந்த போனஸை பெறும்படி செய்தோம். சட்டமன்றத்தில் தவறான தகவலைச் சொல்ல முடியாது. தொழிலாளர்கள் வாங்கிக்கொண்டிருந்த போனஸை வாங்கிக்கொடுத்தோம். இந்த 1981-82 ஆம் ஆண்டு என்ன போனஸ் கொடுக்கவேண்டும் என்பது தான் ரெபரன்சுக் குப் போயிருக்கிறது."

3. கவன ஈர்ப்பு.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மூளைக்காய்ச்சல் பரவுதல் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் மூளைக்காய்ச்சல் பரவுதல் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

@ 94 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.





**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை யின்படி 1972 ஆம் ஆண்டிலிருந்து புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது, 1984 ஆம் ஆண்டிலே மிகவும் குறைவான அளவிலே தான் சேதம் ஏற்பட்டிருப்பது தெரிய வருகிறது. ஆனால் இந்தத் தடுப்பு முயற்சிகளிலே நமது மாநிலத் திலேயுள்ள, பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு, இந்த நோய் கண்டால் தடுப்பு நடவடிக்கை உடனடியாக எடுத்து, மரணம் ஏற்படாது தடுக்கக்கூடிய வகையில் எத்தகைய வாய்ப்பு வசதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தடுப்பு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதன் விளைவாகத் தான் 1978-ல் மூளைக் காய்ச்சலில் பாதிக்கப்பட்டவர்கள் 35 பேர் என்றிருந் தது, 1984 இல் 3 பேராகக் குறைந்திருக்கிறது. அதிலும் ஒருவர்தான் இறந் திருக்கிறார். தற்போது, Gramaxene, Malathong, anti-larval measures. பயன்படுத்தி தடுப்பு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறோம். ஆரம்ப சுகாதார நிலையத்திலே (Hyper-filaxia) என்கிற ஒரு காய்ச்சல் 104 டிகிரி வரும் கேஸ் வரும். உடனடியாக அதைக் கவனித்து அதற்குப் பிறகு பெரிய மருத்துவமனைக்கு அனுப்புவதுதான் பொருத்தமாக இருக்கும். அது தான் நன்மை தரக்கூடியதாக இருக்கும். ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆறு படுக்கைகள்தான் இருக்கின்றன. அது மகப்பேறுக்காக உள்ள படுக்கைகள். ஆகவே உடனடியாக தாலுகா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிக்கு 'டிரான்ஸ்பர்' செய்கிறோம். அங்கே நல்லமுறையில் மருத்துவம் செய்து காப்பாற்றி வருகிறோம். மூளைக்காய்ச்சல் வந்தால் என்ன என்ன செய்ய வேண்டுமென்று ஒரு புத்தகம் அச்சடித்து ஒவ்வொரு தாலுகா மருத்துவ மனைக்கும் அனுப்பியிருக்கிறோம். ஆகவே Paediatric Hospital ஆராய்ச்சி செய்து, என்னென்ன செய்ய வேண்டுமென்ற விவரங்களை ஒரு நூல் மூலமாக, Pamphlet கொடுத்திருக்கிறோம். எந்த டாக்டராக இருந்தாலும், First measures என்னென்ன எடுக்க வேண்டும், Immediate ஆக என்னென்ன செய்ய வேண்டுமென்று அதில் சொல்லியிருக் கிறோம். இதன் விளைவாக இறந்து போகக்கூடியவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது.

[1984 மார்ச் 28

(மும்பகல் 10-40)

திரு. பா. ரா. தாமஸ் : தலைவரவர்களே, காரைக்குடி அருகிலுள்ள செண்பகனூரில் உள்ள ஆண்டவன் என்பவரின் 25 வயது மகன், வாலிபர் இதனால் மரித்திருக்கிறார்கள். Primary Health Centre ல் சரியாக Detect செய்யாததால், Diagnose செய்யாததால், சிகிச்சை அளிக்க முடியவில்லையோ என்ற காரணத்தால்தான், Primary Health Centre ல் இதை Diagnose செய்ய வசதியிருக்கிறதா என்று கேட்டேன். மேலும் பன்றிகள் இல்லாத இடங்களிலேகூட இந்த வியாதி பரவுகிறது. அங்கே பன்றிகள் அதிகமாக இல்லை. எனவே இதன் மூல காரணத்தைக் கண்டுபிடித்து, தடுப்பு நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் எடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இந்த நோயைப் பொறுத்தவரையில், Hyper-filaxia காய்ச்சல் ஏற்பட்டு, 104, 105, 106 டிகிரி காய்ச்சல் ஏற்பட்டால், உடனடியாக அது மூளைக்குப் போய் Encephalitis வருகிறது. கொஞ்சம் சந்தேகம் இருந்தாலும்கூட, Benefit of doubt—We give it to encephalitis. என்று சொல்லி, அங்கே அவர்களை வைத்துக் கொள்ளாதீர்கள், உடனே டிரான்ஸ்போர்ட் செய்து தாலுகா ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவமனைக்கு அனுப்புங்கள் என்று சொல்லியிருக்கிறோம்.

## 4. அரசின் தீர்மானம்.

### தொழிற் கொள்கையும், திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தொழில் கொள்கையும், திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 95-192 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1984 மார்ச் 28] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தொழில் கொள்கையும், திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவரவர்களே, தொழிற் கொள்கை, திட்டங்கள் மீதான விவாதத்தில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தமிழ் நாட்டில் தொழிற் கொள்கை, திட்டங்கள் பற்றிய குறிப்பில் மாநிலம் முழுவதும் வேலை வாய்ப்பை உருவாக்குவது என்பது அரசின் முக்கிய பணிகளில் ஒன்றாகும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், குறிப்பாக பின் தங்கிய பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கு சிறு தொழில்களுக்கு மாநில அரசு முக்கியத்துவம் அளிப்பதும், பெருந் தொழில்களுக்கு ஆதரவு அளிப்பதும் முக்கிய தொழிற் கொள்கையாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்துக்களையும், கொள்கைகளையும் வரவேற்கும் நேரத்தில், புதிய தொழில் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ள மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு என்னுடைய நல் வாழ்த்துக்களையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தின் தொழில் வளர்ச்சி குறியீட்டு எண்ணைப் பொறுத்தவரையில், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களோடு தமிழ் நாட்டின் வளர்ச்சி சதவிகிதத்தை ஒப்பிட்டு, புள்ளி விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்தியா முழுவதும் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியோடு தமிழ் நாட்டை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி அதிகமாக இருக்கிறதென்பது புள்ளி விவரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் நம்முடைய தொழிற் கொள்கையிலே, தமிழ் நாட்டுக்கு வழங்கப்பட்டு வரும் மத்திய அரசின் முதலீட்டுத் தொகை மிகவும் குறைந்து வருகிறதென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தியாவில் தமிழகம் போன்ற மாநிலத்தில், அதுவும் தொழில் துறையில் பின்தங்கியுள்ள மாநிலத்தில் மத்திய அரசு செய்யும் முதலீட்டுத் தொகை கடந்த 10 ஆண்டுகளில் குறைந்து வருகிறதென்பது மகிழ்ச்சியான செய்தியல்ல, வருந்தத்தக்க செய்தி. நாட்டின் ஒருமைப்பாடு பற்றிப் பேசும் அத்தனை பேரும் நாட்டின் அத்தனை பகுதிகளிலும் சம வாய்ப்புகளை, தொழில் துறையாக இருந்தாலும், கல்வித் துறையாக இருந்தாலும், வேறு எந்தத் துறையாக இருந்தாலும், அளிக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வார்கள். பல்வேறு மாநிலங்களுக்கும், பல்வேறு மாநில மக்களுக்கும் சம வாய்ப்புகளை, சம

வாய்ப்பு வசதிகளை உருவாக்கித் தருவதன் மூலமாகத்தான் உறுதியான தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கிக் காட்ட முடியுமென்பதை அதிகாரத்தில் உள்ளவர்களெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கும்போது, இந்தக் குறிப்பையும் பார்க்கும்போது நமக்கு உண்மை யிலேயே வேதனையாக இருக்கிறது. பொதுவாகவே முதலீட்டுத் தொகை குறைந்து வருகின்ற நிலையை மாற்ற வேண்டும். தமிழகத்தைப் பொறுத்த வரையில், மத்திய அரசு நமக்கு மட்டும் அதிகமாக முதலீட்டுத் தொகையை கொடுக்க வேண்டுமென்று கேட்க வேண்டியதில்லை. ஆனால் பிற மாநிலங் களுக்கு, பின்தங்கிய இதர மாநிலங்களுக்குக் கொடுப்பதுபோல் தமிழகத் திற்கும் தர வேண்டுமென்று கேட்க வேண்டும். அந்த வகையில் நமக்குக் கிடைக்க வேண்டிய நியாயம் கிடைக்க நமது அரசு முயற்சி செய்ய வேண்டும்.

இன்னொரு கருத்து என்னவென்றால், நம்முடைய மாநிலத்திலுள்ள எல்லாப் பகுதிகளையும் தொழிலில் பின்தங்கிய பகுதிகள் என்று அறிவிக்க வில்லை. சில வட்டங்கள் மட்டும் தான் அப்படி அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வட்டங்களுக்கு மட்டும் தான் சலுகைகள் உண்டு. என்னைப் பொறுத்த வரையில், என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், தமிழகம் முழுவதும் ஒட்டுமொத்தமாக தொழில் துறையில் பின்தங்கிய (Industrially Backward) வட்டங்கள்தான். ஒட்டுமொத்தமாக தமிழகம் முழுமையும் தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக இருக்கின்றது என்று மத்திய அரசு அறிவித்து நமக்கு உதவும் வகையில் தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கேற்ற முறையில் மத்திய அரசை நமது அரசு வற்புறுத்த வேண்டுமென்ற கருத்தை நான் வலியுறுத்துகிறேன். ஒருசில இடங்களை மட்டும், ஒருசில வட்டங்களை மட்டும் தொழிலில் பின்தங்கிய பகுதிகளாக அறிவித்து சலுகைகள் அளிப்பது சரியல்ல. உண்மையிலேயே தொழிலில் பின்தங்கிய பகுதிகளுக்குச் சலுகைகள் அளிக்கப்படும் நிலை இல்லாததால், தொழிலை நடத்த முனைப்புள்ளவர்கள் கூட தொழிலை ஆரம்பிக்கத் தயங்குகிறார்கள். இப்படிப்பட்ட தடைகள் உடனடியாக நீக்கப்பட வேண்டும். தமிழகம் முழு வதும் தொழிலில் பின்தங்கிய பகுதிகள் என்று அறிவித்து சலுகைகள் அளிக்க வேண்டும். சான்றாக, தென்னாற்காடு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், பக்கத்திலே பாண்டிச்சேரி இருக்கிறது. அங்கு தொழில் ஆரம்பிப்பதைப் பொறுத்தவரை, சலுகையாக 15 சதவிகிதம் சப்சிடி (Subsidy) தரப்படுகிறது. தென்னாற்காடு மாவட்டத்திலே பல வட்டங்கள் பின்தங்கிய வட்டங்கள் என்று அரசால் அறிவிக்கப்படாததால், நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த பலர், தொழில் ஆரம்பிக்கும் ஆர்வம் உள்ளவர்கள், முனைப்புள்ளவர்கள் இங்கே தொழிலை ஆரம்பிக்காமல், பாண்டிச்சேரிக்குச் சென்று தொழிலை ஆரம்பித்



திருக்கிறார்கள். இதுசம்பந்தமான புள்ளிவிவரத்தைச் சேகரித்தால், நமக்கு உண்மை தெரியவரும். ஆகவே இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஏற்றத் தாழ்வுகள், குறைபாடுகள் ஏராளம் இருப்பதால், உண்மையிலேயே நமக்கு வர வேண்டிய வாய்ப்புகள் எல்லாம் வராமல் பக்கத்து மாநிலமான பாண்டிச்சேரிக்குப் போய்விடுகின்றன. அதனால் கிடைக்க வேண்டிய பலன் களும் அந்த மாநிலத்துக்கே சென்று விடுகின்றன. இதை நான் சுட்டிக்காட் டும் அதேநேரத்தில் சம வாய்ப்பு கிடைக்க நம்முடைய அரசு பாடுபட வேண்டு மென்று வலியுறுத்துகிறேன். நம்முடைய மாநில அரசு அதற்காகப் போராட வேண்டும்.

அடுத்து, சுயதொழில் வேலை வாய்ப்பைப் பொறுத்தவரையில், சுய வேலையில் ஈடுபடும் இளைஞர்களுக்கும் 25 ஆயிரம் ரூபாய் கொடுக்கும் திட்டம் மிகவும் பாராட்டத்தக்கது. இத்திட்டத்தை நான் முழுமனதோடு வரவேற்கிறேன். படித்து பட்டம் பெற்று வேலையில்லாமல் இருக்கிற, வேலை தேடிக்கொண்டிருக்கிற இளைஞர்கள் சுயமாக தொழிலை ஆரம்பிப்பதற்கு இத்திட்டம் பயன்படும். ஆனால் இத்திட்டத்திலே சில கட்டுப்பாடுகள், நிபந்தனைகள் இருக்கின்றன. அவைகளைத் தளர்த்த வேண்டும். இக்கருத்தை நான் வலியுறுத்தும் அதே நேரத்தில் இன்னொரு கருத்தையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன் தொழிலை ஆரம்பிக்க விரும்பும் இளைஞர்களுக்கு Technical Knowledge இருக்க வேண்டும். Technical Qualification என்று இருப்பதை வலியுறுத்தாமல் சற்று விதியை மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம் டெக்னிகல் எஜுகேஷன் இல்லாத பல இளைஞர் களிடம் தொழிலை ஆரம்பிக்கின்ற முனைப்பு இருந்தும் கூட, அவர்களிடம் அதற்கான திறமை இருந்தும் கூட அவர்கள் தொழிலை ஆரம்பிக்க முடிய வில்லை. இப்படி Technical Education இருக்க வேண்டுமென்ற விதி இருப் பதால், அவர்களிடம் திறமை, முனைப்பு எல்லாம் இருந்தும், வாய்ப்பைச் சரியான முறையில் பயன்படுத்த முடியவில்லை. இப்படிப்பட்ட ஒரு சில நிபந்தனைகளை தளர்த்துவதன் மூலம் படித்துப் பட்டம் பெற்று வேலை யில்லாமல் இருக்கின்ற இளைஞர்கள் சுயமாக தொழிலில் ஈடுபடுகிற ஒரு நல்ல நிலை உருவாகும்.

இன்னொன்றை நான் சொல்வதற்கு வேதனைப்படுகிறேன். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் இப்படிப்பட்ட வகைக்கு உதவித் தொகை கொடுக்கும்பொழுது, முழு அளவில் இளைஞர்களுக்கு அந்த உதவித் தொகை செல்ல வேண்டும். ஆதாரபூர்வமாக நான் சொல்ல முடியா விட்டாலும் கூட, பொதுவான ஒரு புகார் என்கிற அடிப்படையில் சொல் கிறேன், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இப்படிப்பட்ட உதவித் தொகை

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1984 மார்ச் 28

யைக் கொடுக்கும்பொழுது, அவர்கள் குறிப்பிட்ட ஒரு தொகையைப் பிடிப்பதாகச் சொல்கிறார்கள். குறிப்பிட்ட ஒரு தொகையைப் பிடித்துவிட்டு எஞ்சிய தொகையைத் தான் கொடுக்கிறார்கள் என்பதை நான் வேதனையோடு சுட்டிக் காட்டுகிறேன். படித்துப் பட்டம் பெற்று வேலையில்லையே என்று வேதனைப் பட்டுக் கொண்டிருக்கும்பொழுது, வேறு வழியில்லையே என்கிற நிலையில், தொழில் ஆரம்பிக்க முன்வருகிறார்கள். அவர்களுக்கு இந்த உதவித் தொகையினைத் தர முன் வரும்போது, அந்தத் தொகையிலிருந்தும் ஒரு குறிப்பிட்ட அளவு பணத்தைப் பிடித்துக்கொண்டு எஞ்சிய தொகையைக் கொடுத்தால் அந்த இளைஞர்களுடைய உள்ளத்தில் எவ்வளவு வேதனை உண்டாகும், எவ்வளவு ஆழமாக அவர்கள் மனதில் அது பதியும் என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக உணர்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

(முற்பகல் 10-50)

ஆகவே தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, இப்படிப்பட்ட புகார்களுக்கு இடம் வராமல் பார்த்துக் கொள்வதோடு வழங்கும் பணத்தில் பிடித்தம் செய்யாமல் கொடுக்க வேண்டுமென்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால், தொழில் தொடங்கும்போதே, முட்டுக்கட்டை போடுவது போல அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாநிலத்தில் பொதுவாக எல்லா மாவட்டங்களும் தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டங்கள் என்று சொன்னாலும் கூட, ஒரு சில மாவட்டங்கள் மிகவும் பின்தங்கிய மாவட்டங்களாக இருக்கின்றன. தென்னாற்காடு, இராமநாதபுரம், வட ஆற்காடு மாவட்டங்களை எடுத்துக்கொண்டால், அவை மிகவும் பின்தங்கிய மாவட்டங்களாக இருக்கின்றன. தொழில் வளர்ச்சியில் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. இப்படிப்பட்ட மிகவும் பின்தங்கிய மாவட்டங்களைப் பொறுத்தவரையில், தொழில் துறையில் ஒரு சிறப்புத் திட்டத்தை நம்முடைய மாநில அரசு தீட்டி, இந்தப் பின்தங்கிய மாவட்டங்களைக் கைதூக்கி விடும் தொழில்களைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்து, செயல்படுத்த வேண்டுமென்று நான் இந்த சமயத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 1985-ஆம் ஆண்டு முதல் Job-oriented education துவக்குவது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். இது மிக முக்கியமான, நாட்டுக்குத் தேவையான, காலத்திற்கேற்ற ஒன்றாகும். இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலமும் சிந்திக்காத ஒரு அற்புதமான திட்டத்தை தமிழ் நாடு அரசு சிந்தித்து, மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது.



1984 மார்ச் 28] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

எல்லாக் கல்வி நிலையங்களிலும் தொழிலை அடிப்படையாகக் கொண்ட தொழிற் கல்வியைத் தர வேண்டுமென்ற ஒரு திட்டத்தைச் செயல்படுத்த முனைகிற இந்த நேரத்தில் தொழில் துறைக்கும் கல்வித் துறைக்கும் சரியான, இணக்கமான ஒரு செயல்பாடு இருக்க வேண்டும். இதில் முழுமையான ஒத்துழைப்பு இருந்தால்தான், இந்தத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட முடியும். காரணம் இந்தத் திட்டத்தை ஏதோ கல்வித் துறை மட்டும் தனியாகச் செயல்படுத்த முடியாது. அப்படித் தனித்துச் செயல்பட்டால் அது வெற்றி பெறாது. ஆக தொழிலை அடிப்படையாகக் கொண்ட ஒரு கல்வி என்று பார்க்கிறபோது, தொழில் துறையும் கல்வித் துறையும் இணக்கமாகச் செயல்பட்டு, இரண்டு துறை அதிகாரிகளும் ஊழியர்களும் செயல்பட்டு, இந்தத் திட்டத்தை உருவாக்குகிறபோது, இரண்டு துறை அதிகாரிகளும் இந்தத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்த முடியும். அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. நம்முடைய மேல்நிலைக் கல்வியில் தொழிற் கல்வியை இப்போது அளித்து வருகிறோம். அதிலே பொறியியல் போன்ற முக்கியமான கல்வித் திட்டமும் இடம் பெற்றிருக்கிறது. ஆனால் மேல்நிலைக் கல்வியில் தொழில் கல்வி பயிற்சி பெறுகிற, பொறியியல் கல்வியில் பயிற்சி பெறுகிற குறிப்பிட்ட மாணவர்கள் சம்பந்தப்பட்ட பொறியியல் துறைகளில் வேலை பெறுவதில்லை. அதற்கான வாய்ப்புகளை அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம், தென்னாற்காடு மாவட்டத்தில் நெய்வேலி நிலக்கரி நிறுவனம் இருக்கிறது. அதிலே பணிபுரியக்கூடிய திறமையும், பயிற்சியும் பெற்றிருக்கக்கூடிய இளைஞர்கள், மாணவர்கள் நம்முடைய மேல் நிலைக் கல்விக்கூடங்களில் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அந்தப் பயிற்சியைப் பெற்று முடித்த பிறகு, நெய்வேலி போன்ற நிறுவனங்களில் கூட அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுவதில்லை. அவ்வாறு இல்லாமல், அப்படிப்பட்ட மேல்நிலைக் கல்வியில் தொழில் பயிற்சி பெற்று வருகிற அந்த மாணவர்களுக்கு இந்த மாதிரி தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு வழங்க முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று எனக்கு இருக்கிற சந்தேகம். இன்று தமிழகத்தில் மத்திய அரசின் சார்பாக பல நிறுவனங்கள் இருக்கின்றன. நான் தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்பதால், நெய்வேலியையே இதற்கும் உதாரணமாக எடுத்துக்கொள்கிறேன். நெய்வேலி நிலக்கரிச் சுரங்க நிறுவனத்தில் நம்முடைய மாநிலத்தின் பங்கு என்ன, மத்திய அரசின் பங்கு என்ன?

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1984 மார்ச் 28

அந்த நிர்வாகத்தில் நமது மாநில அரசின் பங்கு எவ்வளவு? மத்திய அரசின் பங்கு எவ்வளவு? நம்முடைய மாநில அரசுக்கு உண்மையிலேயே அப்படிப் பட்ட நிறுவனங்களில் பல்வேறு விதமான பங்கீடுகள் இருந்தால், அவர்களும் அதற்கான வாய்ப்பை நமக்குத் தர முடியும். இதிலே என்ன உண்மை என் பதில் எனக்குச் சந்தேகம் இருக்கிறது. காரணம் நடைமுறையில் பார்க்கிற போது, மாநில அரசின் பங்குகளையும் பணப் பங்குகளையும் உதவிகளையும் ஆதரவையும் பெற்று நடத்தப்படக்கூடிய மத்திய அரசின் நிறுவனங்களி லிருந்து நமக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான உரிமைகளையும் செலவு களையும் பங்குகளையும் கொடுக்கிறார்களா? அந்த விவாதத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லித்தான் நான் தெரிந்து கொள்ளவேண்டிய நிலை யில் இருக்கிறேன். அப்படிக் கிடைக்காவிட்டால், அந்த உரிமைகளைப் பெறு வதற்கு நியாயமான முறைகளில் மாநில அரசு முனைந்து செயல்பட வேண்டு மென்று அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் கலைவர் தலைமை)

தடையில்லா வர்த்தக மண்டலம் அமைப்பதைப்பற்றி கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். காரணம் அயல் நாடுகளில் இப்படிப்பட்ட Duty-free Shops வைக்கப்பட்டிருக் கின்றன. இப்படிப்பட்ட கடைகளில் பொருள்களை வாங்குவதற்கென்றே இங்கேயிருந்து சிலர் சென்று, அங்கே நமது பொருளைச் செலவிட்டு பல வகைகளில் தொல்லைகளையும் அனுபவித்து வருகிறார்கள். எனவே இப்படிப் பட்ட Duty free Shop களை தாராளமாக நம்முடைய நாட்டிலேயே அமைப்பதற்கு மத்திய அரசின் உதவி தேவைப்பட்டாலும் சரி, அல்லது அவர்கள் அனுமதி தேவைப்பட்டாலும் சரி, அதனைப் பெற்று இங்கேயே அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி அமைப்பதன் மூலமாக நம் நாட்டைச் சேர்ந்தவர்கள் அயல் நாடுகளுக்குச் சென்று அலைந்து திரிந்து பொருள்களை வாங்கி வரும் மனப்பான்மையும் போக்கும் வெகுவாகக் குறையும். நாமேகூட அவற்றைத் தடுத்து நிறுத்த முடியும். அதுமட்டுமல்லாமல், இதன் காரணமாக நம் நாட்டு மக்கள் அயல் நாடுகளில் செலவிடுகிற தொகையும், நேரமும் உழைப்பும் மிச்சப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1984 மார்ச் 28] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

அடுத்து, சிமிண்ட்பற்றி ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். முன்பு வெளிநாடுகளிலிருந்து சிமின்டை நேரடியாக இறக்குமதி செய்து கொண்டிருந் தோம். அதன் காரணமாக தமிழகத்தில் ஏற்பட்டிருந்த சிமிண்ட் தட்டுப்பாடு ஓரளவுக்கு நீக்கப்பட்டிருந்தது. சாதாரண ஏழை எளிய மக்கள்கூட சில நடைமுறைத் தொல்லைகளை அனுபவிக்காமல் சிமின்ட்டை வாங்க முடிந்தது. ஆனால் இப்பொழுது மத்திய அரசின் கொள்கை காரணமாக தற்போது மாநில அரசு நேரடியாக சிமிண்ட் இறக்குமதி செய்வது நிறுத்தப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். மாநில வாணிபக் கழகத்தின் மூலமாகத்தான் இதைச் செய்ய வேண்டும் என்ற கொள்கை, இந்தக் கொள்கைக் குறிப்பில் இடம் பெற்றிருக்கிறது. அவ்வாறு இல்லாமல், தமிழக அரசே நேரடியாகத் தொடர்ந்து சிமிண்ட்டை இறக்குமதி செய்ய மத்திய அரசிடம் முனைந்து போராடி, அந்த உரிமையைப் பெற்றாக வேண்டும் என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இவ்வாறு அரசே நேரடியாக வெளிநாடுகளிலிருந்து சிமிண்ட்டை இறக்குமதி செய்து விநியோகம் செய்து வந்தபோது, நடுத்தரப் பிரிவினர் தொல்லைகளோ சங்கடங்களோ ஏதுமில்லாமல் தேவைப்படும் சிமிண்ட்டை வாங்கிக் கொண்டிருந்த நிலைமை இப்போது பறிக்கப்பட் டிருக்கிறது. எனவே மீண்டும் அந்தப் பழைய முறையே நிலைநிறுத்தப்படும் வகையில் வெளிநாடுகளிலிருந்து அரசே நேரடியாக சிமிண்ட்டை வரவழைத்து விநியோகம் செய்ய வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள் கிறேன்.

சாதாரணமாகக் குறைந்த அளவுக்கு சிமிண்ட் தேவைப்படும் ஏழை எளிய மக்கள் அதற்குரிய அதிகாரிகளை அணுகினால், "நீங்கள் பொது மார்க் கெட்டிலேயே வாங்கிக் கொள்ளுங்கள்" என்று சொல்லி விடுகிறார்கள். 2 மூட்டை, 3 மூட்டை, 5 மூட்டை, 10 மூட்டை என்று சிறிய அளவில் சிமிண்ட் தேவைப்படுகிற ஏழை எளிய மக்கள், சாதாரண மக்கள் அதிகாரிகளிடம் போய் அதற்குரிய பெர்மிட் வழங்கும்படி கேட்டால், "உங்களுக்கு பெர்மிட் கிடையாது. நீங்கள் பொதுச் சந்தையில் தாராளமாக வாங்கிக் கொள்ள லாம்" என்று சொல்லிவிடுகிறார்கள். ஆனால் பொது மார்க்கெட்டில் ஒரு மூட்டை சிமிண்ட் என்ன விலைக்கு விற்கிறது என்பதை நான் சொல்லித்தான் அரசு அறிய வேண்டும் என்ற நிலைமை இல்லை. எனவே சாதாரண ஏழை எளிய மக்கள் 4, 5 அல்லது 10 மூட்டை சிமிண்ட் வாங்க வேண்டுமென்றால், அதற்கு 4, 5 மடங்கு அதிகமாகச் செலவிட வேண்டியிருக்கிறது. எனவே இது குறித்து அதிகாரிகளுக்கு அரசு சரியான தெளிவுரையையும் அறிவுரை யையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏழை எளிய மக்கள் குறைந்த பட்ச தேவைக்காக அதிகாரிகளை அணுகும்போது, அவர்களுக்கு

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1984 மார்ச் 28

பெர்மிட் வழங்க வேண்டும் என்று அரசு அறிவுரை வழங்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே அதிகாரிகளுக்கு அத்தகைய பெர்மிட்டுகளை வழங்குவதற்கான அதிகாரம் இருக்கிறது, உரிமை இருக்கிறது. ஆனால் அவர்கள் நடைமுறையில் அதைச் செயல்படுத்தாமல், தங்கள் பொறுப்புகளைத் தட்டிக் கழிக்கிறார்கள். இது மாநிலம் முழுவதுமாகப் பரவலாக உள்ள நிலைமை. சமுதாயத்தில் உள்ள நலிந்த பிரிவினருக்கு உதவுகிற வகையில், ஏழை எளிய மக்களுக்கு உதவுகிற வகையில், அதிகாரிகள் பெர்மிட் வழங்க வேண்டுமென்றும், இதில் யாரும் சுணக்கம் காட்டக் கூடாது என்றும் அதிகாரிகளுக்குத் தெளிவான ஆணைகளை அனுப்ப வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக நம்முடைய மாநிலத்தில் தொழில் துறையைப் பொறுத்தவரை, வளர்ச்சிக்கான எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்திருக்கிறது. குறிப்பாக, பெரிய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும் என்று பலரும் பேசி வருகிறார்கள். ஆனால் நம் நாட்டில் பெரிய தொழிற்சாலைகளை அமைப்பதைவிட சிறிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளை அதிகமான அளவில் தொடங்குவதன் மூலமாகத்தான் நாட்டில் பரவியுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க முடியும், போக்க முடியும். அதன் மூலமாகத்தான் பெரிய அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும். இது தான் நம் நாட்டுப் பொருளாதாரச் சூழ்நிலைக்கு ஒத்துப் போகக்கூடிய கருத்து. பெரிய தொழிற்சாலைகள் என்பவை தவிர்க்க முடியாததுதான். அதாவது சில தொழில்களைப் பொறுத்தவரையில் அவைகள் தவிர்க்க முடியாதவை என்ற முறையில், அப்படிப்பட்ட பெரிய தொழிலை உருவாக்கினாலும் கூட, நம் நாட்டைப் பொறுத்தவரையில், சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்களைத்தான் அதிகரிக்க வேண்டும். சில அயல்நாடுகளைப் பார்த்து, அல்லது சில மாநிலங்களைப் பார்த்து, எல்லாத் துறையிலும் பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பது என்பது நம் பொருளாதாரத்தைப் பலவீனப் படுத்தும் என்பதுதான் என்னுடைய கருத்தாகும். இதுதான் இந்த நாட்டிலே

(முற்பகல் 11-00)

காந்தியடிகள் மிகவும் வலியுறுத்திய கருத்து. சிறு தொழில்களையும், நடுத்தரத் தொழில்களையும் மேலும் மேலும் அதிகமாகப் பெருக்கி, ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகமான அளவிற்குத் தொழிற்சாலைகளைப் பெருக்கிட வேண்டும். தொழிற்சாலைகளே இல்லாத வட்டங்கள் இந்த மாநிலத்தில் கிடையாது என்ற அளவிற்கு தொழிற்சாலைகள் இல்லாத ஒவ்வொரு வட்டத்திற்கும்



1984 மார்ச் 28] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

'மாஸ்டர் பிளான்' உருவாக்கி, அங்குள்ள சூழ்நிலைகளுக்கேற்ப தொழிற்சாலைகளைத் துவக்க தீவிரமானதொரு திட்டத்தை வகுத்துச் செயல்பட வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் எங்களுடைய நல்வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொண்டு, தமிழக அரசு தொழில் துறையிலே எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் அத்தனைக்கும் எங்களுடைய ஆதரவைத் தெரிவித்து, அமர்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழில் கொள்கை, திட்டங்கள்பற்றிச் சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்,

மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, தொழிலதிபர்களையெல்லாம் அழைத்துப் பேசி, "நீங்கள் எப்போது வேண்டுமானாலும் என்னை அணுகலாம்" என்று அவர் விடுத்த வேண்டுகோளை சட்டமன்றப் பேரவையிலே எதிர்க் கட்சியில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. [illegible] போன்றவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். தொழில் அமைச்சரைப் பொறுத்தவரையில், எந்த உறுப்பினர் எந்தப் பக்கம் இருந்து பேசினாலும், அதிக மகிழ்ச்சி அடையக்கூடியவர் அவராகத்தான் இருக்க முடியும். மற்ற துறையிலே எல்லாம் "இதைச் செய்யுங்கள், அதைச் செய்யுங்கள்" என்று செலவினங்களைச் சொல்லக் கூடும். இந்தத் துறையைப் பொறுத்தவரையில், வருமானத்தைப் பெருக்க எந்தெந்த வழிகள் இருக்கின்றன என்ற எண்ணத்தை நாம் வெளிப்படுத்தினால், அதை விரும்பாமல் இருக்கமாட்டார். அதைக் கேட்டாலும், செய்யலாம் என்று அவருக்குத் தோன்றினாலும் அதற்கு [illegible] இல்லை என்று சொல்லுவதற்கு மத்திய அரசு ஒரு காரணமாக இருக்கிறது என்பதை நாம் அறிவோம்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், தன்னுடைய வரி விதிப்பின் மூலம் வருமானத்தைப் பெருக்கும் நிலையில் அதன் எல்லையை அடைந்து விட்டது என்று டாக்டர் பி. நடராஜன் அவர்கள் ஒரு குறிப்பைத் தந்திருக்கிறார்கள். டாக்டர் ஆர். திம்மையா என்ற தொழில் மேதை, விஞ்ஞான அறிஞர் என்பவரும் குறிப்பிடுகிறார். தமிழகம் எந்த அளவிற்கு வரி விதிக்க முடியுமோ அந்த அளவிற்கு எல்லா முறைகளையும் கையாண்டிருக்கிறது. இனி தமிழகத்தின் வருமானத்தைப் பெருக்க வேண்டுமானால், தொழில் துறையின் மூலமாக, அரசே ஏற்படுத்தும் தொழில் துறையின் மூலமாகத்தான் வருமானத்தைப் பெருக்க வழி இருக்கும் என்று நான் சொல்ல விழைகிறேன். வருமானத்தை

(டாக்டர் இரா. சனார்த்தனம்) [1984 மார்ச் 28

அரசு பெருக்கியாக வேண்டுமென்ற அவசியம் இருக்கிறது. களை மாநில அளவிலே பெருக்க வேண்டுமென்ற நிலை இருந்தாலும், தொழிலதிபர் களைப் பெருக்குவதற்கும் ஒரு எல்லையோடு இருக்க வேண்டும். அவர் காரத்தில் வாணிபத்தைப்பற்றிச் சொல்லும்போது, அரசுக்கே வழங்கக்கூடிய சிலப்பதி வகையில் வல்லமை வாய்ந்தவனாக, செல்வாக்குப் பெற்றவனாக இருந்தான் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு இந்தியாவில் தொழிலதிபர்கள் வளர்ந்திருந்தாலும், அதைக் கட்டுப்படுத்துகிற நடைமுறை நல்லது என்ற கருத்திலே அரசே பெரிய தொழில்களில் ஈடுபடுவது நல்லது, இந்த நாட்டு நடப்புக்குத் தேவை என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த முறையிலே தனியார்களைக் காட்டிலும், நஷ்டங்கள் வந்தாலும், ஏற்றுக்கொள் கிற வல்லமையுள்ள அரசாங்கம் ஈடுபட வேண்டும். அதிகப்படியான வேலை வாய்ப்புகளை உருவாக்குவது என்ற அடிப்படையில் செயல்பட்டுக் கொண்டி ருக்கிறது இந்த அரசு என்று கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு இலட் சத்து பத்தாயிரம் பேர் வேலை வாய்ப்பு பெறக்கூடிய அளவிற்கு 419 தொழிற் சாலைகள் ஏற்படுத்தப்பட்டு, 830 கோடி ரூபாய் மூலதனம் இடப்பட்டிருக் கிறது என்ற கருத்தைப் பார்க்கிறபோது, உள்ளபடியே வேலை வாய்ப்பு களைப் பெருக்குகிறார்கள் என்ற நிலையிலே, மகிழ்ச்சியடைகிறோம். அதை விட இன்னும் அதிகமாக பரவலாக வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் குறிக் கோள் கொண்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய தொழில்கள், சிறிய தொழில்கள் என்று சொல்லும் போது, அவை இரண்டும் இணைப்பாக இருக்க வேண்டும். பெரிய தொழில்கள் பல சிறிய தொழில்களை ஊக்குவித்து வளர்க்கக் கூடியதாக இருக்கின்றன. அதற்கு ஒரு இணைப்பை அரசு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜப்பானில் என்ன செய்கிறார்கள் என்று நாம் பார்க்க வேண்டும். அங்கு எந்தப் பகுதியில், தொழிலே இல்லாத பகுதியில் தொழிலதிபர்கள் தொழில் துவங்க அச்சப்படுகிறார்களோ அந்தப் பகுதிகளில் அரசே தொழிலை உரு வாக்குகிறது. அதை நல்ல முறையில் நடத்தி, பிறகு தனியார் நடத்து வதற்குத் தருகிறார்கள். இதனால் தனியார் வளர்ந்துவிடுகிறார்கள் என்ப தல்ல. தொழிலைப் பெருக்க, பலர் பல்வேறு வாய்ப்பைப் பெற செய்கிறார்கள். இங்கே கூட எஸ்.ஐ.பி. போன்ற நிறுவனங்கள் எல்லாம் யாராவது தொழில் துவங்க விரும்பினால், அவர்களிடம் சிறிய கட்டடத்தைப் பெற்று, தொழிலை அமைத்துக் கொடுக்கிறார்கள். ஆகவே அந்த முறையிலே செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.



1984 மார்ச் 28] (டாக்டர் இரா. சனார்த்தனம்)

அதேபோல தொழிலைத் துவங்குகிறபோது, சுற்றுச் சூழல் மிக முக்கிய மான ஒரு காரணமாகும். அனுமதி வழங்கப்படுகிறபோது, அரசு அதைக் கவனிக்க வேண்டுமென்பதும், தனியான காரணத்திற்காக சுற்றுப்புறத் தினுடைய சுகாதாரம் கெட்டுவிடக் கூடாது என்பதும் ஒரு முக்கிய கருத் தாகக் கொள்ளப்பட வேண்டும். ஆனால் அதே காரணத்திற்காக தொழில் தொடங்குவதற்குத் தடையாக, தொழில் உரிமம் பெறுவதற்கு கால தாமதம் ஏற்பட்டு விடக்கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய தொழில் அணுகுமுறையை, நியூ டெக்னாலஜி, புதிய முன்னேற்றங்களை நாம் ஏற்றுக்கொள்கின்ற அளவிலே செயல்படுத்த வேண்டும். அதிகம் பெருக்கு வேலை வாய்ப்பு என்பதைப் பொறுத்த வரையில், எலக்ட்ரானிக்ஸ் தொழில் களைப் பொறுத்தமட்டிலே அது சாத்தியமாக அமைந்திருக்கிறது. குறைந்த மூலதனத்திலே அதிகம் பெருக்கு வேலை வாய்ப்பு என்பது அந்தத் தொழி லிலே நடைபெறக் கூடிய காரியமாக இருக்கிறது என்பதால், அதிலே அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கதர், கைத்தறி போன்றவற்றிலே ஆர்வம் காட்டி, இந்தியப் பொருளா தாரத்தை வளர்க்க வேண்டும். கிராம மக்கள் பெரிய வாழ்வு பெறுவார் களானால், அது நாட்டினுடைய வளர்ச்சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் ஏற்புடையதாக இருக்கின்ற காரணத்தினால், அந்த வழியிலே நாம் செயல்பட வேண்டும். புதிய தொழில் தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் காட்டி யிருக்கிற ஆர்வத்தையொட்டி அலுவலர்களும், அதிகாரிகளும் அதே வழியில் செயல்பட வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அதிலே இருக்கிற பல சிக்கல்கள் அவ்வப்போது நீக்கப்படவேண்டியிருக்கிறது. இன்னும் பல சிக்கல்கள் களைந்து எறியப்படவேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக ஒரு தொழில் தொடங்குவதற்கு ஒரு ஆலோச கரை நாம் அணுகி, அவருக்குப் பணம் கொடுத்து, “இந்தத் தொழிலை நீங்கள் துவங்கலாம்” என்று நாம் ஒரு தயாரிப்போடு போகிறபோது, அது நியாயமானது தானா, நடக்கக் கூடியதுதானா என்பதை அணுகுகிற முறை யிலும் அங்கே இரண்டாவது பரிசோதனை நடத்தப்படுகிறது. அப்படி ‘எக்ஸ்பர்ட் ஒப்பினியன்’ கேட்கப்படுகிறபோது, புதிதாகத் தொழில் தொடங்குகிறவர்களுடைய தலையிலே அந்தச் சுமையை வைக்காமல் அதற் காக நிரந்தரமாக அதிகாரிகளை வைத்துக்கொண்டு அந்தத் தொழிலை நியாயமாக நடத்த, கூடுமான வரையில் அனுமதிக்கின்ற முயற்சியும், அதிலே இருக்கிற கால தாமதங்களும் எதாவது இருக்குமானால், புதிய தொழில்கள் தொடங்குகிறவர்களை அழைத்துக் கேட்டு, அந்தச் சிரமங்களைப் போக்க

வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடு சிறிய தொழில்
என்றால், அது அமைகிற இடம், ஏற்றுமதி, இருப்பு, மார்க்கெட்டைத் தேடிக்
கொள்கிற சூழ்நிலை—இவைகளையெல்லாம் ஏற்படுத்தித் தர வேண்டும்.
அந்த வகையிலே அவர்களுக்கு வேண்டிய அறிவுரை வழங்குகிற முயற்சியை
நாம் மேற்கொள்ள வேண்டும்.

வணிக மண்டலத்தைப் பொறுத்த மட்டில், மாண்புமிகு திரு. லெட்சுமி
காந்தன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் அப்படி நினைக்க
வில்லை. அங்கே உருவாகிற பொருள்கள் வெளிநாட்டிலே விற்கக் கூடிய
அளவிற்கு அனுமதி இருக்குமா என்று நான் அறியவில்லை. ஆனாலும் வெளி
நாட்டிலே உள்ள, ஹாங்காங் போன்ற இடங்களிலே அமைந்திருக்கிற தொழில்
அமைப்புகள் கூட இங்கே வந்து அமைத்து, உலக மார்க்கெட்டைப் பெறுவதற்
காக ஒரு வசதி அமையக் கூடும். இந்த முயற்சி ஸ்ரீலங்காவிலே மேற்
கொள்ளப்பட்டது. ஆனால் அது போதிய அளவுக்கு வெற்றி பெற முடிய
வில்லை. காரணம் அங்கே உற்பத்தியான பொருள்களை உள்ளே கள்ளச்
சந்தையில் விற்பதற்கு அவர்கள் பயன்படுத்தி, அந்த முயற்சி அங்கே தோல்வி
யடைந்திருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் குஜராத் போன்ற இடங்களில்
இந்த முயற்சி வெற்றி அடைந்திருக்கிறது. அதனாலே புதிதாக உருவாக்கு
கிற நாம் இந்த இரண்டையும் நோக்கி, இரண்டு இடங்களிலே தோல்விக்
கான காரணங்களையும், வெற்றிக்கான அடிப்படைகளையும் நம்முடைய
அதிகாரிகளைக் கொண்டு ஆராய்ந்து செயல்படுத்துவது உதவியாக இருக்கும்
என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டுப் பணி என்பது ஏதோ
அரசியலிலே ஈடுபட்டிருப்பவர்களும் அல்லது பொது வாழ்விலே ஈடுபட்டிருப்ப
வர்களும் மட்டும் செய்வது அல்ல. ஒரு தொழிலைத் துவக்கி பலருக்கு
வேலை வாய்ப்பைத் தருவதாகட்டும், அல்லது ஒரு தொழிற் சங்கத்தை
வைத்து தொழிலை நடத்துவதற்கு உதவியாக இருப்பதாகட்டும், அவை
எல்லாம் கூட ஒரு நாட்டுப் பணி என்ற முறையிலே செயல்பட வேண்டும்.
ஜப்பான் நாட்டை எடுத்துக் கொண்டால், அங்கு தொழிலாளிக்கும் முதலா
ளிக்கும் இடையே இருக்கிற உறவு கொஞ்சம் சிந்திக்கக் கூடியதாகும். அங்கே
ஒரு தொழிலாளி ஒரு தொழிற்சாலையிலே பணியாற்றினால், அது தனியார்
நிறுவனமாக இருந்தால்கூட, தான் காலமெல்லாம் அந்தத் தொழிற்சாலை
யிலே பணியாற்றினேன் என்று பெருமைப்படுகிறான். தன்னுடைய மகனும்
அங்கே பணியாற்றுகிறான் என்று அதிலே ஆனந்தப்படுகிறான். அந்த அளவு
தொழிலை, உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பது அவர்களுடைய
நோக்கமாக இருக்கிறது. போராட்டங்கள் என்றாலும் கூட, உற்பத்தி





பொறுத்த வரையிலே அவர்களுடைய போராட்டங்கள் நடந்து கொண்டிருக்
கின்றன என்பதை நினைத்துப் பார்க்கிறபோது, மாண்புமிகு முதல்வர்
அவர்கள் கருதுகிறபடி, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற அமைப்பு
வருமானால், அந்தத் தொழில் அமைதிக்கு எல்லாம் ஒரு வழிவகை
யாகலாம் என்று நான் கருதுகிறேன்.

சிக் இண்டஸ்ட்ரியைப் பொறுத்தமட்டில், இது அரசுக்கு ஒரு தலை
வலியான பிரச்சினை. இதற்கு அளவு கோல் கிடையாது. எது நலிந்த
தொழில் என்பதற்கு என்ன வரையறை என்று யாரும் சொல்ல முடியாது.
சில ஆண்டுகள் நலிந்திருக்கும், சில ஆண்டுகள் மெலிந்திருக்கும். சில
ஆண்டுகள் வளர்ந்து நிற்கும் என்ற வகையாகச் சொல்வார்கள். அதாவது
நிறுவனம் தொழிலாளி, முதலாளி பங்காளி என்று சொல்கிற அளவுக்கு சிலர்
வேண்டுமென்றே இந்த நிறுவனங்களை முடக்கி விடுகிறார்கள். அதிலே அரசு
பொறுப்பாக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எச்சரிக்கை என்று சொல்கிற
போது, எதையும் தடைசெய்ய வேண்டும் என்றோ அல்லது தொழிலதி
பர்கள் தலையிலோ பாதிக்கப்பட வேண்டுமென்றோ நான் சொல்ல
வில்லை. பஞ்சாப் போன்ற வேறு மாநிலங்களில் எப்படி தொழிலைத்
தாக்குப் பிடித்து எந்தவிதச் சோர்வும் இல்லாமல் இருக்கிறதோ அதைப்
போன்ற ஒரு நிலையை இங்கே நாம் உருவாக்கித் தர வேண்டும்.

(முற்பகல் 11—10)

அதுபோல, கனரகத் தொழில்கள். இதில் நான் சொல்ல விரும்புவது
இந்துஸ்தான் போட்டோ பிலிம் என்று எடுத்துக் கொண்டால், அது ஒரு
15 ஆண்டுக் கால வரலாறு. பிலிம் தொழிற்சாலை வேண்டும்,
வேண்டும் என்று பலமுறைகள் நான் கோரிக்கொண்டிருக்கிறேன். நீலகிரி மாவட்
டத்தில் இருக்கின்ற மக்கள் ஆண்டு ஆண்டு காலமாக அதற்காக அழுது
கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதில் இந்திய அரசிலே முடிவு எடுக்கும்
போது, அந்தத் திட்டத்தை ஆரம்பிக்கலாம் என்று முடிவு
செய்தார்கள். அதற்குக் காரணம் மத்திய அமைச்சர் அவர்கள் அந்தப்
பகுதியைச் சேர்ந்தவராக இருக்கலாம். அல்லது அதன் சேர்மன் அந்தப்
பகுதியைச் சேர்ந்தவராக இருக்கலாம். எப்படி இருந்தாலும் மூன்றாயிரம்

பேர்களுக்கு அந்தத் தொழிலில் வேலை பார்க்கின்ற வாய்ப்பு உள்ளது. அதிலேயும் 75 ஆயிரம் பேர்கள் வேலை இல்லை என்று பதிவு செய்திருக்கின்ற நீலகிரி போன்ற ஒரு சிறிய மாவட்டத்தில், அது நைனிட்டாலுக்குச் செல்கின்றது என்றார்கள். அப்படியாவது நைனிடாலிலே ஆரம்பித்தார்களா என்றால், அதற்கும் இப்போது மத்திய அரசிலே தடை வந்திருக்கின்றது. விரைவில் நடக்கப் போவதில்லை. அதிலே நான் தெரிவித்துக்கொள்வது, ஊட்டியிலே அதை விரிவுபடுத்த வேண்டும். இல்லையென்றால், தமிழக அரசு காகித ஆலையிலே ஈடுபட்டதைப்போல, இதிலேயும் ஒரு ரூ. 130 கோடி திட்டம் என்ற அளவிலே வைத்து ஈடுபடுவார்களானால், ஒரு மூன்றாயிரம் பேர்கள் நீலகிரி மாவட்டத்தில் நல்ல வேலை வாய்ப்பைப் பெறுகின்ற ஒரு நிலைமை உருவாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு தொழிலைத் தொடங்குவது, என்பதில் இப்போது பணம் படைத்தவர்கள் எல்லாம் விருப்பம் இல்லாமல் இருக்கின்றார்கள். அவர்களுக்கு வட்டி என்பது பெரிய லாபகரமானதாக இருக்கின்றது. எதற்கு வம்பு வட்டிக்குக் கொடுத்துவிடலாம் என்றும், அதில் நல்ல வருமானம் வருகிறது என்றும், எளிமையான வழியைக் கையாளுகின்றார்கள். ஆனால் அவர்களுக்கு தொழில்கள் தொடங்குவதற்கு, தமிழகத்தைப் பொறுத்தமட்டில், மின்சாரம் கிடைப்பதில் இடையூறு இருக்கின்றது என்றாலும், பல தொழில்களைத் தொடங்க வாய்ப்பிருக்கின்றது. மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் கூட இதை ஏற்றுக்கொள்வார்கள். மருத்துவத் துறையை எடுத்துக்கொண்டால்கூட, வேறு மாநிலத்தைச் சேர்ந்த பெரிய தொழில் அதிபர்கள் இதிலே ஈடுபட்டிருக்கின்ற அளவுக்கு தமிழ்நாட்டிலே உங்களைப் போன்றவர்கள் ஓரிருவர் இருக்கக்கூடும். ஆனால் அந்தத் துறையையெல்லாம் பயன்படுத்தி தொழில்கள் உருவாவதற்கு அரசு சிறந்த ஊக்கம் தர வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஸ்ரீலங்காவிலே நடக்கின்ற சம்பவங்களை எடுத்துப் பார்க்கின்றபோது, பல இடங்களிலே இருக்கின்ற தொழில் அதிபர்கள், தமிழ்நாட்டிலே முதலீடு செய்ய வாய்ப்பிருக்கின்றது. அண்மையிலே கூட 'இந்தியா டுடே' யிலே ஒரு கட்டுரை வந்ததைத் தொடர்ந்து பெரிய குழப்பங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அங்கே இருக்கின்ற தமிழ் வணிகர்களிடம் எல்லாம் வியாபாரம் செய்வதற்குக் கப்பம் கட்டுகின்ற நிலை இருப்பதாலே, அவர்கள் எல்லாம் தமிழ்நாட்டிற்கு வந்து ஏதாவது தொழில் தொடங்க வேண்டும் என்ற ஆவலோடு இருக்கின்றார்கள். நாம் அவர்களுக்கு ஊக்கம் தருகின்ற



வகையிலே வெளிநாட்டுத் தமிழர்கள் இங்கே முதலீடு செய்கின்ற அளவுக்கு, அந்தத் தொழில் அதிபர்களை நாம் பயன்படுத்திக் கொள்வோமானால், அவர்களுக்கு இருக்கின்ற வெளிநாட்டு அனுபவமும், நாம் தருகின்ற ஊக்கமும் தமிழ் நாட்டிலே நல்ல தொழில் வளத்தைப் பெருக்குவதற்கும், வேலை வாய்ப்பை அதிகமாகப் பெருக்குவதற்கும் உதவியாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொண்டு, தமிழக அரசு தொழில் கொள்கையில் உறுதியாக இருந்து நல்ல பல திட்டங்களின் மூலமாக செயல்பட்டு வருகின்றது என்பதை நான் பாராட்டி, அமைகிறேன்.

* **திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் கொள்கையும் திட்டங்களும் என்ற தலைப்பிலே எனக்குப் பேசுகின்ற ஒரு வாய்ப்பைக் கொடுத்ததற்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு தமிழ் நாட்டிலே தொழில் வளர வேண்டும் என்று நாம் எவ்வளவு அக்கறையோடு, ஆர்வத்தோடு பணியாற்றுகிறோம் என்பது நமக்குத் தெரியும். ஆனால் இங்கே தொழில் ஆரம்பிக்க வேண்டும் என்று வருகின்றவர்களுக்கு நாம் பல சலுகைகளைச் செய்து கொடுக்க வேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறோம். சலுகை என்ற அடிப்படையிலே, அந்தந்தத் துறைகளிலே பொறுப்பேற்றிருக்கக்கூடிய நம் அதிகாரிகளை நான் குறை சொல்லமாட்டேன். ஏனென்றால் இன்று டிட்கோ ஆனாலும், சிப்காட் ஆனாலும், டிக், எல்காட் ஆனாலும், டான்செம் ஆனாலும், டான்சி ஆனாலும், டாமின்/டான்மாக் ஆனாலும், தமிழ்நாடு [illegible] கழகம், சர்க்கரைக் கழகம் ஆனாலும், இதுபோன்ற நிறுவனங்களில் மேனேஜிங் டைரக்டர்கள் எல்லாம் பொறுப்பு வகிக்கின்ற உயர் அதிகாரிகள் இருக்கின்றார்கள். அவர்களைத்தான் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் என்று அரசு பார்த்து நியமிக்கிறது. அவர்கள் ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டுகள் அங்கே அனுபவம் பெற்ற பிறகு வேறு துறைக்கு மாற்றப்பட்டு விடுகின்றார்கள். ஆனால் அங்கே நிரந்தரமாக இருக்கக்கூடிய அலுவலர்கள் இருக்கின்றார்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கும் நிரந்தரமாக இருக்கக்கூடிய அலுவலர்களுக்கும் வேண்டும். அவர்கள் அங்கே தொழில் அபிவிருத்தி வாய்ப்பைப் பெருக்க வேண்டும். அவர்களுக்குப் பல சலுகைகள் செய்வதற்கு ஊக்கம் தருகின்ற அளவுக்கு செய்து தருகின்றார்களா என்றால், அங்கே அளிக்க வேண்டிய வாய்ப்பைச் செய்து அப்படி நடக்கவில்லை என்பதுதான். உதாரண [illegible]

(திரு. சி. இராமலிங்கம்) [1984 மார்ச் 28

மாக வாலிநோக்கம் என்கிற ஊரில் உள்ள உப்பளத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் சென்றிருந்தோம். அது 1975-லே ஆரம்பிக்கப்பட்ட உப்பளம். அதற்கு இலட்சக்கணக்கான ரூபாய் அரசின் சார்பில் செலவிட்டிருக்கிறார்கள். உப்பளத் தொழிலிலே ஓரளவிற்கு எனக்கு அனுபவம் உண்டு. அங்கே ஒரு ஏக்கராவிலே உப்பு எடுத்தோமானால், ஒரு குடும்பமே பிழைக்கக்கூடும். ஆனால். . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு கைத்தறித் தொழில் அனுபவம் மட்டும்தான் இருக்கும் என்று நினைத்தோம். (சிரிப்பு)

திரு. சி. இராமலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் இருக்கிற சைதை வட்டப் பகுதியில் "செம்மஞ்சேரி"யில் உப்பளம் இருக்கிறது. நானும் சிறிது காலம் உப்பு கட்டி விற்றேன். ஒரு ஏக்கர் இருந்தால், ஒருவர் பிழைக்கலாம். வாலிநோக்கத்தில் நிலத்தடியிலே இருக்கிற நீர் உப்பு நீர் அல்ல. அதனால் பம்ப் செய்து கடலிலிருந்து இறைத்து மற்றொரு இடத்தில் தேக்கி கண்டென்சரில் வைத்து அந்தத் தண்ணீரை வேறு ஓர் இடத்திற்குப் பாய்ச்சி 200 ஏக்கர் பரப்பளவில் உப்பு தயாராகிறது. கடல் நீரை இறைத்துக் கட்டினோமானால், பத்து சதவிகிதம் தான் உப்பு கிடைக்கும். ஆனால் நிலத்திலேயிருந்து எடுத்து கட்டினோமானால் 40 முதல் 60 சதவிகிதம் உப்பு கிடைக்கும். தூத்துக்குடி பகுதியிலே, மரக்காணம் பகுதியிலே போய்ப் பார்க்கலாம். எனவே, என்னுடைய பகுதியிலே போய்க் கட்டிப் பார்த்தோமானால், பயன் உள்ளதாக இருக்கும். எல்லோரும் அந்தக் காலத்திலே ஆட்சியிலே இருந்தவர்கள் அங்கே போய் பணத்தைச் செலவிட்டார்கள். நாங்கள் சென்றபோது மக்கள் பல குறைகளைக் கூறினார்கள். அங்கே [illegible] வருகிறார்கள். போகிறார்கள். யாரும் அந்த [illegible] இல்லை. [illegible] இருக்கிறார்கள். அதிகாரிகள் அங்கேயே இருந்து பார்க்க வேண்டுமென்று மக்கள் [illegible] சொன்னார்கள். அங்கே இருந்த அதிகாரிகள் [illegible] போதும். மற்ற [illegible] அதிகாரிகள் என்று [illegible] வைத்திருக்கிறார்கள். [illegible] அதிகாரிகளாக இருப்பவர்களுக்கு அந்தத் தொழில் தெரியாது. தொழில் தெரிந்தவர்களை நிரந்தர அதிகாரிகளாக நியமித்தால்தான், தொழில் நஷ்டம் இல்லாமல் போகும்.



1984 மார்ச் 28] (திரு. சி. இராமலிங்கம்)

அதேபோல் என்னுடைய ஊரான அனகாபுத்தூர் சுற்றியுள்ள பம்மல் பல்லவபுரம் ஆகிய இடங்களில் தோல் பதனிடும் தொழில் செய்கிறார்கள். தோல் பதனிடும் இயந்திரங்களுக்காக ஒருவர் மனுச் செய்திருந்தார். ஒருவர் தன்னுடைய வேலையை விட்டுவிட்டு 20,000 ரூபாய் டெபாசிட் பண்ணி விட்டார். இயந்திரம் ஒன்றும் வாங்கி வைத்திருந்தார். இரண்டாண்டுகளுக்குப் பிறகு கம்பெனி அதிகாரிகள் வேறொரு இயந்திரத்தை இவர் வாங்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கின்றனர். உண்மையில் அதிகாரிகள் சொன்ன கம்பெனி இயந்திரத்தைவிட இவர் வாங்கிய இயந்திரம் நவீனமானது. இப்படி இயந்திரம் வாங்கும்போது குறிப்பிட்ட கம்பெனி இயந்திரத்தைத்தான் வாங்க வேண்டுமென்று கட்டாயப்படுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த விதியை நாம் தளர்த்த வேண்டும்.

அடுத்து, எங்களுடைய கைத்தறி நெசவுத் தொழிலை எடுத்துக் கொண்டால், இன்றைக்குத் தமிழகத்திலே கிட்டத்தட்ட ஐநூறு கோடி ரூபாய்க்கு ஜவுளி உற்பத்தி இருக்கிறது. அதற்கு எங்களுக்கு சாயப் பொருட்கள் கிட்டத்தட்ட நூறு கோடி ரூபாய்க்கு வேண்டும். ஆனால் சாயப் பொருள்கள் தமிழகத்திலே செய்யப்படுகிறதா என்றால், இப்போதுதான் சமீபத்திலே கடலூரிலே வானவில் என்கிற ஒரு சாய உற்பத்தித் தொழிற்சாலையை ஆரம்பித்திருக்கிறோம். வேறு மாநிலங்களில் 50 சதவிதம் சாயத் தொழிலைச் செய்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு மருந்துகள் செய்கிறார்கள். பிளாஸ்டிக் உபகரணங்கள் எல்லாம் செய்கிறார்கள். இரசாயனப் பொருள்கள் செய்கிறார்கள். ஆனால் நம் தமிழ்நாட்டிலே மட்டும் அவ்வாறு செய்யப்படவில்லை. கிட்டத்தட்ட நூறு கோடி ரூபாய்க்கு எங்களுடைய கோவாபரேட்டிவ் நிறுவனத்தில் மட்டும் இன்றைக்கு சாயப் பொருள்கள் வாங்குகிறோம். எனவே சாயப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

பேரறிஞர் அண்ணா காலத்திலே, சரிகைத் தொழிற்சாலை ஒன்றைக் காஞ்சிபுரத்திலே ஆரம்பித்தார்கள். சரிகை என்றால் சூரத் என்று சொல்வார்கள். ஏனென்றால் சரிகை சூரத்திலிருந்துதான் வர வேண்டும். இதை மனதிலே கொண்டுதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆரம்பித்தார்கள். அதற்கு இயந்திரம் வாங்குவதற்கு அண்ணா அவர்களால் போக முடியுமா? முடியாது. எனவே அதற்கு நம்பிக்கையான ஒரு அதிகாரியை அனுப்பி வைத்தார்கள். சென்றவர் சரிகைக் கம்பி இணைப்பதற்கான இயந்திரத்தை

வாங்காமல், ஒயர் கம்பி இணைப்பதற்கான ஓர் இயந்திரத்தை வாங்கி வந்துவிட்டார். கடந்த 20 ஆண்டுகளாக அந்தத் தொழிற்சாலையில் அந்த இயந்திரம் மாற்றப்படாமல் வேலையே நடைபெறாமல் இருக்கிறது. இந்த இயந்திரத்தை மாற்ற வேண்டுமென்று அதிகாரிகளிடத்திலே பலமுறை சொல்லியும் அவர்கள் மாற்றவில்லை. அதை மாற்றாதது மட்டுமல்ல. ஒரு அதிகாரி சூரத்துக்குப் போய் விட்டு வந்து ரிப்போர்ட் கொடுத்தார். அவரை மாற்றிவிட்டார்கள் என்று சொல்கின்றார்கள். ஆக சரிகைத் தொழில் மிகவும் நுட்பமான தொழில். வெள்ளியை உருக்கி, இழை எடுத்து, பட்டு நூலில் சுற்றி, அதற்குப் பிறகு பொன் மெருகு ஏற்ற வேண்டும். இதற்கான இயந்திரம் சூரத்தில் 15 இடங்களில் இருக்கிறது. ஒரு இயந்திரம் இருந்தால், 100 குடும்பங்கள் பிழைக்கலாம். ஜெர்மனியில் இப்போது இந்த இயந்திரங்கள் வேலை செய்யவில்லை என்று கேள்வி. காரணம், அவர்கள் அணுகுண்டு எல்லாம் தயாரிக்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் சரிகைத் தொழிலை விட்டுவிட்டார்கள் என்று ஒரு தனிப்பட்ட முதலாளி சொன்னார். பிரான்சில் சரிகை உற்பத்தி செய்கிறார்கள். அங்கே இருந்து இயந்திரத்தை வாங்கலாம். அண்ணா அவர்கள் காலத்தில் தொடங்கப்பட்ட சரிகை உற்பத்தி ஆலைக்கு நல்ல இயந்திரத்தை வாங்க வேண்டும். ஒரு அதிகாரி போய் வந்து, ரிப்போர்ட் கொடுத்தார். அவரை மாற்றம் செய்துவிட்டார்கள். அடுத்து பிராசஸிங் இருக்கிறது. மெருகு ஏற்றுதல், அச்சிடுதல் எல்லாம் அங்கே நடக்கிறது. ஈரோட்டிலே கூட்டுறவுத் துறையில் ஒன்று இருக்கிறது. அதற்கென்று ஓர் இயந்திரத்தை சமீபத்தில் வாங்கியிருக்கிறார்கள். பாலிஸ்டரை பிராசஸ் செய்து, மெருகு ஏற்றி, அச்சிடுவதற்கான அந்த இயந்திரத்தின் விலை 28 லட்சம் ரூபாய். வாங்கியதிலிருந்து இன்றுவரை அது வேலை செய்யவில்லை. 28 லட்சம் ரூபாய்க்கு வட்டி எவ்வளவு? யார் இதில் சம்பந்தப்பட்டவர்கள்? ஏன் இயந்திரம் வேலை செய்யவில்லை என்பதையெல்லாம் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். கர்நாடகாவிலே ஒரு பிராசஸிங் மில் இருக்கிறது. உங்கள் தொழில் எப்படி, லாப நஷ்டம் எப்படி என்று அவர்களைக் கேட்டபோது, அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். "நாங்கள் அதை ஒருவரிடத்திலே ஒப்படைத்துவிட்டோம்; 10 ஆண்டுகளுக்கு அவரிடம் ஒப்படைத்துவிட்டோம்; நஷ்டமானாலும், லாபமானாலும், பொருள் வாங்குவதானாலும், விற்பதானாலும், வேலைக்கு ஆட்களை வைத்துக்கொள்வதானாலும், எடுப்பதானாலும் சரி, எல்லாவற்றையும் அவரிடம் ஒப்படைத்துவிட்டோம். இப்போது வேலை நிறுத்தமில்லை. ராயல் போனஸ் [illegible] போவதில்லை. நஷ்டத்திலிருந்த அந்தத் தொழிற்சாலையை இன்றைக்கு அவரிடம் ஒப்படைத்துவிட்டோம்" என்று சொன்னார்கள். இங்கேகூட பிரியதர்சினி



என்று துணி விற்கும் நிலையம் இருக்கிறது. அதன் மேற்பார்வையில்தான் அந்தச் சாயத் தொழிற்சாலை நடக்கிறது. அப்படி தமிழ் நாட்டில் பல பேர் தொழில் செய்ய வேண்டுமென்று வருகிறார்கள். அவர்கள் அலுவலகத்திற்குப் போய் வருவதில் அலுத்து விடுகிறார்கள். ஒருவன் 20,000 ரூபாயை வாங்கி, முன் பணமாகக் கட்டிவிட்டு, கடனுக்காக அலைந்தால், அவன் கதி என்னவாகும்? கீழேயுள்ள சிப்பந்திகள் அவர்களைப் பொருட்படுத்துவதில்லை. எனக்குத் தெரிந்து 3 எம்.டி.க்கள் மாறிவிட்டார்கள். அவர்கள் சொல்கிறார்கள், அனுமதி கொடு என்று. ஆனால் கீழேயுள்ளவர்கள் சிபாரிசு கொண்டு வந்துவிட்டாயா என்று பயமுறுத்துகின்றார்களாம். சுதந்திர காலத்திற்கு முன்னால் படித்துவிட்டு வந்த அதிகாரிகளுக்கு தியாக மனப்பான்மை இருக்கிறது. தாங்கள் அடிமையாக இருந்தோம், ஏழையாக இருந்தோம் என்பதால், பிறருக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் சுதந்திர இந்தியாவில் பிறந்தவர்களுக்கு, போராட்டம் பற்றித் தெரியாது. வறுமையைப்பற்றித் தெரியாது. அவர்களுக்குச் சுதந்திரம் பெற்றது எப்படி என்பது தெரியாது. அவர்கள், தாங்கள்தான் அந்த நிர்வாகத்தில் பெரிய அதிகாரிகள், ராயல் பேமிலியில் வந்தவர்கள் என்று நினைக்கிறார்களோ என்னவோ தெரியாது. இந்தச் சூழ்நிலைகளை மாற்ற வேண்டும்.

பம்பாய் என்ற பத்திரிகை பம்பாயிலிருந்து தமிழில் வருகிறது. தலைவரவர்களே, உங்கள் அனுமதியோடு, உங்களுக்குக் காண்பித்து, இதை வாசித்து, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். பம்பாய் என்ற தமிழ் பத்திரிகையில் ஆதிலட்சுமணன் என்பவர் சொல்கிறார். அப்படியே படிப்பது நல்லது. அமைச்சரவர்களுக்கு அந்த விவரங்கள் தேவை என்று கருதுகிறேன்.

"கொஞ்ச நாட்களுக்கு முன்னர் ஒரு அரசாங்க அதிகாரியுடன் பேசிக் கொண்டிருந்தேன். என்னுடைய சில அனுபவங்களை அவருடன் பகிர்ந்து கொண்டிருந்தேன். ஒரு புதிய தொழில் தொடங்குவது என்று புறப்பட்டால், கர்நாடக அரசாங்கம் மிகவும் முற்போக்காக நடந்துகொள்கிறது. அங்குள்ள அதிகாரிகள் அரசாங்க சிவப்பு நாடாவை அறுத்து எறிந்து திறமிக்க தனியார் துறை நிர்வாகத்தைப்போல நேசக் கரம் நீட்டி செயல்படுகிறார்கள் என்று கூறினேன். அவர் சொன்னார், உண்மைதான். ஆனால் அதனிலும்

சிறப்பாகவும் வேகமாகவும் ஆந்திர மாநிலம் செயல்படுகிறது என்றும் கூறினார். இதே கதியில் சென்றால் இன்று பல துறைகளில் பின் தங்கியிருக்கும் இந்த மாநிலம் இன்னும் 30 ஆண்டுகளில் நன்றாக முன்னேறி முன்னணியை அடைந்துவிடும் என்றும் கூறினார். அவர் சொன்ன இன்னொரு செய்தி என்னை சிந்தித்து வருத்தமுறச் செய்தது. பலமுனைகளில் முன்னேற்றம் அடைந்துள்ள தமிழ்நாடு இதே பாதையில் சென்றுகொண்டிருந்தால், அதே 30 ஆண்டுகளில் இப்பொழுது பீகார் பின்தங்கியுள்ள நிலைமைக்கு, இடத்திற்கு தமிழ்நாடும் போய்விடும் என்ற நிலை உருவாகும் என்று சொன்னார். உண்மையான கவலை அவருக்கு. புதிய தொழிலை துவங்குவது குறித்து பேச ஆந்திரா சென்றேன். அங்குள்ள அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை தொடங்கியபோது, அவர்கள் காட்டிய ஆர்வம் என்னை மெய் சிலிர்க்கச் செய்தது" என்று சொன்ன அந்த நண்பர் கூற்று உண்மையிலேயே நம்பிக்கை கதிரொளி வீசுவதாக உள்ளது. ஆனால் அதேவேளையில் தமிழகத்தைப் பற்றிய அவருடைய கூற்று உண்மையாகவே நம்மை வேதனைப்படுத்துகிறது. அதனால் எழுந்த ஐயம், அதனால் எழுந்த மன நெகிழ்ச்சி மனதை உறுத்திக் கொண்டேயிருக்கிறது. காரணம் இன்றைக்கு பம்பாயில் 10 லட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்களில் பல்லாயிரக்கணக்கானவர்கள் பல பெரிய தொழிற்சாலைகளில் ஈடுபட்டு சிறப்புற பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பணி மட்டும் புரியவில்லை, பயனுள்ள தங்களுடைய செயலால் எத்தனை எத்தனை அற்புதமான செயல்களையும் செய்கிறார்கள் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் போன்ற நாடுகளிலுள்ள அதிபர்களுடைய தொழிலைச் சிறப்புறச் செய்து, முழு உற்பத்தியையும் செய்து கொடுத்து, அதனால் பலனையும், பெயரையும் பெற்று வருகிறார்கள். நாணயமாக, நம்பிக்கையாக, திறமையாக, கனிவாகப் பணியாற்றுகிறார்கள். இப்படிப்பட்ட அற்புதமான சாதனை புரிகின்ற இவர்களை ஏன் தமிழ்நாடு பயன்படுத்தக் கூடாது என்பதை அவர்கள் எல்லாம் சிந்திக்குமாறு சொல்லியிருக்கிறார்கள். பம்பாயில் எந்த எந்தத் தமிழர்கள் தொழில் அதிபர்களாக இருக்கிறார்கள் என்பதுபற்றி ஒரு வலை போட்டுத் தேட வேண்டும். யார் யார் அங்கு இதிலே வெற்றி பெற்று சாதனை புரிந்துகொண்டிருக்கிறார்களோ அவர்களையெல்லாம் தமிழகத்திலே தொழிலைத் தொடங்குமாறு சொல்லி ஊக்குவிக்க வேண்டும்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பம்பாய் தமிழரின் மேற்கோளை விட உறுப்பினர் அருமையாக கருத்துக்களைச் சொல்கிறார். அதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளலாம். (சிரிப்பு)



**திரு. சி. இராமலிங்கம் :** பம்பாயை ஏன் மேற்கோளாகச் சொல்கிறேன் என்றால், தமிழகத்திலிருந்து பம்பாய் சென்று அங்கே பல தொழில்களில் அதிபர்களாக மட்டுமல்ல, முனைப்போடு பொறுப்பேற்று பல தொழில்களை லாப நோக்கத்தோடு நடத்திக்கொண்டும் இருக்கிறார்கள். அதற்காகத்தான் பம்பாயைச் சொல்கிறேன். இன்றைக்கு பம்பாயில் 10 லட்சம் தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தமிழகத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் தொழில் அதிபர்களாக மட்டுமல்ல, பெரிய பெரிய அதிகாரிகளாகவும், அலுவலர்களாகவும் திறம்படப் பணியாற்றுகிறார்கள். அவர்களுடைய பணிகளை சீர்தூக்கிப் பார்த்து, தகுதியுள்ளவர்களை தமிழகத்திற்கு வரச்சொல்லி தொழிலை வளர்க்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கினால், தமிழகத்தில் தொழில் வளர்கின்ற வாய்ப்பிருக்கிறது. நான் தகுதியும் திறமையும் உள்ளவர்களை மட்டும்தான் சொல்கிறேன். பம்பாயை மேற்கோள்காட்டி நான் சொன்னது சமீபத்தில் வந்த ஒரு பத்திரிகைச் செய்திதான். ரொம்ப நாளைக்கு முன்பு வந்ததல்ல அது. மார்ச் 15 ஆம் தேதி வந்த வாரப் பத்திரிகை அது, பம்பாய் தமிழர்களால் நடத்தப்படுவது. ஏன் அவர்கள் இதை எழுதுகிறார்கள் என்றால், இங்கேயிருந்து அங்கே போய் தொழில் செய்துவிட்டு அவர்கள் ஏமாற்றத்தோடு இருக்கிறார்கள். தமிழகத்திற்கு தங்களால் சேவை செய்ய முடியவில்லையே, ரிட்டையர் ஆனதற்குப் பிறகு ஒருவேளை அங்கே இருக்க முடியாமல் இங்கே வந்தால், தொழில் ஆரம்பிக்கலாமே, இங்கே தங்களுடைய திறமையைப் பயன்படுத்த முடியவில்லையே என்கிற ஆர்வத்தால்தான் அப்படிச் சொல்கிறார்கள். நான் பணிவோடு ஒன்றை இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் அமைச்சருக்குச் சொல்கிறேன். நானும் ஆளும் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் என்னுடைய உள்ளத்தில் இருப்பதை அப்படியே சொல்கிறேன். கைத்தறித் தொழில் இருக்கிறதே அதை ஒரு தொழிலாக யாரும் மதிப்பதில்லை. குடிசைத் தொழில் என்றுதான் சொல்கிறார்கள். படித்து பட்டம் பெற்று வந்தால், அவர்கள் சுயமாகத் தொழில் செய்ய 25 ஆயிரம் ரூபாய் தரப்படுகிறது. கைத்தறித் தொழிலைப் பொறுத்தவரையில்கூட, ரொம்ப பயிற்சி தேவைப்படுகிறது. 5 ஆண்டுகள் தறியில் பழகித்தான் இந்தத் தொழிலைச் செய்கிறோம். ஆகவே இந்தத் தொழிலையும் ஒரு இயந்திரத் தொழிலாக மதித்து, 25 ஆயிரம் ரூபாய் கொடுத்து ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியிருக்கிறது. என்ன செய்கிறது என்று கூர்ந்து பார்த்தால், ஒரு தொழிற்சாலை என்று பார்த்தால், அதில் கணவன் முதலாளியாக இருக்கிறான், மனைவி டைரக்டராக இருப்பாள், மகன் இயக்குநராக இருப்பான்.

[திரு. சி. இராமலிங்கம்] [1984 மார்ச் 28

இன்னொருவர் இயக்குநராக இருப்பார். இப்படி ஒரு தொழிலை ஆரம்பித்து, அதன் வருவாய் முழுவதையும், வேலைவாய்ப்பு முழுவதையும் அந்தக் குடும்பமே அனுபவிக்கிறது. ஏன் நில உச்சவரம்புச் சட்டம் என்று ஒன்று கொண்டுவந்து கட்டுப்படுத்தியது மாதிரி, இதிலும் ஒரு உச்சவரம்பு கொண்டு வந்து ஒரே குடும்பத்தில் வந்து குவியும் வருமானத்தைக் கட்டுப்படுத்தக் கூடாது என்று நான் கேட்கிறேன். இதனால் பல பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்காத நிலை இருக்கிறது. இப்படியே போனால், எப்படி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும்? என்னதான் பகீரதப் பிரயத்தனம் செய்தாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியாது. விசைத் தறியைக் கட்டுப்படுத்தி கைத்தறித் தொழிலையும் ஒரு தொழிலாகக் கருதி, தொழிலாக ஏற்று, ஒவ்வொரு தறிக்கும் 25 ஆயிரம் ரூபாய் வீதம் கொடுத்து, வீட்டுக்கு வீடு தறியைப் போட்டு, அவர்களை வாழ வைப்பதன்மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

அதற்கு அடுத்தது செருப்புத் தைக்கிற தொழில். இன்றைக்கு செருப்பு அணியாத மனிதனே கிடையாது. அதிலும் பிளாஸ்டிக் செருப்புகளை இயந்திரங்கள் மூலம் செய்துவிடுகிறார்கள். இயந்திரத்தில் செய்வதால் எண்ணிக்கை பெருகுகிறது என்பது சரிதான். ஆனால் அதனால் கைத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கின்றது. நான் கான்பூர் போயிருந்தபோது பாட்டா போன்ற கம்பெனிகளில் பார்த்தேன். அவர்கள் அங்கே தொழிற் சாலையில் செய்வது கொஞ்சம்தான். மிச்சத்தை அவர்கள் வெளியில்தான் ஆர்டர் கொடுத்துச் செய்கிறார்கள். அதுபோல இங்கேயும் வெளியில் ஆர்டர் கொடுத்துச் செய்தால், கைத்தொழில் பெருகும். வேலையில்லாத் திண்டாட்டம் போகும். படித்த இளைஞர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் போக வேண்டுமானால், கண்டிப்பாக இன்றைக்கு இருக்கக்கூடிய தொழில் முறையைச் செம்மைப்படுத்தியாக வேண்டும். சிட்கோ, டாம்கோ என்று பலவித தொழில் கம்பெனிகள் இருக்கின்றன. ஆனால் அதன் தலைவர்களாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போடுகிறார்கள். தொழில் தெரிந்தவர்களை அங்கே இயக்குநர்களாகப் போட்டால், தொழில் லாபகரமாக இயங்கும். அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக இங்கே ஐலண்ட் கிரவுண்டிலே ஒரு மே தின கூட்டத்தில் பேசினார்கள். "நாங்கள் ஆட்சிக்கு வந்தால், பஸ்களை தேசியமயமாக்குவோம்" என்று குறிப்பிட்டார்கள். "தேசியமயமாக்கும்போது, நஷ்டம் ஏற்பட்டால் என்ன செய்வீர்கள்?" என்று



1984 மார்ச் 28] [திரு. சி. இராமலிங்கம்]

அண்ணாவைக் கேட்டபோது, "நல்ல தொழில் நுணுக்கம் தெரிந்த ஜி. டி. நாயுடு போன்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் கொடுத்து பஸ் போக்குவரத்தை நடத்த முடியும், அப்படியும் நஷ்டம் வந்தால் அவர் பதில் சொல்லிக்கொள்வார்" என்றார் அண்ணா. ஆகவே அப்படி நஷ்டம் வராமல் நடத்துவோம் என்ற நம்பிக்கையோடு அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆட்சிக்கு வந்தவுடன் "நிபுணர்களைக் கலந்து எந்தெந்தத் துறைகளில் நஷ்டம் வருகிறதோ அப்படி வராமல் இருக்க நடவடிக்கை எடுப்பேன்" என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு தூத்துக்குடியில் உள்ள உரத் தொழிற்சாலையில் ஸ்பிக் நிறுவனத் தலைவரைப் போட்டு நடத்துகிறார்கள். இப்போது எல்லாத் தொழிலிலும் போட்டிபோட்டு நடத்துகிறார்கள். இவ்வாறு தொழில்கள் எல்லாம் வளர்ந்தும் வேலை வாய்ப்பு மிகக் குறைவாகவே இருக்கிறது.

மேலும் கைத்தறிக்குத் தேவையான சரிகை உற்பத்தி செய்வது பற்றி, அடுத்த ஆண்டுக்குள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வந்து, சரிகை இயந்திரத்தை வாங்கி கைத்தறித் துறைக்குத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான வாய்ப்பை சிறுபொருள் தயாரிப்போர் சங்கத்துக்குக் கொடுக்க வேண்டும். இப்படிப் பேசுவதற்குக் காரணம் நேற்று முழுவதும் நான் சைனா பஜாரில் இருந்தேன். எந்தக் கடைக்குப் போய் எந்தப் பொருளை வாங்கினாலும், "இது பம்பாயில் செய்தது, இது வெளிநாட்டில் செய்தது" என்று சொன்னார்கள். தமிழ் நாட்டில் எந்தத் தொழிலும் செய்வதில்லையா? காரணம், தமிழ் நாட்டில் நாம் 'எல்காட்' என்ற நிறுவனத்தைத் துவக்கினோம். ஆனால் நமக்குப் பின்னால் கேரளாவில் ஒரு எலெக்ட்ரானிக் நிறுவனம் துவங்கப்பட்டது. அவர்கள் இப்போது கெல்ட்ரான் டி. வி. போன்றவைகளைக் கூட செய்யும் அளவுக்கு முன்னேறியிருக்கிறார்கள். ஏன் நாம் அந்த அளவுக்கு உயரவில்லை என்று ஆராய வேண்டும். இதற்குக் காரணம் அரசியல்வாதிகள் என்று சொல்லமாட்டேன். பொறுப்பற்ற அதிகாரிகள்தான் என்று சொல்லி அதிகாரிகளை நமது வழியில், மக்களுக்குத் தேவையான வழியில் செயல்படச் செய்ய வேண்டும் என்று சொல்லி, இந்தத் தொழில் கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேச வாய்ப்பளித்ததற்காக நான் நன்றி கூறி அமருகிறேன்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன்பு வைக்கப்பட்டிருக்கிற தொழில் கொள்கை பற்றிய விவாதத்தில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய கருத்துக்களைச் சொல்

வதற்கு முன்பு அமைச்சர் அவர்களுக்குச் சில ஆலோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன். அது அவர்களுக்குப் பயன்படும், உதவியாக இருக்கும். தொழில் துறை என்பதில், சிறு தொழில், பெருந்தொழில் என்று பல தொழில் முறைகள் இருக்கின்றன. ஆனால் அத்தனையும் ஒரே அமைச்சரிடம் இருப்பது நல்லது. தொழில் துறைக்கு ஒரே செயலாளர்தானே இருக்கிறார் என்று பதில் சொல்லலாம். ஆனால் எல்லாத் தொழில்களையும் கட்டுப் படுத்தக்கூடிய அளவில் அமைச்சர் என்று ஒருவர்தான் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அதிகாரம் அமைச்சருக்கு இருந்தால்தான், இந்தத் துறை செம்மையாக இருக்க முடியும்.

அடுத்து, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இருக்கும் ஒரு முக்கியமான பிரச்சினையைச் சொல்ல விரும்புகிறேன். மின்சாரப் பற்றாக்குறை தமிழ் நாட்டில் இருக்கிறவரை நாம் தொழிற் துறையில் வேகமான முன்னேற்றத் தைக் காண முடியும் என்று நான் நம்பவில்லை. எனவே மின்பற்றாக்குறை இங்கே இல்லை என்ற நிலையை உருவாக்கினால்தான், தொழில் துவங்க நினைப்பவர்கள், தமிழகத்திலே தொழிலை ஆரம்பிப்பார்கள். அப்படி இல் லாமல் மற்ற வேறு எந்தச் சலுகைகளைக் காட்டினாலும் அவர்கள் இங்கே தொழில் தொடங்க வருவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் சொன்ன கருத்துக்கள் அனைத்தையும் முழுமையாக நான் வரவேற்று, அந்தக் கருத்துக்களோடு நானும் ஒன்றுபடுகிறேன். அவர்கள் இங்கே சில அருமை யான கருத்துக்களைச் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டில் இருக்கிற குறைபாடுகளைச் சொன்னார்கள். எப்படியெல்லாம் தொழில் துறையில் தவறுகள் நடைபெறுகின்றன என்பதையும் எடுத்துச் சொன் னார்கள். ஆனால் அதில் ஒரு திருத்தத்தை மட்டும் நான் சொல்ல விரும்பு கிறேன். அவரும் அதை ஏற்றுக்கொள்வார் என்று நம்புகிறேன். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, தொழிலாளர்களும் திறமையானவர்கள், அதிகாரிகளும் திறமையானவர்கள் அவர்களைக் குறை சொல்வதில் பயன் ஏதுமில்லை. இங்குள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எல்லாம் 'பூராக்கிரபுக் மென்ட்டாலிட்டி'யோடு இருப்பதாக யாரும் எண்ணி விடக் கூடாது. ஐ.ஏ.எஸ். அதிகாரிகளில் பலர் கணக்கு எம்.ஏ., படித்த வர்கள், ஜுவாலஜி படித்தவர்கள், பாட்டனி படித்தவர்கள். இப்படி ஒவ்வொரு துறையிலும் நல்ல முறையில் படித்துப் பயிற்சி பெற்றவர்கள்தான் இங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அமைச்



சர்கள்தான் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமே தவிர, அதை விடுத்து அதிகாரிகளைக் குறை சொல்வதில் எந்த நியாயமும் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் குறை சொல்லவில்லை. அவர்களுக்கெல்லாம் ஒரு துறையில் பொறுப்பு கொடுத்து, ஓராண்டு ஈராண்டுகள் ஆன உடனே அவர்கள் அந்தத் துறையில் நன்கு விஷயம் தெரிந்து கொண்ட உடனே நாம் அவர் களை மாற்றிவிடுகிறோம். இதன் காரணமாக ஆங்காங்குள்ள நிரந்தர கணக்கு எம்.ஏ., படித்தவர்கள், சயன்ஸ் படித்தவர்கள், ஜுவாலஜி படித்த ஒப்பந்திகள் செய்கிற தவறுகளைக் களைய நாம் பாடுபட வேண்டும் என்று தான் குறிப்பிட்டேன்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, நிரந்தர ஒப்பந்திகள் என்பவர்கள் செய்யும் குறைபாடுகள் என்ன என்பது எனக்குத் தெரியவில்லை. அவர்களையெல்லாம் கண்காணித்துச் செயலாக்குகிற அதிகாரம் படைத்தவர் எல்லோருக்கும் மேலே இருக்கிற அமைச்சர் அவர்கள்தான். எனவே அமைச்சர் அவர்கள் கொடுக்கிற கைடு லைன்ஸ்-ன் அடிப்படையில்தான் அதிகாரிகள் இங்கே செயல்பட வேண்டியவர் களே தவிர, அவர்களாகவே, தன்னிச்சையாகச் செயல்பட முடியாது. எனவே அதிகாரிகளைப்பற்றியும், தொழிலாளர்களைப்பற்றியும் நாம் குறை சொல் வதை விட்டுவிட்டு நாம் கொள்கையில் திடமாக இருந்து அதன் அடிப்படையில் அவர்களைச் செயல்படச் சொன்னால், நம்முடைய அதிகாரிகள் மிகவும் திறமையாகச் செயல்படுவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் துறையைப் பொறுத்த வரையில், தனியார் துறை, கூட்டுத் துறை, கூட்டுறவுத் துறை, பொதுத் துறை என்று பல பிரிவுகள் இருக்கின்றன. இப்படி தனியார் துறையிலிருந்து பொதுத் துறையை நோக்கி நாம் செல்ல வேண்டும். அதுதான் சோஷலிசத் தத்துவம் என்று சொல்லப்படுகிறது. எனக்கு சோஷலிசம்பற்றி அதிகமாகத் தெரியாது. எனவே, நான் கருதுவது, தனியார் துறையிலிருந்து, கூட்டுத் துறைக்கும், பின்னர் கூட்டுறவுத் துறைக் கும் சென்று இறுதியாக பொதுத் துறைக்குச் செல்வதுதான் நம்முடைய லட்சியமாக இருக்க வேண்டும். அந்தக் கொள்கையில் ஆட்சியிலிருக்கும் நீங்கள் திடமாக இருக்கிறீர்களா என்பதுதான் கேள்வி.

அரசாங்கத்தைப் பொறுத்த வரை, பொதுத் துறையை விட அதிகமான அக்கறை தனியார் துறைக்குத்தான் காட்டப்படுகிறது. அதற்குத்தான் அதிகமான ஊக்கம் தரப்படுகிறது என்றுதான் நான் நினைக்கிறேன். நான் இதை ஏதோ வேறு எண்ணத்தில் சொல்வதாக யாரும் கருதக் கூடாது. நம்முடைய அரசு அண்மையில் சர்க்கரை ஆலைகளை அரசுத் துறையில் அமைக்காமல், தனியார் துறைக்குத்தான் அமைப்பதற்கான அனுமதியை அளித்திருக்கிறது. அதைப் போலவே தனியார்தான் அதிகமான அளவில் சிமின்ட் ஆலைகளை அமைக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப் போலவே நேற்றையதினம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதாகப் பத்திரிகையில்கூட ஒரு செய்தியைப் பார்த்தேன். அதாவது மின்சாரத்தைக்கூட தனியார் உற்பத்தி செய்வதற்கு அனுமதிக்கலாம் என்ற கருத்தை அவர் தெரிவித்திருப்பதாக நான் அறிகிறேன். இப்படியே போனால், எல்லாமே தனியார் துறைக்குப் போனாலும் போகலாம் என்றுதான் நினைக்கிறேன். இவைகளெல்லாம் இங்கே தரப்பட்டிருக்கிற கொள்கைக் குறிப்பில் திட்டவட்டமாகச் சொல்லப்படவில்லை. எனவே நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், தனியார் துறையும் வேண்டும், கூட்டுத் துறையும் வேண்டும், கூட்டுறவுத் துறையும் வேண்டும், பொதுத் துறையும் வேண்டும். ஆனால் தனியார் துறையிலிருந்து மெதுவாக பொதுத் துறைக்குப் போக வேண்டும் என்பதுதான் நம்முடைய அடிப்படைக் கொள்கையாக இருக்க வேண்டும். அந்த வகையில் அரசு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கொள்கைக் குறிப்பில் முக்கியமான கருத்து ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, தொழில் துறையில் நாம் முன்னேறினால்தான், வேலை வாய்ப்புகள் அதிகமாகக் கிடைக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இன்றைக்கு பலரும் ஒரு குறையைச் சொல்கிறார்கள். திருச்சி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற காகிதத் தொழிற்சாலையைப்பற்றியே அந்தக் குறையைச் சொல்கிறார்கள். அதாவது அந்தக் காகிதத் தொழிற்சாலையில் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை கிடைப்பதைவிட வேறு மாநிலத்தைச் சார்ந்தவர்களுக்குத்தான் அதிகமான வேலை கொடுக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் வெறும் கூலி வேலைக்கு மட்டுமே எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள் என்றும், பாக்கியுள்ள முக்கியமான பதவிக்கு எல்லாம் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்படுகிறார்கள் என்றும், அயல் மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கே



அங்கே அதிகமான வேலை வாய்ப்பு அளிக்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. அதிலும் குறிப்பாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதைக்கூட, நம் நாட்டிலுள்ள பத்திரிகைகளில் விளம்பரம் செய்யாமல், வேறு மாநிலத்தில் உள்ள பத்திரிகைகள் மூலமாகவே விளம்பரம் செய்து அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை கொடுக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். இது உண்மையான செய்தியா என்று எனக்குத் தெரியாது என்றாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

ஒரு நாட்டினுடைய தொழில் முன்னேற்றத்தில் இரயில்வேக்கும் பங்கு உண்டு. எந்த நாட்டிலே போக்குவரத்து வசதி அதிகமாக இருக்கிறதோ அந்த நாட்டிலே தொழில் பெருகும் என்பது நாம் கண்டுள்ள உண்மையாகும். எனவேதான் பல்லாண்டுக் காலமாக கரூர்—திண்டுக்கல் அகல இரயில் பாதையைப்பற்றி நாம் சொல்லி வருகிறோம், மத்திய சர்க்காரை வலியுறுத்தி வந்திருக்கிறோம். ஆனால் அதற்கான நடவடிக்கை எடுத்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் இதிலே விசேஷக் கவனம் செலுத்தி மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி கரூர்—திண்டுக்கல் அகல இரயில் பாதையைப் பெற்றுத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்களைப் பெருக்கவேண்டுமென்றால், மூலப் பொருள்கள் தடையின்றி கிடைக்க வேண்டும். அப்படி தடையின்றி மூலப் பொருள்கள் கிடைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த பத்து நாட்களுக்கு மேலாக துறைமுகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் நடைபெற்று வருகிறது. பத்து நாட்களாக வேலை நிறுத்தம் என்றால், பல பொருள்கள் கிடைக்காத நிலை இருக்கிறது இதனால் நாம் உடனடியாகப் பாதிக்கப்படவில்லை என்றாலும், ஒரு சில நாட்களுக்குப் பிறகு ஒரு சில மாதங்களுக்குப் பிறகு இதனுடைய பாதிப்பு தெரியும் என்று நம்புகிறேன். இது மத்திய அரசின் பிரச்சினை என்று இந்த அரசாங்கம் சும்மா இருக்காமல், மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு, வற்புறுத்தி, இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் காண நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினையில் தொழிலாளர் நல அமைச்சரைவிட தொழில் அமைச்சருக்குத்தான் அதிக அக்கறை இருக்கவேண்டுமென்று நான் நினைக்கிறேன். ஏனென்றால், தொழில்கள் நடைபெறாவிட்டால், நாட்டில் முன்னேற்றம் காண முடியாது என்ற முறையிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

# தொழிற் கொள்கையும், திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1984 மார்ச் 28

இப்போது ஒரு மனப்பான்மை இருக்கிறது. நாம் ஒரு குறையைச் சொன்னால், ஏதோ அந்த இலாக்காவில் இருக்கின்ற பெரிய அதிகாரிகளையோ, அந்த இலாக்காவில் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற அமைச்சர்களையோ சொல்லுகிறோம் என்று கருதிக் கொண்டு, அந்தக் குற்றத்தைச் செய்தவர்களைப் பாதுகாக்க முயற்சி எடுக்கப்படுகிறது என்பதை வருத்தத்தோடு சொல்ல விரும்புகிறேன். உதாரணத்திற்கு அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை. அங்கேயிருந்து இரண்டு மூன்று ஆண்டுகளாக தொழிற்சங்கங்கள் எல்லாம் மனுக்களை அனுப்பியிருக்கின்றன. மனுக்களை அனுப்பினால், அவை எங்கே போகும்? டைரக்டர் ஆபீஸ் அவர்களுக்குப் போகும். அவர், எந்த அதிகாரியின் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறதோ அந்த அதிகாரிக்கு அனுப்பி அறிக்கையை வாங்கினால், அது சரியல்லாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மன்றத்திலே கூட நான் ஒரு கேள்வியைப் போட்டேன். அது எனக்குத் திரும்பி வந்துவிட்டது. "நீங்கள் சொன்ன குற்றச்சாட்டு எந்தத் தேதியில், யாரால், எப்படி நடைபெற்றது என்ற விவரங்களைத் தர வேண்டும்" என்று இலாக்காபூர்வமாக பதில் அளித்திருக்கிறார்கள். ஏதோ அந்த இலாக்காவில் தெரியாதது போலவும் அமராவதி சர்க்கரை ஆலை புதிதானது போலவும் கேட்டிருப்பது சரியல்ல. தவறுகள் நடைபெறுவது இயற்கை. இல்லையென்று நான் சொல்லத் தயாராக இல்லை. அந்தத் தவறுகளைத் திருத்துவது நம்முடைய கடமை என்பதை மறந்துவிடக்கூடாது. அமராவதி சர்க்கரை ஆலை, பாலக்கோடு சர்க்கரை ஆலைப்பற்றி பத்திரிகையில் வந்திருக்கிறது. அங்கே நடைபெற்றவைகளைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த சர்க்கரை ஆலையில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு சர்வீஸ் கண்டிஷன்களை மாற்ற வேண்டும் என்று அவர்கள் கேட்டு இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகின்றன. இதுவரை விசாரணை இல்லை. உண்டா இல்லையா என்பதையாவது தெரிவிக்க வேண்டாமா? டைரக்டர் ஆஃப் ஷுகர் யார் என்பது எனக்குத் தெரியாது. அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்தை நான் கூற விரும்புகிறேன்.



1984 மார்ச் 28] (திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா)

இந்த நாட்டிலே தொழிலை அதிகம் பெருக்க வேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு இருக்க முடியாது. நம்முடைய நாட்டிலிருந்து பல பேர் வெளிநாடுகளுக்குச் சென்று பொருள்களை ஈட்டுகிறார்கள். அந்தப் பொருளை மூலதனமாகப் போட்டு தொழிலை ஆரம்பிக்க அவர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் தொழிலை ஆரம்பிக்க சரியான முறையில் லைசென்ஸ் கிடைக்குமா, சரியான முறையில் ஆரம்பிக்க முடியுமா, அதற்கு உத்திரவாதம் கிடைக்குமா என்று கருதி, தயங்குவதாகச் சொல்கிறார்கள். எனவே வெளிநாடுகளில் சென்று பணம் சம்பாதித்து பயன் அடையக்கூடியவர்களுடன் தொடர்பு கொண்டு, அவர்கள் மூலமாகப் பல தொழில்களை இங்கே ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கொள்கைக் குறிப்பிலே கடைசியாக, மத்திய சர்க்காருடைய முதலீடு தமிழ் நாட்டில் போதுமானதாக இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பல காரணங்கள் சொல்லப்பட்டிருந்தாலும் கூட, மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி, தமிழ் நாட்டிலே போதுமான அளவுக்கு முதலீடு செய்ய வேண்டுமென்று கேட்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமாத்திரமல்ல, இன்று ஒரு குறிப்பிட்ட மூலதனத்திற்கு மேல் சென்றால் பண பலம் கொடுக்கிற அதிகாரம் பூராவும் மத்திய சர்க்காரிடத்திலே இருக்கிறது. இங்கே மத்திய, மாநிலத்தினுடைய அதிகாரங்கள் இருக்கின்றன. நம்முடைய மாநிலத்திலே திட்டத்தைப் போட்டு, நாம் அதை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னால், மத்திய சர்க்கார் அவர்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி அனுமதி மறுக்கிற நிலை கூடாதென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய நாட்டிலே ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கு உரிமையுண்டு. ஒருவேளை 'டிபன்ஸ்' சம்பந்தமான தொழில் வேண்டுமென்றால், 'டிபன்ஸ்' காரணங்களுக்காகத் தடை விதித்தால் அதை ஏற்றுக்கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன். மற்றப்படி எத்தனை கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டாலும், அந்தத் திட்டத்தை நம்முடைய மாநிலத்தில் போட்டு மாநில அரசு மூலமாக அதிகாரத்தைப் பெற வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். நான் அந்த விவரங்களுக்குள் செல்ல விரும்பவில்லை. சுருக்கமாகப் பேச்சை முடித்துக்கொள்கிறேன். நான் சொன்ன கருத்துக்களை அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மீண்டும் அனைத்தாரார் அவர்களுடைய கருத்துக்களை ஒருமனதாக ஏற்றுக்கொண்டு, எனது கருத்தைச் சொல்லி அமைகிறேன்.

* திரு. ஆர். டி. சீத்தாபதி: மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1984—85-ம் ஆண்டில் தொழிற் கொள்கை மற்றும் திட்டங்களின் மீது நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். குறிப்பாக ஆளும் கட்சியினுடைய சார்பில் இரண்டு பேர்கள் பேச வேண்டுமென்று அவை முன்னவர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதிலும் குறிப்பாக 10 நிமிடங்களுக்குள்ளாகவே முடித்து விடவேண்டுமென்று அவை முன்னவர் அவர்கள் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு கட்டளையையும் ஏற்று, இந்த வாய்ப்பு நல்கிய அவை முன்னவர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் தொழில் முதலீட்டு நிறுவனம், சிறு தொழிலானாலும் சரி அல்லது பெருந்தொழிலானாலும் சரி, முதலீடு செய்கின்ற வெறும் புள்ளி விவரங்களை மட்டும் நான் படிக்க விரும்புகிறேன். 1949லிருந்து 1978 ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ 30 ஆண்டுகாலத்தில் 74 கோடியே 51 லட்ச ரூபாய் தான் தொழில்களுக்கு முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் தமிழகத்துக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட பிறகு, 1978 லிருந்து 1983 வரை உள்ள 5 ஆண்டுக் காலத்தில் 114 கோடியே 94 லட்ச ரூபாயை சிறு தொழில்களுக்கும் மற்ற ஏனைய தொழில்களுக்கும் தொழிலாளர்களுடைய நன்மையைக் கருதி இந்த அரசு முதலீடு செய்திருக்கிறதென்பதை நான் உங்கள் மூலமாக தமிழகத்துக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அது போல நாம் என்ன தான் வேகமாக இருந்தாலும், தொழில்கள் முன்னேற வேண்டும். அப்போது தான் தமிழகம் முன்னேறும் என்ற அடிப்படையிலே யாருக்கும் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் நமக்கு இருக்கின்ற அதிகாரங்களுக்கு உட்பட்டுத் தான் தமிழகத்தினுடைய அரசு நடைபோட முடியும் என்பதை விவரம் அறிந்தவர்கள் நன்றாக அறிவார்களென்று நான் கருதுகிறேன். ஆனால் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்ட பிறகு தொழில் மந்தம் என்று யாராவது சொல்லுவார்களானால், அது அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகத் தான் இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மத்திய சர்க்காரிடம் 1980-ல் இங்கே ஏறத்தாழ 108 தொழிற்சாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்பதற்காக அனுமதி கோரப்பட்டது. ஆனால் அதிலே பெறப்பட்டதோ 57 தான். இன்னும் வராமல் இருப்பது 51 என்பதையும் நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





(முற்பகல் 11-50)

1981-ல் ஏறத்தாழ 92-க்கு அனுமதி நாம் கேட்டு, அதிலே பெற்றது 44. இன்னும் பெறாமல் இருப்பது 48 என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1982-ல் நாம் 184 தொழிற்சாலைகள் வேண்டுமென்று மத்திய சர்க்காரிடத்திலே கேட்டபோது, அவர்கள் தந்திருப்பது 67. ஆனால் பெறாதது 117 என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் இதுவரையில் 4 ஆண்டுக் காலத்தில் நாம் தொழிற்சாலைகள் தேவையென்று 384 பரிந்துரைகளை மத்திய சர்க்காருக்குச் செய்திருக்கிறோம். ஆனால் அவர்கள் தந்திருப்பது இதுவரையில் 183 என்பதை நான் தமிழகத்திற்கு பணிவன்போடு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் 1—1—1977 முதல் 31—10—1983 வரையில், ஏறத்தாழ 180 கோடி ரூபாய் செலவில் நாம் 449 தொழிற்சாலைகள் ஆரம்பித்து, ஒரு லட்சத்து 10 ஆயிரம் பேர்களுக்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும், புரட்சித் தலைவர் அவர்களும், வேலை வாய்ப்பு நல்கியிருக்கின்றார்கள் என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், தாம்பரத்திலே, சென்னை அருகில் தடையில்லா வணிக மண்டலம் ஏற்படுத்தவும், அதற்கு 450 ஏக்கர்களையும் நாம் தருவதாகத் தெரிவித்திருக்கிறோம்.

நான் நம் தொழில் அமைச்சர் மூலமாக ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நாம் தொழிற்சாலைகளை இராணிப்பேட்டையிலே ஆரம்பித்திருக்கிறோம். ஆனால் நாம் செய்கின்ற வேலை என்ன என்று சொன்னால், நாம் ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்துவிட்டு, அதிலே உற்பத்தியாகின்ற பொருள்கள் இந்தியாவிலே இருக்கின்ற பல்வேறு மாநிலங்களிலும் விற்பனை ஆகாதா என்று அலைந்து கொண்டிருக்கிறோம். அந்தக்

[திரு. ஆர். டி. சீத்தாபதி] [1984 மார்ச் 28

கொள்கையை தயவுசெய்து நாம் மாற்றியாக வேண்டும். காரணம் எது தேவை என்று பார்க்க வேண்டும். இந்தியத் துணைக் கண்டத்தில் இருக் கின்ற பல்வேறு மாநிலங்களிலே நாம் உற்பத்தி செய்கின்ற எந்தப் பொருள் களுக்கு 'டிமாண்ட்' என்று ஆராய்ந்தறிந்து, அதை நாம் நம் சிறு தொழில்கள் மூலமாக உற்பத்தி செய்தால் பலனிருக்கும். இந்தியா ஜப்பானோடு போட்டி போட முடியும் என்ற கனவுகூட காண முடியாது. அவர்கள் ஓரளவுக்கு உற்பத்தியில் நஷ்டம் இல்லாமல், தொழிற்சாலையை மூடிக்கொண்டு போகின்ற நிலையில் இல்லாமல், ஓரளவுக்கு வியாபாரம் நடத்தி, லாபம் கிடைத்து தொழிற்சாலையில் உற்பத்தியாகிற பொருள்களுக்கு நல்ல பணம் வருவதற்கும், நம் அரசு கொடுத்திருக்கின்ற பணமும் திரும்ப சர்க்காருக்கு வருவதற்கும் அது பயன் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோலவே, நாம் தொழிற்சாலைகள் எதுவும் தொடங்கவில்லை என்று சொல்கின்றார்கள். அதுவும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி யில், தொழிற்சாலை தொடங்கப்படவில்லை என்று சொல்கின்றார்கள். அந்தக் குற்றச்சாட்டை மறுக்க விரும்புகிறேன். காரணம் செங்கற்பட்டு மாவட்டத் தில், ஏறத்தாழ 10 கோடி ரூபாய் செலவில் ஒரு சர்க்கரை ஆலையை நாம் உருவாக்கியிருக்கிறோம். திருச்சி மாவட்டத்தில் பூதலூரில் ஏறத்தாழ 195 கோடி ரூபாய் செலவில் திட்டம் தொடங்கப்பட்டு, ஏறத்தாழ ஒரு மாதத்திற் குள்ளாகவே அது செயல்படும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. ஆகவே, மிகப்பெரும் தொழிலையும் நாம் தொடங்குகிறோம் என்பதைச் சொல்லி, அந்தக் குற்றச்சாட்டை மறுத்து, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, எந்த அளவுக்கு தொழில் துறையில் முன்னேறி வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், ஆசிரியர்கள் தொகுதியிலிருந்து அண்மையிலே வெற்றி பெற்று வந்திருக்கின்ற நம் மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அந்தக் கருத்தை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். காரணம் 10 ஆண்டு களாக தமிழ்நாடு அரசுக்குத் தருகின்ற பங்குத் தொகை 8 சதமாக இருந்தது. ஆனால் மைய அரசு 4 சதமாக அதைக் குறைத்திருக்கிறது என்று சொல்லும் போது, தமிழ் நாட்டில் அந்த இயக்கத்தையும், டெல்லி சர்க்காருடைய இயக்கத்தையும் சேர்ந்த, இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர்கள் இப்போது இங்கில்லை. இருந்திருந்தால் இந்த விவாதம் சற்று சூடாகக்கூட இருந்திருக் கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அவர்கள் யாருமே இல்லாத காரணத்



1984 மார்ச் 28] [திரு. ஆர். டி. சீத்தாபதி]

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை).

தாலே, நான் இதை எப்படிப் பேசுவது என்றே தெரியவில்லை. இப்போதா வது எதிர்வரிசையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் உட்கார்ந்திருப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் பேச எழுந்த நேரத்தில் யாருமே இல்லாமல், வெற்று இடங்களைப் பார்த்துத்தான் பேசிக் கொண்டிருந்தேன்.

அடுத்து, சிறு தொழிலைப்பற்றி நான் கூற விரும்புகிறேன். புதிதாகப் பொறுப்பேற்றிருக்கின்ற, மிகவும் அதிகமாக நிர்வாகத் திறமையும், அனுபவ மும் பெற்றிருக்கிற மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, சட்டங்களை இன்னும் எளிமையாக்க வேண்டும். மற்ற மாநிலங்களில் எல்லாம் பார்க்கிறோம். போகின்ற பாதையிலேயே ஒரு சாதாரண இடத்தில் ஒரு பிளக் பாயிண்ட்டைக் கொண்டு ஒரு சிறிய லேத் ஓடிக்கொண்டிருக்கிறது. அந்தத் தொழிலாளிக்கு உதவியாக அவரது மனைவியும், குழந்தைகளும் உதவுவதைப் பார்க்கிறோம். இவ்வாறு மற்ற மாநிலங்களில் சிறுதொழில் முன்னேறிக்கொண்டு வருகிறது. ஆனால் இங்கே அப்படிப்பட்ட நிலைமை இல்லை. 4,000, 5,000 10,000 ரூபாய் என்று கடன் வாங்கி ஆரம்பிக்கிற தொழிற்சாலையில் அதிகாரிகளைச் சந்திப்பதற்கு செலவு செய்வதற்கே சரியாகப் போய்விடுகிறது.

நான் தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இண்டஸ்ட்ரியல் ஏரியாவில் தொழில் நடத்த இடம் பார்த்து, அனுமதி கேட் டால், இடத்தைப் பார்த்துவிட்டு அனுமதி கொடுத்துவிட வேண்டும். கார்ப்ப ரேஷனுக்கு அலையவிடுவது, லேத் ஓடும்போது பில்டிங் தாங்காமல் இடிந்து விழுந்துவிடுமோ என்று சர்ட்டிபிகேட் கேட்பது, அதற்குப் பிறகு ஒவ்வொரு அதிகாரியாகப் பார்க்க படிக்கட்டு ஏறச்செய்வது இதுபோன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். பேஜூர் லைசன்ஸ் கிடைக்காத காரணத்தால், என் போன்ற அரசியல்வாதிகளை அணுகவேண்டியிருக்கிறது. வேறு யாரை யாவது சொன்னால் வருத்தப்படுவார்களே என்றுதான் நான் என்னைச் சொல்கிறேன்.

[திரு. ஆர். டி. சீத்தாபதி] [1984 மார்ச் 28

என்னைப் போன்றவர்களை டாக்சியிலே அழைத்துப் போக வேண்டும். அப்போதும் லைசன்ஸ் கிடைப்பதில்லை. "என்னையா, இந்த சீத்தாபதியை பத்து தடவையாவது அழைத்துச் சென்றிருப்போம். இதுவரைக்கும் ஆயிரம் ரூபாய்க்கு மேல் டாக்சிக்கே செலவிட்டிருக்கிறோம். இன்னும் அனுமதி கிடைக்கவில்லையே" என்று வருத்தப்படுகிறார்கள். நாங்கள் அவர்கள் அழைக்கும்போது, போகாமலிருக்க முடியாது. காரணம் பொது மக்களிடம் வாக்குகள் வாங்கி இந்த அவைக்கு வருகிற ஆட்களாக இருப்பதால், நாங்கள் செல்லத்தான் வேண்டும். ஆனால் செல்கிற நேரத்தில் அதிகாரிகள் ஏதாவது சொல்லி அனுப்பிவிடுகிறார்கள். நான் அதிகாரிகள் மீது குறை சொல்லமாட்டேன். இருக்கிற நிலை அப்படி இருக்கிறது. "நீங்கள்தானே சட்டத்தைப் போட்டீர்கள். ஆகவே சட்டத்தைத் தளர்த்தி விட்டால், தருவதற்குத் தயாராக இருக்கிறேன்" என்று சொல்கிறார்கள். ஆகவே சிறுதொழில் செய்ய முன்வருபவர்களுக்கு தொழிற்சாலைக்கான இடமிருக்கிறதா, அதற்கான நிலைமைகள் இருக்கின்றனவா என்று மட்டும் பார்த்து, அவர்களுக்கு எந்தவிதமான சங்கடமுமில்லாமல் அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாகச் சொல்கிறேன், ஒரு சாதாரண லேத் பட்டறை போட வேண்டுமென்று சொன்னால், அதற்கு இடம் பார்த்து, அதிகாரிகளிடம் போய்ச் சொன்னால், லெட்ரின் வசதி இருக்கிறதா என்று கேட்கிறார்கள். லெட்ரின் வசதி எப்படி இருக்கும்? யார் வாடகைக்கு விட்டார்களோ அவர்கள் வீட்டில் இருக்கும். அதிகாரிகள் இதையெல்லாம் கேட்டால், தொழிற்சாலை முன்னேற முடியாது. தொழிலும் உருவாக்க முடியாது. தொழிலாளர் நலம் பாதிக்கப்படும். ஆகையினாலே, வெளிநாடுகளில் போடு [illegible] இண்டஸ்ட்ரீஸ் ஆரம்பிப்பதுபோல, பிரதேசத்திலும் ஆரம்பிப்பதற்கு சட்டத்தைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அவையில் பேச வாய்ப்பு நல்கியதற்கு பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.



1984 மார்ச் 28]

(நண்பகல் 12-00)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, தொழிற் கொள்கைபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எடுத்து இயம்பியிருக்கிறார்கள். அரசினுடைய கொள்கையைப் பொறுத்தவரைக்கும், நீங்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் ஏற்கெனவே கூறியவாறு, ஒரு புறம் மக்கள் பெருக்கம் அதிகமாக இருக்கிற நமது மாநிலத்தில் வறுமையை ஒழிக்க வேண்டும்; மறு புறம் வறுமையை ஒழிக்க வேலை வாய்ப்பை பெருமளவிற்கு அவர்களுக்கு நல்கிட வசதிகளை உருவாக்கிட வேண்டுமென்பதுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி வறுமையைப் போக்க, வேலை வாய்ப்பைப் பெருக்க தொழிற்சாலைகளுக்கு நாம் ஊக்கத்தை அளிக்கின்றபோது, அது குடிசைத் தொழில்களாக இருந்தாலும் சரி, சிறு தொழில்களாக இருந்தாலும் சரி, நடுத்தரத் தொழில்களாக இருந்தாலும் சரி, பெரிய தொழில்களாக இருந்தாலும் சரி, அனைத்துத் தொழில்களுக்கும் ஊக்கம் தர வேண்டுமென்பது தான் அரசினுடைய கொள்கையாகும். சில நேரங்களில் சில தொழில்களை லார்ஜ் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் ஆகத்தான் அமைத்தாக வேண்டும். இருக்கக் கூடிய சாத்தியக் கூறுகளின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் சொன்னதுபோல், சில தொழில்களை நடுத்தரத் தொழில்களாகவும், சில தொழில்களை Small Scale and Cottage Industries ஆகவும் அமைத்துவிட முடியும். Uuless large-scale and medium industries are there, the growth of small-scale and ancillary industries will very much be affected. என்பது நடைமுறையில் கண்கூடாகக் காண்பதாகும். சிறு தொழில்களைப் பெருக்குவதற்குக்கூட நடுத்தரத் தொழில்களும், பெரிய தொழில்களும் ஊக்கம் பெற வேண்டுமென்ற முறையில்தான் இந்த அரசு தொழிற் கொள்கைப் பிரச்சினைகளை அணுகி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் பேசும்போது, இன்னும் ஒன்றைக்கூடச் சொன்னார்கள். தனியார் தொழில் முதற் கட்டமாகவும், கூட்டுறவுத் துறை இரண்டாவது கட்டமாகவும், கூட்டுத் துறை மூன்றாவது கட்டமாகவும், இறுதியாக அரசுத் துறையாகவும் தொழில்கள் மாற வேண்டுமென்று சொன்னார்கள். அந்த நிலையைப் பெற வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். இந்த அரசின் கொள்கையும் அதுதான். ஆனால் நடைமுறைப்படுத்துகிற போது, தற்போது நாட்டில் ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள யதார்த்தமான உண்மையைக் கருத்திற்கொண்டு பிரச்சினைகளை அணுக வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். எல்லாத் தொழில்களையும் அரசே எடுத்து நடத்தி

விட முடியுமா என்றால், கண்டிப்பாக முடியாது. நிதி ஆதாரம் நமக்கு ஒரு புறம் போதுமான அளவுக்கு இல்லை. மேலும் மத்திய அரசின் கொள்கைக்கு உட்பட்டுத்தான் மாநில அரசு பெரும் தொழில்களில் ஈடுபட வேண்டும். சில தொழில்களை 'ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் ஆர் மீடியம் இன்டஸ்ட்ரீஸ்' என்று அரசே எடுத்து நடத்தும்போது, 'ஓவர்-ஹெட் எக்ஸ்பென்டிசர்' ஏற்பட்டு, நஷ்ட நிலை ஏற்படுவதென்று தமிழகத்தில் மட்டுமல்ல, பாரதத்தில் பல்வேறு மாநிலங்களில் உள்ளது. டெக்னிகல் எக்ஸ்பர்ட்ஸ், தொழில் நுணுக்க வல்லுனர்களாக தனியார் அதிகமாக இருக்கும்போது, அவர்களைப் பயன்படுத்தத் தவறினால், நாட்டின் பொருளாதாரச் செம்மைக்குத் தடை விதித்ததாக அமைந்துவிடும் என்று, அவற்றையெல்லாம் கணக்கிட்டு, அரசுத் துறையில் சில தொழில்களை அமைத்தாக வேண்டும்; சில தொழில்களை கூட்டுறவுத் துறையில் அமைத்தாக வேண்டும்; சிலவற்றை கூட்டுத் துறையில் அமைத்தாக வேண்டும்; தனியார் துறையிலும் சிலவற்றை அமைத்தாக வேண்டும். இந்த அணுகுமுறையைத் தொடர்ந்து கடைப்பிடிக்கும்போது தான், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, வேலை வாய்ப்பைப் பெருக்க, வறுமையை ஒழிக்க பல்வேறு தொழில்கள், பல்வேறு பகுதிகளில் பரவலாக வளர முடியுமென்பதால், அத்தகைய கொள்கையைத்தான் இந்த அரசு கடைப்பிடிக்கும் என்பதை முதற்கண் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும்கூட ஒன்றை உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். பல ஆண்டுகளாக கம்யூனிசத் தத்துவத்தின்கீழ் ஆட்சி நடத்துகிற மேற்கு வங்கத்தில்கூட அண்மைக் காலத்தில் மாற்று முடிவை எடுத்திருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் மிகப் பரவலாக இருக்கும் காரணத்தாலும், மக்கள் வருமானத்தைப் பெருக்க வேண்டிய கட்டாய நிலை இருப்பதாலும், அரசு தொடங்கிய தொழில்கள் பெரும்பாலும் நஷ்டத்தில் இயங்குவதாலும், அவர்கள் கொள்கை மாற்றம் செய்து, மேற்கு வங்கத்தில் முதலமைச்சர் தொழிலதிபர்களைக் கூட்டி, "மேற்கு வங்கத்தைப் பொறுத்தவரைக்கும் தனியார் துறையில் தொழில் துவக்க நீங்கள் முன்வர வேண்டும். அதற்கு அரசு எல்லா வித ஊக்கத்தையும் தரும்" என்று சொன்னதன் அடிப்படையிலே, கடந்த 3 ஆண்டுகளாக பல தொழில்கள் அங்கே தனியார் துறையில் ஏற்பட்டிருக்கின்றன. அதன் அடிப்படையிலே கடந்த 3 ஆண்டுகளாக—1979-ல் மட்டும் லெட்டர் ஆஃப் இன்டென்ட் என்று சொல்லக்கூடிய டி.ஜி.டி.டி. ரெஜிஸ்டிரேஷன் அல்லது மத்திய அரசினுடைய உரிமம் என்ற முறையில், டி.ஜி.டி.டி. ரெஜிஸ்டிரேஷன், அதாவது 5 கோடி ரூபாய்க்கு மேலான தொழில்கள் பதிவு செய்யப்பட்டது 28; மத்திய அரசினுடைய உரிமங்கள் பெற்றது 29 தொழில்களாகும். 1980 ஆம் ஆண்டில் டி.ஜி.டி.டி ரெஜிஸ்டிரேஷன் மூலமாக 55



தொழில்கள்; மத்திய அரசு உரிமம் பெற்றது 23 தொழில்கள். 1983 ஆம் ஆண்டில் 43 தொழில்கள் டி.ஜி.டி.டி. ரெஜிஸ்டிரேஷன் மூலமாகவும் 34 தொழில்கள் மத்திய அரசின் அனுமதி பெற்றும் உருவாகியிருக்கின்றன. ஆக 126 பெரிய தொழில்கள் டி.ஜி.டி.டி. ரெஜிஸ்டிரேஷன் மூலமாகவும், 86 பெரிய தொழிற்சாலைகள் மத்திய அரசின் உரிமம் பெற்றும் உருவாகியிருக்கின்றன. கிட்டத்தட்ட 90 சதவிகிதம் தொழிற்சாலைகள் மேற்கு வங்கத்தில் இவ்வாறு அமைக்க நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தனியார் துறையும் வேலைவாய்ப்பைத் தருவதற்கு இது போன்று முன்வருகிறபோது, நாம் அதற்கு ஊக்கம் அளிக்கிறோம். நம்முடைய முக்கிய நோக்கமே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதே, வறுமையை ஒழிப்பதே. வறுமையை ஒழிப்பதும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதும் தான் நம்முடைய மிக முக்கியமான நோக்கங்கள். அதற்குரிய வழிமுறைகள் எதுவாக இருந்தாலும், அவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்த வேண்டும். அந்த வகையில் தமிழக அரசைப் பொறுத்தவரையில், தனியார் துறைக்கும், கூட்டுறவுத் துறைக்கும் ஊக்கத்தை அளித்து வருகிறது. அதேபோல அரசுத் துறைக்கும் ஊக்கமளிக்கிறோம். அந்த முறையில் தான் தொழில் கொள்கையை அணுகுகிறது இந்த அரசு.

மாண்புமிகு உறுப்பினர்கள் தொழில் வளர்ச்சிக்கு அளிக்கின்ற உதவிகளை அதிகமாக்க வேண்டுமென்று எடுத்துச்சொன்னார்கள். மத்திய அரசைப் பொறுத்தவரையில், ஓர் அணுகுமுறையை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் "No industry district என்று சொல்லக்கூடிய பகுதிகளுக்கு 25 சதவிகித மானியம் என்று சொல்லி, அதிகபட்சம் 25 இலட்சம் அளிப்பது என்கிற அணுகுமுறையை சில காலமாகவே நடைமுறைப் படுத்திக்கொண்டு வருகிறது. இதனால் தமிழகம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் தொழிலே இல்லாத மாவட்டம் என்று ஒன்று இல்லை. உத்தரப் பிரதேசம், பீகார் போன்ற வடபுலத்து மாநிலங்களில் ஆர்.டி.ஓ. என்று நம்மிடையே இருப்பதுபோல், அந்த அளவிலான மாவட்டங்கள் இருக்கின்றன. ஆனால் நம்மைப் பொறுத்தவரையில், 4, 5

ஆர்.டி.ஓ. கொண்ட வட்டங்கள் சேர்ந்து ஒரு மாவட்டமாக இருக்கிறது. அந்த வகையில் நம்முடைய மாநிலத்திலுள்ள சில மாவட்டங்களைப் பிரித்து சலுகை பெறவேண்டிய நிலை இருக்கிறது. இல்லையென்றால், நம்முடைய மாநிலம் சலுகையைப் பெற முடியாத நிலை இருக்கிறது. அந்த வகையில் மாநில அரசு மத்திய அரசை தொழில்களே இல்லாத தாலுக்கா என்கிற வகையில் அணுகி, சலுகை அளிக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறது. அந்த வகையில் நமக்குச் சலுகை கிடைக்கும் என்கிற நம்பிக்கை இருக்கிறது. அதுபோல் Category B என்கிற இன்னொரு திட்டத்தின்படி அதிகபட்சம் 15 இலட்சம் மானியமாகத் தருவது என்று வைத்திருக்கிறார்கள். அதற்காக சில வட்டங்களைப் பிரித்து வைத்துத் தருகிறோம். கேட்டிகரி 'சி' என்ற பிரிவிலே அதிகபட்சம் பத்து லட்சம் அதாவது 10 பெர் சென்ட் என்கின்ற அளவிலே சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

மத்திய அரசைப் பொறுத்தவரையில், தர்மபுரி, கன்னியாகுமரி, தென்னாற்காடு, புதுக்கோட்டை போன்ற 9 மாவட்டங்களைப் பின்தங்கிய மாவட்டங்களாகப் பிரித்து அவற்றுக்கு நான் முன்னர் சொன்னதுபோல் 10 சதவிகிதம், அதாவது அதிகபட்சம் 10 இலட்சம் அளித்து வருகிறது. அதேபோல மத்திய அரசு கடனுதவி வழங்கும்போது, 12½ சதவிகித வட்டியில் வழங்க வேண்டுமென்றும் ஐ.டி.பி.ஐ. சலுகையை மேற்கண்ட 9 மாநிலங்களுக்கும் வழங்குவது என்றும் முடிவு செய்திருக்கிறது. இதன் அடிப்படையில் தமிழக அரசு பல பகுதிகளைப் பின்தங்கிய பகுதிகளாக அறிவித்து ஊக்கம் அளிக்க வேண்டுமென்ற வகையில், இந்த அரசைப் பொறுத்தவரையில், அதிகபட்சம் 15 லட்சம் என்ற முறையிலே பல வட்டங்களை, கிட்டத்தட்ட 33 வட்டங்களைத் தேர்ந்தெடுத்து, பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவித்தோம். இந்த 33 வட்டங்களுக்கும் இந்தச் சலுகை கிடைக்க தமிழக அரசு பிரத்தியேகமாக முயற்சி செய்து வருகிறது. அதுமட்டுமல்லாமல், சில விசேஷத் தொழில்களும் இருக்கின்ற தொழிலில் ஈடுபட்டு உற்பத்தியைப் பெருக்கினால் நல்லதுதான் "End products will have easy marketing facility." என்கின்ற வகையில் உற்பத்தி செய்தால், விற்பனை செய்யக்கூடிய வாய்ப்புள்ள தொழில்களான எலெக்ட்ரானிக் பேஸ்டு இன்டஸ்ட்ரீஸ் போன்ற தொழில்களுக்கெல்லாம் ஊக்கம் அளிக்கிறோம். அதைப்போலவே மருந்து வகைகளைத் தயாரிக்கிற தொழிற்சாலைகள், ஆட்டோமொபைல் பார்ட்டுகளைத் தயாரிக்கிற தொழிற்சாலைகள், சூரிய ஒளியைப் பயன்படுத்தி உற்பத்தி செய்கிற தொழிற்சாலைகள் போன்ற நான்கு வகை தொழில்களை எந்த தாலுக்காவில் துவங்கி



னாலும், ரூ. 10 இலட்சம் வரையிலோ அல்லது 10 சதவிகிதம் மானியமோ, இதில் எது உச்சகட்டமோ அப்படி மானியம் தரவேண்டுமென்று நமது மாநில அரசு முடிவெடுத்து, அந்தச் சலுகைகளைக் கொடுத்து வருகிறது. இந்தியாவிலேயே எந்த மாநிலமும் இத்தகைய சலுகையைக் கொடுக்காத நிலையில், நமது தமிழ்நாடு அரசுதான் இத்தகைய நான்கு தொழில்களுக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் சலுகைளை அளித்து வருகிறது.

(பிற்பகல் 12 10)

அதுமட்டுமல்லாமல், அத்தகைய பொருட்களுக்கு விற்பனையில் தமிழ்நாட்டில் முதலிடம் கொடுக்க வேண்டுமென்ற உத்தரவையும், தொழில் துவங்குகிறபோதே அறிவித்ததையும் இந்த அவை நன்கு அறியும். அதைப்போலவே சோலார் பேஸ்டு எனெர்ஜி தொழில்கள் பற்றிச் சொன்னார்கள். அது மிக முக்கியமானதொன்று. அருமை அண்ணன் திரு. சாதிக் பாட்சா அவர்கள பேசும்போது,' "Power is our acute problem standing as a hurdle to, the industrial growth of the State." என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் எந்தெந்த வகைகளில் மின்சார உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை இருக்கிறது. சோலார் பேஸ்டு இன்டஸ்டிரியை ஆரம்பித்தால், அதன் மூலம் மின்சாரத்தை மிச்சப்படுத்தி, அதை வேறு தொழில்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதைப் பொறுத்தவரையில், சோலார் பேஸ்டு இன்டஸ்டிரியை யார் ஆரம்பித்தாலும் அவர்களுடைய உற்பத்திக்கு முழு அளவில் விற்பனை வரியை ரத்து செய்ய வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. சூரிய ஒளியை அடிப்படையாகக் கொண்டு துவக்குகிற தொழில் எதுவாக இருந்தாலும், முதலாண்டிலேயே அவர்கள் 5 லட்சத்துக்கோ 10 லட்சத்துக்கோ 15 லட்சத்துக்கோ மிஷின்கள் வாங்கியிருந்தாலும், 100 சதவிகிதம் டிப்ரிஷியேஷன் வேல்யூ செய்து கொள்ள அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. போட்ட முதலீட்டை முதலாண்டிலேயே எடுத்துக்கொள்ளும் வகையில் இந்த அரசு அதை ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதைப்போலவே எக்சைஸ் டியூட்டியிலிருந்தும் முழு விடுதலை தந்திருக்கிறார்கள். சோலார் பேஸ்டு இன்டஸ்டிரிக்கு 12½ சதவிகிதம் தான் வட்டி என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு உரிமமே பெற வேண்டிய அவசியமில்லை. யார் வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும், ஆரம்பிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். 'அதைப்போலவே 'குக்கிங் கேஸ்' தயாரிக்கும் தொழிலுக்கு 33 3/4 சதவிகிதம் மானியம் மத்திய

அரசு தருகிறது. அதைப்போலவே விவசாயத்திற்குத் தேவையான. . .
**Windmill, solar pump for irrigation.**
அதை அவர்கள் பயன்படுத்த முன்வருகிறபோது, சிறு உழவர்களாக இருந்தால் 25 சதவீதம் மானியமாகவும், குறுநில உழவர்களாக இருந்தால் 33⅓ சதவீத மானியமும் தர வேண்டுமென்று மத்திய அரசு அனுமதித்திருக்கிறது. எனவே சிறிய தொழிற்சாலைகளான ஓட்டல் தொழிற்சாலைகளுடைய பல்வேறு பணிமனைகள், மருத்துவமனைகள், டெக்ஸ்டைல் இன்டஸ்ரீஸ், தோல் தொழிற்சாலை மற்றும் ப்ரூயரிஸ், டைரிஸ், உணவுப் பொருட்கள் தொழிற்சாலை போன்றவை, மருந்து உற்பத்தித் தொழிற்சாலைகள், செராமிக் இன்டஸ்டிரீஸ் ஆகிய பல பகுதிகளும் சோலார் எனேர்ஜியை மாற்று சக்தியாகப் பயன்படுத்துகிறபோது இந்தச் சலுகைகள் பெற வாய்ப்பு இருப்பதால், இதை அரசு ஊக்குவிக்கும் என்பதை நான் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மின்சாரத்தைப் பொறுத்தவரையில், தமிழகத்தினுடைய எந்தப் பகுதியில் தொழில் துவங்கப்பட்டாலும், முதல் மூன்றாண்டு காலத்திற்கு சாதாரண உயர் அழுத்த மின் கட்டணத்தில் 66 சதவீதம் கட்டினால் போதும் என்ற முறையில் தொழிற்சாலை துவக்க வருகிறவர்களுக்கு அரசு ஊக்கம் தருகிறது. அதைப்போலவே 4-வது ஆண்டுக்கு 80 சதவீதம் கட்ட வேண்டும். 5-வது ஆண்டுக்கு 90 சதவீதம் கட்ட வேண்டுமென்று சொல்லி அரசு சலுகையைப் பிரத்தியேகமாக அறிவித்திருக்கிறது. அது மட்டுமல்ல, இன்னும் தொழில் துவங்குகிறவர்களுக்கு சலுகைகள் தர வேண்டுமென்ற முறையில் கிட்டத்தட்ட 62 வட்டங்களை இந்த அரசு அறிவித்து, அந்த வட்டங்களில் யார் தொழிலைத் துவக்க முன்வந்தாலும், ஏற்கெனவே அறிவித்திருக்கிற இந்த சலுகைகளோடு மேலும் 15 சதவீதம் மானியக் கடன் சலுகை பெரிய தொழிலைத் துவக்குபவர்களுக்குத் தரும் என்று மாநில அரசு அறிவித்து அதன் மூலம் தொழிலை ஊக்குவித்து அறிவித்திருக்கிறது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் அருமை அண்ணன் திரு. சாதிக் பாட்சா அவர்கள் பேசும்போது, தொழில் வளர்ச்சிபற்றி குறிப்பிட்டார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், 1977 ஆம் ஆண்டிற்குப் பிறகு கணிசமான தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதென்பதை நாம் யாரும் மறந்துவிடக்கூடாது. மறுக்கவும் கூடாது என்பதற்காக நான் இதைச் சொல்ல விரும்புகிறேன்.



1977 ஆம் ஆண்டு வாக்கில் மைய அரசினுடைய ‘டிபார்ட்மெண்ட் ஆஃப் கம்பனி அஃபேர்ஸ்’ ஒரு அறிக்கை தந்திருக்கிறது. அந்த அறிக்கையின்படி பார்த்தால், தமிழ்நாட்டில் துவக்கப்பட்ட—புரோப்ரைட்டரி கன்சர்ன்ஸ் அல்ல, பார்ட்னர்ஷிப் ஃபேர்ம்ஸ் அல்ல—லிமிட்டெட் கம்பெனிகளின் எண்ணிக்கை அதிகப்பட்டிருக்கிறது அதாவது, ஏற்கெனவே தமிழகத்தில் 4,060 ஆக இருந்த லிமிடெட் கம்பெனிகளின் எண்ணிக்கை 31—3—1982 அன்றுள்ளபடி, அதுவும் மைய அரசின் அறிவிப்புபடி, 5,773 ஆக உயர்ந்துள்ளது. அதாவது, ஏறத்தாழ 1,713 தொழில் சம்பந்தப்பட்ட லிமிட்டெட் கம்பெனிகள் உருவாகக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இது தமிழகம் தொழில் துறையில் வளர்ந்து வருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தமிழகத்தைப் பொறுத்த வரையில், தொழில் துறையில் அது மராட்டியத்தையும், மேற்கு வங்கத்தையும், டெல்லியையும் அடுத்து நாட்டில் நான்காவது நிலையில் இருக்கிறது என்பதையும் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, தொழிற் தகராறுகள் பல இடங்களில் ஏற்பட்டு அதன் காரணமாகத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் போய்விடுமோ என்று அச்சம் தெரிவித்தார்கள். உண்மை அப்படியல்ல. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழகத்தைப் பொறுத்த வரையில், இங்கே தொழில் அமைதி மிகவும் நல்ல முறையில், எல்லோரும் பாராட்டக் கூடிய முறையில் அமைந்திருக்கிறது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, தமிழகத்தில் உள்ள 5,773 லிமிடெட் கம்பெனிகளில் 17 லிமிடெட் கம்பெனிகளில்தான் தொழில் தகராறு ஏற்பட்டு, அதுவும் தற்போது தீர்வு காணப்படக்கூடிய நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தில் இந்தக் கம்பெனிகளில் பணியாற்றும் ஒட்டுமொத்தமான பணியாளர்களின் எண்ணிக்கை 9 லட்சமாக இருக்கிறபோது, இவ்வாறு தொழில் தகராறுகள் ஏற்பட்டுள்ள காரணத்தால், பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 2,754 மட்டும்தான் என்பதையும் இவர்கள் பிரச்சினையைப் பொறுத்தும் அரசு பிரத்யேகமாக முயற்சி எடுத்துக் கொண்டு விரைவில் தீர்த்து வைக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(திரு. சி. பொன்னையன்) [1984 மார்ச் 28

அதைப் போலவே, தமிழகத்தில் புரட்சித் தலைவர் மாண்புமிகு திரு எம். ஜி. ஆர். அவர்கள் அரசு மேற்கொண்ட முயற்சிகளை காரணமாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் பேசும்போது, சிறு தொழில்களுக்கு ஊக்கம் தர வேண்டும் என்று தெரிவித்ததைப்போல், இந்த அரசின் கொள்கை காரணமாக 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை சுமார் 1,50,000 என்ற அளவில் இருந்த சிறுதொழில்களின் எண்ணிக்கை தற்போது சுமார் 2½ லட்சம் என்கிற அளவுக்கு 1977 முதல் 1982 வரை அதிகமாகத் துவக்கப்படக் கூடிய சூழ்நிலையையும், அதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டது. இதன் காரணமாக பல லட்சக் கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பை இந்த அரசு தேடித் தந்திருக்கிறது என்பதையும் இந்த அவைக்குத் தெரிவிப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அடுத்து, தனி நபர் வருமானம்தான் ஒரு மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு அறிகுறி என்றும், அதுதான் ஒரு மாநிலத்தின் தொழில் வளர்ச்சியைக் காட்டுகிற அளவுகோல் என்றும் கூறுவார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால், 1976 ஆம் ஆண்டு ரூ. 954 ஆக இருந்த தனி நபர் வருவாய் 1982 ஆம் ஆண்டில் ரூ. 1,269 என்ற அளவை எட்டிப் பிடித்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, தமிழகம் தொழில் துறையில் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதை உணர முடிகிறது. தமிழகம் பின்தங்கிவிடவில்லை, வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது என்றாலும், இன்னும் வளர வேண்டும் என்ற ஆர்வம் கொண்டிருக்கிற காரணத்தால், அதற்கு உகந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது என்பதையும் இங்கே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசின் நிதி நிறுவனங்களிலிருந்தும் தமிழக அரசு அதிகப்படியான நிதியைப் பெற்றிருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசு நமக்கு உதவி செய்யவில்லை என்று நாம் சொல்லவில்லை. ஆனால் செய்கிற உதவியை இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டும், மற்ற சில மாநிலங்களுக்குச் செய்வதைப் போல் செய்ய வேண்டும் என்று கேட்கிறோம். இன்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பேங்க் ஆப் இண்டியா, இன்டஸ்ட்டிரியல் கிரிடிட் அண்டு இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் ஆப் இண்டியா, இன்டஸ்ட்டிரியல் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இண்டியா ஆகிய நிதி நிறுவனங்களிலிருந்து தமிழகம் எந்த அளவுக்கு நிதி உதவியைப் பெற்றிருக்கிறது என்று கணக்குப் பார்த்தால், இந்தியாவிலேயே மிக அதிகமான உதவியை மகாராட்டிரம் பெற்றிருக்கிறது; அதற்கு ரூ. 2,165 கோடி அந்த நிதி உதவி நிறுவனங்கள் அளித்திருக்கின்றன. அடுத்து,



1984 மார்ச் 28] (திரு. சி. பொன்னையன்)

குஜராத் மாநிலத்திற்கு அவை ரூ. 2,125 கோடி நிதி உதவி அளித்திருக்கின்றன. அதற்கு அடுத்தாற்போல் மூன்றாவது இடத்தை தமிழகம் பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அதாவது ரூ. 1,613 கோடியை இந்த நிதி நிறுவனங்களிலிருந்து தமிழகம் பெற்றிருக்கிறது. அடுத்து, தொழில் வளர்ச்சியில் மிகப் பெரிய பங்கினை சிப்காட் என்ற நிறுவனம் வகிக்கிறது. 1971—72 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு 1977 ஆம் ஆண்டு வரை ரூ. 61,000 நட்டம் என்று இருந்த நிலைமை மாறி, தற்போது சில ஆக்கப் பணிகளை மேற்கொண்டிருப்பதன் காரணமாக, சென்ற ஆண்டு மட்டும் ரூ. 2½ கோடி லாபம் பெற்றிருக்கிறது. அதோடு பல்வேறு பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர் ஃபெசிலிடியை ஏற்பாடு செய்து, தொழில் முனைவர்களை ஊக்குவிக்கும் பணியை இந்த அமைப்பு செம்மையாகச் செய்து வருகிறது.

(பிற்பகல் 12-20)

தமிழ் நாடு கனிம நிறுவனம் என்ற அமைப்பு அண்மையிலே இந்த அரசால் ஆரம்பிக்கப்பட்டது. அது வளர்ந்து கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் இலாபத்தைப் பெற்றிருக்கிறது. தமிழ் நாடு மேக்னசைட் நிறுவனம் கூட ஒரு கோடியே பத்து இலட்சம் ரூபாய் இலாபத்தைப் பெற்றிருக்கிறது. டிட்கோ பல ஆண்டுக் காலமாக நஷ்ட நிலையில் இருந்தது. 1981 லிருந்து இலாபத்தை ஈட்ட ஆரம்பித்து, தற்போது 200 இலட்சம் ரூபாய் இலாபத்தை அடைந்திருக்கிறது. அதைப் போலவே டி.ஐ.சி.சி. என்ற கடன் வழங்குகிற அமைப்பு 1949 லிருந்து 1978 வரை உள்ள 30 ஆண்டுக் காலத்திலே ரூபாய் 118.77 கோடி மொத்தம் கடன் வழங்கியுள்ளது. கடந்த ஐந்தாண்டுக் காலத்திலே மட்டும் 174.55 கோடி ரூபாய் கடனை சிறு தொழில்களுக்குக் கொடுத்து, வரலாறு காணாத அளவிற்கு சிறு தொழில்களுக்கு ஊக்கத்தைத் தந்து வேலை வாய்ப்பைப் பெருக்கியிருக்கிறது.

தமிழ் நாடு சிமெண்ட் நிறுவனத்தைப் பொறுத்தவரைக்கும், ஆலங்குளத்திலும், அரியலூரிலும் உள்ள அமைப்புகள் தங்களுடைய பணியை மேற்கொண்டிருக்கின்றன. அரியலூரில் ஏழரை கோடி ரூபாய் செலவில் பிரிகால்சினார் என்ற நவீனமான கருவியின் மூலமாக அதன் உற்பத்தித் திறனை இரண்டாயிரம் மெட்ரிக் டன் அளவிற்கு உயர்த்தி வேலை வாய்ப்புகளைப் பெருக்கக் கூடிய நிலையை உருவாக்கியிருக்கிறோம். டான்செம் அமைப்பு 40 கோடி ரூபாய் செலவில் 5 இலட்சம் மெட்ரிக் டன் சிமெண்டை

(திரு. சி. பொன்னையன்) [1984 மார்ச் 28

அதைப் போலவே, தமிழகத்தில் புரட்சித் தலைவர் மாண்புமிகு திரு எம். ஜி. ஆர். அவர்கள் அரசு மேற்கொண்ட முயற்சிகள் காரணமாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் பேசும்போது, சிறு தொழில்களுக்கு ஊக்கம் தர வேண்டும் என்று தெரிவித்ததைப்போல், இந்த அரசின் கொள்கை காரணமாக 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை சுமார் 1,50,000 என்ற அளவில் இருந்த சிறுதொழில்களின் எண்ணிக்கை தற்போது சுமார் 2½ லட்சம் என்கிற அளவுக்கு 1977 முதல் 1982 வரை அதிகமாகத் துவக்கப்படக் கூடிய சூழ்நிலையையும், அதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டது. இதன் காரணமாக பல லட்சக் கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பை இந்த அரசு தேடித் தந்திருக்கிறது என்பதையும் இந்த அவைக்குத் தெரிவிப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அடுத்து, தனி நபர் வருமானம்தான் ஒரு மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு அறிகுறி என்றும், அதுதான் ஒரு மாநிலத்தின் தொழில் வளர்ச்சியைக் காட்டுகிற அளவுகோல் என்றும் கூறுவார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால், 1976 ஆம் ஆண்டு ரூ. 954 ஆக இருந்த தனி நபர் வருவாய் 1982 ஆம் ஆண்டில் ரூ. 1,269 என்ற அளவை எட்டிப் பிடித்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, தமிழகம் தொழில் துறையில் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதை உணர முடிகிறது. தமிழகம் பின்தங்கிவிடவில்லை, வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது என்றாலும், இன்னும் வளர வேண்டும் என்ற ஆர்வம் கொண்டிருக்கிற காரணத்தால், அதற்கு உகந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது என்பதையும் இங்கே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசின் நிதி நிறுவனங்களிலிருந்தும் தமிழக அரசு அதிகப்படியான நிதியைப் பெற்றிருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசு நமக்கு உதவியே செய்யவில்லை என்று நாம் சொல்லவில்லை. ஆனால் செய்கிற உதவியை இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டும், மற்ற சில மாநிலங்களுக்குச் செய்வதைப் போல் செய்ய வேண்டும் என்று கேட்கிறோம். இண்டஸ்ட்டிரியல் டெவலப்மெண்ட் பேங்க் ஆப் இண்டியா, இன்டஸ்ட்டிரியல் கிரிடிட் அண்டு இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் ஆப் இண்டியா, இன்டஸ்ட்டிரியல் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இண்டியா ஆகிய நிதி நிறுவனங்களிலிருந்து தமிழகம் எந்த அளவுக்கு நிதி உதவியைப் பெற்றிருக்கிறது என்று கணக்குப் பார்த்தால், இந்தியாவிலேயே மிக அதிகமான உதவியை மகாராட்டிரம் பெற்றிருக்கிறது; அதற்கு ரூ. 2,165 கோடி அந்த நிதி உதவி நிறுவனங்கள் அளித்திருக்கின்றன. அடுத்து,



1984 மார்ச் 28] (திரு. சி. பொன்னையன்)

குஜராத் மாநிலத்திற்கு அவை ரூ. 2,125 கோடி நிதி உதவி அளித்திருக்கின்றன. அதற்கு அடுத்தாற்போல் மூன்றாவது இடத்தை தமிழகம் பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அதாவது ரூ. 1,613 கோடியை இந்த நிதி நிறுவனங்களிலிருந்து தமிழகம் பெற்றிருக்கிறது. அடுத்து, தொழில் வளர்ச்சியில் மிகப் பெரிய பங்கினை சிப்காட் என்ற நிறுவனம் வகிக்கிறது. 1971—72 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு 1977 ஆம் ஆண்டு வரை ரூ. 61,000 நட்டம் என்று இருந்த நிலைமை மாறி, தற்போது சில ஆக்கப் பணிகளை மேற்கொண்டிருப்பதன் காரணமாக, சென்ற ஆண்டு மட்டும் ரூ. 2½ கோடி லாபம் பெற்றிருக்கிறது. அதோடு பல்வேறு பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர் ஃபெசிலிடியை ஏற்பாடு செய்து, தொழில் முனைவர்களை ஊக்குவிக்கும் பணியை இந்த அமைப்பு செம்மையாகச் செய்து வருகிறது.

(பிற்பகல் 12-20)

தமிழ் நாடு கனிம நிறுவனம் என்ற அமைப்பு அண்மையிலே இந்த அரசால் ஆரம்பிக்கப்பட்டது. அது வளர்ந்து கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் இலாபத்தைப் பெற்றிருக்கிறது. தமிழ் நாடு மேக்னசைட் நிறுவனம் கூட ஒரு கோடியே பத்து இலட்சம் ரூபாய் இலாபத்தைப் பெற்றிருக்கிறது. டிட்கோ பல ஆண்டுக் காலமாக நஷ்ட நிலையில் இருந்தது. 1981 லிருந்து இலாபத்தை ஈட்ட ஆரம்பித்து, தற்போது 200 இலட்சம் ரூபாய் இலாபத்தை அடைந்திருக்கிறது. அதைப் போலவே டி.ஐ.சி.சி. என்ற கடன் வழங்குகிற அமைப்பு 1949 லிருந்து 1978 வரை உள்ள 30 ஆண்டுக் காலத்திலே ரூபாய் 118.77 கோடி மொத்தம் கடன் வழங்கியுள்ளது. கடந்த ஐந்தாண்டுக் காலத்திலே மட்டும் 174.55 கோடி ரூபாய் கடனை சிறு தொழில்களுக்குக் கொடுத்து, வரலாறு காணாத அளவிற்கு சிறு தொழில்களுக்கு ஊக்கத்தைத் தந்து வேலை வாய்ப்பைப் பெருக்கியிருக்கிறது.

தமிழ் நாடு சிமெண்ட் நிறுவனத்தைப் பொறுத்தவரைக்கும், ஆலங்குளத்திலும், அரியலூரிலும் உள்ள அமைப்புகள் தங்களுடைய பணியை மேற்கொண்டிருக்கின்றன. அரியலூரில் ஏழரை கோடி ரூபாய் செலவில் பிரி-கால்சினார் என்ற நவீனமான கருவியின் மூலமாக அதன் உற்பத்தித் திறனை இரண்டாயிரம் மெட்ரிக் டன் அளவிற்கு உயர்த்தி வேலை வாய்ப்புகளைப் பெருக்கக் கூடிய நிலையை உருவாக்கியிருக்கிறோம். டான்செம் அமைப்பு 40 கோடி ரூபாய் செலவில் 5 இலட்சம் மெட்ரிக் டன் சிமெண்டை

உற்பத்தி செய்யக் கூடிய சிமெண்ட் ஆலையை, கிட்டத்தட்ட 1,300 பேருக்கு வேலை வாய்ப்பு தரக்கூடிய சிமெண்ட் ஆலையை அரசே நிறுவ நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதைப் போலவே பாளையம் என்ற பகுதியில் டான்செம் என்ற அரசு அமைப்பின் மூலம் 40 கோடி ரூபாயில் புதிய சிமெண்ட் ஆலையை, 1,300 பேருக்கு வேலை வாய்ப்பு தரக்கூடிய அளவிற்கு நிறுவ, தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுத்து வருகிறது என்பதை அவைக்கு நான் கூற விரும்புகிறேன்.

சர்க்கரை ஆலைகளைப்பற்றிக் கூறும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள், அமராவதி சர்க்கரை ஆலை, பாலக்கோடு சர்க்கரை ஆலை ஆகியவற்றில் தவறு நடந்திருப்பதாகவும், அதைக் களைய தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்றும், அமைச்சர்கள் மீதோ, அதிகாரிகள் மீதோ குற்றஞ்சாட்டுவதாகக் கருதாமல் தவறு யார் செய்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். நான் கூட பாலக்கோடு சர்க்கரை ஆலையிலும், அமராவதி சர்க்கரை ஆலையிலும் இது போன்ற, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்ற, சில தவறுகள் நடப்பதாகக் குற்றச்சாட்டு வந்திருக்கிறதா என்று பார்த்தேன். அதன் மீது கடுமையான நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படும் என்பதை அரசின் சார்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

புகளூர் காகித ஆலையைப் பொறுத்தவரைக்கும், தமிழகத்தைச் சார்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு தராமல் வெளிமாநிலங்களில் உள்ளவர்களுக்கு வேலை தருகிறார்கள் என்றும் வெளி மாநிலப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்திருக்கிறார்கள் என்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் சொன்னார்கள். தற்போது என்னிடத்திலே தகவல் இல்லை. இது உண்மையாக இருக்குமானால், கடுமையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



அதைப் போலவே கனிவளத்தை அதிகமாகப் பயன்படுத்தி பல தொழிற்சாலைகளை நாம் துவக்க வேண்டும் என்ற முறையில் இந்த அரசு பிரத்தியேகமான நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அதிலே கிராபைட் என்ற கனிவளம், உலக நாடுகளிலே எங்கும் இல்லாத அளவிற்கு நல்ல தரமான கனிவளம், முகவை மாவட்டத்திலே பல மைல்களுக்குக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பயன்படுத்தி டாமின் என்ற அரசு அமைப்பு மூலமாக பல தொழில்களை அரசு செய்வதற்கு தக்க நடவடிக்கை எடுக்க இருக்கிறது. முதற்கட்டமாக குரூசிபிள் என்ற சிலிகான் கார்பை மூசை என்ற பொருளை தயார் செய்ய இருக்கிறார்கள்.

அதற்கடுத்து எலக்ட்ரோட்ஸ், ஹெவி டியூட்டி பேட்டரீஸ் ஃபார் ஆட்டோ மொபைல்ஸ், ரெயில்வே, ஹெவி இண்டஸ்ட்ரீஸ், குரூசிபிள்ஸ், ஸ்டாப்பர் கருவிகள் Carbon wax that is used as lubricant என்று பொருள்களை இந்தியாவில் முதல் முறையாகச் செய்யக் கூடிய மாபெரும் தொழிற்சாலையாகவும், வேலை வாய்ப்பை அளிக்கக் கூடிய அமைப்பாகவும் உருவாக இருக்கிறது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

பீங்கான் தொழிலைப் பொறுத்த வரைக்கும், பிளாஸ்டர் ஆஃப் பாரீஸ் தொழிற்சாலையை ஊக்குவித்து அதன் மூலம் அதிகப்படியான வேலை வாய்ப்பு

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தரத்தக்க நடவடிக்கை எடுக்கும். காரணம் நம்மிடம் அது மட்டுமல்லாமல் குவார்ட்ஸ் அண்டு பெல்ஸ்பர் என்று சொல்லக் கூடிய கனி வளம் நமது தமிழ் நாட்டிலே அதிகமாக இருக்கின்றது. அதைப் பயன்படுத்தி பல தொழில்களைத் துவங்க வேண்டுமென்ற முறையிலே, அதை சிறு சிறு தொழில்களாகத் தனியார் துறையிலே யார் துவக்க முன்வந்தாலும், அதற்கு ஊக்கம் தரவேண்டுமென்ற முறையில் அரசு முடிவெடுத்திருக்கிறது என்பதையும் நான் அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அதைப் போலவே 'வெர்மிகுலேட்' என்று சொல்லக் கூடிய ஒரு கனி வளம் வட ஆர்க்காடு மாவட்டத்தில் குளத்தூர் பகுதியிலே இருக்கிறது. விவசாயத்துக்கு வேண்டிய மருந்துகளையும், பீங்கான் தொழிற்சாலைக்கு வேண்டிய சில கருவிகளையும் செய்ய அது பயன்படுகிறது. அதைப் பயன்படுத்தி தமிழகத்தில் பல தொழிற்சாலைகளைத் துவக்குவதற்கு அரசு விரைவில் நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறதென்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே, நெய்வேலியைப் பொறுத்தவரைக்கும், நெய்வேலி லிக்னைட்

கார்ப்பரேஷன் லிக்னைட்டை மைன் ( mine ) செய்யும்போது களிமண் அதிகமாக வேஸ்டாகப் போய்விடுகிறது; அது பலருக்கும் உபயோகம் இல்லாமல் இருக்கிறது. அதைப் பயன்படுத்தி தொழிற்சாலைகளைத் துவக்க வேண்டுமென்ற முறையில் அரசு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதையும் Glazed tiles, Mosaic tiles, Sanitary pipes போன்ற தொழிற்சாலைகளையெல்லாம் அந்தக் களிமண்ணை வைத்து சற்று அதிகமான அளவிலே தமிழகத்தில் செய்ய அரசு ஊக்கத்தைத் தர முடிவு எடுத்திருக்கிறதென்பதையும் நான் அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அதைப் போலவே சிமென்ட் தொழிற்சாலைகளையெல்லாம் தனியார் துறையில் துவக்கலாமா என்று கூட அண்ணன் திரு. சாதிக் பாட்சா அவர்கள் கேட்டார்கள். சிமென்ட் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரைக்கும், நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, 5 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யக் கூடிய 2 பெரிய தொழிற்சாலைகளை அரசு மூலமாகத் துவக்க இருக்கிறோம். ஆனால் மிகப் பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் அரசு மூலமாகத் துவங்குகிறபோது, பல நேரங்களில் மேனேஜிரியல் பிராப்ளமே ஏற்பட்டுவிடும். ஓவர்-ஹெட் எக்ஸ்பென்டிசர் அதிகமாக ஏற்பட்டு நஷ்டம் ஏற்பட்டுவிடுமென்பதைத் தான் நாம் நடைமுறையில் கண்டிருக்கிறோம் என்ற காரணத்தினாலே, ட்ரீட்மென்ட் பிளான்டைப் பொறுத்தவரைக்கும், திருச்சி மாவட்டத்திலே அரியலூர் பகுதி, நெல்லை மாவட்டத்திலே நாங்குநேரிப் பகுதி, கோவை மாவட்டத்திலே எட்டிமடைப் பகுதி, மதுரை மாவட்டத்திலே மேலூர், திருமால் போன்ற பகுதிகளில் மினி சிமென்ட் ஆலைகளைத் துவக்கக் கூடிய சாத்தியக் கூறுகளை அரசு கண்டறிந்திருக்கிறது. அந்தப் பகுதிகளில் தொழில் துவங்குவதற்கு மினி சிமென்ட் தொழிற்சாலை என்பது மிகச் சிறிய தொழிற்சாலை என்ற காரணத்தால், தனியார் துறைக்கு ஊக்கம் தர வேண்டுமென அரசு முடிவெடுத்திருக்கிறது. அதைப்போலவே சேலம் ஸ்டீல் பிளான்டைப் பொறுத்த வரைக்கும், தற்போது 'ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பிளாண்ட்' தகடுகளை மட்டும் செய்வதை மாற்றி, நல்ல முறையில் ஒரு பெரிய தொழிற்சாலையாக அமைக்கவேண்டுமென்ற கொள்கையை மத்திய அரசுக்கு மாநில அரசு பெரிதும் வற்புறுத்தி வருகிறது. ஆனால் மத்திய அரசு இதற்கு இன்னும் செவி சாய்க்கவில்லை. இருந்தபோதிலும் மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. ஆனால் அதை விட முக்கியமாக தற்போது a latest technology has been evolved. That technology is known as sponge iron technology.

அந்த sponge iron technology" என்ற நவீன முறையை பயன்படுத்திக்கொண்டு சேலத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்திலும், வட



ஆற்காடு மாவட்டத்திலும், அதைப் போலவே கோவை போன்ற பகுதிகளில் எல்லாம் கிடைக்கின்ற இந்த இரும்பைப் பயன்படுத்தி மினி சிமென்ட் பிளான்ட் என்று சொல்லக் கூடிய ஒரு வாய்ப்பினை நாம் தற்போது கண்டறிந்திருக்கின்றோம். அதைப் பொறுத்தவரைக்கும், தற்போது மத்திய அரசு சொல்வதெல்லாம், சேலத்திலே இருக்கிற இரும்பைப் பொறுத்த வரைக்கும், அது லோ கிரேடு இரும்பு என்று சொல்லிவிடுகிறார்கள். Iron content is not even 30 or 35 per cent. என்று சொல்லி, அந்தக் காரணத்தை வைத்துக்கொண்டு if may not be economically viable என்று சொல்லித் தள்ளிப் போட்டு வருகிறார்கள். ஆனால் அந்த 'ஸ்பான்ஜ் அயர்ன் டெக்னாலஜியைப் பொறுத்தவரைக்கும் நவீன முறையிலே நெய்வேலியிலே கிடைக்கின்ற லிக்னைட்டைப் பயன்படுத்தி அந்தத் தொழிலை ஆரம்பிக்கின்றபோது, அந்த 35 சதவித Low grade iron can be upgraded to about 80 to 90 per cent என்ற முறையிலே, உயர்ந்த ரகமான இரும்பை நாம் பெற முடியும் என்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். சாத்தியக் கூறுகளாகக் கூட சில இடங்களில் உலகத்தில் இது இருக்கின்றது. அந்த நவீன முறையைப் பயன்படுத்தி, வட ஆற்காடு, சேலம், கோவை போன்ற மாவட்டங்களில் மினி சிமென்டு பிளாண்ட் அமைப்பதற்கு அரசு ஊக்கத்தைத் தருமென்பதை நான் இந்த அவையிலே கூற விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும், அண்ணன் சாதிக் பாட்சா போன்றவர்களும், எந்தத் தொழிலுக்கு நாம் ஊக்கம் தந்தாலும் Generating employment opportunity should be the cardinal point. என்பதை எடுத்துச் சொன்னார்கள். அதுதான் அரசினுடைய கொள்கை. அந்த அடிப்படையிலே தொழிலை அதிகமாகத் துவக்க வேண்டுமானால் 80 சதவித மக்கள் வாழுகிற பகுதி பட்டிக்காடாக, கிராமங்களாக இருக்கிற காரணத்தினால், கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பைத் தரக்கூடிய தொழிற்சாலைகளை அதிகம் துவங்க வேண்டுமென்ற முறையிலே அரசு பிரச்சினைகளை அணுகி வருகிறது. அதற்காக 'அக்ரோ பேஸ்டு இன்டஸ்ட்ரீஸ்' விவசாய விளை பொருள்களை ஒட்டிய தொழிற்சாலைகளை அதிகமாக ஊக்குவிக்கவேண்டுமென்ற முறையில், அதற்கு அரசு ஊக்கத்தைத் தருகிறது. உதாரணமாக சோயா பீன்ஸ் என்பது வட புலத்தில் விளைகின்ற ஒன்று என்று தான் இதுகாறும் நாம் எண்ணி வந்ததுண்டு. ஆனால் தமிழகத்திலும் சோயாபீன்ஸ் நல்ல விளைச்சலைத் தருகிறது என்பதை விவசாயத் துறை ஆய்வினை நடத்திக் கண்டிருக்கிறார்கள். ஒரு பெரிய இன்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்ஸ் போடப்பட்டு, அதன் மூலமாக ஒரு மாவட்டத்தில் கிட்டத்தட்ட 20 ஆயிரம் 30 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் சோயா பீன்ஸ் என்று அவர்கள் போடுகின்றபோது, அந்த மாவட்டத்திற்கு என்று அல்லது இரண்டு

(திரு. சி. பொன்னையன்) [1984 மார்ச் 28

(பிற்பகல் 12-30)

மாவட்டங்களுக்கு ஒட்டியதாக ஒரு பெரிய தொழிற்சாலை இருக்குமானால், சோயா பீன்ஸ் ஆயிலை நாம் எடுக்க முடியும். அதற்கு வெளிநாடுகளிலே மிக அதிகமான தேவை இருக்கிறது. கடலெண்ணெய் என்று எடுத்து ஒப்பிடு கின்றபோது, அதில் 'கொலோஸ்ட்ரால் கன்ட்டென்ட்' குறைவாக இருக் கிறது. 'ஹை புரோட்டீன்' இருப்பதால், புரத சத்து நிறைந்த உணவுப் பொருள்களை அதிலிருந்து தயார் செய்ய முடியும். குழந்தைகளுக்கு வேண்டிய 'பேபி புட்' தயார் செய்ய முடியும். பலவித பொருள்களை இந்த சோயா பீன்ஸ்லே செய்ய முடியும் என்ற காரணத் தினால், தண்ணீர் வசதி மிகக் குறைவாக இருக்கின்ற பகுதிகள், தர்மபுரி மாவட்டம், சேலம் மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம், நெல்லை மாவட்டம், மதுரை மாவட்டம், திருச்சியினுடைய பெரும்பகுதி, கோவை பெரியார் மாவட்டங்கள் இந்தப் பகுதிகளிலே எல்லாம் சோயா பீன்ஸ் வெகுவாக விளைவிக்க முடியும் என்றும், அதைக் கொண்டு சோயா பீன்ஸ் பேஸ்ட் இன்டஸ்ட்ரீஸ் பெரிய அளவிலே, தொடங்கமுடியும் என்று கண்டறியப்பட் டிருக்கின்றது. அத்தகைய தொழிற்சாலைகளைத் தொடங்க அரசு முயற்சி யினை மேற்கொள்ளும். 'ஜாயிண்ட் செக்டர்' ஆக இருந்தாலும், தனியார் துறையாக இருந்து தொழில் தொடங்க முன்வந்தாலும், அதற்கு அரசு ஊக்கத்தைத் தரும். அதற்கான முடிவையும் அரசு எடுத்திருக்கின்றது.

அதைப்போலவே, சன் புளவர் ஆயில். சன் புளவர்ஸ்-ஐப் பொறுத்த வரைக்கும், விவசாயத்திலே நல்ல விளைச்சல் இல்லை. அது விவசாயி களுக்குக் கட்டுபடியாகவில்லை. காரணம் அதிகப்படியான 'ஈல்ட்' கிடைக்கவில்லை என்று நாம் கருதுகிறோம். அண்மையிலே நடந்திருக் கின்ற ஆராய்ச்சியில், விவசாயத் துறையில் ஏக்கருக்கு கிட்டத்தட்ட ஆயிரம் கிலோ அல்லது 1,200 கிலோ உற்பத்தி செய்ய முடியும் என்பதை கண்டறிந் திருக்கின்றார்கள். அதைப் பயன்படுத்தி, 'சன் புளவர் ஆயில் பேஸ்ட் இண்டஸ்ட்ரீஸ்' அதிகமாகத் தொடங்க முடியும். இது போன்ற 'அக்ரிகல்சர் பேஸ்ட் இண்டஸ்ட்ரீஸ்' அதிகமாகத் தொடங்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய எண்ணம்.



1984 மார்ச் 28] (திரு. சி. பொன்னையன்)

'பெருமைல் அண்டு ஆய்ராய்ஸ் ப்ளாண்ட் ரிசர்ச் ஸ்டேஷன்' என்ற மத்திய அரசின் அமைப்பில் மல்லிகைப் பூ, ஜாஸ்மைன், சிற்றாமொடநல்லி, லெமன் கிராஸ், பாம்ரோஸ் போன்ற வாசனை மிக்க 'செடிகளையெல்லாம் விவசாயிகள் பயன்படுத்துகின்றபோது, அதிலிருந்து கிடைக்கின்ற எண்ணெய் ஏற்றுமதிக்கு வெளி நாடுகளில் ஏகப்பட்ட கிராக்கி இருக்கின்றது. ஆனால் ஆரம்பக்காலத்தில் விவசாயிகள் அதைப் பயிரிடுகின்றபோது, விற்கக் கூடிய வாய்ப்பு அதிலே இல்லை என்பதால், அந்தப் பொருளைக் கொண்டு 'வன்ட் புராடக்ட்ஸ்' ஆல ஆயில் எக்ஸ்ட்ராக்ஷன், சால்வென்ட் எக்ஸ்ட் ராக்ஷன் யூனிட், தமிழகத்திலே போடுகின்றபோது, [illegible] கருடைய [illegible] பெருக்கவும், [illegible] பெருக்கவும் வசதி இருக்கும் என்ற காரணத்தினால், அது போன்ற தொழிற்சாலைகளுக்கு ஊக்கம் தர வேண்டும் என்று அரசு முடிவு எடுத்திருக்கின்றது. அது போலவே, பாரஸ்ட் [illegible] மரத்தை அதிகமாக வெட்டு கின்றபோது, மழை பொய்த்துவிடுகிறது. Ecological conditions have been changed. என்ற காரணத்தினால், மைய அரசு அண்மையில் Wood pulp ஐக் கொண்டு செய்கின்ற தொழிற்சாலைகளுக்கெல்லாம் '[illegible]' இல்லாமல் Wood pulp இறக்குமதி செய்யலாம் என்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். [illegible] கெட்டுப் [illegible] எல்லாம் [illegible] அந்த [illegible] தமிழகத்திலே [illegible] ஊக்கப் படுத்த வேண்டும். [illegible] விவசாயத் துறையும் ஊக்கம் கொடுக்க வேண்டும் என்று அரசு முயற்சி செய்துகொண்டிருக்கிறது. அந்த அளவிலே [illegible] தனியார் துறை [illegible] ஊக்கம் தர வேண்டும் என்று அரசு முயற்சி செய்கின்றது. அதற்கு வேண்டிய திட்டங்களையெல்லாம் [illegible] அரசு செய்யக்கூடிய கொள்கையினை [illegible] சொல்கிறேன்.

அதுபோலவே, [illegible] பண்புடு [illegible] உறுப்பினர் [illegible] சொன்னார்கள் [illegible] தொழில் [illegible] சொன்னார்கள். [illegible] 10 பெர்சென்ட் [illegible] இருக்கின்ற உப்பு [illegible] உப்பு 60 பெர்சென்ட் [illegible] சொன்

னார்கள். அதைப்பற்றித் தகவல் என்னிடம் இல்லை. அதைப்பற்றி ஆராய்ந்து பார்க்கப்படும். Salt available in ground-water. அதிகமாகத்தான் இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதை ஊக்குவிப்பதற்கு, அந்த உப்புத் தொழில் நல்ல லாபத்தைப் பெற வேண்டுமென்றால், அதற்கும் 'சால்ட் பேஸ்ட் இண்டஸ்ட்ரீஸை' நாம் தொடங்கியாக வேண்டும்.

அப்போது பலவித வேலை வாய்ப்பையும் பெருக்க முடியும். தொழிலும் லாபகரமாக ஓடும். இந்த அரசு தான் செய்ய வேண்டும் என்பதுகூட இல்லை. தனியாரே வந்து செய்கின்றபோது, அரசினுடைய கொள்கை என்ன என்று முன்கூட்டியே சொல்லியிருக்கிறேன். பொதுத் துறை, கூட்டுறவுத் துறை, தனியார் துறை என்று இல்லாமல், எல்லோருக்கும் இந்த அரசு உற்சாகத்தைத் தரும் என்ற முறையில் சொல்லிக்கொள்கிறேன்.

'சால்ட் பேஸ்ட் இண்டஸ்ட்ரீஸ்' என்று சொல்லக்கூடிய, அதனுடைய காமன் புராடெக்ட்ஸ் ஆன, பொட்டாஷ் ஆலம், பொட்டாசியம் சோனைட், பேசிக் மெக்னீசியா கார்பனேட், புரோமைன் போன்ற பொருளைச் செல்வம் செய்ய வேண்டுமென்ற முறையிலே அரசு அதற்கு ஊக்கம் தர வேண்டும். அதன் மூலமாக அதிகமான கடல் பகுதியைக் கொண்டிருக்கின்ற நம் தமிழகத்தை ஒட்டிய தொழிற்சாலைகளை வைக்க வேண்டும் என்ற முறையிலே அரசு தக்க நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'அக்ரிகல்சர் பேஸ்ட் இண்டஸ்ட்ரீஸ்' என்று முன்பே நான் சொன்னேன். 'அக்ரிகல்சர் பேஸ்ட் இண்டஸ்ட்ரீஸ்' என்ற முறையிலே சேலம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம், கோவை மாவட்டம், திருச்சி மாவட்டத்தினுடைய பல பகுதிகளில் நிலத்தடி நீர் மிகக் குன்றியிட்ட காரணத்தினாலேயே, உழவர்களுடைய வருமானத்தைப் பெருக்கும் வழியாக என்னது குச்சிக் கிழங்குதான். ஆனால் குச்சிக்கிழங்கைக் கொண்டுவரும் உழவர்களுக்கு நல்ல விலை கிடைப்பதில்லை. குச்சிக்கிழங்கிலிருந்து மாவு எடுக்கப்பட்டு, புலத்திலிருந்து எடுத்துச்சென்று, அங்கே பல தொழிற்சாலைகள் அமைத்து பல 'இம்ப்ரூவ்மெண்ட்ஸ்' செய்துவிடுகிறார்கள்.

இப்போதுகூட நாம் ஒரு கூட்டுறவு அமைப்பை ஆரம்பித்திருக்கிறோம். இவைகளை மாவுப் பொருள்களை வெளி மாநிலங்களுக்கு அனுப்பி, வெளி மாநிலங்கள்தான் தொழிற்சாலைகளை வைத்து பல பொருள்கள் செய்கிறார்கள். அந்தத் தொழிற்சாலைகளையெல்லாம் நம் தமிழகத்திலும்





தொடங்கினால், தர்மபுரி, சேலம், வட ஆற்காடு, தென்னாற்காடு, திருச்சி, கோவையினுடைய ஒரு பகுதி போன்ற பகுதிகளில் வாழ்கின்ற உழவர்களுக்கு வருமானம் அதிகம் கிடைக்கக்கூடிய வாய்ப்பு உருவாகும். குச்சிக்கிழங்கு மாவிலிருந்து லாடிக் ஆசிட், சார்பிடால், குளுகோஸ் போன்ற 'End products' செய்கிற தொழிற்சாலைகள் இதுவரை வடபுலத்திலே அதிகமாக இருந்து வருகின்றன. ஆனால் அதற்கு வேண்டிய 'ரா மெட்டீரியல்ஸ்' தமிழகத்திலிருந்துதான் செல்கின்றன. இந்த உழவர்களுக்கு நல்ல விலையும் கிடைப்பதில்லை. இடைத்தரகர்கள் பலன் அடைகிறார்கள். எனவே அதுபோன்ற தொழிற்சாலைகளை தமிழகத்தில் பெரும் பகுதிகளில் தொடங்குவதற்கு தனியார் துறையிலே முன்வருபவர்களுக்கு ஊக்கம் தரவேண்டுமென்ற முறையிலே அரசு முடிவு செய்திருக்கிறது. அரசு கூட்டுறவுத் துறையிலே ஆரம்பிப்பதாக கொள்கை இல்லை. தனியார் இதைப் போன்ற 'அக்ரிகல்சர் பேஸ்ட் இண்டஸ்ட்ரீஸ்'—ஆரம்பிக்க விரும்பும்போது, அந்த ஸ்டார்ச்சையும் செய்யவேண்டியிருக்கிறது. குச்சிக்கிழங்கு மாவையும் செய்ய ஆரம்பித்துவிடுவோமானால், கிட்டத்தட்ட 1,200 தொழிற்சாலைகள் இந்த நான்கு மாவட்டப் பகுதிகளில் இருப்பவைகளை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். எனவேதான் இந்த 1,200 தொழிற்சாலைகளிலிருந்து வருகிற மாவை வைத்துக் கொண்டு, அந்த ஸ்டார்ச்சை வைத்துக்கொண்டு, "ஸ்டார்ச் பேஸ்டு இண்டஸ்ட்ரீஸ்" தொடங்க யார் முன்வந்தாலும் அதை ஊக்குவிக்க வேண்டுமென்கிற முறையிலே அரசு தன்னுடைய கொள்கை முடிவினை எடுத்திருக்கிறது.

அதைப்போலவே பாண்டிச்சேரியைச் சார்ந்த உறுப்பினர் திரு. அனந்தபுரத்தார் இராமலிங்கம் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். 'டைஸ்டஃப்' என்று சொல்லக்கூடிய சாயத் தொழிற்சாலையை அதிகமாக தமிழகத்தில் துவக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர் சொல்லிய கருத்தை அரசு ஏற்றுக்கொள்கிறது. காரணம், தமிழகத்திற்குத் தேவையான சாயப் பொருள்களைப் பொறுத்தவரைக்கும், 95 சதவிகிதம் வெளி மாநிலங்களிலிருந்து—குறிப்பாக வடபுலத்திலிருந்து—தான் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. சாயத் தொழிற்சாலைகள் அதிகமாக வளரக்கூடிய வாய்ப்பு தமிழகத்தில் இருக்கிறது. காரணம், அந்தச் சாயத் தொழிற்சாலையின் 'End products' ஐப் பயன்படுத்தக்கூடிய டெக்ஸ்டைல் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரைக்கும், தமிழகத்தில் மிக அதிகமாக இருக்கின்றன. 'லெதர்' தொழிற்சாலைகளும் சாயப் பொருள்களைப் பயன்படுத்துகின்றன. அதைப்போல 'பிரிண்டிங் இங்க்'-க்கும்

(திரு. சி. பொன்னையன்) [1984 மார்ச் 28

சாயப் பொருள் தேவைப்படுகிறது. ஆனால் அந்தத் தொழிற்சாலைகள் தமிழகத்தில் இல்லை என்கிற குறை இருக்கிறது. இந்தக் குறையைப் போக்குவதற்காக தமிழகத்தில் யார் உற்பத்தி செய்ய முன்வந்தாலும், அரசு ஊக்கம் தரும். இந்தச் சமயத்தில் அரசு கூட்டுத் துறையில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்திருக்கிறது என்பதையும் நான் அவைக்குக் கூற விரும்புகிறேன்.

அதைப்போலத்தான் 'டிரக்ஸ் & பார்மசூடிகல்ஸ்' என்று சொல்லக்கூடிய மருந்துப் பொருள்களைப் பொறுத்தவரைக்கும், தமிழகத்திற்குத் தேவையான மருந்துப் பொருள்களில் கிட்டத்தட்ட 60 சதவிகிதம் வடபுலத்திலிருந்துதான் வரக்கூடிய நிலை இருக்கிறது. இந்தக் குறையைப் போக்குவதற்காக, தற்போது திருப்போரூர் என்ற இடத்தில் 'பார்மசூடிகல் இண்டஸ்ட்ரீஸ்'' அதிகமாகத் துவக்குவதற்கு எல்லாவிதமான ஊக்கத்தையும் தரவேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கிறது. பார்மசூடிகல் மருந்துகள் சம்பந்தமான தொழில்களை தமிழகத்தில் எந்தப் பகுதியில் யார் துவக்க முன்வந்தாலும், பத்து சதவிகிதம் மானியம் அல்லது 10 லட்சரூபாய் மானியம் வழங்கப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

எலெக்ட்ரானிக் இண்டஸ்ட்ரியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. இராமலிங்கம் அவர்கள் பேசியபோது, நமக்குப்பின் ஆரம்பித்த கேரளா முன்னணிக்கு வந்துவிட்டதென்று சொன்னார்கள். அதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. எலக்ட்ரானிக் இண்டஸ்ட்ரீஸ் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்துவருகிறோம்.

'எல்காட்' என்ற அமைப்பை அண்மையில்தான் உருவாக்கியிருக்கிறோம். அந்த அமைப்பு பல தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. பல தொழிற்சாலைகளை விரைவில் துவக்கவிருக்கிறது. வேலைவாய்ப்பைப் பெருக்கக்கூடிய தொழிற்சாலைகளைத் துவக்க வேண்டும் என்பதுதான் அரசின் விருப்பம். [illegible]

ஜப்பான் நாட்டை உதாரணமாக மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். ஜப்பான் நாட்டைப் பொறுத்தவரைக்கும், Electronic industry is really in the loom என்று சொல்ல வேண்டும். அந்த அளவிற்கு உச்சகட்டத்திலே வளர்ந்திருக்கிறது. அனால் உச்சகட்டத்திலே வளர்ந்திருக்கிற ஜப்பான் நாட்டிலே எலக்ட்ரானிக் இண்டஸ்ட்ரீஸுக்குத்



1984 மார்ச் 28] (திரு. சி. பொன்னையன்)

தேவையான பொருள்களை எல்லாம் குடிசைத் தொழில்களாக வீடுகளில் செய்யக்கூடிய நிலையினை உருவாக்கியிருக்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரைக்கும், சில தொழிற்சாலைகளை நாம் ஆரம்பிக்க வேண்டும்; ஆரம்பிக்கின்ற அந்த சமயத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பாதிக் பாட்சா சொன்னதைப்போல, பல தொழிற் கூடங்கள் தொழில்களை ஊக்குவிக்கவும் வேண்டும். அப்படி செய்யத் தவறிவிடுவோமேயானால், வேலையில்லாத் திண்டாட்டம் வெகுவாக ஏற்படும். 'ரோபோட்டிக் இண்டஸ்ட்ரீஸ்' என்ற நிலையிலே மிஷின்களை வைத்துக் கொண்டு எல்லாப் பொருள்களையும் செய்துவிடலாம் என்ற நிலை வருகிறபோது, வேலைவாய்ப்பு கிடைக்காத ஒரு நிலை ஏற்பட்டு, மக்கள் மத்தியிலே [illegible] ஏற்பட்டு நமது ஜனநாயகத்திற்குக்கூட ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்று எண்ண வேண்டும். [illegible] இருப்பதைப்போல, அந்த முறையினை நம் தமிழகத்தில், நம் பாரதத்தில் பயன்படுத்தி நம்முடைய பொருளாதாரக் குறைபாடுகளை நீக்குவதற்கு [illegible] என்பதை இந்த அரசு உணர்ந்து, அந்த முறையிலே செயல்பட்டு வருகிறது. Employment generation is the first object என்பது ஒரு தனி

(பிற்பகல் 12-40)

தொழிற்சாலையாக இருந்தாலும், பெரிய தொழிற்சாலையாக இருந்தாலும் கூட, வேலைவாய்ப்பைப் பெருக்கக்கூடிய தொழிற்சாலையாக அது அமைய வேண்டும் என்பதும், பெரும் தொழில்கள் ஆரம்பிக்கிறபோது, அவை சிறு தொழில்களுக்கு ஊக்கம் கொடுக்கக்கூடிய அளவிற்கு இருக்க வேண்டுமென்பதும்தான் அரசினுடைய கருத்து. அந்த அடிப்படையிலே, 'Ancillarisation என்று சொல்லக்கூடிய முறையிலே, பெரிய தொழில்களை சார்ந்த தொழில்களை வளர்க்க வேண்டுமென்ற முறையில் பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து இருக்கிறது. நான் ஏற்கனவே பேரவையிலே கூடச் சொன்னேன். Automobile Industry என்று எடுத்துக் கொண்டோமேயானால், இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முன்னணியில் இருக்கிறது. ஆனால் அண்மையில் மத்திய அரசு பல உரிமங்களை, கிட்டத்தட்ட 11 உரிமங்களை, வடபுலத்திற்கே தந்திருக்கிறது. அது மோட்டார் தொழிற்சாலையாக இருக்கலாம்; ஸ்கூட்டர் தொழிற்சாலையாக இருக்கலாம்; சார்ந்த டீசல் இன்ஜின் தொழிற்சாலையாக இருக்கலாம். இது போன்ற வாகனங்களையெல்லாம் செய்யக்கூடிய தொழிற்சாலைகளுக்கான உரிமங்களை முழுக்க முழுக்க வட நாட்டிற்கே தந்து விட்ட காரணத்தால், Automobile Industries க்கு மிகத் தேவையான Automobile

components and ancillaries. என்று சொல்லக்கூடிய உதிரி பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், நூற்றுக் கணக்கான தொழிற்சாலைகள் தமிழகத்தில் இருக்கின்றன, லட்சக் கணக்கானவர்கள் அதில் பணி புரிகிறார்கள், அவர்களுக்கெல்லாம் எதிர்காலத்தில் வேலை வாய்ப்புக்கூட இல்லாமல் போய்விடும். காரணம், வட புலத்திலேயுள்ள தொழிற்சாலைகள் தனக்கு வேண்டிய உப பொருள்களை எல்லாம் தமிழகத்திற்கு வந்து வாங்கும் போது, 'டிரான்ஸ்போர்ட் காஸ்ட்' அதிகமாகிறது என்று காரணம் சொல்லி, தற்போது கொடுக்கப்பட்டுள்ள 11 உரிமங்களும் ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி போன்ற வெளிநாட்டு கம்பெனிகளின் கூட்டோடு துவக்கப்படுகிற காரணத்தால், Latest technology இல்லை என்று காரணம் சொல்லி Technology gap இருக்கிறது என்று சொல்லி, Ancillary industryஐயும் அருகேயே மத்திய அரசு அங்கேயே ஆரம்பிக்க உரிமங்களைத் தந்துவிடுமானால், தமிழகத்தில் லட்சக் கணக்கானோர் வேலை இழக்கும் நிலை ஏற்படுமென்ற காரணத்தால், இதை குறித்து மத்திய அரசோடு மாநில அரசு தொடர்பு கொண்டு, தக்க நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இன்னொரு முக்கியமான அணுகுமுறையை மாநில அரசு தீவிரமாக நடைமுறைப்படுத்த இருக்கிறது. இப்போது கிரானைட் என்று இருக்கிறது. அதாவது கருப்புக் கல்லை எடுத்து அப்படியே அனுப்புகிறோம். அது வெளி நாடுகளுக்குச் செல்லுகிறது. அங்கிருந்து பலவிதமான 'End products' செய்து லாபம் சம்பாதிக்கிறார்கள். அதைப் போலவே பல நிலைகளில் இருக்கின்றன. பல பொருள்கள் இருக்கின்றன. நாம் Raw materialsஐ அப்படியே எடுத்து வெளி நாடுகளுக்கு அனுப்புகிறோம். உதாரணத்திற்கு குச்சிக் கிழங்கை எடுத்து அப்படியே வட நாட்டுக்கு நாம் அனுப்பி, அவர்கள் 'End products' செய்து, அதை மீண்டும் நமக்கு அனுப்புகிறார்கள். அப்படிப்பட்ட நிலை இல்லாமல் Value based products செய்ய வேண்டும், அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற முறையில் Raw materials end-product-ஆகச் செய்ய யார் யார் முன்வருகிறார்களோ அவர்களுக்கு ஊக்கம் தர வேண்டுமென்ற முறையில் பிரச்சினைகளை அரசு அணுகுகிறது. அந்த அடிப்படையிலேதான் கும்மிடிப்பூண்டி raw materials [illegible] Automobile and automobile ancillary industriesக்கு முக்கியத்துவம் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். கடலோர பகுதியில் Chemical processing industriesக்கு முக்கியத்துவம் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். புதுக்கோட்டைக்கு Electronic





என்று சொல்லியிருக்கிறோம். மாமதுரைக்கு Foot loose Industries என்று சொல்லியிருக்கிறோம். ராமநாதபுரத்துக்கு Chemical and Salt-based Industries என்று சொல்லியிருக்கிறோம். சேலம், வட ஆற்காடு, பெரியார், தர்மபுரி பகுதிகளுக்கு Sago, Starch-based Industry என்று சொல்லி அவைகளுக்கு ஊக்கம் தர வேண்டுமென்ற முறையிலே அரசு தற்போது தனது கொள்கையிலே அணுகுமுறையை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பல சிறு தொழில்களை நாம் ஏற்கனவே துவக்கியிருக்கிறோம். பல சிறு தொழில்கள் நலிந்த நிலையில் இருக்கின்றன. அதற்கு முக்கியமான காரணம் Technology gap தான். 10, 15 ஆண்டுகளுக்கு முன்னால் துவக்கப்பட்ட தொழில்கள் எல்லாம் தற்போது வளர்ந்துவிட்ட நுணுக்கத்தோடு போட்டி போட முடியாமல், நலிந்த நிலையில் இருக்கின்றன. அவைகளை ஊக்குவிக்க வேண்டுமென்ற முறையில், Upgradation of manpower. appropriate technology in the production of a specified component. என்பதோடு, அதைப்போலவே Inspection control, நல்ல முறையில் Quality control இருக்க வேண்டுமென்றால் அதற்கான வசதிகள்; அதைப் போலவே ஆராய்ச்சி— Research and development facilities. இவைகளை எல்லாம் குறிப்பாக சிறு தொழில்களுக்கும், சில வேளைகளில் நடுத்தரத் தொழில்களுக்கும் அளிக்க வேண்டுமென்று அரசு முடிவெடுத்திருக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன் துவக்கப்பட்ட நடுத்தரத் தொழில்கள் இப்போது நவீன தொழில் நுணுக்கத்தோடு போட்டிபோட முடியாமல் நலிந்திருக்கின்ற நிலையிருப்பதால், அவைகளுக்கும் Upgradation of the technology என்ற முறையில் ஊக்கம் தர வேண்டுமென்று அரசு கொள்கை முடிவெடுத்திருக்கிறது. இன்னொன்றையும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசைப் பொறுத்தவரைக்கும், தமிழகத்தில் [illegible] என்று சொன்னார்கள். கொள்கை விளக்கப் புத்தகத்திலும் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. [illegible] அவர்களும் திரு. [illegible] அவர்களும் அதை எடுத்துச் சொன்னார்கள் [illegible] பொறுத்தவரைக்கும். இந்த அரசு [illegible] காரணம் [illegible] மத்திய அரசின் [illegible] காரணமாக [illegible] ஆண்டுகளில் 1 லட்சத்து 11 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். [illegible] மத்திய அரசின் [illegible] காரணமாக

3 லட்சத்து 81 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். மத்திய பிரதேசத்தில் மத்திய அரசின் முதலீடு காரணமாக 2 லட்சத்து 59 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். மகாராஷ்டிர மாநிலத்திலே 1 லட்சத்து 61 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், கடந்த பல ஆண்டுகளாக மத்திய அரசின் முதலீடு காரணமாக வேலைவாய்ப்புப் பெற்றவர்களுடைய எண்ணிக்கை வெறுமனே 73 ஆயிரம் பேர்தான் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, உள்ளபடியே இது வேதனையளிக்கக் கூடிய ஒன்றாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. [illegible] அவர்கள் "In the interest of national integration" எல்லாம் பாவிக்கப்பட என்றும், சமமாக பாவிக்கப்பட வேண்டுமென்றும் இங்கே [illegible] வேண்டினார்கள். ஒரு பக்கம் வேலைவாய்ப்பை அதிகமாக ஏற்படுத்தித் தந்துவிட்டு, தமிழகத்தைப் போன்று விவசாயத்தில் முன்னேற முடியாமல், வறட்சி மற்றும் நீரோட்டக் குறைவாக இருக்கின்ற பகுதிக்கு [illegible] வேலைவாய்ப்பைத் தராமலிருப்பது சரியல்ல. தமிழகத்தைப் பொறுத்தவரையில், தொழில் துறை ஒன்றின் மூலமாக மட்டும் தான் வேலைவாய்ப்பைப் பெருக்க முடியும். விவசாயத்தில் கூட வேலைவாய்ப்பைப் பெருக்க முடியாது. நிலத்தை நாம் விரிவாக்க முடியாது. இருக்கின்ற நிலத்தில் "Productivity, production increase" என்றாலும் கூட, அதற்கும் அதிக நீர் வேண்டும். இருக்கின்ற காவிரியில் கூட நமக்குத் தண்ணீர் இல்லாத நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். தொழிற்சாலைகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டிய தண்ணீர் மிகக் குறைவாக இருப்பது தமிழகத்தில்தான். தமிழகத்தைப் பொறுத்தவரையில், பாரதத்திலேயே மத்திய அரசினுடைய முதலீடு மிக அதிகமாக இருக்க வேண்டுமென்ற அணுகுமுறையை அவர்கள் மேற்கொள்ளாத காரணத்தினாலே தமிழகம் மிகவும் பாதிக்கப்பட்டு விடுகிறது. இதைப்பற்றி மத்திய அரசுக்குத் தெளிவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் [illegible] விளக்கியிருக்கிறார்கள். [illegible] நாங்கள் தொடர்ந்து [illegible] என்ற நம்பிக்கை மாநில அரசுக்கு உண்டு. மத்திய அரசு தன்னுடைய அணுகுமுறையை இதிலே மாற்றும் என்ற நம்பிக்கை மாநில அரசுக்கு உண்டு. மத்திய அரசினுடைய தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், இங்கே பல தொழிற்சாலைகளை [illegible] வேண்டும் என்பதை நாங்கள் வற்புறுத்தி வருகிறோம். குறிப்பாக [illegible] தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை பற்றி இங்கே சொன்னார்கள். இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸினுடைய இரண்டாவது தொழிற்சாலை எல்லாம் ஊட்டியிலே துவங்குவது தான் சிறந்ததாக இருக்கும் என்ற மாநில





அரசினுடைய கருத்தை தற்பொழுது மத்திய அரசு ஒருவாறு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். எனவே தான் அதை மத்தியப் பிரதேசத்துக்குத் தர வேண்டுமென்ற கொள்கையை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். தொடர்ந்து அதை மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. மத்திய அரசு சாதகமான ஒரு முடிவை மேற்கொள்ளும் என்று கருதுகிறேன்.

ஆவடியிலே ஒரு டேங்க் பேக்டரியை விரிவாக்குகின்ற திட்டத்தை தற்பொழுது ஆவடி பகுதிக்கு மத்திய அரசு தர இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே பாரத் எலக்ட்ரானிக் நிறுவனம் கிட்டத்தட்ட 15 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவாக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதற்குரிய நடவடிக்கையை தற்போது மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. மேலும் 'இன்ஸ்ட்ருமென்டேஷன் லிமிட்டெட்' என்கிற ஒரு அமைப்பையும் தமிழகத்தில் நிறுவ வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது. அதைப்போலவே 'மாடர்ன் பேட்டில் டேங்க் பேக்டரி' ஒன்றை தமிழகத்தில் அமைப்பதற்கு மத்திய அரசு துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. ஏற்கனவே அதை அமைப்பதற்கு வருகிறார்கள். அதைப்போலவே 'செக்கண்ட் ரெயில்வே கோச் பேக்டரி' ஒன்றை தமிழகத்தில் நிறுவ வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது.

சேலம் இரும்பு ஆலையைப் பொறுத்தவரையில், ரூபாய் 560 கோடியிலே "Mini steel-plant using the iron technology." என்ற முறையிலே மாநில அரசினுடைய முயற்சியிலே அதைத் தாங்கள் முடிவு செய்திருந்த போதிலும், மத்திய அரசு அதை எப்படியும் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். ஒருவேளை அவர்கள் அதனை ஈடேற்றாவிட்டாலும் கூட, "Mini steel-plant based on the sponge iron technology." என்ற முறையிலே தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலே அதனுடைய மினி ஸ்டீல் பிளாண்டுகள் வரும் என்பதை நான் அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே "மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்டைப்" பொறுத்தவரையில், 600 கோடி ரூபாயிலே அதனுடைய கொள்திறனை இருமடங்கு ஆக்குவதற்கு தேவையான உரிமத்தை வழங்க வேண்டுமென்று மத்திய அரசை "மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்" அணுகியிருக்கிறது. அவர்கள் அதை ஈடேற்றித் தர வேண்டும். அதன் காரணமாக "டவுன்

ஸ்ட்ரீம் பெட்ரோ கெமிக்கல் ப்ராடக்ட்ஸ்'' அதிகமாகி, தொழிற்சாலைகள் துவங்குவதற்கான பெரிய வாய்ப்புகள் இருக்கிற காரணத்தால், இதை ஒரு முக்கியமான தேவையான ஒன்றாகக் கருதி, மத்திய அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

அதைப்போலவே மத்திய அரசைப் பொறுத்தவரைக்கும், தற்போது 'பெட்ரோ கெமிக்கல் காம்பிளக்ஸ்'' ஒன்றை தமிழகத்திலுள்ள மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்டை ஒட்டி அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். அதைப் போலவே தூத்துக்குடி பகுதியில் கூட, ஒரு பெரிய துறைமுகம் இருக்கிறது. அங்கு வெளி மாநிலங்களிலிருந்து, வெளிப் பகுதிகளிலிருந்து எல்லாம் கப்பல் வழியாக நிலக்கரி வர வேண்டியிருக்கிறது. அங்கு பெரிய 'வெசல்' எல்லாம் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தால், தூத்துக்குடி பகுதியிலும் ஒரு 'பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளெக்ஸ்' வர வேண்டுமென்றும், அதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டுமென்றும் மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். மத்திய அரசு பெட்ரோ கெமிக்கல் காம்பிளக்சைக் கொண்டு வர தாமதம் செய்தாலும் கூட, அதற்கு மாநில அரசு தயாராக இருக்க வேண்டும் என்பதற்காக அந்த பெட்ரோ கெமிக்கல் ப்ராடெக்ட்ஸ் ஆன "Linear alkyle benzene" என்ற ஒரு பொருளை "It is a basic detergent material" உற்பத்தி செய்ய மெட்ராஸ் ரிபைனரியை ஒட்டி ஆரம்பிக்க வேண்டுமென்று, மாநில அரசு அதற்கான உரிமத்தைப் பெற்று, தற்போது நடவடிக்கையும் மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்

(பிற்பகல் 12-50)

போலவே 'ஐசோ புரோபோனால்' என்ற 'பெட்ரோலியர் கெமிகல் ப்ராடக்ட்' ஒன்றை அந்தப் பகுதியில் துவக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. 'போலிலாலெஸ்' என்ற ஒரு பொருளை இந்தப் பகுதியில் சென்னை உர நிறுவனம் அமைந்துள்ள பகுதியில் துவக்க மாநில அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. அதைப்போலவே புரோபைலின் பேஸ்டு ப்ராடக்ட்டைப் பொறுத்தவரையில் 2 விதமான பொருட்களை உற்பத்தி செய்ய கோத்தாரி நிறுவனத்தார் மணலியில் தொழிற்சாலை துவங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், சென்னை உரத் தொழிற்சாலை அமைந்துள்ள பகுதியையொட்டி **Aromatic recoveries from excess naptha of M.R.L.** என்ற முறையில் சென்னை உரத் தொழிற்சாலைக்கு அருகில் அரோமாடிக் ரிக்கவரிக்காக சில தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சித்தேடிச்





சப்பருக்குத் தேவையான சில கெமிக்கல் தொழிற்சாலைகளைத் துவக்க மாநில அரசு முயற்சி எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இன்னும் தமிழ் நாடு கெமிகல்ஸ் அசோசியேஷனைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் பலவித கெமிக்கல் பேஸ்டு இன்டஸ்டிரில் ஆரம்பிக்க முடியும் என்று அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 52 விதமான, போட்டி குறைவாக இருக்கிற, 'டிமாண்ட் சப்ளை கேப்' அதிகமாக இருக்கிற தொழிற்சாலைகளைத் துவக்க வேண்டுமென்று ஆலோசனை கூறியிருக்கிறார்கள். அதாவது ஒரு தொழிற்சாலை வெற்றி பெற வேண்டுமானால் அங்கே உற்பத்தி செய்கிற பொருள் எளிதில் விற்பனை ஆகும்படி இருக்கவேண்டும். அதுமாதிரி உற்பத்திப் பொருள்களின் தேவை நாட்டில் அதிகமாக இருக்க வேண்டும். அதாவது உற்பத்தி குறைவாக (அவைலபிலிட்டி) இருக்கவேண்டும். **There should be sufficient gap between the supply and demand of the end-products.** அந்த அடிப்படையில் தமிழகத்தில் இருக்கிற வாய்ப்புகளை வைத்து 52 விதமான புதிய ரசாயன தொழிற்சாலைகளைத் துவக்க முடியும் என்று கெமிகல் அசோசியேஷன் ஒரு ஆலோசனையாக தமிழக அரசுக்குத் தந்திருக்கிறது. கெமிக்கல் தொழில் துவக்க தனியார் துறையில் யார் முன்வந்தாலும், அவர்களுக்கு அந்தத் தொழில் நுணுக்கத்தைத் தர இருக்கிறார்கள். பொருளாதார உதவியை மாநில அரசு தரவிருக்கிறது. கெமிக்கலை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை ஊக்குவிக்க இந்த அரசு தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. கெமிக்கலை அடிப்படையாகக் கொண்ட தொழிலின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக, 'மெத்தனால்' என்ற பொருள் கிடைப்பதில் கஷ்டம் இருக்கிறது. நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தாருக்கு அந்த மெத்தனால் என்ற உப பொருள் கிடைக்கிறது. அதுகூட விஷமாகத்தான் கருதப்படுகிறது. எரிசாராயத்தில் ஆல்கஹால் போன்ற பொருள் அது. அதைத் தயாரிக்க அவர்களுக்கு உரிமம் கிடைக்காது பல இன்னல்கள் இருந்து வருகின்றன. எனவே 'மெத்தனால்' என்ற பொருளைப் பொறுத்தவரையில், அது கெமிக்கல் பேக்டரிகளுக்குத் தேவைப்படுகிற காரணத்தால், அதிலுள்ள சட்டச்சிக்கலைத் தீர்த்து, தொழிற்சாலைகள் அதிகமாக வளர்ச்சி பெற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதையும் அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே, தமிழகத்தில் மின்சார நிலை. மின்சாரத் தட்டுப்பாடு இல்லை என்று சொல்ல முடியாது. அத்தகைய மின்சாரத் தட்டுப்பாட்டைப் போக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக நம் கைவசம் 1,800 மெகாவாட் மின்சாரம் இருக்கிறது. மேட்டூர் தெர்மல் எக்ஸ்டென்ஷன்

வந்தால், 420 மெகாவாட் விரைவில் கிடைக்கவிருக்கிறது. ஹைட்ரோ பவர் மூலமாக 120 மெகாவாட் மின்சாரமும், சேர்வலாறு ரிவர் ஸ்கீம் மூலமாக 20 மெகாவாட்டும், தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலிருந்து 420 மெகாவாட்டும், நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திலிருந்து உற்பத்தி செய்கிற 240 மெகாவாட் மின்சாரமும் விரைவில் கிடைக்க இருக்கிறது. வட சென்னையில் எண்ணூர் தெர்மல் பிளாண்ட்டில் 420 மெகாவாட் கிடைக்க இருக்கிறது. ஒட்டுமொத்தமாக 2,060 மெகாவாட் மின்சாரத்தை குறுகிய காலத்தில் தமிழகத்தில் பெறுவதற்கான நடவடிக்கைகளை மின்சாரத் துறை தீவிரமாக எடுத்துவருகிறது. அப்போது மின்சாரத் தட்டுப்பாடு ஓரளவுக்குக் குறையும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தைப் பொறுத்தவரையில், அன்புச் சகோதரர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசுகிறபோது, "தமிழ் நாட்டில் உள்ள அந்தத் தொழிற்சாலையின் மூலம் தமிழகத்திற்கு வேண்டிய பலன்கள் கிடைக்கிறதா?" என்று கேட்டார்கள். நம்மைப் பொறுத்தவரையில், முதல் சுரங்கத்தில் கிடைக்கும் மின்சாரம் பூராவையும் கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் இரண்டாவது மைன் கட்டைப் பொறுத்தவரையில், 60 சதவிகிதம் தரு தருவோம் என்று சொல்கிறார்கள். அது உகந்ததல்ல. தம் மாநிலத்தைச் சேர்ந்த லிக்னைட்டை எடுத்துப் பயன் பெறுகிறார்கள். நமக்கு பங்கைக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறோம். ஆந்திராவில் நிலக்கரிச் சுரங்கமான சிங்கரேணியில், 'மைன் கட்' மூலமாக வருகிற அத்தனை லாபமும் மாநில அரசுக்கே கிடைக்கிறது, மைய அரசுக்குக் கிடைக்கவில்லை. ராயல்டி கூட அவர்களிடமிருந்து நாம் வாங்குவதில்லை. ஆகவே மேற்கொண்டு என்.எல்.சி. சேர்மனிடமும், மத்திய அமைச்சரிடமும் பேசி, நெய்வேலி கார்ப்பரேஷன் இரண்டாவது மைன் கட் மின்சாரத்தைப் பெறுவதற்கும், ராயல்டி போன்ற வருமானத்தைப் பெறவும் அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

கல்பாக்கம் மின்சக்தியைப் பொறுத்த வரை, அது முழுவதும் தமிழகத்திற்கு இல்லையென்று மத்திய அரசு முடிவெடுத்திருக்கிறது. அது சரியல்ல என்றும் அங்கே உற்பத்தியாவது முழுவதையும் தமிழகத்திற்கே தர வேண்டும் என்றும் நாம் வற்புறுத்தி வருகிறோம். மைய அரசும் இருந்து செவி சாய்க்கும் என்ற நம்பிக்கை மாநில அரசுக்கு இருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தில் மின்சாரம் மிகவும் தட்டுப்பாடாக இருக்கிற மாநிலமே நமது தமிழகம்தான். காரணம், இங்கே இயற்கையிலேயே அதிகமான வசதி இல்லாத காரணத்தால், 'ஹைட்ரோ பவர் ஜெனரேஷனுக்கான வாய்ப்பு மிகவும் குறை





வாக இருக்கிற காரணத்தால்' "Thermal power is the only solution or atomic power is the only solution." என்ற நிலைமை நமக்கு இருக்கிறது. எனவே நாம் மைய அரசைப் பார்த்து வற்புறுத்துவதற்கு அவர்கள் பரிவோடு கவனித்து செவிசாய்ப்பார்கள் என்று கருதுகிறேன். அடுத்து, உடனடியாக மின்சாரத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கான வகையில் தனியார் மின்சாரத்தை உற்பத்தி செய்து தருவதற்கு முன்வந்தால் அதனையும் ஏற்பதாக இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் பேசும்போது, மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான உரிமையைக் கூட தனியாருக்குக் கொடுப்பதா என்று கேட்டார்கள். தற்போது நமக்குத் தேவை மின்சாரம். மின்சாரம் இருந்தால்தான் தொழில் வளர்ச்சி ஏற்படும். தொழில் வளர்ச்சி ஏற்பட்டால்தான், நிறைய வேலைவாய்ப்பு ஏற்படும். நிறைய வேலை வாய்ப்பு கிடைத்தால்தான், தமிழகத்தில் உள்ள மக்களுக்கு வருவாய் கிடைக்கும். எனவே தொழில் விருத்திக்கு அடிப்படையான மின்சாரத்தை நமக்கு யார் தந்தாலும் பரவாயில்லை என்று வரவேற்கிறோம். மத்திய அரசாலே தர முடியாத நிலைமை இருக்கிறது. காரணம் மைய அரசுக்கே பணத் தட்டுப்பாடு என்ற நிலை இருக்கிறது. நெய்வேலியில் மூன்றாவது சுரங்கத்தை அவர்கள் மேற்கொள்ளலாம். அல்லது அதன் மூலம் அங்கே இன்னொரு அனல் மின் நிலையத்தைப் போடலாம். அதற்கும் நிதித் தட்டுப்பாடு என்று சொல்லுகிறார்கள். எனவே அவர்கள் இந்தப் பிரச்சினையில் சற்று நிதானமாக இருக்கிற காரணத்தால், தனியார் யாராவது இங்கே ஒரு தெர்மல் பிளாண்ட் போட முன்வந்தால், அதற்குத் தேவையான நிலக்கரியை அவர்கள் எங்கிருந்தாவது பெறுகிற வாய்ப்பு இருந்தால், அதைப் பயன்படுத்திக் கொண்டு தமிழகத்தின் பொருளாதாரத்தை உயர்த்த முடியும் என்றால், அதன் மூலம்தான் தமிழக மக்களின் வேலை வாய்ப்பை அதிகரிக்க முடியும் என்றால், அதன் மூலம்தான் தமிழகத்தின் வறுமையைப் போக்க முடியும் என்றால், அந்த முறையில்தான் நாம் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும். எனவேதான் அரசு கூட்டுத் துறையில், ஜாயிண்ட் செக்டாரில் ஒரு தெர்மல் பிளாண்ட்டை நிறுவ தயாராக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறோம். தனியாரே மின்சார உற்பத்தியைச் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதற்கு மத்திய அரசே உரிமம் வழங்கத் தயாராக இருக்கிறது என்னும்போது, நாம் அவர்களை ஊக்குவிப்பதிலே தவறு இல்லை. இதற்கெல்லாம் உரிமம் தருவதற்கு மைய அரசே தயாராக இருக்கிற நிலையில், நாம் ஏன் அதற்கு முட்டுக்கட்டையாக இருக்க வேண்டும் என்றுதான் இதை ஆதரிக்கிறோம். தற்போது நமக்குத் தேவை மின்சாரம். அதை யார் தந்தாலும் பரவாயில்லை என்ற நிலையில்தான் தனியார் மின்சாரத்தைத்

தயார் செய்து கொடுத்தால், அதை நாம் வரவேற்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். ஒரு இரண்டாண்டுக் காலத்தில் 500 முதல் 600 மெகா வாட் அளவுக்கு உற்பத்தி செய்யக் கூடிய ஒரு யூனிட்டையே உருவாக்க முடியும் என்று வல்லுநர்கள் சொல்கிறார்கள். எனவேதான் அந்த அடிப்படையில் இதை ஊக்குவிக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

தனியார் துறையில் 'பம்பாய் ஹை'-யில் கிடைக்கிற நேச்சுரல் காஸைப் பயன்படுத்தி தமிழகத்தில் மின்சாரத்தைத் தயாரிக்க முடியும் என்று சொல்கிறார்கள். நெய்வேலியில் அவர்களுக்குச் சொந்தமாகவே 2000 ஏக்கர் நிலத்தில் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிரந்தரமாகப் பயன்படுத்தி நிலக்கரி எடுப்பதற்கு விட்டுவிட்டாலும்கூட, இன்னும் ஒரு 1000 ஏக்கர் நிலப் பரப்பில் நிலக்கரி மிகவும் ஆழமான பகுதியில் கிடைக்கிறது என்கிறார்கள். அதை நாம் வெளியே கொண்டு வந்து அதன் மூலமாகவும் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்றும் சொல்லுகிறார்கள். அதற்கெல்லாம் ஜப்பான், இத்தாலி போன்ற நாடுகள் உதவி செய்ய முன்வருவதற்கும் தயாராக இருக்கின்றன. மிகவும் ஆழமான பகுதியில் கிடைக்கிற பழுப்பு நிலக்கரியை 'கேஸிபிகேஷன் மெத்தட்' என்ற டெக்னாலஜியைப் பயன்படுத்தி, நவீன முறையைப் பயன்படுத்தி, பூமிக்குள் கேஸைச் செலுத்தி லிக்னைட்டை உடைத்து, கூழாக்கி, தண்ணீரைப் போல வெளியே கொண்டு வந்து உபயோகிப்பதற்கான முறையில், கேஸிபிகேஷன் டெக்னாலஜியைப் பயன்படுத்தி குறைந்த செலவில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்றும் சொல்லப்படுகிறது. தற்போது ஒரு மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டுமென்றால், ஒரு கோடி ரூபாய் முதலீடு தேவைப்படுகிறது. ஆனால் இந்த லேட்டஸ்ட் டெக்னாலஜியைப் பயன்படுத்துவதன் மூலம் 1 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய ரூ. 70 லட்சம் மூலதனம்தான் தேவைப்படும் என்று இத்தாலி நாட்டு நிறுவனம் ஒன்று சொல்லியிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் தனியார் இங்கே மின்சாரத்தைத் தயாரிக்க முன்வருகிறார்கள். அந்த நிலையில்தான் நாம் அவர்களுக்குத் தேவையான உரிமத்தை வழங்க விரும்புகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போலவே 'பாம்பே ஹை'யில் கிடைக்கிற நேச்சுரல் கேஸை கப்பலில் கொண்டு வந்து கடற்கரைப் பகுதியில் ஒரு தெர்மல் பிளாண்ட் நிறுவுகிறோம் என்றும் சொல்லுகிறார்கள். அது 'கோல் பேஸ்டு' அல்லது 'லிக்னைட் பேஸ்ட்' அல்லது 'நேச்சுரல் கேஸ் பேஸ்டு' என்று எதுவாக இருந்தாலும், அதைப் பயன்படுத்தி இங்கே மின்சாரத்தைக் குறைந்த செலவில் தயாரிக்க முடியும் என்று சொல்லும்போது, நாம் அதை ஊக்குவிக்க விரும்புகிறோம். இதற்கான



டெக்னாலஜி ஜப்பானிலும், இத்தாலியிலும் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். எனவே அந்த டெக்னாலஜியைப் பயன்படுத்தி இங்கே மின்சாரம் தயாரிக்கலாம் என்று சொல்லுகிறார்கள். இதற்கு மைய அரசே இணக்கம் தெரிவிக்கிறது. இதற்கு நாம் போய் தடையாக இருக்க வேண்டாம், நமக்கு வேண்டியது மின்சாரம்தான் என்பதால்தான், அரசு இதைப் பொறுத்த வரையில், ஊக்குவிக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்களும் பேசுகிறபோது, இங்கே தொழில் வளர்ச்சிக்கும், தொழில்களுக்கான உரிமங்களைப் பெறுவதற்கும் பெரிய தடைக் கற்களாக, முட்டுக் கட்டைகளாக ஏராளமானவை இருக்கின்றன என்றும், குறிப்பாக அதிகாரிகளே முட்டுக்கட்டையாக இருக்கின்றனர் என்றும், விதிகளே முட்டுக்கட்டையாக இருக்கின்றன என்றும் இவைகளையெல்லாம் அரசு நீக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். இத்தகைய நிலைமைகளைப் போக்கவும் அரசு கண்டிப்பாக துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கெனவே மாநிலம் முழுவதுமாக 'இன்டஸ்ட்ரியல் சர்வே' ஒன்றைச் செய்திருக்கிறோம். ஆனாலும் கூட மீண்டும் ஒரு முழுமையான, ஆழமான 'இன்டஸ்ட்ரியல் சர்வே' நடத்தி எந்தெந்தப் பகுதிகளில் எந்தெந்தத் தொழில்கள் தொடங்குவதற்குத் தேவையான மூலப் பொருள்கள் கிடைக்கின்றன, இறுதிப் பொருள்களை விற்பதற்கான மார்க்கட்டபிலிடி எங்கெங்கே இருக்கின்றது என்பதையெல்லாம் ஆராய்ந்து நட்டமில்லாமல் எந்தெந்தத் தொழில்களை இங்கே தொடங்கலாம் என்பதை அறிவதற்கான முறையில் தனியார் துறையில் வாய்ப்பில்லை. இங்கே நிறைய என்ஜினியர்கள் இருக்கிறார்கள், படித்த பட்டதாரிகள் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விவாதம் முடிவடையும் வரை அவையின் நேரம், அவையின் அனுமதியோடு, நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** என்ஜினியர்கள் எந்த அளவிற்கு தொழில் நடத்த ஆர்வம் காட்டுகிறார்களோ அதைவிட அதிகமாக ஆர்வம் காட்டி, பட்டதாரிகள் ஏராளமாக வந்து உதவி செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள். இப்போது பலபேர் வருகிறபோது இந்தப் பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையைத் துவக்கினால் இதிலிருந்து வரும் என்ட்-புராடெக்ட்

(திரு. சி. பொன்னையன்)

அண்டை மாநிலங்களான கர்நாடகா, ஆந்திரா ஆகிய இடங்களில் இருக்கிறதா, அல்லது வடபுலத்திலே இருக்கிறதா என்று பார்த்து, மைய அரசின் 'இம்போர்ட் பாலிசி' என்ன என்று பார்த்துச் செய்ய வேண்டியிருக்கிறது. இப்போது உற்பத்தி செய்கிறோம் என்றால், ஆண்டு ஆண்டு களுக்கு நன்றாக நடைபெறுகிறது. பிறகு மைய அரசின் இறக்குமதிக் கொள்கையின் காரணமாக, இந்தப் பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டும் என்று ஆணையிட்டுவிட்டால், பிறகு இந்தத் தொழிற்சாலைகள் நசுங்கிவிடும் நிலை ஏற்படுகிறது. நம்முடைய மாநிலத்தில் துவங்குகிற போது, வடபுலத்திலே சில தொழிற்சாலைகள் லார்ஜ்-ஸ்கேல் இண்டஸ்ட்ரீசாக இருக்கும். லார்ஜ்-ஸ்கேல் இண்டஸ்ட்ரீசில் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்யும்போது, பொருள்களின் விலை குறையும். உற்பத்தி அதிகமாகும் போது, உற்பத்திச் செலவு குறையும். மேலும் அதிகமாக உற்பத்தி செய்யும் போது, போக்குவரத்துச்செலவும் (டிரான்ஸ்போர்ட் காஸ்ட்) 'அப்சார்ப்' ஆகி அவர்கள் நம்மோடு போட்டியிடுகிறபோது, நம்முடைய தொழில் நசுங்கும் என்பதால், தனியாருக்கு எந்த அளவிற்கு ஆலோசனைகளைக் கூற முடியுமோ அந்த அளவிற்குக் கூறக்கூடிய அளவிற்கு இப்போது ஒரு புதிய முடிவை அரசு மேற்கொண்டிருக்கிறது.

தமிழகத்திலே எந்தெந்தத் தொழில்களைத் துவக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன, அது போட்டியின்றி வெற்றி பெற முடியுமா, **Whether the end-products will be non-competitive or whether they will face competition as a result of the import policy of the Government of India—** என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து புராஜெக்ட் புரொபைலை மாநில அரசு தயார் செய்யும். அப்படித் தயார் செய்யும் புராஜெக்ட் புரொபைலை விளம்பரம் செய்து "டெக்னோக்ரட்ஸ், புரொபஷனல்ஸ், நான்-டெக்னோ கிராட்ஸ், எஜுகேட்டெட் பீப்பிள்", ஆகிய யாராக இருந்தாலும் யார் யார் முன்வருகிறார்களோ, அவர்களுக்கு இந்த புராஜெக்ட் புரொபைலைக் கொடுத்து, தொழில் துவங்க ஆலோசனை நல்கி நிதியுதவி தந்து எல்லா உதவி களையும் செய்ய வேண்டும் என்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

சில தொழில்களைத் துவங்குகிறபோது, மேனேஜீரியல் ஸ்கில் இருக்காது. அப்படிப்பட்ட மேனேஜீரியல் ஸ்கில்லை, அண்ணா இன்ஸ்டிட்யூட் மூலமாக அவர்களுக்குக் கொடுக்க தக்க நடவடிக்கை இந்த அரசு எடுக்க இருக்கிறது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.



ஒரு தொழிலை ஆரம்பிக்க உரிமம் பெற வேண்டும் என்றால், இப்போது 12 அமைப்புகளிடம் சென்றுதான் பெற வேண்டியிருக்கிறது. இந்த முறையை உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் மாற்றியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் பேசுகிறபோது, மாநிலம் நல்ல வளர்ச்சி அடைய திட்டமிட வேண்டும் என்ற ஆர்வத்தோடு, சில ஆலோசனை களைச் சொன்னார்கள். அதைப் போன்றே மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்களும் சொன்னார்கள். அவர்கள் இந்த நாட்டின் நலனுக்காக ஏற்ற ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள் என்ற முறை யில் அதை நான் ஏற்கிறேன். யார் ஆலோசனைகளைச் சொல்லுகிறார்கள் என்பதல்ல. தமிழக மக்களின் நலனுக்காக நல்ல யோசனைகளைச் சொல்லு கிறபோது, அதை ஏற்றாக வேண்டும் என்ற முறையிலே நான் அதை ஏற் கிறேன். உரிமங்களைப் பெறுவதைப் பொறுத்த வரைக்கும், தற்போது 'நோ-அப்ஜெக்ஷன் சர்டிபிகேட்' வாங்க வேண்டியிருக்கிறது. ஹெட், சைட், டெர்ம் லோன், சப்சிடி, சாப்ட் லோன், ஒர்க்கிங் காப்பிடல் ஆகியவற்றுக்கு மிகச் சிரமப்பட்டு தனித்தனி முயற்சிகள் செய்ய வேண்டியிருக்கிறது. சேல்ஸ்-டாக்சுக்குத் தனி முயற்சி. மைய அரசின் டாக்சுக்கும், மாநில அர சின் டாக்சுக்கும் தனி முயற்சிகள். எக்சைஸ் டியூட்டிக்குத் தனி முயற்சி. ஹெல்த் டிப்பார்ட்மெண்ட், வாட்டர் போர்ட் ஆகியவற்றுக்குத் தனித்தனி யாக முயற்சி எடுக்க வேண்டும். அதைப் போலவே இன்ஸ்பெக்டர் ஆஃப் பாக்டரீஸ் இருக்கிறார். பில்டிங் அப்ரூவல் என்றால் தனி முயற்சி. இப்படி பல்வேறு கட்டங்களில், தொழிலைத் துவங்க வேண்டுமானால், கிட்டத்தட்ட 12, 13 அதிகாரிகளைச் சந்தித்து உரிமங்களைப் பெற்று துவங்க வேண்டிய நிலை இருக்கிறது. இதற்கு எவ்வளவுதான் துரிதமாக முயற்சி எடுத்தாலும், இரண்டு வருட காலத்திற்கு முன்பு துவங்க முடியாத நிலை இருக்கிறது. பல நேரங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல, தொழில் ஆரம்பிப் பதையே விட்டுவிடலாமா என்ற உணர்வு ஏற்பட்டுவிடுகிறது. இதைப் போன்ற 'டெக்னிக்கல் ஹர்டில்ஸ்' இருக்கின்றன. இதையெல்லாம் போக்க வேண்டும் என்று அரசு முடிவு செய்திருக்கிறது. இதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இசைவு தந்திருக்கிறார்கள். **Single Window Service System.** என்ற திட்டத்தைக் கொண்டு வந்து, ஒரே அமைப் பின் மூலமாக எல்லா உரிமங்களையும் விரைவாக தங்குதடையின்றி 3 மாதக் காலத்திற்குள் வழங்க வேண்டும் என்ற முறையில், இந்த அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். மாண்புமிகு அனகாபுத்தூரார், "ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அதிக மாக இருக்கிறார்கள். அடிக்கடி பதவி உயர்வு மற்றும் பல காரணங்களால்

மாறிவிடுகிறார்கள். எனவே
இல்லாத காரணத்தால் அந்த அமைப்புகள் பாதிக்கப்படுகின்றன" Perpetuity or continuity. என்று
சொன்னார்கள். மாண்புமிகு அண்ணன் திரு. சாதிக் பாட்சா அவர்கள் பேசு
கிறபோது, "ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் திறமை மிக்கவர்கள் ; அவர்களைப் பயன்
படுத்துகிறவர்கள் தான் நல்ல முறையில் பயன்படுத்தி பலனைப் பெற முடியும்"
என்று சொன்னார்கள். இருவருடைய கருத்துக்களையும் நான் ஏற்றுக்
கொள்கிறேன். அந்த முறையில்தான் நான் பிரச்சினைகளை அணுகு
கிறேன். தொழில் துறையில் பல முன்னேற்றங்களை நாம் ஈட்டேற்ற வேண்டு
மென்றால், தனியார் துறையிலே பல வல்லுநர்கள், தொழில் நுணுக்கம்
தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். அரசு அதிகாரிகளுக்கு எல்லா நுணுக்கங்
களும் தெரிந்திருக்குமென்று நீங்களும் ஒப்புக்கொள்ள மாட்டீர்கள், அதிகாரி
களும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள், அரசும் ஒத்துக்கொள்ளவில்லை. தனி
யார் துறையிலும் டெக்னிகல் எக்ஸ்பர்ட்ஸ் பலர் இருக்கிறார்கள். அப்படி
இருக்கின்ற டெக்னிகல் எக்ஸ்பர்ட்கள் அரசினுடைய ஒவ்வொரு அமைப்பிலும்
இடம் பெறச் செய்யக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அது மட்டு
மல்லாமல், ஒரு Advisory Committee consisting of experts and
technocrats. போட்டு, அந்தக் கமிட்டி மூலமாக தக்க ஆலோசனைகளைப்
பெற்று தொழில் வளர்ச்சியைத் துரிதமாக்க தக்க நடவடிக்கைகளை அரசு
எடுக்குமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே இன்சென்டிவ்வைப் பொறுத்தவரையில், தொழிற்
சாலைகள் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ற முறையில் செயல்பட
வேண்டும். இன்ஸ்டால்டு கப்பாசிட்டி என்னவோ அந்த அளவுக்கு எல்லாத்
தொழிற்சாலைகளும் பல நேரங்களில் உற்பத்தியைச் செய்ய முடியாமல்
போகிறது. அதற்கு தொழில் தகராறும் கூட காரணமாக இருந்து வருகிறது.
பல பிரச்சினைகள் இருக்கின்றன. 50-ல் இருந்து 60 சத விதத்திற்கு உற்
பத்தி செய்தால் ஒரு இன்சென்டிவ். 60-ல் இருந்து 70 சத விதத்திற்கு
உற்பத்தி செய்தால் ஒரு இன்சென்டிவ். 70-ல் இருந்து 80 சத விதத்திற்கு
உற்பத்தி செய்தால் ஒரு இன்சென்டிவ் எனச் சொல்லி, அப்படி Incentive
will be by way of concession in sales-tax என்ற
முறையிலே அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதனால் அரசினுடைய
வருமானமும் கூடும், உற்பத்தியும் பெருகும் என்ற முறையிலே இந்தப் பிரச்
சினையை அரசு அணுகுகிறது என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன்.
இன்னொரு முக்கியமான பிரச்சினை, வேலை வாய்ப்பைப் பெருக்கக் கூடிய
தொழிற்சாலைகளுக்கு ஊக்கத்தைத் தரவேண்டுமென்று அண்ணன்
திரு. சாதிக் பாட்சா அவர்கள் சொன்னார்கள். நான் அதை ஏற்றுக்கொள்





கிறேன். திரு வெங்கடகிருஷ்ணன் அவர்களும் சொன்னார்கள். அப்படி
வேலை வாய்ப்பைப் பெருக்கக் கூடிய தொழிற்சாலைகளைத் துவக்க யார்
முன்வந்தாலும் Whether it may be a small scale industry or
major industry or middle industry. அவைகளுக்கு அரசு
ஊக்கத்தைத் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாடர்ன்
பேக்கரியைப் பொறுத்தவரைக்கும். என்னுடைய கருத்தைச் சொல்ல
விரும்புகிறேன். அது தமிழகத்திற்கு, பாரதத்திற்கே ஒவ்வாத
ஒன்று. காரணம் பல சின்னச் சின்ன பேக்கரிஸ் மூலமாக,
ரொட்டிக் கடைகள் மூலமாகச் செய்யக் கூடிய தொழில்களைப் பொறுத்த
வரையில், கோதுமையை ஒரு புறம் கொட்டினால் மறுபுறம் பேக் பண்ணி,
மெஷினே பேப்பர் எல்லாம் ஒட்டி விழுந்துவிடுகிறபோது, மனித சக்திக்கே
வேலை இல்லாமல் போய்விடுகிறது. மனித சக்தி அதிகமாக இருக்கிற—
ஓவர் பாபுலேடட் கன்ட்ரியாக இருக்கிற—நமது நாட்டிலே, நமது மாநிலத்
திலே வேலை வாய்ப்பைக் கொடுக்கக் கூடிய தொழிற்சாலைகள் வருகிறபோது,
மக்கள் மத்தியிலே வேலை கிடைக்காத காரணத்தால், பெரிய பிரச்சினைகள்
ஏற்பட்டு, வேலை இல்லை. வேலை இல்லை என்பது வறுமையில் முடிந்து
வறுமையின் காரணமாக ஒருநாளும் இருக்கவேண்டுமா என்ற கேள்வியே
கேட்கக் கூடிய நிலை கூட இருக்கிறது. மத்திய அரசு கூட இந்தத் தொழிற்
சாலைகளுக்கு உரிமம் தருகின்றபோதே, Certain factories should be
exclusively reserved for small scale industries and cottage industries ;
certain factories alone should be reserved for medium and large
scale industries. என்ற முறையை அணுகத் தவறுமேயானால்,
வேலையில்லாத் திண்டாட்டம் தமிழகத்தினுடைய ஆணி வேரையே
அழித்துவிடக் கூடிய ஒரு நிலையை உருவாக்கும் என்று இந்த அரசு
கருதுகிறது. அந்த அடிப்படையிலே தமிழகத்தைப் பொறுத்த
வரைக்கும், லேபர் இன்டென்சிவ் டெக்னாலஜியைப் பயன்படுத்தி, அதிகப்
படியான ஒரு தொழிற்சாலையை 50-க்கு மேல் ஆரம்பிக்கிறார்கள். அதிகப்
படியான எண்ணிக்கை உள்ள தொழிலாளிகளைப் பயன்படுத்தக் கூடிய
தொழில் நுணுக்கத்தை நாம் பயன்படுத்த முன்வருவோமேயானால், அவர்
களுக்குப் பணச் சலுகை மற்றும் மானியச் சலுகைகளை இந்த அரசு செய்யும்
என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
அதைப் போலவே சில சிறிய தொழில்கள் எல்லாம் நலிவுற்ற நிலையை அடை
வதற்குக் காரணம், பல நேரங்களில் அவர்கள் இந்த ரா மெட்டீரியல்ஸை எங்கு
வாங்குவது என்பது பிரச்சினையாக ஆகிவிடுகிறது. ஒரு பெரிய தொழிற்
சாலை மேற்கு வங்கத்திலே சீனாவிலே, குஜராத்திலே, மராட்டியத்திலே
வெளிநாட்டிலே கிடைக்கிற ரா மெட்டீரியல்ஸை வாங்குகிறபோது, அதற்கு

பல முட்டுக்கட்டைகள், தடைகள் ஏற்படுகின்றன. எனவே இன்டஸ்ரியல் குரோத்துக்கு முட்டுக்கட்டைகளாக இருக்கின்ற பல தடைகளில் ஒன்று 'ரா மெட்டீரியல்ஸ் அவைலபிளிட்டி' அந்த ரா மெட்டீரியல்லைப் பொறுத்த வரைக்கும், கச்சாப் பொருள் எளிதில் கிடைக்கக் கூடிய முறையை அரசு ஒரு அமைப்பு மூலமாக விரைவுபடுத்த இருக்கிறதென்பதையும் சொல்ல விரும்பு கிறேன். அதைப்போலவே நிதி உதவி தருகிறபோது, ஈராண்டுக் காலம் ஆகி விடுகிறது என்று அனகாபுத்தூரார் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது மிகவும் வேதனைக்குரிய ஒன்றுதான். அதை நான் ஏற்றுக்கொள்ள வில்லை. எனவே தான் 'சிங்கிள் விண்டோ சர்விஸ்' மூலமாக 3 மாத காலத்திற்குள் அவர்களுக்கு வேண்டிய அனைத்து உரிமங்களும் சலுகைகளும் கிடைக்க வேண்டுமென்று அரசு நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறதென்பதையும் நான் கூற விரும்புகிறேன். இன்னொரு பெரிய பிரச்சினை பொருளை உற் பத்தி செய்து விடுகிறார்கள். எங்கு விற்பது என்று தெரியவில்லை. உற்பத்திப்

(பிற்பகல் 1-10)

பொருளை விற்க முடியாமல் இருக்கும்போது அவர்களுடைய 'எக்ஸ் பெண்டிசர்' அதிகமாகி, என்ட் புராடெக்ட்ஸ் அதிகமாகி, இறுதியிலே இழுத்து மூடவேண்டிய நிலைக்கு தொழிற்சாலை சென்று விடுகின்ற காரணத்தினால் அவர்களுடைய அந்தப் பொருளை விற்பனை செய்வதற்கு ஒரு மார்க்கெட்டிங் கார்ப்பரேஷனை அமைக்க அரசு முடிவு செய்திருக்கின்றது. அது மட்டுமல்ல. வெளிநாடுகளுக்கு தமிழகத்திலேயிருந்து பல பொருள்களை ஏற்றுமதி செய்து மத்திய அரசுக்கு அந்நியச் செலாவணி பெருகுவதற்கும், அந்த எக்ஸ்போர்ட் கம்மோடிடிஸ் மூலமாக மாநிலத்திலே வேலை வாய்ப்பு ஏற்படுவதற்கும் மற்ற சில மாநிலங்களைப்போட்டி ஸ்டேட் எக்ஸ்போர்ட் புரமோஷன் கார்ப்ப ரேஷன் ஒன்று அமைக்கப்படும் என்பதையும் நான் அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) தலைமை

அதைப் போலவே, பல இடங்களிலே சட்டங்களும், விதிகளும் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகளாக இருக்கின்றன. பல ஆண்டுகளுக்கு முன்னால் இயற்றப்பட்ட சட்டங்கள் வளர்ச்சிக்கு உகந்ததாக இல்லாமல், ஊறு விளை விப்பதாக உள்ளன. அத்தகைய சட்டங்களை, விதிகளை எல்லாம் மாற்ற வேண்டும் என்று அரசு முடிவு செய்திருக்கிறது. ஏற்கெனவே சொன்னதைப் போல, அட்வைசரி கமிட்டி ஒன்று, "Industrial consultancy unit to guide the Government in promoting industrial growth என்று ஆரம்பிக்கப்படும் என்பதையும் நான் சொல்லிக்கொள்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர்கள் "நான் ரெசிடென்ட் இன்டியனஸ் தமிழகத் திலேயிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கின்ற தமிழர்கள் எல்லாம் தமிழகத்திற்கு வந்து தொழில் தொடங்க முன்வருகின்றபோது, ஊக்குவிக்க வேண்டும்" என்று சொன்னார்கள். தற்போது ஊக்கம் கொடுக்கவில்லை என்று எடுத்துச் சொன்னார்கள். ஊக்கமே இல்லாமல் இல்லை. அண்ணன் அனகாபுத்தூரார் சொல்வதைப் போன்று, சிவ சேனா மத்தியிலே பம்பாயிலே சென்று தொடங்கினால், அவர்கள் பெறுகின்ற வசதி தமிழகத்தில் இல்லை என்று சுட்டிக்காட்டுவது தவறான ஒன்று. பம்பாயில் இருப்பவர்கள் எல்லாம் தொழிலில் இல்லை. அவர்கள் பணியாளர்களாகத்தான் இருக்கின் றார்கள். நம்மைப் பொறுத்தவரையில், வெளி மாநிலத்தில் தமிழர்கள் இருந்தாலும், வெளிநாடுகளில் இருக்கின்ற தமிழர்களாக இருந்தாலும் சரி, அவர்களுடைய அறிவுத் திறனை தமிழகத்திற்குப் பயன்படுத்த வேண்டு மென்ற முறையிலே, அவர்களிடத்திலே இருக்கின்ற மூலதனத்தை வைத்து தமிழகத்தினுடைய பொருளாதாரத்தைச் செம்மைப்படுத்த, உயர்த்த உதவு கின்ற முகத்தானும் அமைய வேண்டுமென்ற முறையில் இந்த அரசு பிரச் சினைகளை அணுகுகின்றது. சிலிகான்வேலி என்று சொல்லப்படும் அமெரிக்காவிலே இருக்கின்ற ஒரு பகுதியிலே எலெக்ட்ரானிக்ஸ் இன்டஸ்ட் ரீசைப் பொறுத்தவரைக்கும், அதிலே இருக்கின்ற பல அறிவு நிறைந்த விஞ்ஞானிகள் எல்லாம் தமிழர்களாக இருக்கின்றார்கள். அமெரிக்கரே கூட தமிழகத்திற்கு வர விரும்பினால் அவர்களை விடமாட்டோம் என்ற நிலை யிலே வளர்ந்த அறிவைப் பெற்ற விஞ்ஞானிகளாக தமிழர்கள் அங்கே இருக் கின்றார்கள். அந்தப் பயனை நாம் பெறவேண்டுமென்பதுதான் அரசினுடைய நோக்கமாக இருக்கின்றது என்ற காரணத்தினால், அயல் நாட்டிலேயிருந்து தமிழகத்திலே தொழில் தொடங்க வருகின்றவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு ஊக்கம் தருகின்ற முகத்தான், 'தமிழ்நாடு ஸ்டேட் நான்-ரெசி டென்ட் இந்தியன்ஸ் கார்ப்பரேஷன்' அமைப்பு தொடங்கி, அந்த அமைப் பின் மூலமாக நான்-ரெசிடென்ட்ஸ் இன்வெஸ்ட்மெண்ட் தமிழகத்திலே அதிக மாகப் பெறக்கூடிய நிலையை உருவாக்க, அரசு போதிய நடவடிக்கை எடுக்க இருக்கின்றது என்பதை நான் அவைக்கு எடுத்துச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

"ஃப்ரீ டிரேட் ஸோன்ஸ்" பற்றிச் சொன்னார்கள். "ஃப்ரீ டிரேட் ஸோன்"-ஐப் பொறுத்தவரைக்கும், அது செம்மையாகச் செயல்படவில்லை என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இந்தியாவிலே இருக்கின்ற, பம்பாய், குஜராத்திலே கூட அது சக்ஸஸ்புல்லாக இல்லை. அங்கே இருக்கின்ற "ஃப்ரீ டிரேட் ஸோன்" நமக்கு ஒத்ததாக இருக்கிறது. ஆனால் சௌத் கொரியாவில் இரண்டு "ஃப்ரீ டிரேட் ஸோன்" இருக்கின்றது. அயர்லாந்திலே ஒரு "ஃப்ரீ டிரேட் ஸோன்" இருக்கிறது. எல்லா "ஃப்ரீ டிரேட் ஸோன்"-களையும் கண்டறிந்து அந்தந்த "ஃப்ரீ டிரேட் ஸோன்" களில் உள்ள குறைகள் என்ன, நிறைகள் என்ன என்று பார்த்து, அந்த நிறைகளை மட்டும் சேர்த்து, நமது "ஃப்ரீ டிரேட் ஸோன்ஸ்" ஐப் பொறுத்தவரைக்கும், எந்தக் குறைபாடும் இல்லாத அளவுக்கு "எக்ஸ்போர்ட் ஓரியண்டட் இன்டஸ்ட்ரி" க்கு அதிக ஊக்கம் தர வேண்டும் என்ற வகையிலே அரசு பிரச்சினையை அணுகிவருகின்ற காரணத்தினாலே, அத்தகைய ஊக்கம் தருகின்ற முகத்தான் அது அமையும் என்பதையும் நான் இந்த அவைக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு அண்ணன் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் பேசுகின்றபோது, ஹேண்ட்லூம் மூலமாக அதிகப்படியான வேலை வாய்ப்பைத் தரமுடியும் என்றும், ஷூ மேக்கிங் மூலமாகவும் வேலை வாய்ப்பைத் தர முடியும் என்றும் சொன்னார்கள். நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, வேலைவாய்ப்பைப் பெருக்கக்கூடிய தொழில் என்ன இருந்தாலும், அதற்கு ஊக்கம் தர வேண்டுமென்ற முறையில் இந்த அரசு பிரச்சினைகளை அணுகும் என்று சொல்லி, நான் பேசுகின்ற பேச்சுக்களை மேலவை ஏற்று இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பை அவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்)**: மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 29—3—1984 அன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-14)



**5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

**அ. சட்டபடிக்கான விதிகளும், ஆணைகளும் இல்லை.**

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.**

* 83. தொழில் கொள்கையும் திட்டங்களும் (பெரும் தொழில்கள்) குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

* 84. 1984-85 ஆம் ஆண்டிற்கான தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம். (தமிழ் & ஆங்கிலம்).

& 85. 1984-85 ஆம் ஆண்டிற்கான சர்க்கரைத் தொழில் பற்றிய செயல்முறைத் திட்டம். (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

& 86. ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

& 87. ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் இணைப்புகள். 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

& 88. 1984-85 ஆம் ஆண்டிற்கான ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறை குறித்த செயல்முறைத் திட்டம் (ஆங்கிலம்).

---

* 26—3—1984 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்டமுறையில் அனுப்பப்பட்டது.

& 27—3—1984 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்டமுறையில் அனுப்பப்பட்டது.

## இணைப்பு I

(1 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 124-க்கான விடையைக் காண்க.)

(அ) சென்னை மாநகரில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியினை நடத்தி வருகிறது. மற்ற மாவட்ட தலைநகரங்களில் அரசு செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையின் மூலம் நேரடியாக பொருட்காட்சியினை 1978 ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகிறது.

செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையின் மூலமாக நடத்தப்பட்ட பொருட்காட்சிகளின் விவரம் கீழ் வருமாறு :—

| ஆண்டு. | பொருட்காட்சி நடத்திய இடம். |
|---|---|
| 1978 ஆம் ஆண்டு | சேலம். |
| 1979 ஆம் ஆண்டு | சேலம், கோவை. |
| 1980 ஆம் ஆண்டு | மதுரை, கோவை, சேலம். |
| 1981 ஆம் ஆண்டு | மதுரை (ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு பொருட்காட்சி). திருச்சி, கோவை, சேலம். |
| 1982 ஆம் ஆண்டு | வேலூர், திருச்சி, மதுரை, கும்பகோணம், திருநெல்வேலி, சேலம், கோவை. |

(ஆ) சென்னை நகரில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்திய பொருட்காட்சியில் அரசுக்குக் கிடைத்த நிகர லாபம் 1981 ஆம் ஆண்டு ரூபாய் 7.13 இலட்சம். 1982 ஆம் ஆண்டு அரசுக்குக் கிடைத்த நிகர லாபம் ரூ. 12.51 இலட்சம்.

மாவட்ட நகரங்களில் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை மூலம் நடத்திய பொருட்காட்சிகளின் மூலம் 1981 ஆம் ஆண்டில் இத்துறைக்குக் கிடைத்த நிகர லாபம் ரூபாய் 11.68 இலட்சம். 1982 ஆம் ஆண்டில் கிடைத்த நிகர லாபம் ரூ. 26.30 இலட்சம்.



## இணைப்பு II

(21 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

ஜப்பான் நாட்டிற்குரிய மூளைக்காய்ச்சல் நோய் இராமநாதபுரம் மாவட்டத்தில் 1978-ம் ஆண்டு முதலில் தோன்றியது. 1978 முதல் பாதிக்கப் பட்டோர் இறந்தோர் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

| வருடம். | பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை. | இறந்தோர் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1978 | 35 | 5 |
| 1979-80 | — | — |
| 1981 | 8 | 2 |
| 1982 | 8 | 0 |
| 1983 | 4 | 2 |
| 1984 (8-3-84 வரை) | 3 | 1 |

பாதிக்கப்பட்ட பகுதிகளில் காமக்ஸின் (Gammaxene) அல்லது மாலதியான் (Malathian) மருந்து தெளிக்கப்பட்டுள்ளன. கொசுக் களின் உற்பத்தியை தடுக்க பூச்சி மருந்து தெளித்தல், மருத்துவக் குழுக்கள் அமைத்தல், மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை அளித்தல், பொது மக்களுக்கு இந்நோய் பற்றிய சுகாதார கல்வி அளித்தல் போன்ற தீவிர நடவடிக்கைகளின் காரணமாக இந்நோயினால் ஏற்படக்கூடிய விளைவுகளை அரசு நன்கு அறிந்து தக்க நடவடிக்கை எடுத்துள்ளது. மூளைக் காய்ச்சலுக்கு காரணமான பன்றிகளை விலக்கிவைக்குமாறு உள்ளாட்சி நிறுவனங்களுக்கு

## இணைப்பு II

( 23 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க )

### தொழில் கொள்கையும், திட்டங்களும்.

1 மாநிலம் முழுவதும் வேலைவாய்ப்பை உருவாக்குதல் என்பது மாநில அரசின் முக்கிய பணிகளுள் ஒன்றாகும். இதனால் வறுமைப் பிரச்சினையை திறம்பட சமாளிக்க இயலும். இந் நோக்கத்தை எய்துவதற்காகவே மாநில அரசின் தொழில் கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது. இம்மாநிலம் முழுவதிலும் குறிப்பாக பின்தங்கிய பகுதிகளிலும் கிராமப் பகுதிகளிலும் வேலை வாய்ப்பை உருவாக்குவதற்காக சிறு தொழில்களுக்கு மாநில அரசு முக்கியத் துவம் அளிக்கையில், பெருந் தொழில்களுக்கும் இவ்வரசு ஆதரவளிக்கிறது. சிறு தொழில்களின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் பெரிய, நடுத்தர தொழில்கள் அவசியமென்பதை மாநில அரசு உணர்ந்துள்ளது. எனவே, சிறு தொழில்களுடன், நடுத்தர, பெரிய தொழில்களின் வளர்ச்சியையும் நோக்க மாகக் கொண்டு மாநில அரசின் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. பெரும் தொழில்களுடன் சிறு தொழில்களும் வளர்ச்சியடையும் வகையில் பெரும் தொழில்கள் வளரவேண்டும். இந் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு இம் மாநிலம் முழுவதும் பெரும், நடுத்தர தொழில்களின் வளர்ச்சிக்காக, டிட்கோ, டான்செம், சிப்காட், டிக், எல்காட், டிஎன்பிஎல், தமிழ்நாடு உப்புக் கழகம்; டான்சி, டாமின். டான்மாக், சர்க்கரைக் கழகங்கள் போன்ற அரசு நிறு வனங்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

2. தமிழ்நாட்டை விரைவில் தொழில் மயமாக்கும் திட்டத்தின் கீழ் மற்றொரு முக்கியமான நடவடிக்கை, சென்னையில் தடையிலா வணிக மண்டலம் ஒன்றை ஏற்படுத்துவதாகும். மாநில அரசிடமிருந்து திரும்பத் திரும்ப வந்த வேண்டுகோளின்பேரில் மத்திய அரசு சென்னையில் தடையிலா வணிக மண்டலத்தை அமைக்க முடிவு செய்துள்ளது. மாநில அரசு தடை யிலா வணிக மண்டலத்தை அமைக்க தாம்பரத்திற்கு அருகே ஒரு மனை யைத் தேர்ந்தெடுத்துள்ளது. பயன்படுத்தத்தக்க 150 ஏக்கர் நிலம் அரசின் வசம் உள்ளது. இம்மனை மத்திய அரசுக்கு அளிக்கப்பட்டது. மனை தேர்ந் தெடுக்கும் மத்திய அரசின் குழு அண்மையில் இம்மனையை வந்து பார்வை யிட்டு ஒப்புதலளித்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட மனையை அடுத்து மற்று மொரு 200 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கும் மாநில அரசு நட-





வடிக்கை எடுத்துள்ளது. தடையிலா வணிக மண்டலத்திற்கு அருகில் கிடைக்கும் அரசு நிலங்கள் உட்பட இறுதியில் கிடைக்கப்பெறும் நிலம் 450 ஏக்கராகும். தடையிலா வணிக மண்டலத்தில் தொழிற்சாலைகளை அமைப் பதற்கு மாநில அரசுக்கு பல விசாரணைகள் வரப்பெற்றுள்ளன. சென்னையில் அமைக்கப்படவிருக்கும் தடையிலா வணிக மண்டலம் வெற்றிகரமாக அமையும் என்று மாநில அரசு நம்புகிறது.

3. வேளாண்மைக்கு அடுத்தபடியாக, இம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் தொழில்கள் முக்கிய இடத்தை வகிக்கிறது. 1980-81 ஆம் ஆண்டில் தயாரிப்புப் பிரிவுகள் 24 சதவீதம் வருமானத்தை அளித்துள்ளது. மாநில அரசு எடுத்த தீவிர நடவடிக்கைகளின் காரணமாக, அனைத்திந்திய அளவில் தொழில் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியோடு ஒப்பிடும்போது தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சி நல்ல நிலையிலுள்ளது. இதனை, கீழே கொடுக்கப்பட்டுள்ள தொழில் வளர்ச்சிக் குறியீட்டு எண் விவரங் களிலிருந்து காணலாம்.

தொழில் வளர்ச்சி குறியீட்டு எண்

| ஆண்டு. | இந்தியா. | | தமிழ்நாடு. | |
|---|---|---|---|---|
| | குறியீட்டு எண். | வளர்ச்சி சதவீதம். | குறியீட்டு எண். | வளர்ச்சி சதவீதம். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 978 .. | 148 | 6.8 | 164 | 14.7 |
| 1979 .. | 150 | 1.2 | 173 | 5.2 |
| 1980 .. | 151 | 0.7 | 183 | 5.4 |
| 1981 .. | 165 | 9.3 | 202 | 9.4 |
| 1982 .. | 172 | 4.2 | 230 | 12.1 |

இந்தியா முழுவதிலும் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியோடு ஒப்பிடுகையில் தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சி அதிகமாக உள்ளது என்பதை மேற் சொன்ன அட்டவணை குறிப்பிடுகிறது.

4. தொழில் வளர்ச்சியில் மற்றொரு முக்கிய அம்சம், தொழில் உரிமம் வழங்கும் கொள்கையாகும். தொழில் வளர்ச்சித் துறை தலைமை இயக்க கத்தில் விண்ணப்பங்களைப் பதிவு செய்வதற்கும், மத்திய அரசு இசைவு கடிதங்களை வழங்குவதற்கும், மாநில அரசு பரிந்துரை செய்கின்றது. இசைவுக் கடிதத்தின் நடைமுறைகளை விரைவுபடுத்துவதற்கு மாநில அரசு

இனி உருவாகும் நிலையான ஆஸ்தி இருப்பு மதிப்பில் 10 சதவீதம் அல்லது முறையாகப் பணி புரியும் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் ரூ. 20,000 வீதம் அல்லது ரூ. 10 இலட்சம், இவற்றில் எது குறைவோ அத்தொகையை உதவித் தொகையாகப் பெறத் தகுதியானதாகும். அத் தொழிற்சாலைகளாவன :—

(a) மின்னணு சாதனத் தொழிற்சாலைகள்.

(b) அட்டவணையிட்ட மருந்துகளும் மருந்துக் கலவைகளும்.

(c) மோட்டார் வண்டி உதிரி உறுப்புகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள்.

(d) சூரிய வெப்பசக்தியை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் சாதனங்கள்.

இத்திட்டம் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன் முறையாக 3—10—1981 முதல் கொண்டுவரப்பட்ட சிறப்பான திட்டமாகும்.

9. தொழிற்சாலைகளுக்கு நன்கு ஊக்கமளிக்கும் வகையில் வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ், மாநிலத்தின் பின்தங்கிய ஒன்பது மாவட்டங்களில் ஏதேனும் ஒன்றில் அமைக்கப்படவிருக்கும் நடுத்தர-பெருந் தொழிற்சாலைகளுக்கும் மறைமலை நகர் தொழிற்பேட்டைகள், செங்கற்பட்டு மாவட்டத்தில் குன்னத்தூர் வட்டாரம் ஒரு இலட்சமும் அதற்கும் மேலும் மக்கள் தொகையுடைய நகர்கள் தவிர எட்டு கிலோ மீட்டர் எல்லையோரப் பகுதியுள்ள மதுரை, திருச்சி நகர்ப்புற கூட்டுப் பகுதிகளிலும் தொடங்கப்படவிருக்கும் தொழிற்சாலைகளுக்கும் வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்கும் திட்டத்தினை மாநில அரசு செயற்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டிலிருந்து 1984 சனவரித் திங்கள் இறுதிவரை ரூ. 3.31 கோடி வழங்கப்பட்டுள்ளது. 1984-85-ல் இந்த வகையில் 3.75 கோடி வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் பகுதி I பகுதி II ஆகிய திட்டங்களின் கீழ் கடன் பெறத் தொழிற் சாலைகளின் வியாபாரத் தொகை முறையே ரூ. 15 இலட்சமும் ரூ. 50 இலட்சமும் ஆகும். இவை முறையே 50 இலட்சமாகவும் ஒரு கோடியாகவும் அரசு ஏற்கனவே உயர்த்தியுள்ளது.

10. பல்வேறு அரசுத்துறை நிறுவனங்களில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் இம்மாநிலத்தில் பெரியதோர் அமைப்பாக உயர்ந்துள்ளது. இந்தியாவிலுள்ள மாநிலத் தொழில் வளர்ச்சிக் கழகங்களிடையே தமிழ்நாடு



தொழில் வளர்ச்சிக் கழகம்தான் முக்கியமானதோர் இடத்தைப் பெற்றுள்ளது. அது ஏராளமான பெரிய-நடுத்தர தொழிற்சாலைகளைத் தொடங்கியுள்ளது. அவை அரசுத் துறையிலுள்ளன. அது தனியார் தொழில் முனைவர்களின் ஒத்துழைப்போடு, கூட்டுத்துறையில், குறிப்பாகத் தனியார் தொழில் முனைவோர்கள் சொந்தமாகத் தொழில் தொடங்க முன்வராத பின்தங்கிய பகுதிகளில் ஏராளமான தொழிற்சாலைகளைத் தொடங்கியுள்ளது. அது நலிவடைந்த சில தொழில் பிரிவுகளுக்கும் உதவியளித்துள்ளது. 1—4—1983 முதல் 31—12—1983 வரையிலான காலத்தில் 'மெட்ராஸ் ஷூபேபிரிக் லிமிடெட்', 'கண்ணன் கெமிக்கல்ஸ் அன்டு இன்டஸ்டிரிஸ் லிமிடெட்' ஆகிய இரு கூட்டுத்துறை நிறுவனங்கள் வர்த்தக அடிப்படையில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் 19 கூட்டுத்துறை தொழிற்சாலைகளைத் தொடங்கியுள்ளது. அது, இவை தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாகத் தொழிற் துறையில் பின்தங்கிய பகுதிகளில் அமையுமாறு கவனித்துக்கொள்கிறது.

11. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கிளை நிறுவனமாக நிறுவப்பட்டது. சிமெண்ட் உற்பத்தி, விற்பனை, சுண்ணாம்புப் பொருட்கள், சுண்ணாம்புக்கல், சாம்பல் கட்டி (Clinke ) ஆஸ்பெஸ்டாஸ் சிமிட்டி அட்டைகள், சிமெண்ட் உற்பத்திக்குத் தேவையான ஏனைய பொருட்கள் ஆகியவற்றை விற்பது இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாகும். இந்நிறுவனம் மூன்று தொழிற்சாலைகளை நிறுவி வருகிறது. அவை 1. ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலை, 2. அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை, 3. தமிழ்நாடு கல்நார் சிமிட்டி அட்டைகள் தொழிற்சாலை.

12. மத்திய அரசு கொள்கையின்படி தமிழ்நாட்டிலுள்ள சிமெண்ட் ஆலைகள் தங்களது மொத்த உற்பத்தியில் மூன்றில் இரண்டு பகுதியை லெவி சிமெண்டாக அரசுக்கு வழங்க வேண்டும். எஞ்சிய மூன்றில் ஒரு பகுதி சிமெண்டை எவ்வித விற்பனை வினியோகக் கட்டுப்பாடுமின்றி வெளிச் சந்தையில் இந்த ஆலைகள் விற்பனை செய்யலாம். மேலும்; இறக்குமதி செய்யும் சிமெண்ட் முழுவதும் லெவியல்லாத சிமெண்டாகக் கொள்ளவேண்டுமென்று மத்திய அரசு ஆணையிட்டது. மத்திய அரசின் 1982-83 ஆம் ஆண்டு இறக்குமதிக் கொள்கையின்படி கொரியாவிலிருந்து சிமெண்ட் இறக்குமதி செய்ய தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்திற்கு அனுமதியளிக்கப்பட்டது. மத்திய அரசின் 1983-84 ஆம் ஆண்டு இறக்குமதிக் கொள்கையின்படி அரசு வாணிபக் கழகம் மட்டுமே சிமெண்ட் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

13. தமிழ்நாடு கனிம நிறுவனம்.—சிவகங்கையில் கிடைக்கும் கிராபைட்டைப் பயன்படுத்தும் தொழிற்சாலையை ரூ. 1.50 கோடி மதிப்பீட்டுச் செலவில் தொடங்க அரசு அனுமதி வழங்கியதோடு பங்கு மூலதனமாக ரூ. 20 இலட்சம் கொடுத்துள்ளது. கருங்கற்களை அறுத்து, மெருகேற்றுவதற்கான மற்றொரு திட்டத்திற்கு ரூ. 3.85 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் அரசின் பங்கு மூலதனம் ரூ. 30 இலட்சமாகும். இத்திட்டப் பணி 1984-85 ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

14. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்.—தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம், மொத்தம் ரூ. 80 கோடி செலவில் நிறைவேற்றும் வகையில் ஒரு திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. முதற்கண் ரூ. 7.65 கோடி செலவில் மாக்னசைட் தாதுப் பொருளை கரிந்த மாக்னசைட் தாதுப் பொருளாக மாற்றுவதற்கு சுழல் சூளை ஒன்றை நிறுவக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டப் பணி 1985 ஆம் ஆண்டு தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டாம் கட்டப் பணியாக, வெட்டி எடுக்கப்பட்ட தாதுப் பொருளிலிருந்து அதிக அளவில் மாக்னசைட் எடுப்பதற்கு வகை செய்யும் பொருட்டு, மேக்னசைட் தாதுப் பொருளைச் சுத்திகரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ரூ. 26.5 கோடி செலவில் 1987-ல் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. மேற்சொன்ன திட்டப் பணிகளுக்குத் தேவைப்படும் பங்கு மூலதனத்திற்கு அனுமதி வழங்கப்படும். மூன்றாம் கட்டப் பணியாக நவீன உருக்கு ஆலைகளில் பயன்படுத்துவதற்காக ரூ. 45 கோடி மதிப்பீட்டுச் செலவில், உயர்ந்தரக வெப்பந்தாங்கிக் கற்களை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவக் கருதப்பட்டுள்ளது.

15. தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம்.—இம்மாநிலத்தில் மின்னணுவியல் தொழிலுக்கு நல்ல எதிர்காலம் இருப்பதை கருத்தில் கொண்டு மின்னணுவியல் தொழிலை தமிழ்நாட்டில் மேன்மேலும் வளர்ச்சி அடையச் செய்வதற்காக, தமிழ்நாடு மாநில அரசு தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. மின்னணுக் கழகத்தின் நிருவாக அமைப்பு முறை புத்துயிரளிக்கப்பட்டுள்ளது. இக் கழகம் ஏற்கனவே இரு பொதுத் துறை திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. மேலும், இந் நிறுவனத்திடம், இந்திய அரசின் முன்னனுமதிக் கடிதங்கள் பல உள்ளன. கூட்டுத் துறையில் பல திட்டப் பணிகளைச் செயல்படுத்த அவர்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். கூட்டுத் துறையில் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவது தொடர்பாக மின்னணுவியல் கழகத்தின் இரு செயற் குறிப்புகளுக்கு அரசு, அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது.



16. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்.—தற்போது சர்க்கரை ஆலைகளில் எரித்துவிடப்படும் கரும்புச் சக்கைகளை முக்கிய மூலப் பொருளாகப் பயன்படுத்தி செய்தித்தாள், அச்சுத்தாள், எழுதும்தாள் ஆகியவற்றை தயாரிக்கும் நோக்கத்தோடு, தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் நிறுவப்பட்டது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வரும் செய்தித்தாள் காகிதத்திற்கு கொடுக்கப்படும் அந்நியச் செலாவணித் தொகையில் ஆண்டுதோறும் ரூ. 40 கோடி அளவிற்கு இந்நிறுவனத்தில் செய்தித்தாள் காகிதம் தயாரிக்கப்படுவதால் மிச்சம் ஏற்படும், தற்போதுள்ள தேவை சரிக்கட்டப்படுவது தவிர, செய்தித்தாள் காகிதத்தின் தேவை ஆண்டுதோறும் 8 சதவீதம் அதிகரித்து வருகிறது. இக்காகித ஆலை, 1984 ஆம் ஆண்டு மே-ஜூன் திங்களில் சோதனை முறையில் காகித உற்பத்தியைத் தொடங்கிவிடும் என்றும், 1984 ஆம் ஆண்டு செப்டம்பர்-அக்டோபர் திங்களில் முழு அளவில் செயல்படுத்தத் தொடங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

17. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.—தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், மாநில அளவில் உள்ள நிதி நிறுவனங்களில் முதன்மையான தொன்றாகும். வளர்ச்சியைத் தீவிரமாக அதிகரிக்கும் நோக்கத்துடன் நிதியுதவி வழங்குவதே இந்நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோளாகும். காலந்தாழ்த்தி தொகை வழங்குவதற்கான உத்தரவாதம், பங்கு மூலதன நிதி உதவி அளிப்பதுடன், கட்டிடங்கள், தளவாடங்கள், இயந்திரங்கள், சாதனங்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்கும் இந்நிறுவனம் கடன் உதவி வழங்குகிறது. இதுவரை, தகுதிவாய்ந்த தொழில் முனைவர்களுக்கு, மாநில, மத்திய அரசுகள் உதவித் தொகை வழங்கிய பிறகுதான், அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது, இதனால் காலதாமதம் ஏற்பட்டு வந்தது. இதற்கிடைப்பட்ட காலத்தில் தொழில் முனைவர்களுக்கு இணைப்புக் கடன் வழங்கப்பட்டது. இத்தொகைக்கு அவர்கள் வட்டி செலுத்தும்படி இருந்தது. மாநில அளவு முழு உதவித் தொகை வழங்குவதற்கு அனுமதி அளித்தவுடன் இந்நிறுவனம் தன்னுடைய சொந்த நிதியிலிருந்து தொழில் முனைவர்களுக்கு நேரடியாகத் தொகை வழங்குவதற்கான புதிய முறையை அண்மையில் பின்பற்றத் தொடங்கியுள்ளது. இந்த உதவித் தொகைக்கு வட்டியில்லை; இதற்கான செலவினை நிறுவனமே ஏற்கிறது. சிறு முதலீட்டுடன் தொழில்கள் ஆரம்பிக்கும் முனைவர்கள், சிறுதொழில் முனைவர்கள் ஆகியோருக்கு மூலதனம் பெறுவதில், கடன் பெறுவதில் ஏற்படும் விலைமதிப்பீடு மேலும் காலதாமதம் ஆகிய இடர்ப்பாடுகள் ஏற்படாமல் தடுக்கப்படுகிறது.

13. தமிழ்நாடு கனிம நிறுவனம்.—சிவகங்கையில் கிடைக்கும் கிராபைட்டைப் பயன்படுத்தும் தொழிற்சாலையை ரூ. 1.50 கோடி மதிப்பீட்டுச் செலவில் தொடங்க அரசு அனுமதி வழங்கியதோடு பங்கு மூலதனமாக ரூ. 20 இலட்சம் கொடுத்துள்ளது. கருங்கற்களை அறுத்து, மெருகேற்றுவதற்கான மற்றொரு திட்டத்திற்கு ரூ. 3.85 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் அரசின் பங்கு மூலதனம் ரூ. 30 இலட்சமாகும். இத்திட்டப் பணி 1984-85 ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

14. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்.—தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம், மொத்தம் ரூ. 80 கோடி செலவில் நிறைவேற்றும் வகையில் ஒரு திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. முதற்கண் ரூ. 7.65 கோடி செலவில் மாக்னசைட் தாதுப் பொருளை கரிந்த மாக்னசைட் தாதுப் பொருளாக மாற்றுவதற்கு சுழல் சூளை ஒன்றை நிறுவக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டப் பணி 1985 ஆம் ஆண்டு தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டாம் கட்டப் பணியாக, வெட்டி எடுக்கப்பட்ட தாதுப் பொருளிலிருந்து அதிக அளவில் மாக்னசைட் எடுப்பதற்கு வகை செய்யும் பொருட்டு, மேக்னசைட் தாதுப் பொருளைச் சுத்திகரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ரூ. 26.5 கோடி செலவில் 1987-ல் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. மேற்சொன்ன திட்டப் பணிகளுக்குத் தேவைப்படும் பங்கு மூலதனத்திற்கு அனுமதி வழங்கப்படும். மூன்றாம் கட்டப் பணியாக நவீன உருக்கு ஆலைகளில் பயன்படுத்துவதற்காக ரூ. 45 கோடி மதிப்பீட்டுச் செலவில், உயர்ந்தரக வெப்பந்தாங்கிக் கற்களை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவக் கருதப்பட்டுள்ளது.

15. தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம்.—இம்மாநிலத்தில் மின்னணுவியல் தொழிலுக்கு நல்ல எதிர்காலம் இருப்பதை கருத்தில் கொண்டு மின்னணுவியல் தொழிலை தமிழ்நாட்டில் மேன்மேலும் வளர்ச்சி அடையச் செய்வதற்காக, தமிழ்நாடு மாநில அரசு தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. மின்னணுக் கழகத்தின் நிருவாக அமைப்பு முறை புத்துயிரளிக்கப்பட்டுள்ளது. இக் கழகம் ஏற்கெனவே இரு பொதுத் துறை திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. மேலும், இந் நிறுவனத்திடம், இந்திய அரசின் முன்னனுமதிக் கடிதங்கள் பல உள்ளன. கூட்டுத் துறையில் பல திட்டப் பணிகளைச் செயல்படுத்த அவர்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். கூட்டுத் துறையில் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவது தொடர்பாக மின்னணுவியல் கழகத்தின் இரு செயற் குறிப்புகளுக்கு அரசு, அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது.



16. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்.—தற்போது சர்க்கரை ஆலைகளில் எரித்துவிடப்படும் கரும்புச் சக்கைகளை முக்கிய மூலப் பொருளாகப் பயன்படுத்தி செய்தித்தாள், அச்சுத்தாள், எழுதும்தாள் ஆகியவற்றை தயாரிக்கும் நோக்கத்தோடு, தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் நிறுவப்பட்டது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வரும் செய்தித்தாள் காகிதத்திற்கு கொடுக்கப்படும் அந்நியச் செலாவணித் தொகையில் ஆண்டுதோறும் ரூ. 40 கோடி அளவிற்கு இந்நிறுவனத்தில் செய்தித்தாள் காகிதம் தயாரிக்கப்படுவதால் மிச்சம் ஏற்படும். தற்போதுள்ள தேவை சரிக்கட்டப்படுவது தவிர, செய்தித்தாள் காகிதத்தின் தேவை ஆண்டுதோறும் 8 சதவீதம் அதிகரித்து வருகிறது. இக்காகித ஆலை, 1984 ஆம் ஆண்டு மே-ஜூன் திங்களில் சோதனை முறையில் காகித உற்பத்தியைத் தொடங்கிவிடும் என்றும், 1984 ஆம் ஆண்டு செப்டம்பர்-அக்டோபர் திங்களில் முழு அளவில் செயல்படுத்தத் தொடங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

17. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.—தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், மாநில அளவில் உள்ள நிதி நிறுவனங்களில் முதன்மையான தொன்றாகும். வளர்ச்சியைத் தீவிரமாக அதிகரிக்கும் நோக்கத்துடன் நிதியுதவி வழங்குவதே இந்நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோளாகும். காலந்தாழ்த்தி தொகை வழங்குவதற்கான உத்தரவாதம், பங்கு மூலதன நிதி உதவி அளிப்பதுடன், கட்டிடங்கள், தளவாடங்கள், இயந்திரங்கள், சாதனங்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்கும் இந்நிறுவனம் கடன் உதவி வழங்குகிறது. இதுவரை, தகுதிவாய்ந்த தொழில் முனைவர்களுக்கு, மாநில, மத்திய அரசுகள் உதவித் தொகை வழங்கிய பிறகுதான், அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது, இதனால் காலதாமதம் ஏற்பட்டு வந்தது. இதற்கிடைப்பட்ட காலத்தில் தொழில் முனைவர்களுக்கு இணைப்புக் கடன் வழங்கப்பட்டது. இத்தொகைக்கு அவர்கள் வட்டி செலுத்தும்படி இருந்தது. மாநில அளவு முழு உதவித் தொகை வழங்குவதற்கு அனுமதி அளித்தவுடன் இந்நிறுவனம் தன்னுடைய சொந்த நிதியிலிருந்து தொழில் முனைவர்களுக்கு நேரடியாகத் தொகை வழங்குவதற்கான புதிய முறையை அண்மையில் பின்பற்றத் தொடங்கியுள்ளது. இந்த உதவித் தொகைக்கு வட்டியில்லை; இதற்கான செலவினை நிறுவனமே ஏற்கிறது. சிறு முதலீட்டுடன் தொழில்கள் ஆரம்பிக்கும் முனைவர்கள், சிறுதொழில் முனைவர்கள் ஆகியோருக்கு மூலதனம் பெறுவதில், கடன் பெறுவதில் ஏற்படும் விலைமதிப்பீடு மேலும் காலதாமதம் ஆகிய இடர்ப்பாடுகள் ஏற்படாமல் தடுக்கப்படுகிறது.

18. தொழில் நுட்பம் அறிந்தவர்கள், கல்வி அறிவுள்ளவர்கள் அல்லது ஏனைய தகுதி உள்ளவர்கள் அல்லது போதிய முன்னனுபவம் உடையவர்கள் ஆகியோர் முதல் முறையாகத் தொழில் தொடங்கினால் அவர்களுக்குக் குறைந்த வட்டியுடன் கடன் வழங்கும் திட்டத்தின் விதிகள் தளர்த்தப் பட்டுள்ளன; அவ்வாறு அவர்கள், தொடங்கும் தொழில்கள், பின்தங்கிய பகுதி யில்லாத இடத்தில் இருந்தால் அவர்களுக்கு வழங்கும் கடன் தொகையின் உயர் வரம்பு மீதான 10 சதவீதக் கட்டுப்பாடும் பின்தங்கிய பகுதியில் அமைத் திருந்தால் 15 சதவீதக் கட்டுப்பாடும் விலக்கப்படுகிறது.

19. மத்திய அரசின் முதலீடு.—கடந்த 10 ஆண்டுகளாகத் தமிழ் நாட்டிற்கு வழங்கப்பட்டு வரும் மத்தியத் துறையின் முதலீட்டுத் தொகை மிகவும் குறை வாக உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் மத்தியத் துறை தமிழ்நாடு மாநிலத் தின் முதலீடு செய்துள்ள தொகையின் அளவு 8 சதவீதத்திலிருந்து 4 சத வீதமாகக் குறைந்துள்ளது. முதலீட்டுத்தொகை வழங்குவதில் ஏற்றத் தாழ்வு காண்பிக்கக்கூடாது என்றும் தமிழ்நாட்டிற்கும் உரிய தொகையை வழங்கவேண்டுமென்றும் மாநில அரசு மத்திய அரசிடம் வேண்டுகோள் விடுத் துள்ளது. திரைப்படத் தயாரிப்பு வண்ணப்படச் சுருள் திட்டம் தவிர உதகமண்டலத்திலேயே இரு திட்டப் பணிகளை இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் மேனுபேக்சரிங் கம்பெனி லிமிடெட் மூலம் ஏற்படுத்த வேண்டு மென்று அதாவது எக்ஸ்ரே-கதிர் படச்சுருள் மேலும் மின்காந்த நாடா தயா ரிப்புப் (Magnetic tape project) பிரிவுகளை ஏற்படுத்த வேண்டுமென்று இந்திய அரசை, தமிழ்நாடு அரசு வலியுறுத்தி வருகிறது. மேலும் ஆவடி யிலுள்ள கனரக வண்டிகள் தயாரிப்புத் தொழிற்சாலையில் (Heavy Vehicles Factory) நவீனயுத்த டாங்கிகள் தயாரிக்கும் வகையில் ஏற்படுத்தக் கருதியுள்ள விரிவாகத் திட்டத்தைத் திருவள்ளூர் வட்டத்திலேயே நிறுவ வேண்டும் என்று இந்திய அரசை, மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. ரூ. 600 கோடி மூலதனத்துடன் சென்னை இரசாயன உர நிறுவனத்தின் விரிவாக்கத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று மாநில அரசு வற்புறுத்தி வருகிறது.



## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழக அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) பொதுத்துறையில் ஆலங்குளத்தில் சிமிண்டு ஆலையையும், அரக் கோணத்தில் எஃகுத் தொழிற்சாலையையும் செயலாக்கும் நோக்கத்துடன் 1965-ல் நிறுவப்பட்டது. மைய அரசின் கூட்டுத்துறைக் கொள்கை காரண மாக தனியார் தொழில் முனைவர்களின் ஒத்துழைப்புடன் குறிப்பாக தனி யார் தொழில் முனைவர்கள் சொந்தமாக தொழில் தொடங்க முன்வராத பின்தங்கிய பகுதிகளில் பெருந் தொழில்களை கூட்டுத் துறையில் நிறுவ இதன் பணி விரிவாக்கப்பட்டது. மூலதனத்தில் பங்கேற்பதன் மூலம் தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் கூட்டுத்துறைத் திட்டங்களுக்கு கீழ்க் கண்டவாறு நிதி உதவி அளிக்கிறது.

| விவரம். | டிட்கோவின் மூலதனப் பங்கேற்பு. |
|---|---|
| ரூ. 100 லட்சத்திற்கு மேல் செலவாகும் திட்டங்கள். | மூலதனப் பங்குகளில் 26 விழுக்காடு. |
| ரூ. 50 இலட்சமும் அதற்கு மேலும், ஆனால் ரூ. 100 இலட்சத்திற்குக் குறைந்த திட்டச் செலவு கொண்ட திட்டங்கள். | மூலதனப் பங்குகளில் 15 விழுக்காடு. |

தனியார் தொழில் முனைவர்களிடமிருந்து மூலதனப் பங்கில் 25 விழுக்காடும், எஞ்சிய மூலதனப் பங்கு பொதுமக்களிடம் இருந்தும் பெறப் படுகிறது. நிதி நிறுவனங்களிடமிருந்தும், வங்கிகளிடமிருந்தும் தவணைக் கடன்கள் பெறப்படுகின்றன.

2. கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் பல திறப்பட்ட தொழில்களை மேற்கொண்டுள்ளது. பொதுத்துறையில் புதுத் திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது. தனியார் தொழில் முனைவர்களின் ஒத்துழைப்புடன் கூட்டுத் துறைத் திட்டங்களையும் நிறுவியுள்ளது. மேலும் இடர்பாட்டில் உள்ள சில நலிந்த தொழிற் பிரிவுகளுக்கும் உதவியுள்ளது.

3. 31—3—1983 அன்றுள்ளபடி (a) உற்பத்தியில் உள்ள (b) நிறை வேற்றப்பட்டு வருகின்ற தொழில் திட்டங்கள் குறித்த விவரம் பின் வரும் விவர அறிக்கையில் காணலாம் :—

| விவரம். (1) | திட்டங்களின் எண்ணிக்கை. (2) | திட்டச் செலவு. (3) (ரூபாய் கோடியில்.) | வேலை வாய்ப்பு. (4) |
|---|---|---|---|
| பொதுத்துறை : | | | |
| உற்பத்தியில் உள்ள திட்டங்கள். | 5 | 57.12 | 3,702 |
| நிறைவேற்றப்பட்டு வருகின்ற திட்டங்கள். | 4 | 43.30 | 1,090 |
| கூட்டுத் துறை : | | | |
| உற்பத்தியில் உள்ள திட்டங்கள். | 20 | 224.57 | 6,08 |
| நிறைவேற்றப்பட்டு வருகின்ற திட்டங்கள். | 8 | 57.66 | 2,773 |
| மொத்தம் .. | 37 | 382.65 | 13.654 |

4. 1—4—1983 முதல் 31—12—1983 வரையில் கீழ்க்கண்ட இரண்டு கூட்டுத்துறை திட்டங்கள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன :—

(அ) மெட்ராஸ் ஷூ ஃபேப்ரிக்ஸ் லிமிடெட் :

இத்திட்டம் அமெரிக்கா நாட்டு திருவாளர்கள் எச். எச். பிரௌன் ஷூ
நிறுவனத்தின் உடனுழைப்புடன் 100 விழுக்காடு ஏற்றுமதிக்காக தொழிற்
சாலைகளில் பயன்படுத்தப்படும் ஷூக்களை (Industrial Shoes) தயாரிப்
பதற்கானதாகும். இது ஆண்டிற்கு ஆறு இலட்சம் ஜோடி ஷூக்களை
தயாரிப்பதற்கான நிறுவு திறன் கொண்டது. இத்திட்டத்திற்கான செலவு
ரூ. 106 இலட்சமாகும். இத்திட்டம் 300 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்
துள்ளது. இத் தொழிற்சாலை 1983 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் உற்பத்
தியைத் தொடங்கியது. கணிசமான அளவு ஷூக்களை ஏற்கனவே ஏற்றுமதி
செய்துள்ளது.





(ஆ) கமர் கெமிக்கல்ஸ் அண்டு இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் :

இந்தத் தொழிற்சாலை கந்தக அமிலத்தையும் ஒளியத்தையும் தயாரிக்கிறது. இதன் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 33,000 டன் கந்தக அமிலமும், 6,600 டன் ஒளியமும் ஆகும். இத்திட்டத்திற்கான செலவு ரூ. 216 இலட்சம். இத்திட்டத்தினல் 61 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். இத்திட்டம் கடந்த அக்டோபர் திங்களில் அதன் வணிக அளவிலான உற்பத்தியைத் தொடங்கியது.

5. மேற்சொன்ன இரண்டு நிறுவனங்களைத் தவிர ஃபைபர் பைப்ஸ் (இந்தியா) லிமிடெட் நிறுவனம் அதன் வணிக அளவிலான உற்பத்தியை 1984 மார்ச் திங்களில் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது பிட்ச் ஃபைபர் குழாய்கள் (Pitch fibre pipes) தயாரிப்பதற்கான திட்டமாகும். இதன் நிறுவுத்திறன் ஆண்டொன்றுக்கு 6,220 டன்கள் ஆகும். இதன் திட்டச் செலவு ரூ. 180 இலட்சமாகும். இதன் மூலம் 300 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.

6. 1984-85 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட தொழிற் பிரிவுகள் வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளன :—

| விவரம். (1) | மூலதனச் செலவு (2) (ரூபாய் கோடியில்.) | வேலை வாய்ப்பு. (3) |
|---|---|---|
| பொதுத்துறை : | | |
| (அ) ரீரோலிங் மில் திட்டம் .. | 7.82 | 131 |
| (ஆ) தமிழ்நாடு தொழிலியல் வெடி மருந்து நிறுவனம். | 20.85 | 542 |
| (இ) மக்னீசியம் மெட்டல் திட்டம | 5.18 | 1:0 |
| (ஈ) அஸ்பெஸ்டாஸ் அழுத்த குழாய்த் திட்டம் (தமிழ்நாடு சிமெண்டு நிறுவனத்தினுடையது.) | 9.45 | 307 |
| கூட்டுத்துறை : | | |
| (அ) ஃபேப்லின் லிமிடெட் .. | 1.34 | 410 |
| (ஆ) கோட் ஸ்கின் திட்டம் (Goat Skin) | 1.60 | 150 |
| (இ) தமிழ்நாடு ப்ளோரின் அண்டு அலைடு கெமிக்கல்ஸ் லிமிடெட். | 16.95 | 307 |
| மொத்தம் .. | 63.19 | 1,957 |

7. உற்பத்தி செய்யும் நிலையிலும் செயற்படுத்தப்படும் நிலையிலும் உள்ள 37 திட்டங்களில் 19 திட்டங்கள் இம்மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் தொடங்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அதிலும் குறிப்பாக பின்தங்கிய பகுதிகளில் தொழிற்சாலைகள் தொடங்கப்பட வேண்டும் என்பதில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் கவனம் செலுத்துகிறது. இவைகளைத் தவிர 17 திட்டங்கள் ஆய்வில் உள்ளன. இத்திட்டங்கள் திட்டமிடுதல், சாத்தியக் கூறு அறிக்கை தயாரித்தல், உரிமம் பெறுதல், அல்லது டி.ஜி.டி.டி. பதிவு பெறுதல் போன்ற பல்வேறு நிலைகளில் உள்ளன. இவ்வாறாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், இம்மாநிலத்தில் நடுத்தர, பெருந்தொழில் முன்னேற்றத்தில் முக்கிய பங்காற்றி இந்நாட்டிலுள்ள மாநில அளவிலான தொழில் வளர்ச்சி நிறுவனங்களிடையே சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

8. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் உற்பத்தியில் உள்ள தொழில் திட்டங்கள் வாயிலாக இது வரை சுமார் 10,000 பேருக்கு வேலை வாய்ப்புகள் அளித்துள்ளது. செயற்படுத்தும் நிலையிலும் பரிசீலனையிலுள்ள திட்டங்கள் உற்பத்தியைத் தொடங்கும்போது மேலும் 9,000 பேருக்கு வேலை வாய்ப்பினை அளிக்கும். இவ்வாறாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் முன்னணியில் நிற்பதுடன் தமிழ்நாட்டில் நிலவும் வேலை இல்லாத திண்டாட்டத்தை ஓரளவுக்குக் குறைக்கவும் உதவுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்.

1. பொது—

1. 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் தேதி தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் (டான்செம்) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) கிளை நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது.

1. 2. அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமாக ரூ. 10 கோடியுடன் துவங்கப்பட்ட இந்நிறுவனத்தின் பங்கு மூலதனம் 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் ரூ. 11 கோடிக்கு உயர்த்தப்பட்டது. மேலும் இது 1980 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் ரூ. 12.5 கோடிக்கு உயர்த்தப்பட்டது. இது வரை இந்த பங்கு மூலதனத்தில் ரூ. 11.81 கோடி மூலதனமாக செலுத்தப்பட்டு விட்டது



1.3. தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் அதன் வாணிபத்தை, 1—4—1976 முதல் செயல் படுத்தத் தொடங்கியது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் சிமிண்டை தயாரித்தல், அதனை விற்பனை செய்தல் மற்றும் சுண்ணாம்பு, சுண்ணாம்புக்கல், கிளிஞ்சல், சிமிண்டு ஆஸ்பெஸ்டாஸ் மற்றும் சிமிண்டு தயாரிப்புக்குத் தேவையான மற்ற அது சம்பந்தப்பட்ட பொருள்களில் ஈடுபட்டு வருதலுமாகும். இந்நிறுவனம் அதன் கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

2. தற்போது பின்வரும் மூன்று ஆலைகள் தமிழ்நாடு சிமிண்டு நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றன :—

| சிமிண்டு ஆலைகள். | உற்பத்திப் பொருள். | ஆண்டொன்றுக்கு நிறுவிய திறன். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (இலட்சம் மெட்ரிக் டன்.) |
| (அ) ஆலங்குளம் சிமிண்டு தொழிற்சாலை. | சிமிண்டு | 4 |
| (ஆ) அரியலூர் சிமிண்டு தொழிற்சாலை. | சிமிண்டு. | 5 |
| (இ) ஆஸ்பெஸ்டாஸ் ஆலை : | | |
| தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் | ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் மற்றும் துணைப் பொருட்கள். | 36.000 |

2.1. ஆண்டொன்றுக்கு 36,000 டன் உற்பத்தித் திறன் கொண்ட ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய் திட்டத்தை திருச்சி மாவட்டம், மாயனூரில் தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் நிறுவி வருகிறது.

2.2. தமிழ் நாடு சிமிண்டு நிறுவனம் ஆண்டுக்கு 5 இலட்சம் டன் உற்பத்தித்திறனிலிருந்து ஆண்டுக்கு 10 இலட்சம் டன் உற்பத்தித்திறனுக்கு அரியலூர் சிமிண்டு ஆலையை விரிவாக்கம் செய்யும் திட்டத்தை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது.

### 3. ஆலங்குளம் சிமிண்டு தொழிற்சாலை.

3. 1. ஆலங்குளம் சிமிண்டு தொழிற்சாலை 1964 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்தொழிற் பிரிவு 1970 ஆம் ஆண்டு வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்கியது. இதன் நிறுவுதிறன் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன். தமிழ் நாடு சிமிண்டு நிறுவனம் இந்த ஆலையை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து 1—4—1976 அன்று ரூ. 666 இலட்சம் நிகர கணக்கு மதிப்புக்கு எடுத்துக் கொண்டது. இப்போது இந்த ஆலை தனது 14 ஆண்டு பணியை நிறைவு செய்துள்ளது.

3. 2. நடை முறையில் செயல் படுத்தப்பட்டதிலிருந்து பல்வேறு காரணங்களால் ஆலங்குளம் சிமிண்டு ஆலை திட்டமிட்டபடி அதன் உற்பத்தித் திறனை எய்த முடியவில்லை. 27—2—1982 வரை மைய அரசால் நிர்ணயிக்கப்பட்ட இருத்தி வைப்பு விலையும் போதுமானதாக இல்லை. இதன் விளைவாக ஆரம்ப இரண்டு ஆண்டுகளில் ஈட்டிய சொற்ப இலாபத்தைத் தவிர இத்தொழிற்சாலை தொடர்ந்து 1981-82 வரை நட்டத்தில் இயங்கி வந்துள்ளது.

3. 3. இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | ஆண்டின் போது உற்பத்தி. | ஆண்டின் போது விற்பனை. |
|---|---|---|
| | (மெட்ரிக் டன்களில்.) | |
| 1976-77 .. .. .. | 3,38,445 | 3,33,294 |
| 1977-78 .. .. .. | 3,09,105 | 3,07,607 |
| 1978-79 .. .. .. | 3,19,277 | 3,20,379 |
| 1979-80 .. .. .. | 2,74,400 | 2,77,655 |
| 1980-81 .. .. .. | 3,01,148 | 3,06,614 |
| 1981-82 .. .. .. | 2,93,515 | 2,93,399 |
| 1982-83 .. .. .. | 2,80,760 | 2,83,508 |



3. 4. தேசிய அளவிலான நிலக்கரிப் பற்றாக்குறை, மின் சக்தியின் மீதான உயர்ந்த பட்சத் தேவையின்ன தடை, உயர் மின்சக்தி நுகர்வோர் களின் மீது கொண்டு வரப்பட்ட மின்வெட்டு இரயில் பெட்டியின் பற்றாக்குறை ஆகியவையே இத் தொழிற் சாலையின் குறைந்த உற்பத்திக்குப் பெரும் புறக் கட்டுப்பாடுகளாக இருந்தன.

3. 5. நட்டத்தையே எய்தி வந்த ஆலங்குளம் சிமிண்டு ஆலை, அதை மாற்றி, 1982-83 ஆம் ஆண்டில் இலாபத்தை ஈட்டத் தொடங்கிவிட்டது. அண்மையில் ஆலையின் மேம்பாட்டு மற்றும் நவீனப்படுத்தும் திட்டம் ரூபாய் 425 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இது ஆலையின் உற்பத்தியை அதிகரிக்கவும் ஆலைப் பகுதியில் காற்று அசுத்தமாவதைக் குறைக்கவும் உதவும்.

3.6. இந்தத் தொழிற்பிரிவு பின் தங்கிய பகுதியில் சும[illegible] பேருக்கு நேரடி வேலை வாய்ப்பிற்கு வகை செய்வதுடன் [illegible] பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகள் முதலியவற்றை ஏற்றிச் செல்வதற்கான சார்பு வேலை வாய்ப்பிற்கும் கணிசமான அளவில் வகை செய்துகொண்டிருக்கிறது.

### 4. அரியலூர் சிமிண்டு தொழிற்சாலை.

4.1. அரியலூர் சிமிண்டு ஆலை உலர்முறை தயாரிப்பு ஆலையாகும். இதன் நிறுவுத்திறன் ஆண்டுக்கு 5 இலட்சம் டன். இத்திட்டம் ஆரம்பத்தில் ரூபாய் 2,876 இலட்சம் செலவில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் துவங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடம் இருந்து பங்கு மூலதனமாக ரூபாய் 575 இலட்சமும் அனைத்து இந்திய நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவியாக ரூபாய் 1,800 இலட்சமும் மற்றும் வணிக வங்கிகளிடமிருந்து ரூபாய் 501 இலட்சமும் பெறப்பட்டுள்ளது.

4.2. திட்டப்பணிகள் அரியலூரில் 1977 ஆம் ஆண்டு சனவரியில் துவங்கப்பட்டது. சிமண்டு உற்பத்தி 1—8—1979-ல் தொடங்கப்பட்டது. அரியலூர் சிமண்டு ஆலை கால்கோள் செய்யப்பட்ட குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டது மட்டுமல்லாமல் உற்பத்தியை 30 மாதங்களுக்குள் தொடங்கியது.

4.3. இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. (1) | ஆண்டின் போது உற்பத்தி. (2) | ஆண்டின் போது விற்பனை. (3) |
|---|---|---|
| | (மெட்ரிக் டன்களில்.) | |
| 19[illegible]-80 (8 மாதங்களுக்கு) .. | 1,15,919 | 1,15,525 |
| .. .. .. | 2,46,733 | 2,41,949 |
| 1982-83 .. .. .. | 2,84,350 | 2,87,474 |
| .. .. .. | 2,47,300 | 2,47,836 |

4.4. ஆரம்ப காலத்தில் இந்த ஆலை இயங்கத் தொடங்கியபோது, நிலக்கரி பற்றாக்குறை, மின்சக்தியைப் பயன்படுத்துவதிலான தடைகள், இரயில் பெட்டிகள் பற்றாக்குறை ஆகிய புறக்கட்டுப்பாடுகளுடன் இயந்திரக் கோளாறுகளையும் சமாளிக்க வேண்டியதாயிற்று. இயந்திரங்களிலுள்ள கோளாறுகள் ஏறத்தாழ சரி செய்யப்பட்டு விட்டன. ஆலைக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகளைத் தவிர்ப்பதற்கு தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.5. மேற்சொன்ன காரணங்களின் நிமித்தம் குறைந்த உற்பத்தித் திறன் பயன்பட்டால் இந்தத் தொழிற் பிரிவு நட்டத்தை அடைந்து வருகிறது. 1984-85 ஆம் ஆண்டில் 4.5 இலட்சம் டன் சிமெண்டு உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது.

4.6. இந்த ஆலை சுமார் 900 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பிற்கு வகை செய்வதுடன் கச்சாப் பொருள்கள், உற்பத்தி செய்யப்பட்ட சாக்குகள் முதலியவற்றை ஏற்றிச் செல்வதற்கான சார்பு வேலை வாய்ப்பிற்கும் கணிசமான அளவில் வகை செய்து உள்ளது.



## 5. தமிழ்நாடு ஆல்பெஸ்டாஸ்.

5.1. பல்வகைப்படுத்தும் திட்டத்தின் முதற்படியாக தமிழ் நாடு சிமெண்டு நிறுவனம் ஆண்டொன்றுக்கு 36,000 டன் ஆல்பெஸ்டாஸ் சிமெண்டு தகடுகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட திட்டத்தை ஆலங்குளத்தில், அனைத்திந்திய நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற நிதி உதவியுடன் ரூபாய் 250 இலட்சம் செலவில் நிறுவியுள்ளது. இந்தத் தொழிற் பிரிவு அதன் வணிக அளவிலான உற்பத்தியை 1—10—1981-ல் தொடங்கியது.

5. 2. இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. (1) | ஆண்டின் போது உற்பத்தி. (2) | ஆண்டின் போது விற்பனை. (3) |
|---|---|---|
| | (மெட்ரிக் டன்களில்) | |
| 1981-82 (6 மாதங்களுக்கு) .. | 8,251 | [illegible],067 |
| 1982-83 .. .. .. | 19,091 | 19,867 |

5. 3. மின்வெட்டால் இந்த ஆலையின் உற்பத்தியும் பாதிக்கப்பட்டது. இத்தொழிற் பிரிவு 1983-84 ஆம் ஆண்டில் 18,760 மெட்ரிக் டன் மற்றும் 1984-85 ஆம் ஆண்டில் 27,000 மெட்ரிக் டன் ஆல்பெஸ்டாஸ் தகடுகளையும் துணைப் பொருள்களையும் உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. செயல்படத் தொடங்கிய இரண்டாம் ஆண்டிலிருந்து இந்த ஆலை இலாபத்தை ஈட்டத் தொடங்கியுள்ளது.

5.4. இந்தத் தொழிற் பிரிவு சுமார் 250 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பிற்கு வகை செய்வதுடன் கச்சாப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்ட சாக்குகள் முதலியவற்றை ஏற்றிச் செல்வதற்கான சார்பு வேலை வாய்ப்பிற்கும் கணிசமான அளவில் வகை செய்துள்ளது.

## 6. தமிழ் நாடு ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய் திட்டம்.

6.1. ஆஸ்பெஸ்டாஸ் சிமிண்டு ஷீட் திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்தியதன் மூலம் ஊக்கம் அளிக்கப்பட்டு ஆண்டொன்றுக்கு 36,000 டன் உற்பத்தித் திறனுள்ள ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய் திட்டத்தை தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் நிறுவி வருகிறது. இதன் திட்டச் செலவு ரூ. 945 இலட்சமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் அனைத்திந்திய நிதி நிறுவனங்களும் இத்திட்டத்திற்கு நிதி உதவி அளித்துள்ளன.

6. 2. திட்டப் பணிகள் முன்னேற்றமடைந்து 1984 செப்டம்பர் திங்களில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொழிற் பிரிவு வணிக அளவிலான உற்பத்தியை 1984 அக்டோபர் திங்களில் தொடங்கும். இத்திட்டம் செயல் படுத்தப்படும்போது சுமார் 300 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பிற்கு வகை செய்வதுடன் கணிசமான அளவு சார்பு வேலை வாய்ப்பிற்கும் வகை செய்யும்.

## 7. இறக்குமதி செய்யப்பட்ட சிமிண்டைக் கையாளுதல்.

7. 1. கடந்த 31—3—1983 உடன் முடிவடைந்த நிதி ஆண்டின் போது தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் சென்னை துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 2,65,520 மெட்ரிக் டன் சிமிண்டையும், தூத்துக்குடியில் இறக்குமதி செய்யப்பட்ட 89,873 மெட்ரிக் டன் சிமிண்டையும், பாண்டிச்சேரி துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 21,036 மெட்ரிக் டன் சிமிண்டையும் கையாண்டுள்ளது.

7. 2. நடப்பு ஆண்டில், சென்னை துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 2,91,888 மெட்ரிக் டன் சிமிண்டையும், தூத்துக்குடி துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 33,910 மெட்ரிக் டன் சிமிண்டையும், பாண்டிச்சேரி துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 10,502 மெட்ரிக் டன் சிமிண்டையும் தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் கையாண்டு வருகிறது. இதில் டி.பி.ஆர். கொரியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட 1,93,594 மெட்ரிக் டன் சிமிண்டும், தென் கொரியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட 3,14,300 மெட்ரிக் டன் சிமிண்டும் அடங்கும்.



## 8. அரியலூர் சிமிண்டு தொழிற்சாலை விரிவாக்கம்.

8.1. அரியலூர் சிமிண்டு ஆலையின் உற்பத்தி திறனான ஆண்டுக்கு 8 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து ஆண்டுக்கு 10 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்துவதற்கான செயற்குறிப்பை தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் கொண்டுள்ளது. இசைவுக் கடிதத்தைப் பெற மைய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது. தமிழக அரசும் தமிழ்நாடு சிமிண்டு நிறுவனத்தின் கோரிக்கையை மைய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. மைய அரசிடமிருந்து இசைவுக் கடிதம் எதிர்பார்க்கப்படுகிறது.

8. 2. மைய அரசிடமிருந்து இசைவுக் கடிதத்தைப் பெறுவதற்குட்பட்டு இத்திட்டம் 1985-86-ல் மேற்கொள்ளப்பட்டு நான்கு ஆண்டுகளில் முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் திட்டச் செலவு ரூ. 40 கோடியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் செயல்படுத்தப்படும் போது சுமார் 1,000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பிற்கு வகை செய்வதுடன் கணிசமான அளவு சார்பு வேலை வாய்ப்பிற்கும் வகை செய்யும்.

## 9. பாளையம் சிமிண்டு தொழிற்சாலைத் திட்டம்.

9. 1. மதுரை மாவட்டம், பாளையம் பகுதியில் ஆண்டொன்றிக்கு 4 இலட்சம் டன் சிமிண்டு உற்பத்தி செய்யும் திறன் கொண்ட திட்டத்தை அமைக்க தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் இசைவுக் கடிதம் பெற மைய அரசுக்கு விண்ணப்பம் அனுப்பியுள்ளது. மைய அரசிடமிருந்து இசைவுக் கடிதம் எதிர்பார்க்கப்படுகிறது. மைய அரசிடமிருந்து இசைவுக் கடிதத்தைப் பெற தமிழக அரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

9. 2. மைய அரசிடமிருந்து இசைவுக் கடிதத்தை பெறுவதற்குட்பட்டு இத்திட்டம் 1985-86-ல் மேற்கொள்ளப்பட்டு, நான்கு ஆண்டுகளில் முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் திட்டச் செலவு ரூ. 40 கோடியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் செயல் படுத்தப்படும் போது சுமார் 1,000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பிற்கு வகை செய்வதுடன் கணிசமான அளவு சார்பு வேலை வாய்ப்பிற்கும் வகை செய்யும்.

## 10. முன்னோடி சிமிண்டு ஆலை.

திருச்சி மாவட்டம் புதாவக்காரிலுள்ள முன்னோடி சிமிண்டு ஆலையை அண்மையில் தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் இந்திய சிமிண்டு ஆராய்ச்சி நிறுவனத்திடம் இருந்து எடுத்துக்கொண்டது. இந்த ஆலை 1984-85 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் சுமார் 65 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.

## தமிழ்நாட்டில் சிமெண்டு விநியோகம்.

1. 1—3—1982-க்கு முன்பு தமிழ்நாட்டில் சிமெண்ட் விநியோகம் அரசின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. 28—2—1982 அன்று மத்திய அரசு சிமெண்டின் மீதான கட்டுப்பாட்டை ஓரளவு தளர்த்தியது.

2. தமிழ்நாட்டில் சராசரியாக ஒரு காலாண்டுக்கு 6 இலட்சம் டன் சிமெண்ட் தேவையாயுள்ளது. சிமெண்டின் மீதான கட்டுப்பாடு தளர்த்தப் படுவதற்கு முன்பு சராசரியாக ஒரு காலாண்டுக்கு 3.90 லட்சம் டன் சிமெண்ட்டை மத்திய அரசு ஒதுக்கி வந்தது. ஆனால் கட்டுப்பாடு தளர்த் தப்பட்ட பின்பு 1.42 லட்சம் டன் லெவி சிமெண்ட் மட்டுமே ஒரு காலாண் டுக்கு ஒதுக்கப்பட்டது. 1983-ல் இரண்டாம் காலாண்டுக்குப் பிறகு இது 1.52 லட்சம் டன்னாக கூட்டப்பட்டது.

3. மத்திய அரசின் கொள்கையின்படி, தமிழ்நாட்டிலுள்ள சிமெண்ட் ஆலைகள் தமது உற்பத்தித் திறனில் மூன்றில் இரண்டு பங்கை அரசுக்கு லெவி சிமெண்ட்டாக அளிக்க வேண்டும். மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு சிமெண்ட்டை தொழிற்சாலைகள் விலை அல்லது விநியோக கட்டுப்பாடில்லா மல் வெளிச் சந்தையில் விற்கலாம். அத்துடன் மத்திய அரசு, தமிழ்நாட்டில் இறக்குமதியாகும் எல்லா சிமெண்ட்டும் "நான்-லெவி சிமெண்ட்" டாக கருதப் படும் என்றும் அறிவித்தது.

4. 1983-84 ஆம் ஆண்டிற்கான இறக்குமதி கொள்கையின் அடிப்படையில் இவ்வரசு 'டான்செம்' நிறுவனத்தை கொரியாவிலிருந்து சிமெண்ட் இறக்கு மதி செய்ய அனுமதித்தது. அதன்படி 'டான்செம்' நிறுவனம் கொரியாவி லிருந்து 1,93,594 டன்களும், தெ கொரியாவிலிருந்து 8,14,500 டன்களும் இறக்குமதி செய்தது.

5. 1983-84 ஆம் ஆண்டிற்கான இறக்குமதி கொள்கையின்படி, மத்திய அரசு ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் நிறுவனத்தை சிமெண்ட் இறக்குமதி செய்யும்படி அனுமதிக்கப்பட்டுள்ளது.



## தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) மார்ச் 1971 முதல் தமிழக அரசிற்கே முழுவதும் சொந்தமாக வரையறுக்கப்பட்ட பொது நிறு வனமாக துவக்கப்பட்டு, ஜனவரி 1972 முதல் செயல்பட்டு வருகிறது. அது முதல் இந்நிறுவனம் பெரிய மற்றும் நடுத்தர தொழில்களின் வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்கும் ஒரு தூண்டுகோலாகவும், இம்மாநிலத்தில் பின் தங்கிய மற்றும் தொழில் வளர்ச்சியடையாத பகுதிகளை விரைந்து தொழில் மயமாக் கும் நிறுவனமாகவும் செயல்பட்டு வருகிறது. பல்வேறு திட்டங்களின்கீழ் இந்நிறுவனம் 31—12—1983 ஆம் தேதி வரை 152.70 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் 70,000 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சிப்காட் நிறுவனம் தொழில் வளர்ச்சிக்கும் அதற்குரிய திட்ட உதவிக்கும் கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்தி வரு கிறது :—

(i) தொழில் முனைவோர்கள் பயனடையும் வகையில் ஊக்கச் சலுகை திட்டங்களை செயல்படுத்துதல்.

(ii) இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய மாவட்டங் களில் தொழில் வளர்ச்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் உள்ள தொழில் பகுதிகளை மேம்படுத்தி நிலங்களை வழங்குதல்.

(iii) இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதி வழங்கும் திட்டத் தின்கீழ் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பது.

(iv) தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு துணையுதவிப் பணிகள் செய்தல்.

2. கடந்த 12 ஆண்டுகளில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியினை துரிதப் படுத்த சிப்காட், தமிழக அரசு உதவியுடனும், இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் உதவியுடனும், பல்வேறு புதிய முறைகளை உருவாக்கி கையாண் டது. சிப்காட், இந்தியத் தொழில் வளர்ச்சி நிறுவனத்தினால் மறுநிதி உதவித் திட்டத்தின்கீழ் 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் அங்கீகரிக்கப் பட்டதால் இந்நிறுவனத்தின் தவணைக் கடன் திட்டம் மாபெரும் வளர்ச்சி யைக் கண்டது. கடந்த குறுகிய காலத்தில் தவணைக் கடன் திட்டம் செய லாக்குதல் வெகுவாக உயர்ந்துள்ளது.

3. மத்திய மற்றும் மாநில அரசுகளால் அறிவிக்கப்பட்ட ஊக்கத் திட்டங்களான மத்திய மானியம் மற்றும் வட்டியில்லா விற்பனை வரிக்கடன், இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறுமுதலீட்டுத் திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட பின்தங்கிய பகுதிகளுக்காக சலுகைகளும் சிப்காட் நிறுவனத்தினால் பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்காக முழுவதுமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. உண்மையிலேயே சிப்காட் நிறுவனம் தொடங்கிய நாள் முதல் ஒப்புதல் அளித்து வழங்கிய உதவித் தொகைகளில் 85 விழுக்காட்டிற்கு மேலாக பின்தங்கிய மாவட்டங்களில் தொடங்கப் பெற்ற தொழில் நிறுவனங்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிலையான முதலீட்டின் மீது வழங்கப்படுகின்ற மானியத்தைப் பெறுவதில் மற்ற மாநிலங்களைவிட தமிழ் நாடே தொடர்ந்து முன்னிலை வகித்து வருகின்றது. சிப்காட் நிறுவனம் மத்திய அரசிடமிருந்து மாநில அரசிற்கு இம்மானியத்தைப் பெற்றுத் தரும் அதிகாரப் பூர்வமான பொறுப்பை திறம்பட செயல்படுத்துவதே இந்நிலைக்கு முக்கிய காரணமாகும்.

4. இராணிப்பேட்டை மற்றும் ஓசூர் தொழில் இணையங்களில் கிடைத்த வெற்றியின் ஊக்கத்தில் சிப்காட் புதிய 5 தொழில் இணையங்களை கும்மிடிப்பூண்டி, தூத்துக்குடி, கடலூர், புதுக்கோட்டை மற்றும் மானாமதுரையில் நிறுவுவதற்கு இப்போது முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. தொழில் முனைவோரை இவ்விணையங்களுக்கு அழைத்துச் செல்ல முதல் தடவையாக சிப்காட் ஏற்பாடு செய்த தொழில் முனைவோரின் கூடுகை அவர்களிடையே ஊக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. புதுக்கோட்டை, மானாமதுரை, கும்மிடிப்பூண்டி மற்றும் கடலூர் தொழில் இணையங்களில் ஏற்கனவே நிலம் ஒதுக்கும் பணிகள் ஆரம்பமாகிவிட்டது. 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் நாள் தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட தளர்த்தப்பட்ட ஊக்கச்சலுகை முனைப்பு திட்டங்கள், அறிமுகப்படுத்தப்பட்ட கவரக்கூடிய உதவித்தொகை திட்டங்களினால் சிப்காட் வருகிற ஆண்டுகளில் தன்னுடைய திட்டங்களை பலமடங்காக அதிகரிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5. அயல் நாடுகளில் உள்ள இந்தியர்கள் தங்களது சேமிப்பை தமிழகத்தில் உள்ள தொழில் முதலீடு செய்ய ஊக்கப்படுத்துவதற்காக சிப்காட்டில் ஒரு பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. அயல் நாடுகளில் உள்ள தனி நபர்களுடனும், நிறுவனங்களுடனும் தொடர்பு கொள்ளப்பட்டது. இதுவரை, அமெரிக்க, அரபு நாடுகள், மலேசியா மற்றும் பல்வேறு நாடுகளிலுள்ள இந்தியர்களிடமிருந்து 368 விசாரணைகள் சிப்காட் நிறுவனத்தில் வந்துள்ளது. தொடர்ச்சியாக அயல் நாடுகளிலுள்ள இந்தியர்களுடன் தொடர்பு வைக்கப்



ஊக்கச்சலுகை முனைப்புத் திட்டம்.

**தொழில் தொடங்கும் ஆய்வுக்கு உதவித் தொகை :**

தொழில் தொடங்கும் ஆய்வு அறிக்கைகள் தொழில் முனைவோர்க்கு சலுகை விலையில் கிடைப்பதற்காக இத்திட்டம் ஜூன் 1981 ஆம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்டது. தொழில் முனைவோர்கள் ஆரம்பத்தில் இவ்வறிக்கைச் செலவில் 10 சதவீதம் செலுத்தி இவ்வறிக்கைகளை பெற்றுக் கொள்ளலாம். மீதியுள்ள 90 சதவீதத்தில், 40 சதவீதம் தொழில் தொடங்கிய பிறகு கடனாகவும், 50 சதவீதம் சிப்காட் நிறுவனத்தால் உதவித் தொகையாகவும் வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 27 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 18 அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. 5 ஆய்வுகள் மேற்கொள்வதற்காக நடவடிக்கைகள் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் 13 தொழில் முனைவோர்கள் தொழில் ஆய்வு அறிக்கையின் மூலம் பயன் பெற்றுள்ளனர்.

**வட்டியில்லா விற்பனை வரிக்கடன் :**

ஊக்கச் சலுகை தீவிர திட்டத்தின் முக்கிய அங்கமான வட்டியில்லா விற்பனை வரிக்கடனை மாநில அரசின் சார்பில் சிப்காட் நிறுவனம் வழங்கி வருகின்றது. இம்மாநிலத்தின் பின்தங்கிய 9 மாவட்டங்களில் ஏதாவது ஒன்றிலும் செங்கற்பட்டு மாவட்டத்தில் மறைமலைநகர் தொழில் இணையத்திலும், மற்றும் குன்னத்தூர் வட்டாரத்திலும் (ஒரு இலட்சமும் அதற்கு மேலேயும் மக்கள் தொகை உள்ள நகரங்கள் மற்றும் மதுரை, திருச்சிராப் பள்ளி நகர்ப்புறங்களை தவிர) தொடங்க இருக்கும் நடுத்தர, மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின்கீழ் கடன்கள் வழங்கப்படும்.

இத்திட்டம் 3—10—1981 முதல் அமலாக்கப்பட்டு இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டு இயங்கி வருகிறது. முதல் பகுதி திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் தற்போது செயல்படும் நடுத்தர, பெரிய தொழில் நிறுவனம் மற்றும் சிறு தொழில் நிறுவனங்களை நடுத்தர தொழிலாக விரிவுபடுத்தும்

போதோ அல்லது வேறு பிரிவுகளாக பெருக்கும்போதோ இச்சலுகை கிடைக்கும். அத்தொழிற்சாலைகள் கடன்கோரி விண்ணப்பம் செய்து கொள்ளும் ஆண்டுக்கு முந்திய மூன்றாண்டுகளுக்குச் செலுத்திய விற்பனை வரித் தொகை அளவிற்கோ அல்லது விரிவுப்படுத்தப்பட்ட திட்டத்தின் நிலை யான இருப்புகளில் 25 சதவிதத்துக்கோ அல்லது ரூபாய் 50 இலட்சத்துக்கோ நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கும் சிறிய தொழிலிலிருந்து நடுத்தர தொழிலாக விரிவுப்படுத்தும்போது ரூபாய் 7.50 இலட்சத்துக்கோ (எந்த தொகை குறைவோ அந்த தொகைக்கு மேற்படாமல்) விற்பனை வரிக் கடன் தொகை உதவி அளிக்கப்படுகிறது. கடன் தொகை வழங்கப்பட்ட தேதியி லிருந்து 6 ஆண்டுகள் முடிந்தபிறகு 3 ஆண்டுத் தவணைகளில் சமதொகை களாக வட்டி இன்றி இந்தக் கடன் தொகைகளை திருப்பியடைக்க வேண்டும்.

ஏதேனும் பின்தங்கிய மாவட்டங்கள், மற்றும் மறைமலைநகர், செங்கற் பட்டு மாவட்டத்தில் உள்ள குன்னத்தூர் இணையத்தில் நிறுவப்படும் புதிய தொழில்கள் இரண்டாம் பகுதித் திட்டத்தின்கீழ் வரும். இப்பகுதியின்கீழ் புதிய தொழில் நிறுவனங்கள் முதல் ஆறு ஆண்டுகளில், அதாவது உற்பத்தி செய்யும் காலத்தின் முதல் 24 காலாண்டுகளில் ஆண்டுதோறும் வட்டியில்லா விற்பனை வரிக்கடன் அவர்கள் செலுத்திய அந்தந்த ஆண்டு விற்பனை வரிக்கு சமமான அளவுக்கோ அல்லது நிலையான இருப்புகளில் 20 சதவித அளவுக்கோ அல்லது வருடத்திற்கு ரூபாய் 20 இலட்சமோ, எந்த தொகை குறைவோ அந்த தொகைக்கு அதிகப்படாமல் அளிக்கப்படும். மொத்தத்தில் 24 காலாண்டு காலத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை ரூபாய் 100 இலட் சத்திற்கு மேற்படாமல் இருக்கவேண்டும். இந்தக் கடன் காலாண்டுக்கொரு முறை வழங்கப்படும். முதல் கடன் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஒன்ப தாண்டுகள் கழித்து இக்கடன் தொகை ஆறு ஆண்டு தவணைகளில் வட்டி யின்றி செலுத்தப்பட வேண்டும்.

ஊக்கச் சலுகை திட்டமான, வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங் கும் திட்டத்தின்கீழ் இந்நிறுவனம் துவங்கியதிலிருந்து 31—12—1983 முடிய ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையும் வழங்கப்பட்ட தொகையும் முறையே 1,863.72 இலட்சமும் ரூபாய் 1,687.90 இலட்சமுமாகும்.



கடந்த 12 ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையும் வழங்கப் பட்ட தொகையும் பின்வருமாறு :—

ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை.

| ஆண்டு. | முதல் பிரிவு. | இரண்டாம் பிரிவு. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் | இலட்சத்தில்) | |
| 1972–73 .. | 79.19 | .. | 79.19 |
| 1973–74 | 57.72 | .. | 57.72 |
| 1974–75 .. | 73.63 | .. | 73.63 |
| 1975–76 .. | 2.10 | 0.72 | 2.82 |
| 1976–77 .. | 49.13 | 29.72 | 78.85 |
| 1977–78 .. | 52.60 | 58.88 | 111.48 |
| 1978–79 .. | 59.19 | 94.00 | 153.19 |
| 1979–80 .. | 105.52 | 140.26 | 245.78 |
| 1980–81 .. | 88.79 | 143.55 | 232.34 |
| 1981–82 .. | 29.07 | 133.50 | 162.57 |
| 1982–83 .. | 217.48 | 146.88 | 364.36 |
| 1983–84 .. | 180.98 | 120.81 | 301.79 |
| டிசம்பர் 1983 வரை. | | | |
| | 995.40 | 868.32 | 1,863.72 |

வழங்கப்பட்ட தொகை.

| ஆண்டு. | முதல் பிரிவு. | இரண்டாம் பிரிவு. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1972–73 .. | 12.19 | .. | 12.19 |
| 1973–74 .. | 31.56 | .. | 31.56 |
| 1974–75 .. | 91.48 | .. | 91.48 |
| 1975–76 .. | 57.60 | .. | 57.60 |
| 1976–77 .. | 48.32 | 30.26 | 78.58 |
| 1977–78 .. | 35.19 | 56.04 | 91.23 |
| 1978–79 .. | 56.80 | 96.24 | 153.04 |
| 1979–80 .. | 47.26 | 137.74 | 185.00 |
| 1980–81 .. | 85.53 | 144.91 | 230.44 |
| 1981–82 .. | 67.84 | 132.44 | 200.28 |
| 1982–83 .. | 113.72 | 149.58 | 263.30 |
| 1983–84 .. டிசம்பர் 1983 வரை. | 172.39 | 120.81 | 293.20 |
| | 819 88 | 868.02 | 1,687 90 |



1984–85 ஆம் ஆண்டிற்கான ஒப்புதலும் வழங்குவதற்கான குறியீடும் 375 இலட்சமாக வரையறுக்கப்பட்டுள்ளது:—

மாநில அரசிடமிருந்து பெறப்பட்ட ஆண்டுவாரியான நிதியின் விவரம்.

| ஆண்டு. | தொகை |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1972–73 .. .. .. .. .. | 23.18 |
| 1973–74 .. .. .. .. .. | 40.00 |
| 1974–75 .. .. .. .. .. | 74.66 |
| 1975–76 .. .. .. .. .. | 75.00 |
| 1976–77 .. .. .. .. .. | 75.00 |
| 1977–78 .. .. .. .. .. | 100.00 |
| 1978–79 .. .. .. .. .. | 150.00 |
| 1979–80 .. .. .. .. .. | 180.00 |
| 1980–81 .. .. .. .. .. | 250.00 |
| 1981–82 .. .. .. .. .. | 300.00 |
| 1982–83 .. .. .. .. .. | 300.00 |
| 1983–84 .. .. .. .. .. | 300.00 |

## மத்திய அரசின் மூலதன மானியம்.

1972 ஆம் ஆண்டு தமிழக அரசினால் மேற்கண்ட திட்டம் செயல் படுத்தப் படுவதற்காக சிப்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், இம்மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 30 பின்தங்கிய வட்டங்களில் (பி பிரிவு) நிறுவப்படும் எந்த ஒரு தொழில் பிரிவும் அதன் நிலையான மூதலீட்டில் (நிலம், கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள்) 15 சதவிதத்தை நேரடி மானியமாகப் பெறத் தகுதியுள்ளதாகும். ஏற்கெனவே 15 சதவித மானியத்தொகை பெற்றுள்ள வட்டங்கள் (பி பிரிவு) மற்றும் 1983 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி கணக்கின்படி தொழிற்சாலைகளின் மொத்த மூலதனத் தொகை ரூபாய் 30 கோடிக்கு மேல் உள்ள வட்டங்களையும் தவிர, நிதியுதவி சலுகை பெற்ற பின்தங்கிய ஒன்பது மாவட்டங்களின் மற்ற பகுதிகள் 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து 'சி' பிரிவின் கீழ் வரும். இப்பகுதிகளில் துவங்கப்படும் தொழிற்சாலைகளுக்கு 10 சதவித மானியத் தொகை ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்படாமல் பெற தகுதி பெற்றுள்ளன. தொழில் முன்னேற்றம் அடைந்த பகுதியிலிருந்து முன்னேற்றம் காணாத முன்பு கூறப்பட்ட பகுதிகளுக்கு கருவிகள், தளவாடங்கள் மாற்றப்பட்ட போதிலும் அந்தத் தொழில் பிரிவுகள் கூட 15 சதவித உதவித் தொகை பெற தகுதியுடையவையாகும். ஒவ்வொரு தொழில் பிரிவு பெறத்தக்க மானியத்தில் உச்ச வரம்பு ரூபாய் 15 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி தொடங்குவதற்கு முன்பாக மானியத்தில் 85 சதவிதத் தொகையும் உற்பத்தி துவங்கிய பின்பு மீதித் தொகையும் வழங்கப்படும்.

மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்து ஈட்டுத் தொகை (ரூபாய் 27.94 கோடி) பெறுவதில் மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை, வழங்கப்பட்ட தொகை மற்றும் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட ஈட்டுத்தொகை பற்றிய விவரங்கள் இணைப்பு ஒன்றில் கொடுக்கப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டிற்காக ஒப்புதல் அளிக்க, வழங்கப்பட, பெறப்படவிருக்கும் ஈட்டுத் தொகைக்காக குறியீடு ஒவ்வொன்றிற்கும் ரூபாய் 350 இலட்சமாக வரையறுக்கப்பட்டுள்ளது.



## மாநில அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசின் மானியத் திட்டங்களின் கீழ் வராத வட்டங்களிலும் புதிய தொழில் இணையங்கள் அமைக்கப்படவிருக்கும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தூத்துக்குடியிலும், தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள கடலூரிலும் நிறுவப்படும் எந்த தொழில் பிரிவும் அதன் நிலையான முதலீட்டில் 15 சதவிதம் மானியத்தின் இணையான தொகையோ அல்லது 15 இலட்சம் உதவித் தொகையோ இரண்டில் எது குறைவோ அதைப் பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. 3—10—1981 முதல் அமுலாக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் பயன்பெறும். 1983-84 ஆம் ஆண்டு டிசம்பர் 1983 வரை ரூபாய் 110.61 இலட்சத்திற்கு ஒப்புதலும் ரூபாய் 42.44 இலட்சமும் வழங்கப்பட்டன. 1984-85 ஆம் ஆண்டிற்கான வழங்கப்பட இருக்கும் மானியத் தொகை ரூபாய் 100 இலட்சமாக வரையறுக்கப்பட்டு உள்ளது.

## குறிப்பிட்ட தொழில்களுக்கு மானியத் திட்டம்.

சில குறிப்பிட்ட தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் தமிழக அரசு இம்மானிய திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மின் அணு, மருந்துகள் தயாரிப்பு, மோட்டார் வாகன உதிரி தொழில்கள் மற்றும் சூரிய சக்தியை அடிப்படையாகக் கொண்ட கருவிகள் அடங்கும். மேலே குறிப்பிட்ட தொழில்கள் மத்திய மற்றும் மாநில திட்டத்தின் கீழ் வராத தமிழகத்தின் எந்த பகுதியில் நிறுவப்படும் எந்த ஒரு நிறுவனமும் அதன் நிலையான முதலீட்டின் 10 சதவிதம் மானியமாகவோ அல்லது ஒரு நிரந்தர ஊழியருக்கு ரூ. 20,000 அல்லது 10 இலட்சம் என்ற இந்த மூன்று வகையான திட்டத்தில் எது குறைவோ அதைப் பெறலாம். இத்திட்டம் பாரதத்தில் எந்த பகுதியிலும் இதுவரை செயல்படுத்தப்படாத ஈடு இணையற்ற தமிழக அரசின் திட்டமாகும். இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3-ம் நாள் நடை முறைக்கு கொண்டுவரப்பட்டது.

[1984 மார்ச் 28

## 2. நேரடி நிதி உதவி.

### தவணைக்கடன்.

கடந்த பன்னிரெண்டு ஆண்டில் சிப்காட் ஒப்புதல் அளித்த தவணைக் கடன் மற்றும் வழங்கிய தவணைக்கடன் உதவி கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம் :—

| வருடம். | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டது. | நிகர செல்லுபடி யாகத் தக்கது. | வழங்கப் பட்டது. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1972-73 .. | 108.50 | .. | 108.50 | |
| 1973-74 .. | 197.89 | 7.55 | 190.34 | 26.11 |
| 1974-75 .. | 191.28 | 7.99 | 183.29 | 39.90 |
| 1975-76 .. | 27.08 | 7.25 | 19.83 | 117.61 |
| 1976-77 .. | 140.75 | 47.25 | 93.50 | 162.87 |
| 1977-78 .. | 340.55 | 69.48 | 271.07 | 82.15 |
| 1978-79 .. | 233.96 | 10.00 | 222.96 | 123.82 |
| 1979-80 .. | 580.50 | 12.74 | 567.76 | 141.85 |
| 1980-81 .. | 1,958.10 | 27.86 | 1,930.24 | 296.61 |
| 1981-82 .. | 1,899.05 | 225.01 | 1,673.04 | 786.52 |
| 1982-83 .. | 3,036.91 | 476.20 | 2,560.71 | 1,405.86 |
| 1983-84 .. | 2,228.03 | 145.24 | 2,072.79 | 1,575.93 |
| டிசம்பர் 1983 வரை). | | | | 1,248.10 |
| | 10,942.60 | 1,036.57 | 9,906.03 | 6,001.33 |

1979-80 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் 1980-81 ஆம் ஆண்டு முதல் அளிக்கப்பட்ட நிகர ஒப்புதல் கணிசமான முன்னேற்றம் அடைந்துள்ளது என மேலே உள்ள அட்டவணையிலிருந்து வெளிப்படையாக தெரிய வருகிறது. ஒப்பளிப்பு மற்றும் வழங்குதல் ஆகியவற்றில் 1984-85 ஆம் ஆண்டிற்கான குறியீடு முறையே ரூ. 38 கோடி மற்றும் ரூ. 28 கோடி என திட்டமிடப்பட்டுள்ளது.



1984 மார்ச் 28]

நீண்டகால நிலுவைத் தொகையை பெறுதல் என்ற நிலை 1983-84-ல் படிப்படியாக அதிகரித்து 1983 ஆம் ஆண்டு டிசம்பர் 31-ம் நாள் நிலவரப்படி 77.76 சதவீதமாக உயர்ந்துள்ளது. சிப்காட் நிர்வாக குழுவின் துணைக் குழு அவ்வப்போது கூடி நிலுவை பார்வை கூட்டங்களில் நிலுவைக்கான பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்தாலும் மற்றும் தொழில் நிறுவனங் களின் ஒத்துழைப்பினாலும், கணிசமான முன்னேற்றம் அடைந்துள்ளது.

## 2. உத்தரவாதமளித்தல்/நேரடி சந்தா.

பொறுப்புக் கணக்கு நேரடி சந்தாவிற்கு உத்தரவாதம் அளித்ததின் விளைவாக கடந்த 12 ஆண்டுகளில் அனுமதியளிக்கப்பட்ட உத்தரவாத பகுதிகள், ரத்து செய்யப்பட்டவை, பொது மக்களுக்கு வழங்கப்பட்டவை, எடுத்துக்கொள்ளப்பட்ட பங்குகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட் டுள்ளன :—

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டது. | பொது மக்களுக்கு வழங்கப் பட்டவை/ நேரடி சந்தாவுக்கு கோரிக்கை பங்குகள். | எடுத்துக் கொள்ளப் பட்ட பங்குகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | | | |
| 1972-73 .. | 23.20 | .. | .. | .. |
| 1973-74 .. | 24.30 | .. | 26.70 | .. |
| 1974-75 .. | 5.00 | .. | 2.50 | 0.55 |
| 1975-76 .. | 16.50 | .. | 3.00 | 1.29 |
| 1976-77 .. | 11.00 | 18.50 | 2.00 | 2.00 |
| 1977-78 .. | 16.00 | 13.30 | 1.50 | 1.13 |
| 1978-79 .. | 5.00 | 3.50 | 5.00 | 0.37 |
| 1979-80 .. | 6.20 | 2.50 | 13.00 | 1.53 |
| 1980-81 .. | 24.40 | .. | 21.20 | 12.29 |
| 1981-82 .. | 13.75 | .. | 19.65 | 8.03 |
| 1982-83 .. | 18.25 | .. | .. | 1.52 |
| 1983-84 .. (டிசம்பர் 1983 வரை). | 19.00 | .. | 24.25 | 14.08 |
| | 182.60 | 37.80 | 118.80 | 42.79 |

1984-85 ஆம் ஆண்டிற்கான ஒப்புதல் குறியீடு ரூ. 25.00 இலட்சமாகும்.

3. இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டம்.

ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டத்தின்கீழ் இந்திய தொழில் வளர்ச்சி வங்கி முதல் நடுத்தர தொழில் நிறுவ தொழில் நுட்ப, தொழில் அனுபவ தொழில் முனைவோர்களுக்கு திட்டச் செலவில் 10 சதவீதம் வரையில் நிதியுதவி அளிக்கிறது. சிப்காட் நிறுவனம் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் பிரதிநிதி என்ற முறையில் 1983-ம் ஆண்டு டிசம்பர் வரை ரூ. 45.20 இலட்சம் அளவுள்ள தொகையை தொழில் நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளித்துள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 150 இலட்சம் ஒப்புதல் அளிக்கவும், ரூ 150 இலட்சம் வழங்கவும் குறியீடாக வரையறுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளித்தலும் வழங்குதலிலும் அடைந்த முன்னேற்றம் கீழ்க்கண்ட அட்டவணையின் மூலம் அறியலாம்.

| ஆண்டு. (1) | ஒப்புதல் அளிக்கப் பட்டது. (2) | வழங்கப் பட்டது. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1977-78 .. .. .. .. | 4.00 | .. |
| 1978-79 .. .. .. .. | 9.15 | 4.00 |
| 1979-80 .. .. .. .. | 12.90 | 21.47 |
| 1980-81 .. .. .. .. | 26.50 | 16.28 |
| 1981-82 .. .. .. .. | 38.58 | 20.10 |
| 1982-83 .. .. .. .. | 69.07 | 29.70 |
| 1983-84 (31-12-1983 வரை) .. | 45.20 | 63.88 |
| | 205.40 | 155.43 |



க. தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோருக்கு அளிக்கப்படும் சலுகைகள்.

தாழ்த்தப்பட்ட மற்றும் மலைசாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோருக்கு 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் நாள் முதல் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கி ஊக்குவிக்க சிப்காட் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

(அ) மாநிலத்தில் எந்த இடத்தில் தொழில் ஆரம்பித்தாலும் தொழில் முனைவோர் தொழிற்சாலை ஆரம்பிக்க ஆகும் மொத்த செலவில் 15 சதவீதத்தை தங்களது மூலதனமாக கொண்டு வந்தால் போதுமானதாகும். (இதுவே முன்பு பின்தங்கிய பகுதிகளில் 17.5 சதவீதமாகவும் முன்னேறிய இடங்களில் 20 சதவீதமாகவும் இருந்தது.)

(ஆ) உத்தரவாதமளித்தல் நேரடி சந்தா ஆகிய நிதியுதவிகளையும் மேற்படி தொழில் முனைவோர்களின் திட்டங்களுக்கு முடிந்த அளவு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) பின்தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்காக வழங்கப்படும் தவணைக் கடன் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 11 சதவீதம் வட்டியும் வளர்ச்சியடைந்த பகுதிகளுக்கு 12.5 சதவீத வட்டியும் வசூலிக்கப்படும் இவ்வட்டிச் சலுகை ஆண்டொன்றுக்கு சுமார் 1½ சதவீதமாகும்.

(ஈ) தாழ்த்தப்பட்ட மற்றும் மலைசாதி வகுப்பை சேர்ந்த தொழில் முனைவோர்கள் தங்கள் தொழில் பற்றிய முன் முதலீட்ட ஆய்வு அறிக்கை பெற 25 சதவீதம் மட்டுமே முன் பணமாக செலுத்தினால் போதுமானது. இதுவே மற்ற தொழில் முனைவோர்களுக்கு 50 சதவீதமாகும்.

[1984 மார்ச் 28

3. வளர்ச்சி மையங்கள் :

| வளர்ச்சி மையங்கள். | 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை முன்னேற்றம். | |
|---|---|---|
| | மேம்படுத்தப் பட்ட பரப்பு. | மூலதனச் செலவு. |
| (1) | (2) | (3) |
| | (ஏக்கர்.) | (ரூபாய் இலட்சத் தில்.) |
| இராணிப்பேட்டை .. .. | 729.78 | 111.86 |
| ஓசூர் .. .. .. .. | 1,235.86 | 214.94 |
| மானாமதுரை .. .. .. | 492.08 | 59.44 |
| புதுக்கோட்டை.. .. .. | 423.00 | 27.96 |
| கும்மிடிப்பூண்டி.. .. .. | 301.00 | 47.64 |
| கடலூர் .. .. .. | 463.00 | 40.84 |
| தூத்துக்குடி .. .. .. | .. | 0.20 |

வளர்ச்சி மையங்கள்.

| வளர்ச்சி மையங்கள். | ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றம். | | |
|---|---|---|---|
| | மேம்படுத்தப் பட்ட பரப்பு ஏக்கர். | மொத்தம். | மூலதனச் செலவு நிகர். |
| | (4). | (5) | (6) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| இராணிப்பேட்டை | 143.96* | 105.00 | 55.00 |
| ஓசூர் .. .. .. | 508.33* | 290.00 | 210.00 |
| மானாமதுரை .. | 492.08 | 140.00 | 110.00 |
| புதுக்கோட்டை | 544.45 | 120.00 | 75.00 |
| கும்மிடிப்பூண்டி .. | 804.98 | 165.00 | 80.00 |
| கடலூர் .. | 463.41 | 165.00 | 70.00 |
| தூத்துக்குடி .. | 1,318.53 | 51.00 | 45.00 |

பின்குறிப்பு : *இரண்டாவது இணையங்கள்.



1984 மார்ச் 28]

## இராணிப்பேட்டை.

அரசு 729.78 ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்தி அதை சிப்காட் நிறுவனத்திற்கு கொடுத்து ஒதுக்கப்படுவதற்காக இருந்த நிலப்பகுதி 480.68 ஏக்கர் ஆகும். அதில் 93 மனைகள் இருந்தன. அதில் 474.09 ஏக்கர் பரப்பளவு கொண்ட 85 மனைகள்; 69 தொழில் முனைவோர்களுக்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ளன. ஒதுக்கப்பட்டதில் 45 தொழில் நிறுவனங்கள் தங்கள் கட்டுமான வேலைகளை முடித்து உற்பத்தியை தொடங்கி விட்டன. எஞ்சிய 17 தொழில் நிறுவனங்கள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன. இப்பகுதியில் உள்ள கடுமையான நிலத் தேவையை கருதி மேலும் 144 ஏக்கர்கள் கையகப்படுத்தி இரண்டாவது தொழில் இணையம் அமைக்கப்பட்டிருக்கிறது.

## ஓசூர்.

நெ. 7 நெடுஞ்சாலையின் இருபுறமும் ஒதுக்கப்படுவதற்காக இருந்த மேம்படுத்தப்பட்ட 1,235 ஏக்கர் நிலப்பரப்பளவில், விற்பனைக்குக் கிடைக்கக் கூடிய 828 ஏக்கரில், 740 ஏக்கர் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில் முனைவோரின் நிலத் தேவையை பூர்த்தி செய்யவும் மற்றும் சமூக தேவை கருதியும் தற்போது அமைந்திருக்கும் மையகத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஓசூர் கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் 508 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## மானாமதுரை.

மதுரையிலிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மானாமதுரையில் உள்ள இந்த இணையம் தண்ணீர் அதிகம் தேவையில்லாத தொழிற்சாலைகளுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. பாதை வசதி, தொலைபேசி, டெலக்ஸ் வசதி, கழிவுநீரகற்றும் வசதி, பள்ளிக்கூடம், முதல் உதவி, உணவு விடுதி, வீட்டுவசதி, கடைகள், திரையரங்கம் முதலிய வசதிகள் உள்ள மேம்படுத்தப்பட்ட 492 ஏக்கர் நிலம் முனைப்பு உள்ள தொழில் முனைவோர்களுக்காக இப்பகுதியில் உள்ளது. விற்பனைக்குரிய 363 ஏக்கர் நிலப்பரப்பில், 63 ஏக்கர் பரப்பளவுக்கு 26 மனைகள் இதுவரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## புதுக்கோட்டை.

பின்தங்கிய பகுதிகளின் முன்னேற்றத்தை துரிதப்படுத்துவதற்காக புதுக்கோட்டையில் உள்ள தொழில் இணையம் ஒரு மத்திய மையமாக (Nucleus Complex) தேர்ந்தெடுக்கப்படுவதற்காக இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்த மையம் புதுக்கோட்டை நகரத்திலிருந்து 6 கிலோ மீட்டர்

தொலைவில் உள்ளது. திருச்சி விமான நிலையத்தில் இருந்து ஒரு மணி நேரத்தில் கார் மூலமாக இவ்விடத்தை அடையலாம். இந்த மையம் மின் அணு மற்றும் பொறியியல் தொழில்களுக்கு ஏற்றது.

சிப்காட் ஏற்கெனவே கையிருப்பில் உள்ள 423 ஏக்கர் பரப்பளவு நிலத்தை தவிர மேலும் 164 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தை கையகப் படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்து வருகிறது. இந்த இணையத்தின் திட்டங்கள் தொடங்குவதற்கு ஐந்து நிறுவனங்கள் மொத்தமாக 102 ஏக்கர் பரப்பு நிலத்திற்கு விண்ணப்பித்துள்ளன.

## கடலூர்.

மிகுதியான தண்ணீரும், மின்சாரமும் தேவைப்படுகிற பெரிய இரசாயனத் தொழிற்சாலைகள் மற்றும் அது சம்பந்தமாக தொழிற்சாலைகளுக்காக கடலூரில் ஒரு தொழில் இணையம் அபிவிருத்தி செய்யப்படுகிறது. நிலம் கையெடுப்பு சட்டத்தின் அவசர விதிகளை மேற்கோள்காட்டி, கையகப்படுத்துவதற்காக அறிவிக்கப்பட்ட 463 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலம் எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது. இந்த இணையம் கடலூர்—சிதம்பரம் பாதையில் கடலூரிலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. பாண்டிச்சேரியில் இருந்து அரைமணியில் கார் மூலம் இவ்விடத்தை சென்று அடையலாம். இந்த இணையத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்சாலைகள் தொடங்க ஏற்கெனவே 9 நிறுவனங்கள் சம்மதம் அளித்துள்ளன. மேலும் பல நிறுவனங்களிடமிருந்து நிலத்தை ஒதுக்கீடு செய்வதற்கு விசாரணைகள் பெறப்பட்டுள்ளன.

## கும்மிடிப்பூண்டி.

(சென்னை—கல்கத்தா அகன்ற ரயில் பாதையில் இணையாக உள்ள) சென்னை—நெல்லூர் நெடுஞ்சாலையில் சென்னையிலிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில் கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழில் இணையம் உள்ளது.

பொறியியல் மற்றும் வாகன உபகரணங்கள் தொழில்களை துரிதமாய் வளர்ச்சியடைய செய்வதற்காக மிகவும் தகுந்த அமைப்பை இத்தொழில் இணையம் வழங்குகிறது. நிலம் கையிருப்புச் சட்டத்தின்கீழ் உள்ள அவசர விதிகளைக் கையாண்டு அறிவிக்கப்பட்ட 504 ஏக்கர்களில் 315 ஏக்கர் ஏற்கனவே எடுத்துக்கொள்ளப்பட்டன. 128 ஏக்கர் பரப்பளவில் 42 நிறுவனங்கள் தங்களுடைய திட்டங்களை அமைக்க ஒத்துக் கொண்டு உள்ளன. மேலும் நில ஒதுக்கீட்டிற்காக விசாரணைகள் வந்த வண்ணம் உள்ளன.



## தூத்துக்குடி.

தூத்துக்குடியில் தொழில் மையத்திற்கான இடம் அரசினால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நில ஆர்ஜித நடவடிக்கைகள் தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது.

## பொது.

ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் கீழ்க்கண்டுள்ள மாவட்டங்களில் தொழில் இணையங்கள் அமைக்கும் திட்டத்தினை அரசு பிப்ரவரி 1984-ல் அறிவித்துள்ளது :—

1. மதுரை மாவட்டம்.
2. தஞ்சாவூர் மாவட்டம்.
3. மேற்கு ராமநாதபுரம் மாவட்டம்.
4. திருச்சி மாவட்டம்.
5. பெரியார் மாவட்டம்.
6. சேலம் மாவட்டம்.
7. கோயம்புத்தூர் மாவட்டம்.
8. கன்னியாகுமரி மாவட்டம்.
9. நீலகிரி மாவட்டம்.
10. தருமபுரி மாவட்டம்.
11. வட ஆற்காடு மாவட்டம்.

## பணியின் முடிவுகள்.

1983-84-ம் நிதி ஆண்டில் எல்லா செலவினங்களும் தேய்மானமும் போக நிகரலாபம் ரூ. 122.19 இலட்சத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டு இந்தத் தொகை ரூ. 104.39 இலட்சத்தை மட்டுமே வந்து எட்டியுள்ளது.

இணைப்பு 2-ல் திட்டவாரியான நிதி உதவிகள் பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

1. 1983-84-ம் ஆண்டில் ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதலில் கண்ட முன்னேற்றம்.

2. 1984-85-ம் ஆண்டில் ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதல் பற்றிய திட்டக் குறியீடுகள்.

[1984 மார்ச் 28

## வேலை வாய்ப்பு.

1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் தேதி முடிய சுமார் 70,000 பேர்கள் இப்காட்டில் நிதியுதவி பெற்ற நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுள்ளார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. இதுவரை ஏற்படுத்திய வேலை வாய்ப்புகளும் இனி ஏற்படுத்தவிருக்கும் வேலை வாய்ப்புகளும் ஆண்டு வாரியாக :—

| ஆண்டு. | வேலை பெற்றவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1981-82 | 5,700 |
| 1982-83 | 9,000 |
| 1983-84 (டிசம்பர் 1983 வரை) | 6,000 |



1984 மார்ச் 28]

## இணைப்பு 1.

### முத்திய மூலதன மான்யத் திட்டம், 1971.

### அ. ஒப்புதல்.

| ஆண்டு. | பெரிய மற்றும் நடுத்தர தொழில்கள். | |
|---|---|---|
| | எண். | தொகை. |
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1978 மார்ச் 31 வரையில் .. | 154 | 975.89 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை | 46 | 284.04 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை | 52 | 333.72 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை | 69 | 528.42 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை | 46 | 289.98 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை | 103 | 740.69 |
| ஏப்ரல் 1983 முதல் டிசம்பர் 1983 வரை | 32 | 254.46 |
| மொத்தம் 31-12-1983 வரை | 502 | 3,407.20 |

| ஆண்டு. | சிறு தொழில் நிறுவனங்கள். | |
|---|---|---|
| | எண். | தொகை. |
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1978 மார்ச் 31 வரையில் .. | 749 | 179.47 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை | 181 | 62.65 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை | 406 | 78.86 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை | 637 | 218.26 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை | 544 | 213.38 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை | 2,369 | 895.76 |
| ஏப்ரல் 1983 முதல் நவம்பர் 1983 வரை | 473* | 196.63 |
| மொத்தம் 30-11-1983 வரை | 5,359 | 1,845.21 |

*(நவம்பர் 1983 வரை)

[1984 மார்ச் 28

| ஆண்டு. (1) | மொத்தம். எண். (2) | மொத்தம். தொகை. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1978 மார்ச் 31 வரையில் .. | 903 | 1,155.36 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை | 227 | 346.89 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை | 458 | 412.58 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை | 706 | 746.68 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை | 590 | 503.36 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை | 2,472 | 1,636.45 |
| ஏப்ரல் 1983 முதல் டிசம்பர் 1983 வரை | 505 | 451.09 |
| மொத்தம் 30-12-1983 வரை | 5,861 | 5,252.41 |

ஆ. வழங்குதல்.

| ஆண்டு. (1) | நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள். (2) | சிறு தொழில்கள். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1978 மார்ச் 31 வரை .. | 618.43 | 151.62 | 770.05 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை | 176.03 | 30.09 | 206.12 |
| | 2.24 | | 2.24 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை. | 232.26 | 41.78 | 274.04 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை. | 319.09 | 109.33 | 428.42 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை. | 307.50 | 155.64 | 463.14 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை. | 360.77 | 108.13 | 468.90 |
| ஏப்ரல் 1983 முதல் டிசம்பர் 1983 வரை. | 270.04* | 139.44** | 409.48 |
| | 2,286.36 | 736.03 | 3,022.39 |

* சிப்காட் மட்டும்.

* நவம்பர் 1983 வரை சிட்கோ மட்டும்.



1984 மார்ச் 28]

இ. மத்திய அரசிடம் திரும்ப பெற்றது.

| ஆண்டு. (1) | சிப்காட். (2) | ஏனையன. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1978 மார்ச் 31 வரை .. .. | 501.82 | 613:59 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை | 161.51 | 229.63 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை | 125.54 | 165.57 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை | 301.91 | 425.35 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை | 215.52 | 376.94 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை | 192.23 | 289.99 |
| ஏப்ரல் 1983 முதல் டிசம்பர் 1983 வரை | 414.96 | 693.20 |
| | 1,913.49 | 2,794.27 |

## இணைப்பு 2.

### 1983-84 ஆம் ஆண்டிற்கான ஒப்புதல் மற்றும் வழங்குதல் பற்றிய விவரங்கள்.

### 1984-85 ஆம் ஆண்டிற்கான திட்ட இலக்குகள்.

| | 1983-84 ஆண்டில் ஏற்பட்ட முன்னேற்றம். (ஏப்ரல் முதல் டிசம்பர் வரை) | 1983-84 ஆண்டிற்கான பட்டியல் தொகுப்பு. | 1984-85 ஆண்டிற்கான செயல் படுமுறை குறியளவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| **பகுதிக் கடன் :** | | | |
| ஒப்புதல் .. | 2,228.03 | 3,500.00 | 3,800.00 |
| வழங்குதல் .. | 1,248.10 | 2,200.00 | 2,800.00 |
| **ஆரம்ப மூலதனம்** | | | |
| ஒப்புதல் .. | 45.20 | 120.00 | 150.00 |
| வழங்குதல் .. | 63.88 | 100.00 | 150.00 |
| **வட்டியில்லா விற்பனை வரிக்கடன் :** | | | |
| ஒப்புதல் .. | 301.79 | 300.00 | 375.00 |
| வழங்குதல் .. | 293.20 | 300.00 | 375.00 |
| **மத்திய உதவி (சிப்காட் மட்டும்) :** | | | |
| ஒப்புதல் .. | 240.85 | 250.00 | 350.00 |
| வழங்குதல் .. | 270.04 | 250.00 | 350.00 |
| திரும்பபெற்றது | 414.96 | 250.00 | 350.00 |
| **சமபங்கு மூலதனம் :** | | | |
| ஒப்புதல் .. | 19.00 | 25.00 | 25.00 |
| வழங்குதல் .. | 14.08 | 25.00 | 25.00 |
| **மூலதன நிதியுதவி மானியம் :** | | | |
| ஒப்புதல் .. | 110.61 | 100.00 | 100.00 |
| வழங்குதல் .. | 42.44 | 100.00 | 100.00 |



### தடையற்ற வாணிப மண்டலம்.

சென்னையில் தடையற்ற வாணிப மண்டலம் ஒன்று அமைக்குமாறு மாநில அரசு சில காலமாக மைய அரசைக் கேட்டு வந்தது. ஜூலை 1983-இல் சென்னையில் தடையற்ற வாணிப மண்டலம் அமைப்பதான முடிவை மைய அரசு தெரிவித்தது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு—

(அ) இம்மண்டலம் முழுவதும் ஏற்றுமதி சார்ந்தது. இம்மண்டலத்தில் அனுமதிக்கப்படும் தொழில்கள் தமது 100 சதவித உற்பத்தியையும் ஏற்றுமதி செய்ய வேண்டிவரும்.

(ஆ) இம்மண்டலத்தில் துவங்கப்படும் தொழில்களுக்கு மூலப் பொருட்கள், துணைப் பொருட்கள் மூலதன இயந்திரங்கள் போன்றவற்றை இறக்குமதி செய்துகொள்ள சலுகைகள்/வசதிகள் செய்து கொடுக்கப்படும். இதற்கான அறிவிக்கை தனியே வெளியிடப்படும் என மைய அரசு தெரிவித்துள்ளது.

2. ஆகஸ்டு 1983-ல் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளரது தலைமையில் இம்மண்டலத்திற்குத் தேவையான வசதிகளை உடனுக்குடன் செய்து கொடுக்கும் பொருட்டும், அவ்வப்போது எழுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் உள்ளிட்ட உயர் மட்டக் குழு ஒன்றினை அமைத்துள்ளது.

3. அரசு, டி. பி. சானடோரியம் அருகில் உள்ள இடத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது. இந்த இடத்தில் 228.84 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் 150 ஏக்கர் நிலம் பயன்படுத்த கிடைக்கும். மேலும் இம்மண்டலத்திற்கு அருகில் உள்ள 200 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை தடையற்ற வாணிப மண்டலத்திற்காக மைய அரசு அமைத்துள்ள இடம் தேர்வுக்குழு 14—2—1984 அன்று இந்த இடத்தை பார்வையிட்ட பின்னர் மாநில அரசு தேர்ந்தெடுத்துள்ள இடத்தை ஒருமனதாக ஏற்றுக் கொண்டுள்ளது.

4. இம்மண்டலத்திற்கான நிலத்தை மேம்படுத்த தமிழ்நாடு அரசு தனது பிரதிநிதியாக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தை நியமித்துள்ளது. இதுவரை தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்திடம் இம்மண்டலத்தில் நிலம் ஒதுக்கீடு கோரி 250 விசாரணைகள் வந்துள்ளன. இதில் 40 வின்

னப்பங்கள் வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களிடமிருந்து வந்தவை. மண்டலத்திற்கான தரைப்படம் (lay out) தயார் செய்யப்பட்டு வருகிறது.

5. தமிழ்நாடு அரசு இம்மண்டலத்திற்கு தேவையான தண்ணீர் வழங்குதல், மின்சாரம், சாலைவசதி இதில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்குத் தேவையான வீட்டுவசதி போன்றவைகளை செய்துகொடுக்கும் பொருட்டு பல்வேறு நிறுவனங்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. சென்னை துறைமுக பொறுப்புக் கழகத்திற்கு பெட்டக டிப்போ நிறுவுவதற்கான இடம், தபால் தந்தி துறை, தொலைபேசி பணி, மின்சார வாரியம், தொழிலாளர் காப்பீட்டு கழகம், வங்கி, விருந்தினர் இல்லம், சிற்றுண்டிச் சாலை போன்றவைகளுக்கு இம்மண்டலத்தில் இடம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.

1. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் மாநில அளவில் நிதியுதவி அளிக்கும் நிறுவனங்களில் முதல் நிறுவனமாக 'தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதையும், விரைவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு நிறுவனம் சட்டத்தின்படி 1949 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மத்திய வங்கியும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியும் அவ்வப்போது கலந்தாலோசித்த பின்னர் இந்திய அரசால் வெளியிடப்பட்ட அறிக்கைகளின் வாயிலாக 1951 ஆம் ஆண்டு மாநில நிதியுதவி நிறுவன சட்டத்தின் சில முக்கியமான விதித்துறைகள் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழக நிறுவனத்திற்குப் பொருந்தும்படியாக செய்யப்பட்டிருக்கின்றன.

இந்நிறுவனம் நிலம், கட்டிடம், தளவாடங்கள், இயந்திரங்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்காக தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகால, நடுத்தரகால கடனுதவிகளை வழங்குவதுடன் இயந்திரங்களை வாங்குவதற்காகத் தொழில் நிறுவனங்கள் செய்துகொள்ளும் காலம் தாழ்த்தி தொகையினை திருப்பிச் செலுத்துவதற்கான ஒப்பந்தங்களுக்கு உத்திரவாதமும் மேல் உத்திரவாதமும் அளிக்கிறது. மேலும் தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகள், கடனீட்டு உறுதிப் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதும் அவற்றிற்கு உத்தரவாதம் அளிப்பதும் இந்நிறுவனத்தின் முக்கிய ...ணமாகும்.

செயல் முறைகளின் மேம்பாடுகள்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், கடந்த 1949-ல் இருந்து 1978 வரையான 30 ஆண்டு காலத்தில் அளித்த உதவியினைக் காட்டிலும் 1978-83 வரையிலான காலகட்டத்தில் சிறுதொழில், குறுந்தொழில் நிறுவனங்களில் போற்றத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதனை கீழ் காணும் விவரம் தெளிவு படுத்துகிறது :—

| காலம். | மொத்தம் அனுமதிக்கப் பட்ட தொகை. | சிறு தொழில் களுக்கு அனு மதிக்கப் பட்ட தொகை. | அனுமதிக்கப் பட்ட தொகையில் சிறு தொழில் களுக்கு அனுமதிக் கப்பட்ட உதவித் தொகையின் சதவிதம். | வழங்கப் பட்டது. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் கோடியில்) | | |
| 1949-78 .. | 118.77 | 33.85 | 28.5 | 74.51 |
| 1978-79 .. | 12.06 | 5.80 | 48 | 9.05 |
| 1979-80 .. | 17.19 | 8.86 | 52 | 10.67 |
| 1980-81 .. | 36.90 | 22.68 | 61 | 22.59 |
| 1981-82 .. | 52.13 | 44.44 | 85 | 35.07 |
| 1982-83 .. | 55.87 | 48.59 | 87 | 39.56 |
| | 174.15 | 130.37 | 74.8 | 116.94 |

முக்கிய செயல்பாடுகளும், சாதனைகளும் (1983-84).

(அ) தொழில் முனைவர்களின் தேவைகள் மாவட்ட அளவிலேயே நிறைவு செய்யப்பட வேண்டி, மண்டல, கிளை அலுவலர்களுக்கு அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இதன்படி 1980-81 ஆம் ஆண்டு மாவட்ட அளவிலான கிளை அலுவலர்கள் ரூ. 25,000 வரை கடனுதவி அளிக்க அனுமதிக்கப்பட்டிருந்த அதிகாரம், 1982-83 ஆம் ஆண்டு சுமார் ஒரு இலட்சம் ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர, ஆவணங்கள் வைத்துவருதல், ரூபாய் ஐந்து இலட்சம் வரை கடன் தொகைகளை அளித்தல் முதலிய பணிகள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.



மேலும் 1983-84 ஆம் ஆண்டு 4 மண்டல அலுவலகங்கள், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி ஆகிய இடங்களில் துவங்கப்பட்டு கடனுதவித் தொகை ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் 2.5 லட்சம் வரை அளிக்க அதிகாரம் பிரித்து அளிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, ஆவணங்கள் வைத்துவருதல், மற்றும் கடன் தொகைகளை அளித்தல் சுமார் ரூபாய் 7.5 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இராமநாதபுர மாவட்டத்திற்கென மானாமதுரையில் ஒரு கிளை அலுவலகம் திறக்கவும் அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது. இதன்மூலம், சிறுதொழில் நிறுவனங்கள் கடனுதவியினை எளிதில் பெறவும், மாவட்ட அளவிலேயே துரிதமாக கடனுதவி பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) தொழில் முனைவோருக்கு ஆலோசனை அளிக்கும் பிரிவு சென்னையிலுள்ள தலைமையகத்தில் துவக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாகப் பல்வேறு தொழில் துறைகளுக்கு அளிக்கப்படும் உதவித் தொகைகள், ஊக்குவிப்புத் தொகைகள், மானியங்கள், மற்றும் பல்வேறு வகைப்பட்ட உதவிகள், சலுகைகள், முதலியவற்றை அறிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம், தொழில் முனைவோர், குறிப்பாக சிறு தொழில் முனைவோர், தொழில் துவங்குவதற்குரிய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் பெற்று வருகிறார்கள் என்பது வெள்ளிடைமலை.

(இ) மத்திய—மாநில அரசுகள் தகுதிவாய்ந்த தொழில் வினைஞர்களுக்கு மானியம் அளிக்கின்றன. இத்தொகையினை தொழில் முனைவோர் மேற்கூறிய அரசுகள் ஒப்புதல் அளித்த பிறகே பெற இயலும். ஒப்புதல் அளிக்க காலதாமதம் ஏற்படின் இடைக்கால கடன் அளிக்கப்பட்டு அதற்கான வட்டித்தொகையினையும் செலுத்த வேண்டி இருந்துள்ளது. இதன் காரணமாக தொழில் முனைவோர் பெருந்துன்பத்திற்கு ஆளாக வேண்டியுள்ளது. இந்நிறுவனம் தொழில் முனைவோரின் இத்தகைய துன்பத்தினை நீக்க வேண்டி தன்னுடைய சொந்த தொகையிலிருந்து நேரடியாக ஒரு பகுதித் தொகையை இடைக்கால கடனாக அளிக்கின்றது. இந்த இடைக்காலக் கடன் தொகைக்கான வட்டி விதம், மற்றும் இதர செலவுகளை இந்நிறுவனமே மேற்கொள்ளுகிறது. இதனால் தொழில் முனைவோர் குறிப்பாக சிறு தொழில், குறுந்தொழில் முனைவோருக்கும் நேரமும், பணமும் விரையமாகாமல் தடுக்கப்பட்டுள்ளதால் தங்களுடைய முழு கவனத்தையும் தொழில் வளர்ச்சியில் செலுத்த முடிகிறது.

(ஈ) முதலாவதாகத் தொழில் துவங்கும் தொழில் முனைப்பாளர், தொழில் நுணுக்க வல்லுநர்கள் தொழில் நுணுக்க இயல் பட்டம்/சான்றிதழ்கள் பெற்றோர் பல்வேறு தொழில் இயல்புகளில் முன் அனுபவம் திறன்

கொண்டவர்கள் தாங்களாகவே தொழில் நிலையங்களை அமைத்து வைக்கும் விப்பதற்காக சுலபக் கடன் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சலுகைக் கடன் தொகையைப் பெறுவதற்கு தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதியிலுள்ளவர்களுக்கு 15 சதவீதமும், ஏனைய பகுதியிலுள்ளவர்களுக்கு 10 சதவீதமாக கொடுத்து வந்த நிலை மாறி தற்போது அனைவரும் இச் சலுகையினைப் பெற வழி வகை செய்யப்பட்டுள்ளது.

**வேலை வாய்ப்புத் திட்டம்:**

இந்நிறுவனத்தால் உதவிபெற்ற தொழில் நிறுவனங்கள் மூலம் வேலை வாய்ப்பு பெற்றோர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:—

| வருடம். (1) | எண்ணிக்கை. (2) |
| --- | --- |
| 1978-79 | |
| 1979-80 | 13,670 |
| 1980-81 | 19,626 |
| 1981-82 | 42,000 |
| 1982-83 | 52,000 |
| | 87,000 |

பல்வேறு திட்டங்களின்கீழ் அளிக்கப்பட்ட உதவித் தொகை பின்வருமாறு:—

| சிறு தொழில்கள் | (ரூபாய் கோடியில்.) |
| --- | --- |
| நடுத்தர தொழில்கள் | 24.19 |
| தொழில் நுட்ப வல்லுநர்கள் | 3.66 |
| போக்குவரத்து உரிமையாளர்கள் | 0.58 |
| மின் உற்பத்திப் பொறிகள் | 5.14 |
| பதிவு பெற்ற மருத்துவர்கள் | 0.70 |
| சின்னஞ்சிறிய மற்றும் கூட்டுக் கடனுதவி | 0.07 |
| | 0.28 |

முன்னேறத் துடிக்கும் தொழில் முனைவோர்களுக்கு நிறைவேற்றக் கூடிய திட்டங்களை செயலாக்கும் பொருட்டு இந்நிறுவனம் விரைவாக உதவி அளிப்பதில் தொடர்ந்து முயன்று வருகிறது.



**தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம்**

தமிழ் நாட்டில் மின் அணுத் தொழில் வளர்ச்சியை துரிதமாக செயல்படுத்திட, தமிழக அரசு "எல்காட்" என்னும் அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனத்தை ஏற்படுத்தியது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 2 கோடி ஆகும். இதில் இதுவரை ரூ. 139.35 இலட்சத்தை அரசு முதலீடு செய்துள்ளது. எல்காட் நிறுவனம் தானே பல தொழிற்சாலைகளைத் தொடங்கி நடத்தி வருவதுடன் தனியாருடன் சேர்ந்து கூட்டு முயற்சியில் சில தொழிற்சாலைகளைத் தொடங்கவும், தொடங்க திட்டமிட்டும் உள்ளது. எல்காட்டிற்கு சொந்தமான இரண்டு தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இவைகளில் ஒன்று தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஓசூரிலும் மற்றொன்று சென்னையிலும் உள்ளது. ஓசூர் தொழிற்சாலையில் அலுமினியம் எலக்ட்ராலிட்டிக் கபாசிட்டர்கள் தயாரிக்கப்படுகின்றன. இத் தொழிற்சாலையில் ஆண்டுக்கு 5 கோடி கபாசிட்டர்கள் வரை தயாரிக்க முடியும். இந்த தொழிற்சாலையை ஒரே வருடத்தில் நிர்மாணித்து உற்பத்தி தொடங்கப் பட்டுள்ளது. சென்னையில் ஆண்டுக்கு இரண்டு இலட்சம் டிஜிட்டல் மின்னணுக் கைகடிகாரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை செயல்படுகிறது.

உலோகம் மற்றும் கார்பன் பட ரெசிஸ்டர்கள் தயாரிக்கும் தொழிற்சாலை தனியாருடன் இணைந்து கூட்டு முயற்சியாக இராமநாதபுரம் மாவட்டத்தில் பொட்டப்பாளையம் என்ற ஊரில் தொடங்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையில் ஆண்டுக்கு 5 கோடி உலோகப்பட ரெசிஸ்டர்களும் 25 கோடி கார்பன் படரெசிஸ்டர்களும் உற்பத்தி ஆகும்.

கம்பியில்லா இருவழி தொடர்புக் கருவிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை 1984-85 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கும். இங்கிலாந்திலுள்ள மார்கோனி நிறுவனத்துடன் எல்காட் நிறுவனம் செய்துகொண்ட தொழில் நுட்ப ஒப்பந்தம் மத்திய அரசால் ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகள், ராணுவம், தபால் தந்தி போன்ற நிறுவனங்களுக்கு தேவையான மின்னணுக் கருவிகளை உருவமைத்து உற்பத்தி செய்யும் பொருட்டு காண்டிராக்ட்ஸ் டிவிஷன் என்னும் பெயரில் எல்காட்டிற்கு சொந்தமான ஒரு உற்பத்திப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இந்த உற்பத்திப் பிரிவின் மூலம் சிறு தொழிற்சாலைகளுக்கு மின்னணுப் பொருட்களை உற்பத்தி

செய்ய [illegible] மேலும் எல்காட்டில் விற்பனைப் பிரிவின் மூலமாக சிறு தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் மின்னணுச் சுவர் கடிகாரங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. எல்காட்டின் விற்பனைப் பிரிவு சிறு கணக்கிட்டுப் பொறிகள் விற்பனையை தொடங்க உள்ளது.

இந்நிறுவனத்தில் 1980 முதல் மேற்கண்டவாறு வேலை வாய்ப்பு அதிகரித்துள்ளது :—

| வருடம். (1) | வேலை வாய்ப்பு பெற்றோர் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1980-81 .. .. .. .. .. | |
| 1981-82 .. .. .. .. .. | 13 |
| 1982-83 .. .. .. .. .. | 29 |
| 1983-84 .. .. .. .. .. | 122 |
| 1984-85 .. .. .. .. .. | 177 |

ஆம் ஆண்டு தனியாருடன் கூட்டு முயற்சியில் செயல்படுத்தப்பட இருக்கும் திட்டங்களைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்—

| எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | மொத்த மூலதனம். (3) | எல்காட்டின் மூலதனம். (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1 | தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாரிப்பு. | 32 | 16 |
| 2 | கருப்பு-வெள்ளை தொலைக்காட்சிப் பட குழல்கள் தயாரிப்பு. | 1,200 | 100 |
| 3. | எக்ஸ்ரே கருவிகள் தயாரிப்பு .. | 150 | 25 |
| | கணக்கிட்டுப் பொறிகள் மற்றும் சாப்ட்வேர் செயல் திட்டம். | 23 | 1 |
| | அளவை மற்றும் கட்டுப்பாட்டுக் கருவிகள் தயாரிப்பு | 90 | 6 |
| | ஊடுருவி வெப்பமேற்றுக் கருவிகள் தயாரிப்பு. | 79 | 6 |
| | ஒலிப்பெருக்கி பாகங்கள் .. | 150 | 11 |
| | மொத்தம் .. | 1,724 | 165 |





[illegible] கணக்கிட்டுப் பொறிகள் மற்றும் சாப்ட்வேர் செயல்பாட்டு திட்டங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவ அரசின் அனுமதி ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது.

தொலைப்பேசிக் கருவிகள் தயாரிப்பு பொதுத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால், இச்சாதனம் தயாரிப்பு சம்பந்தமாக மத்திய அரசு கொள்கை முடிவு எடுத்த பின்னர், இத்திட்டத்தை மேற்கொள்ளலாமா என பரிசீலிக்கப்படும். 1983-84 மற்றும் 1984-85 ஆம் ஆண்டுகளில் எல்காட் நிறுவனத்தில் முதலீடு பற்றிய விளக்கம் பின்வருமாறு :—

| | 1983-84 | 1984-85 |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. அரசு முதலீடு .. .. .. | 139.35 | 247.10 |
| 2. நீண்டகாலக் கடனுதவி— | | |
| தமிழ்நாடு சிறுதொழில் முன்னேற்ற நிறுவனம். | 60.00 | 150.00 |
| தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம். | 30.00 | 40.00 |
| 3. அரசின் உதவித் தொகை .. | 15.00 | 15.00 |
| 4. வழிமுறை முன்பணம் .. .. | 20.00 | 20.00 |
| 5. குறுகியகால வங்கிக் கடனுதவி .. | 20.00 | 80.00 |
| மொத்தம் .. | 279.35 | 547.10 |

### தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்.

தமிழ்நாடு அரசு சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கும் கரும்புச் சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு செய்தித்தாள் காகிதம், எழுதும் காகிதம் ஆகியவற்றை உற்பத்தி செய்ய ஒரு சிறப்பான திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தை அமைத்துள்ளது. திருச்சி மாவட்டம் கரூர் தாலுக்காவில் தொழிலில் பின்தங்கிய பகுதியான புகளூரில் இந்த காகித ஆலை அதி தீவிரமாக நிறுவப்பட்டு வருகிறது. 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் துவங்கப்பட்ட இத்திட்டம் 1984 ஆம் ஆண்டு நான்காம் காலாண்டில் தனது வர்த்தக ரீதியான உற்பத்தியை துவங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆலை தனது முழு திறனில் செயல்பட்டால் ஆண்டொன்றுக்கு 80,000 டன்கள் செய்தித்தாள் காகிதமும், 40,000 டன்கள் அச்சிடும் மற்றும் எழுதுதாள் காகிதமும் உற்பத்தி செய்யும். அத்துடன் இவ்விரண்டுக்கும் இடையில் தேவைப்பட்டால், சில மாற்றங்களுடன் சந்தையின் தேவைகளை பூர்த்தி செய்யும் மற்ற வகை காகிதங்களை உற்பத்தி செய்யவும், இத்திட்டத்தில் வழிவகை உள்ளது.

இத்திட்டத்தினால் 1,200 பேருக்கு நேரடியான வேலை வாய்ப்பும், 5,000 பேருக்கு மறைமுகமான வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

ஆண்டொன்றுக்கு 8 சத விகிதமாக பெருகிவரும் செய்தித்தாள் காகிதத்தின் இறக்குமதியை தவிர்ப்பதன் மூலமாக டி. என். பி. எல். ஆண்டொன்றுக்கு ரூ. 40 கோடி விதம் அந்நிய செலாவணியை மிச்சப்படுத்துவதுடன், செய்தித்தாள் காகிதத்தில் உற்பத்திக்கும் தேவைக்கும் இடையிலுள்ள இடைவெளியை குறைக்கும்.

இந்த காகித ஆலை முடிவடையும் தருவாயிலுள்ளது. இயந்திரங்களை தருவிப்பது பெருமளவுக்கு முடிந்துவிட்டது. இந்த திட்டம் நிறைவேற்றப்படுவதில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் எல்லாம் வாங்கப்பட்டு விட்டன. ஆலைக் கட்டிடம் மற்றும் உபயோக உபகரணங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டுதல் ஆகியவை பெருமளவு முடியும் தருவாயிலுள்ளது. காகிதம் உற்பத்தி செய்யும் இயந்திரங்களை பூட்டுவது முடியும் நிலையிலுள்ளது. மற்ற இயந்திரங்களை நிறுவும் வேலையும் அதே சமயத்தில் நடைபெற்று வருகிறது. சர்க்கரை ஆலைகளில் பாய்லர்கள் நிறுவுவது, நிலக்கரி பெறுவதற்குத் தேவையான ரயில்பாதை அமைப்பது ஆகியவை, திட்டமிட்டபடி நடைபெற்று வருகின்றன. இவ்வாறாக ஏற்கெனவே திட்டமிட்டபடி ஆலை கட்டிடம் மற்றும் இயந்திரங்கள் நிறுவும் வேலை தீவிரமாக நடைபெற்று வருகிறது. 1984 மே-ஜூன் மாதங்களில் இத்திட்டம் மாதிரி உற்பத்தியை துவங்கும். 1984 செப்டம்பர் அக்டோபரில் ஆலை முழு அளவில் செயல்பட திட்டமிடப்பட்டுள்ளது.



## தமிழ்நாடு உப்பு நிறுவனம், லிமிடெட்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் நிறுவப்பட்டு 1975 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22 ஆம் நாள் முதல் இயக்கத் தொடங்கியது. அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் முறையே ரூ. 200 இலட்சம், ரூ. 107 இலட்சமாகும். இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் உப்பு, உப்பைச் சார்ந்த இரசாயனப் பொருட்கள் மற்றும் உபபொருட்களை தயாரிப்பது ஆகும்.

### மாரியூர்—வாலிநோக்கம் உப்புத் திட்டம்:

இத்திட்டம் 1975 ஆம் ஆண்டு திட்டப்பணிகள் தொடங்கப்பட்டு 1976 ஆம் ஆண்டு முதல் மேம்பாட்டுப் பணிகளோடு உப்பு உற்பத்தியும் தொடங்கியது. வேறு எந்த தொழிலும் ஆரம்பிக்க இயலாத மிகவும் பின்தங்கிய இடத்தில் அமைந்துள்ளமான இத்திட்டம், உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன் பின்தங்கிய பகுதியை மேம்படுத்தும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டம் 1983 ஆம் ஆண்டு இரசாயன தொழிற்சாலைக்குகந்த தரமான 10,250 டன் உப்பு உற்பத்தி செய்தது. தமிழக அரசு ரூ. 75 இலட்சம் செலவில் வாலி நோக்கத்தில் சிறு துறைமுகம் அமைக்க அனுமதி வழங்கியுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்துறைமுகம் மாரியூர்—வாலிநோக்கத்தில் தயாரிக்கப்படும் உப்பை மேற்கு வங்காளம், அஸ்ஸாம் மற்றும் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து உப்பு விற்பனையைப் பெருக்க வாய்ப்பு உள்ளது.

1984 ஆம் ஆண்டில் இத்திட்டம் இரசாயன தொழிற்சாலைக்குத் தகுந்த சுமார் 60,000 டன் உப்பு உற்பத்தி செய்யப்படும். இவ்வாண்டு ரூ. 15 இலட்சம் செலவில் அலுவலர் குடியிருப்பு கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய உப்புத் துறையின் மூலம் கிடைக்கவிருக்கும் நிதி உதவியுடன் (50 சத விதம்) உப்பளத்தில் தெற்கு கரையை மேம்படுத்துதல் உப்பளத்திற்குள் வாகனங்கள் செல்லுவதற்காக சாலையை மேம்படுத்துதல், தொழிலாளர்களுக்குக் குடிநீர் வசதியை விரிவுபடுத்துதல் மற்றும் குறைந்த அழுத்த மின் வசதியை உப்பளத்தில் உள்ள மின்சார பம்புகளுக்குப் பெற்றுத் தருதல் போன்ற வேலைகள் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலமாக சுமார் 100 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் 800 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் அளிக்கப்படுவதுடன் உப்பைக் கொண்டு செல்லுவதற்கான பணிகள் மூலம் சார்பு வேலை வாய்ப்பும் ஏற்பட வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

### சர்தார் வேதாரண்யம் உப்புத் திட்டம்.

1979 ஆம் ஆண்டில் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு 1982 ஆம் ஆண்டு மே மாதம் முதல் உப்பு உற்பத்தி தொடங்கியது. 1983 ஆம் ஆண்டு சுமார் 5,226 டன் உப்பு உற்பத்தி செய்தது. இத்திட்டத்திற்காக இதுவரை ரூ. 32.36 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. கடந்த 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தினால் இத்திட்டம் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளது. இத் தொழிற்சாலையின் மேம்பாட்டிற்காக 1984 ஆம் ஆண்டில் ரூ. 13.39 இலட்சம் செலவிடப்படும். 1983 ஆம் ஆண்டு இத்திட்டம் சுமார் 20,000 டன் உப்பை உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் சுமார் 400—500 நபர்களுக்கு பருவ கால வேலை வாய்ப்பு அளிப்பதுடன் 50 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் அளிக்கிறது.

### புதிய திட்டங்கள்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) ரூ. 5 கோடி செலவில் வாலிநோக்கத்தில் மெக்னீசியம் உலோகம் தயாரிக்கும் திட்டத்தைச் செயல் படுத்தவிருக்கிறது. இதுதான் இந்தியாவிலேயே முதல் திட்டமாகும். இதில் தயாரிக்கப்பட இருக்கும் உலோகம் விமான தயாரிப்பு தொழிற்சாலைக்கும், நாணயம் தயாரித்தல் போன்ற தொழில்களுக்கும் பயன்படும். சுமார் 16,000 டன் அளவுள்ள 36 பிசி உப்புக் கழிவு நீர் (பிட்டர்ன்ஸ்) இத்திட்டத்திற்கு மாரியூர்-வாலிநோக்கம் உப்புத் திட்டம் அளிக்கும். இந்நிறுவனம் 1984 ஆம் ஆண்டு ரூ. 6.35 இலட்சம் செலவில் உப்புக் கழிவுநீரை (பிட்டர்ன்ஸ்) பக்குவப் படுத்துவதற்கு (Process) தேவையான வசதிகளை ஏற்படுத்தும்.

மெக்னீசியம் தயாரிக்கும் திட்டத்திற்காக உப்புக் கழிவு நீர் (பிட்டர்ன்ஸ்) அளிக்கும்பொழுது உப்பைச் சார்ந்த மெக்னீசியம் சல்பேட், பொட்டாசியம் குளோரைட், பொட்டாசியம் சோனைட், சோடியம் சல்பேட் போன்ற இரசாயனப் பொருள்கள் தயாரிக்கும் சாத்தியக் கூறுகள் உள்ளன.



இந்நிறுவனம் பவநகரில் அமைந்துள்ள உப்பு மற்றும் கடல் சார்ந்த ரசாயன பொருட்கள் ஆராய்ச்சி (Central Salt and Marine Chemical Research Institute) நிறுவனத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளது. த்திட்டங்கள் நன்றாக செயல்படுமா என்பதை விரிவாக ஆராய்ந்து இத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

ஊட்டச் சத்துள்ள உப்பை தயாரிக்கும் திட்டத்தை மத்திய அரசு தமிழ் நாடு உப்பு நிறுவனத்திடம் ஒப்படைக்க கருதியுள்ளது. உப்பு நிறுவனம், மாரியூர்—வாலிநோக்கத்திலுள்ள உப்புத் தொழிற்சாலையில் ஊட்டச் சத்துள்ள உப்பு தயாரிக்க விருப்பம் தெரிவித்துள்ளது. இது சம்பந்தமான முடிவு மைய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

பவநகரில் அமைந்துள்ள உப்பு மற்றும் கடல் சார்ந்த இரசாயன பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனம் (Central Salt and Marine Chemicals Research Institute) மத்திய அரசு உப்புத்துறை மற்றும் தமிழக அரசின் கூட்டுமுயற்சியுடன் வாலிநோக்கத்தில் மாதிரி உப்புப் பண்ணை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிறுவனம் அதனால் நல்ல முறையில் உப்பு உற்பத்தி செய்யவும் மற்றும் தொழிலாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் பயிற்சி அளித்தல் போன்றவையில் பயன் அடையும்.

1984 ஆம் ஆண்டில் அதிக அளவு உற்பத்தி/விற்பனை எதிர்பார்க்கப்படுவதினால் இந்நிறுவனம் 1985 ஆம் ஆண்டு பண இழப்பைத் தவிர்த்துப் பின் வரும் ஆண்டுகளில் நன்றாகச் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### கனிம நிறுவனங்கள்.

#### தமிழ்நாடு கனிம நிறுவனம்.

தொழில்களுக்குப் பயன்படும் முக்கிய கனிமங்களை வெட்டியெடுத்து விற் பனை செய்யவும், கரும்பாறை மற்றும் இதர நிறப்பாறைகளை வெட்டி யெடுத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் ரூ. 100 இலட்சம் அனுமதிக் கப்பட்ட மூலதனத்துடன் முற்றிலும் அரசுக்குச் சொந்தமான நிறுவனமா 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின் நிறுவப்பட்டது. கூடுதலாக குவாரிகள் மற்றும் சுரங்கங்களை ஏற்று நடத் வதற்கும் புதிய திட்டங்களை செயலாக்கவும் இயலும் வகையில் அனுமதிக்கப் பட்ட மூலதனத்தின் அளவை ரூ. 300 இலட்சத்திற்கு அரசு உயர்த்தியுள் ளது. இதில் செலுத்தப்பட்ட மூலதனப் பங்கு ரூ. 122.5 இலட்சமாகும்.

[1984 மார்ச் 28

2. 1983-84 ஆண்டில் (சனவரி மாதம் வரையில்) 'டாமின்' நிறுவனத்தின் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல்கள் 1982-83-ம் ஆண்டு தகவல்களுடன் ஒப்பிட்டுக் கீழே தரப்பட்டுள்ளன :—

(1) கனிம உற்பத்தி—

| | 1982-83 | | 1983-84 (சனவரி 84 வரையில்). | |
|---|---|---|---|---|
| | அளவு. | மதிப்பு. (ரூபாய் லட்சத்தில்.) | அளவு. | மதிப்பு. (ரூபாய் லட்சத்தில்.) |
| (1) | (2) க. மீ. | (3) | (4) க. மீ. | (5) |
| கருங்பாறை சாம்பல் | 1,351 | 41.95 | 2,141 | 66.19 |
| நிறப்பாறை | 2,905 | 26.91 | 1,493 | 13.83 |
| உயர்வகை கனிமங்கள் | 32,129 டன் | 29.60 | 26,394 டன் | 24.32 |

(2) கனிம விற்பனை—

| | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | க. மீ. | | க. மீ. | |
| கருங்பாறை சாம்பல் | 1,722 | 110.37 | 1,998 | 122.18 |
| நிறப்பாறை | 1,692 | 45.30 | 1,447 | 40.97 |
| உயர்வகைக் கனிமங்கள் | 16,738 | 20.16 | 19,545 | 19.56 |

சனவரி 1984 இறுதி வாக்கிலேயே இந்நிறுவனம் (டாமின் சென்ற ஆண்டின் விற்பனை வருவாயை எட்டியுள்ளது) சென்ற 1982-83 ஆண்டின் விற்பனை வருவாய் ரூ. 167.50 இலட்சமாகும். 1983-84 ஆம் ஆண்டு முடிவில் ரூ. 256.36 இலட்சம் விற்பனை வருவாயாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற 1982-83 ஆம் ஆண்டின் செயல் முறை ஆதாயம் ரூ. 100 இலட்சமாகும். 1983-84 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் செயல்முறை ஆதாயம் ரூ. 100 இலட்சமாகும். 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 350 இலட்சம் விற்பனை வருவாய் கிடைக்கும் என்றும் செயல் முறை ஆதாயம் ரூ. 115 இலட்சம் கிடைக்கும் என்றும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிறுவனம் கிராமப் புறங்களில் வேலை வாய்ப்புக்களை வேகமாக கூடுதலாக்கி வருகிறது. தற்போது சுமார் 200 பேர்களுக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது. இது 1984-85 ஆம் ஆண்டில் 2,500-க்கு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



1984 மார்ச் 28]

### அறுத்து மெருகேற்றும் தொழிற்கூடம்.

3. தமிழ்நாடு கனிம நிறுவனம் சென்னைக்கருகில் மணலியில் பாறை அறுத்து மெருகேற்றும் தொழிற்சாலை ஒன்றை ரூ. 385 இலட்சம் மூலதனத்தில் 1984-85 ஆம் ஆண்டு அமைக்க உள்ளது. இத்திட்டத்திற்கு அரசின் மூலதனப் பங்குத் தொகை ரூ. 79 இலட்சமாகும். இதில் ரூ. 30 லட்சம் ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ளது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (IDBI) அதன் உறுப்பு நிறுவனங்களான இந்திய தொழில் முதலீட்டுக் கழகம் (IFCI) ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC) ஆகியவை முறையே ரூ. 170 இலட்சம், ரூ. 56 இலட்சம் மற்றும் ரூ. 50 இலட்சம் நிதி உதவி அளிக்க முன் வந்துள்ளன. மீதி மூலதனத் தொகையை இந் நிறுவனம் தனது சொந்த வழிவகையிலிருந்து தேடிக்கொள்ள இருக்கிறது. இந்த தொழிற்சாலை நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடையது. ஆகவே, இதற்கான இயந்திரங்கள் யாவும் மத்திய அரசு அளிக்கும் வரி விலக்கு சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு விரைவில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட இருக்கின்றன. தொழிற்சாலைக்கான கட்டிடங்கள் கட்டும் பணிகள் யாவும் தமிழ்நாடு டோமா நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டின் இறுதியில் இத்தொழிற்சாலைக்கான கட்டிடங்கள் கட்டும் பணிகள் யாவும் தமிழ்நாடு கட்டுமான நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டின் இறுதியில் இத்தொழிற்சாலையில் உற்பத்தி தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு 50,000 சதுர மீட்டர் மெருகிடப்பட்ட கற்பலகைகளும், 10,000 சதுர மீட்டர் மெருகிடப்பட்ட திறைவுக் கற்களும் உலக நாடுகளின் நியமம் மற்றும் தரத்தில் தயாரிக்கும் திறனுடையதாக இருக்கும்.

### சிவகங்கையில் கிராபைட்டை வெட்டியெடுக்கும் தொழிற்சாலை.

4. 1984-85 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கனிம நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கையில் கிராபைட் கனிமம் சுத்திகரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் ரூ. 150 இலட்சம் மூலதனத்தில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்காக சுமார் 425 ஏக்கர் பட்டா நிலத்தை மேற்கொள்ளும் பணிகள் நடைபெற்றுவருகின்றன. இதில் 173 ஏக்கர் நிலம் இதுவரை தமிழ்நாடு கனிம நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுமார் 375 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலமும் தமிழ்நாடு கனிம நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுத்திகரிப்புத் தொழிற்சாலை நாளொன்றுக்கு 100 டன் கிராபைட் கனிமத்திலிருந்து 14 டன் சுத்திகரிக்கப்பட்ட கிராபைட்

-வாரிக்கும் திறன் கொண்டதாக இருக்கும். தொழிற்சாலை அமைப்பதற்-காக கட்டுதவி பெற இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடம் விண்ணப்பித்-துக் கொள்ளப்பட்டுள்ளது. தொழிற்சாலை அமைப்பதற்காக அரசு ரூ. 30 இலட்சம் மூலதனப்பங்குத் தொகையாக அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றில் ரூ. 20 இலட்சம் இதுவரை அளித்துள்ளது. சுத்திகரிக்கப்பட்ட கிராபைட்டிற்கு வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் மிகுந்த கிராக்கியுள்ளது. இத்தொழிற்சாலை 1984-85 ஆண்டின் இறுதியில் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ் நாடு கனிம நிறுவனம் சுத்திகரிக்கப்பட்ட கிராபைட்டைக் கொண்டு சிலிகான் கார்பைடு மூசை (Crucible) தயா-ரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்கு வெளிநாட்டிலிருந்து தேவையான தொழில் நுட்பத்தை பெற வேண்டியாத-லால் தமிழ்நாடு கனிம நிறுவனம் அதற்கான முயற்சிகளை தீவிரமாக மேற்-கொண்டுள்ளது.

5. தமிழ்நாடு கனிம நிறுவனம் தொடர்ந்து ஆதாயம் ஈட்டி வரும் ஒரு நிறுவனமாக இருப்பதால், 'தாரா' நிறுவனம் மூலம் தனது குவாரிகள் மற்றும் சுரங்கங்கள் அமைந்திருக்கும் கிராமப் புறங்களில் அடிப்படை வசதி-களை செய்து கொடுப்பதற்காக நிதி உதவி அளித்து வருகிறது. அத்துடன் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கும் நிதி உதவி அளிக்கிறது.

## தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம்.

தமிழ்நாடு மாக்னசைட் வரைநிலையை 17—1—1979-ம் நாள் தமிழ்நாடு அரசு, ஒரு அரசு நிறுவனமாக, கச்சா மாக்னசைட் கல்லை வெட்டி எடுக்கும் நோக்குடன் ஏற்படுத்தியது. தமிழ்நாடு அரசு இதுவரை 200 லட்சம் ரூபாயை தனது பங்குத் தொகை மூலதனமாக செலுத்தியுள்ளது. இந்நிறு-வனம் ரூ. 6.5 லட்சத்தை தனது துணை நிறுவனமான தமிழ்நாடு மாக்னசைட் புராடக்ட்ஸ் வரைநிலையில் முதலீடு செய்துள்ளது. மேற்படி துணை நிறு-வனம் 8—2—1982 வரை கூட்டுத்துறை நிறுவனமாக இருந்து வந்தது. தமிழ்நாடு அரசு 8—2—1982-ம் தேதியில் கூட்டுத்துறை ஒப்பந்தத்தை ரத்து செய்ததினால் மேற்கூறிய துணை நிறுவனம் இந்நிறுவனத்திற்கு முழுவதும் சொந்தமாகியுள்ளது. ஒரு உருக்காலைச் செங்கற்கள், உரங்கள், இரசாயனப் பொருட்கள் முதலியன தயாரிக்கத் தேவைப்படும் கச்சாப் பொருள்களாக மிதமாக எரிக்கப்பட்ட மாக்னசைட், முழுமையாக எரிக்கப்பட்ட மாக்-னசைட் என்ற நடுத்தரப் பொருட்களைத் தயாரித்து, விற்பனை செய்வதே தமிழ்நாடு மாக்னசைட் புராடெக்ஸ் வரைநிலையின் முக்கியப் பணியாகும்.



முன்னாள் தனியார் நிறுவனமான திருவாளர்கள் சேலம் மாக்னசைட் பிரை-வேட் வரைநிலை அவர்களின் முறையற்ற செயல்பாடுகளினால் சுரங்கப் பாது-காப்பு இயக்குநரகத்தால் அபாயகரமான பகுதி என்று அறிவிக்கப்பட்ட சுரங்கப்பகுதி முழுவதும் தற்பொழுது பாதுகாப்பு விதிகளின்படி செம்மைப் படுத்தப்பட்டு விட்டது. அக்டோபர் மேலும், 1983-ல் சுரங்கப் பாதுகாப்பு இயக்குநரகத்தால் தடையுத்தரவு நீக்கப்பட்டுவிட்டது. தற்பொழுது சுரங்க மேம்பாட்டு பணிகள் முடிவடைந்து சுரங்கப் பகுதி முழுவதும் நல்ல நிலைமை-யில் உள்ளது.

உலகச் சந்தையில் உருக்காலைப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள மிக அதிக அளவிலான போட்டிகளாலும், இந்திய அரசின் இறக்குமதி கொள்கையினா-லும், இந்தியாவில் உள்ள மாக்னசைட் தொழிற்சாலையின் அதிக அளவில் பாதிக்கப்பட்டு, உலகச் சந்தையில் உள்நாட்டுத் தொழிற்சாலைகள் தரத்திலும் மற்றும் விலையிலும் போட்டியிட இயலாத நிலையில் உள்ளன. நிறுவனத்தின் இயக்கங்கள் கடந்த வருடத்தைவிட நன்றாக இருந்தபோதிலும், நிர்மாணிக்கப்-பட்ட குறியளவுகளை அடைய முடியவில்லை. நிர்ணயிக்கப்பட்ட விற்பனைக் குறியீடான 1,20,000 டன்களுக்கு எதிராக 1983-84-ம் ஆண்டில் விற்பனை அளவு 1,07,000 டன்களைத்தான் அடையமுடியும். 1982-83-ம் ஆண்டில் தோராய மதிப்பீட்டு இலாபமாகிய ரூ. 60.78 லட்சத்திற்கு எதிராக நிறுவனம் ரூ. 90.17 லட்சத்தை எட்டியுள்ளது. 1983—84-ம் ஆண்டின் தோராய மதிப்-பீடு இலாபமாகிய ரூ. 164.06 லட்சத்திற்கு எதிராக டான்மாக் நிறுவனம் ரூ. 110.20 இலட்சம் இலாபமே அடைய முடியும். 1983-84-ம் ஆண்டிற்கான 'டான்மாக்' நிறுவனத்தில் செயல்பாடுகள் பற்றிய விபரங்கள் ஜனவரி 1984 முடியவும் மற்றும் 1982—83-ம் ஆண்டிற்கு அதேகால கட்டத்திற்கான விபரங்-களும் கீழே ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன :—

| காலம். | கச்சா மாக்னசைட் உற்பத்தி. | விற்பனை. | விற்பனை வரவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | டன்கள். | | ரூ. |
| ஏப்ரல் 1983 முதல் ஜனவரி 1984 முடிய. | 1,04,232 | 91,067 | 3,91,43,642 |
| ஏப்ரல் 1982 முதல் ஜனவரி 1983 முடிய. | 95,790 | 87,510 | 3,61,51,723 |

[1984 மார்ச் 28

### எதிர்காலத் திட்டங்கள்.

சுழலும் சூளை ஒன்றினை நிறுவுவதற்கான திட்டம் தமிழ்நாடு அரசினால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. இத்திட்டத்திற்கான திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 765.00 லட்சங்களாகும். இத்திட்டத்தினை நிறுவுவதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, மேலும் இத்திட்டம் மார்ச் 1985-ல் செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கூறிய சுழலும் சூளையில் 6 சதவிகித சிலிகாவை தன்னகத்தே கொண்ட முழுமையாக எரிக்கப்பட்ட மாக்னசைட்டை தயாரிக்க இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது சர்வதேச தரமான 1 லிருந்து 2 சதவிகிதம் வரை சிலிகன்-டை-ஆக்ஸைடை விட மிகவும் அதிகமாகும். எனவே முழுமையாக எரிக்கப்பட்ட மாக்னசைட்டின் தரத்தை மேம்படுத்தவும் தரமான மாக்னசைட் கற்களை உற்பத்தி செய்யவும் கச்சா மாக்னசைட்களை சுத்தம் செய்து மேம்படுத்தும் ஆலை ஒன்றினை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கூறிய திட்டத்திற்கான அனுமதி இந்திய அரசாங்கத்திடம் ஏற்கனவே பெறப்பட்டு, [illegible] பிரதர்ஸ் அவர்களுடன், 57.00 லட்சம் [illegible] லட்சங்கள்) மொத்த செலவில், தொழில் நுட்பத்திறன் அளிப்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டுள்ளது. தமிழக அரசின் உதவியோடு, மேற்கூறிய திட்டத்தை 1987-ம் ஆண்டின் மத்தியில் செயல்படுத்தப்படும் என்று நம்பிக்கைக் கொண்டுள்ளோம்.

உயர்ரக மாக்னசைட் கற்களைத் தயாரிப்பதற்கான ஆலை ஒன்றினை நிறுவி நிறுவனத்தின் இயக்கங்களை மேலும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிக்கும் பொறுப்பினை திருவாளர்கள் மெட்டலர்ஜிகல் அன்ட் இன்ஜினியரிங் கன்சல்டன்ட்ஸ், ராஞ்சி (ஒரு இந்திய அரசாங்க நிறுவனம்) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களின் ஆலோசனைப்படி மேற்கூறிய திட்டத்திற்கு தொழில் நுட்பத்திறன் பெறுவதற்கு திருவாளர்கள் [illegible] கன்சல்டன்சி அன்ட் இன்ஜினியரிங், ஆஸ்திரியா, அவர்கள் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டு, மேற்கூறிய தேர்வு இந்திய அரசாங்கத்தின் ஒப்புதலுக்காக உள்ளது. இந்திய அரசாங்கத்தின் ஒப்புதல் பெறப்பட்டபின் மேற்கூறிய திட்டத்தினை செயல்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மேற்கூறிய திட்டங்களுக்கான மொத்த செலவு சுமார் ரூ. 80 கோடியாகும்



1984 மார்ச் 28]

### புவியியல் மற்றும் வணிகத் துறை.

தொழில் வணிகத்துறையின் புவியியல் பிரிவு கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இம்மாநிலத்தில் கனிம ஆய்வுகள் நடத்திவந்ததின் காரணமாக தனியார் மற்றும் அரசுத்துறையில் கனிமம் சார்ந்த தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. சென்னை தவிர மற்ற மாவட்டங்களில் இப்பிரிவின் பிராந்திய அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டதால் ஏனைய வகைகள் மட்டுமல்லாது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்ட அளவிலும்கூட கனிமம் நிர்வாகப் பணிகள் [illegible]படுத்தப்பட்டன. மாவட்ட அளவில் கனிம நிர்வாகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு புவியியல் தொழில்களுக்கு அலுவலர்களின் உதவி செய்து வந்தனர். இவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் சுரங்கக் குத்தகை விண்ணப்பங்களை பரிசீலனை செய்வதிலும் அரசுக்கு பரிந்துரை [illegible] அனுப்புவதிலும் உதவி புரிந்தனர். மேலும், கனிம நிர்வாகப்பணியின் மாவட்ட அளவிலான கொள்கைபற்றிய விரைவான முடிவு எடுக்கவும் உதவி புரிந்தனர்.

அரசு ஆணை எண் [illegible], தொழில்துறை, நாள் 24—3—1983-ன் படி 14—[illegible] முதல் புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்ககம் என்ற புதிய துறை ஏற்படுத்தப்பட்டது. இப்புதிய இயக்ககம் என்ற புதிய துறை ஏற்படுத்தப்பட்டது. இப்புதிய இயக்ககம் ஏற்படுத்தப்பட்டதின் விளைவாக சென்னை மாவட்டம் தவிர ஏனைய ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அலுவலகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதுவரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வந்த சிறப்பு கனிம அலுவலர்கள் இப்புதிய இயக்ககத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இப்புதிய இயக்ககத்தின் முக்கியமான பணிகள் (1) கனிம ஆய்வுப் பணி, (2) கனிம நிர்வாகப்பணி ஆகியவைகளாகும்.

### கனிம ஆய்வு.

1983—84-ம் ஆண்டில் இத்துறையால் மேற்கொள்ளப்பட்ட கனிம ஆய்வுப் பணிகள் கீழே தரப்பட்டுள்ளன :—

1. தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி வட்டம் மகாராஜக் கடைப் பகுதியில் தங்கம் பற்றிய ஆய்வு.

2. வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலை, சேலம் மாவட்டம் நைனார்மலை ஆகிய இடங்களில் உள்ள இரும்புக் கனிமங்களை மேம்படுத்துதலுக்கான ஆய்வு, இக்கனிமங்களை மேம்படுத்துவதற்கான ஆய்வு மற்றும்

இக்கனிமங்களை ஆந்திர மாநிலம் பண்லோன்சா என்னுமிடத்திலுள்ள ஸ்பான்ஜ் இந்தியா லிமிடெட்டில் மென்மையான இரும்பு உற்பத்திக்கான ஆய்வு.

3. தஞ்சை மாவட்டத்தில், வேதாரணியம் வட்டம் சாரியப்பட்டினம் எனும் இடத்தில் சிலகா மணல் பற்றிய ஆய்வு.

4. புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம் எரிச்சி பகுதியில் காணப்படும் களிமண் பற்றிய ஆய்வு.

5. இராமநாதபுரம் மாவட்டம், தேவிப்பட்டினம் மற்றும் கீழக்கரைப் பகுதிகளில் கடல் நீரின் உப்புத் தன்மை பற்றிய ஆய்வு.

6. இராமநாதபுரம் மாவட்டம், தஇக்கப்பட்டி மற்றும் சுற்றியுள்ள இடங்களில் திருவாளர்கள் மதராஸ் சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் சுரங்கக் குத்தகை இடங்களில் உள்ள சுண்ணாம்புக் கல் இருப்பு பற்றிய மறு மதிப்பீட்டிற்கான ஆய்வு.

மேற்கூறிய அனைத்து ஆய்வுகளும் அவை முடிவு பெறாத காரணத்தால் 1984—85-ம் ஆண்டிலும் அவைகள் தொடர்ந்து நடத்தப்படும். 1984—85-ம் ஆண்டில் மேற்குறித்த ஆய்வுகள் தவிர கீழ்க்கண்ட சிறப்பு ஆய்வுகளையும் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

(1) தென்னாற்காடு மாவட்டம், மாமண்டூர் பகுதியில் காணப்படும் பல்வகை உலோக சல்பைடு படிவங்கள் பற்றிய மறு மதிப்பீட்டு ஆய்வு.

(2) தென்னாற்காடு மாவட்டத்தில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திடம் குத்தகைக்கு விடப்பட்டுள்ள பகுதிகள் தவிர இதர இடங்களில் உள்ள பழுப்பு நிலக்கரிக்கான சுரங்க துறப்பணப் பணியுடன் கூடிய விரிவான ஆய்வு.

(3) தமிழகத்திலுள்ள ஆபரணக்கற்கள் மேம்பாட்டுத் தொழிலை விரிவுபடுத்த மதிப்பு வாய்ந்த ஆபரணக் கற்கள், மற்றும் குறை மதிப்புடைய ஆபரணக் கற்கள் பற்றிய ஆய்வு. இந்தத் திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் வளர்ச்சிப் பணி திட்டத்தின்கீழ் உதவியைப் பெறுவதென உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(4) பெரியார் மாவட்டத்தின் சில பகுதிகளில் வெங்கக்கல் மற்றும் பெல்ஸ்பார் ஆகியவற்றுக்கான ஆய்வு.



(5) இராமநாதபுரம், மதுரை, திருச்சி மாவட்டங்களில் சிலபகுதிகளில் சுண்ணாம்புக் கற்களுக்கான விரிவான ஆய்வு.

(6) சேலம் மாவட்டம், சங்கரிக்கு அருகில் கந்தகம் சேர்ந்த கனிமப் பொருட்கள் இரசாயன ஆய்வுக்குச் சேகரித்தல் மற்றும் அவை பற்றிய விளைவானவை ஆய்வு.

(7) நீலகிரி மாவட்டத்தில் நிலச்சரிவு பற்றிய ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்ளல் (பொறியியல் சார்-புவியியல் ஆய்வுகள்).

(8) மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் உள்ள கனிம இருப்பு, சுற்றுப்புற சூழ்நிலை மற்றும் அம்மலைப்பகுதியில் மேம்பாடு ஆகியவற்றுக்கான ஆய்வுகளை நடத்துவதற்கான திட்டம். இத்திட்டத்திற்கு மத்திய அரசின் சுற்றுப்புறச்சூழ்நிலை துறையின் சிறப்பு நிதி உதவி திட்டத்தின்கீழ் அனுமதி வழங்கப்படவேண்டும்.

### கனிம மேம்பாட்டு ஆய்வுக் கூடம், சேலம்.

மாக்னைடைட், மாக்னசைட், சிலிகா மணல், சுண்ணாம்புக்கல் ஆகியத் தொழிற்கனிமங்களின் தரங்களை மேம்படுத்துவது குறித்த ஆய்வு. இந்த ஆய்வுக் கூடத்தில் ஸ்பான்ஜ் இரும்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான கனிம மேம்பாட்டுப்பணியைச் செய்யவும் தனி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இக்கூடத்தில் கனிம மேம்பாடு தொடர்பான இயந்திரங்கள் மற்றும் கருவிகள் நிறுவப்பட்டன. மின்சார மாற்றுக் கருவி (Transformer) பொருத்துவதற்கான வேலையும் முன்னேற்றம் அடைந்துள்ளது. அரசுத் துறையைச் சேர்ந்த இந்த ஆய்வுக் கூடத்தில் தமிழ் நாடு மாக்னசைட் நிறுவனம் போன்ற அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையைச் சார்ந்த நிறுவனங்களால் (Entrepreneurs) அனுப்பப்பட்ட கனிம மாதிரிகள் இராசாயனப் பரிசோதனைகள் செய்யப்பட்டு உரிய கட்டணம் பெறப்பட்டபின் ஆய்வு அறிக்கைகள் அவர்களுக்குத் தரப்பட்டு வருகிறது.

### கனிம நிர்வாகப் பணி.

(1) மாநில அளவில் கனிம மற்றும் சுரங்க நிர்வாகத் தொடர்பினாலும் மாநில மற்றும் மத்திய அரசினால் வகுக்கப்பட்ட நெறிமுறைகளாலும் மற்றும் அவ்வப்போது வழங்கப்பட்ட அறிவுரைகளாலும் நீதி மன்றங்களினால் அவ்வப்போது வழங்கப்பட்ட கனிமம் மற்றும் சுரங்கங்கள் தொடர்புடைய

2.2. கடந்த மூன்றாண்டுகளில் தமிழக சர்க்கரை ஆலைகளில் பிழியப் பட்ட கரும்பின் அளவு, உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு, மற்றும் சர்க்கரை கட்டுமானம் போன்ற விபரங்களும், 1984—84 ஆம் ஆண்டுக்கான திறனையும் கொண்ட விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| வரிசை எண்ணும் சர்க்கரை ஆண்டும் | பிழியப் பட்ட கரும்பின் அளவு | உற்பத்தி செய்யப் பட்ட சர்க் கரையின் அளவு | சர்க்கரை கட்டு மானம் | நிறுவிய பிழிதிறனை பயன் படுத்திய அளவு |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (இலட்சம் டன்களில்) | | (விழுக்காடுகள்) | |
| 1. 1980-81 | 49.54 | 4.30 | 8.67 | 69 |
| 2. 1981-82 | 85.93 | 7.55 | 8.78 | 120 |
| 3. 1982-83 | 72.02 | 6.51 | 9.04 | 101 |
| 4. 1983-84 | 47.73 | 4.38 | 9.18 | 63 |

2.3. 1981-82 ஆம் ஆண்டில் கரும்பு உற்பத்தி மிகவும் அதிகமாக இருந்த தால், தமிழக ஆலைகள் மொத்தம் 85.93 இலட்சம் டன்கள் கரும்பு பிழியும் சாதனை அளவை அடைய முடிந்தது. ஆயினும் 1982-83 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக 1983-84 சர்க்கரை ஆண்டில் 47.73 இலட்சம் டன்கள் கரும்பு மட்டுமே பிழிய இயலும் என எதிர்பார்க்கப்படு கிறது.

2.4. 1982-83 ஆம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி 6.51 இலட்சம் டன்களாக இருந்தது. ஆனால் 1983-84 ஆம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி 4.38 இலட்சம் டன்கள் மட்டுமே எதிர்பார்க்கப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடும் வறட்சியினால் கரும்பு கிடைக்கும் அளவு குறைந்தபடியால் சர்க்கரை உற்பத்தியும் குறைந்துள்ளது.

### 3. கரும்பின் விலை.

3.1. 1982-83 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு 8.5 சதவிதம் அல்லது அதற்குக் குறைவான சதவிகித சர்க்கரை சத்துடைய கரும்பின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 130 என மத்திய அரசு நிர்ணயம் செய்தது. இவ் விலை அதற்கு முன் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு சமமான தொகையாகும். கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகள், வேளாண்மை இடு



பொருள் விலை, மற்றும் கூலி உயர்வு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு 8.5 சதவிதம் அல்லது அதற்குக் குறைந்த சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 155 என 1982—83 ஆம் ஆண்டுக்கு தமிழக அரசு விலை நிர்ணயித்தது. சர்க்கரைக் கட்டுமானம் 6.5 சதவிகிதத்திற்கு கூடுதலாக இருப்பின் 0.1 விழுக்காடுக்கு 18.2353 பைசா விதம் பிரிமியமாக வழங்கவும் சர்க்கரை ஆலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. கரும்பு உற்பத்தி யாளருக்கு கடந்த ஆண்டு கொடுக்கப்பட்ட விலை அல்லது 1982-83 ஆம் ஆண்டிற்கு அரசு அறிவித்த விலையான டன்னுக்கு ரூ. 155 இதில் எது அதிகமோ அதனை வழங்க வேண்டுமென 1983 மார்ச் திங்களில் ஆணையிடப் பட்டுள்ளது. அவ்விதம் 1983-83 ஆம் ஆண்டில் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்படும் விலை அதற்கு முந்தைய ஆண்டில் வழங்கப்பட்ட விலையை காட்டிலும் குறைவாயிருந்தால் அவ்விதம் குறைவுபடும் தொகையை மாநில அரசு உதவித் தொகையாக வழங்கியது.

3.2. மத்திய அரசு 1983-84 ஆம் ஆண்டுக்கு 8.5 சதவிதம் அல்லது அதற்குக் குறைவான சர்க்கரைக் கட்டுமானம் உடைய கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 135 என்று விலை நிர்ணயித்துள்ளது. கரும்பு சாகுபடிச் செலவு அதிகரிப்பின் காரணமாக எழுந்த விவசாயிகளின் கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு தமிழ்நாடு அரசு 8.5 சதவிதம் அல்லது அதற்குக் குறை வான சர்க்கரைச் சத்துடைய கரும்பிற்குக் குறைந்த அளவு விலை, டன் ஒன்றுக்கு ரூ. 160 எனவும், சர்க்கரைச் சத்து 8.5 சதவிதத்திற்கு மேற்படும் பொழுது ஒவ்வொரு 0.1 சதவிதத்திற்குக் குவிண்டால் ஒன்றுக்கு 18.8235 பைசா விதமும் வழங்க சர்க்கரை ஆலைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

### 4. கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டம்.

ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் தாம் அரவை செய்யும் கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ. 5 விதம் கரும்பு மீதான மேல்வரி (செஸ்) அரசுக்குச் செலுத்து கின்றன. மேற்படி தொகை கரும்பு வளர்ச்சிக்கான ஆராய்ச்சி, சர்க்கரை ஆலைகள் அமைந்துள்ள பகுதிகளில் புதிய சாலைகள் அமைத்தல், மற்றும் தற்போதுள்ள சாலைகளைப் பராமரித்தல் போன்ற இனங்களுக்குச் செலவிட படுகின்றது. 1983-84 ஆம் ஆண்டில் கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்குச் செலவிட ரூ. 250 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

[1984 மார்ச் 28

5. சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம்.

தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழில் நுட்ப பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கவும், ஆலோசனை மற்றும் விரிவாக்கப் பணிகளுக்காகவும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும் தமிழ்நாடு அரசு 1979 ஆம் ஆண்டில் சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவியது. இந் நிறுவனம் சர்க்கரை ஆலைகளில் பணி புரியும் தொழில் நுட்ப பணியாளர்களுக்கு சர்க்கரை உற்பத்தி பற்றி பயிற்சி அளித்து வருகிறது.

6. தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் (டான்சர்):

6.1. புதிய சர்க்கரை ஆலைகள் பொதுத் துறையிலேயே நிறுவப்பட வேண்டும் என 1974 ஆம் ஆண்டில் அரசு எடுத்த கொள்கை முடிவிற்கேற்ப, தமிழ்நாடு, சர்க்கரை நிறுவனம் 1974 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

6.2. தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்தின் கீழ் பொதுத் துறையில் கீழ்க் கண்ட ஆலைகள் இயங்கி வருகின்றன.

(1) அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, குருங்குளம், தஞ்சாவூர் மாவட்டம்.

(2) ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை, எரையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

6.3. ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலையும், அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையும் 1982-83 ஆம் ஆண்டில் தமது நிறுவிய பிழிதிறனில் முறையே 84 61 சதவீதம் மற்றும் 106.35 சதவீத அளவுக்கு உற்பத்தித் திறனைப் பயன் படுத்தியுள்ளன.



1984 மார்ச் 28]

7. சர்க்கரை உற்பத்தியுடன் இணைந்த மின்சாரம் தயாரிக்கும் திட்டம் (கோ ஜெனரேஷன் பிளாண்ட்)

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் உயர் அழுத்த கொதிகலன்களை பயன் படுத்தி, மின்சாரம் தயாரித்து அதன் மூலம் கிடைக்கும் உபரி மின்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது போன்ற இரண்டு திட்டங்களில் ஒன்று தர்மபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை யிலும் மற்றொன்று கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையிலும் ஒவ் வொன்றும் ரூபாய் 900 இலட்சம் செலவில் நிறுவப்பட உள்ளது. மின்சாரம் தயாரிக்கும் வழக்கமான முறையிலிருந்து மாறுபட்ட முறையில் மின்சாரம் தயாரிப்பதற்கான வகையில் இத்திட்டம் அமைந்துள்ளதால் மத்திய அரசு இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

8. வேலை வாய்ப்பு

சர்க்கரை தொழில் பெருமளவில் நேரடி வேலைவாய்ப்பு அளிப்பதோடு சர்க்கரை ஆலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் பல்லாயிரக் கணக் கான மக்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பு வழங்கி வருகின்றது. தமிழகத் தில் தற்போது இயங்கி வரும் சர்க்கரை ஆலைகளில் சுமார் 18 ஆயிரம் பேர் நேரடிப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இணைப்பு.

தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளின் அரவைத் திறன் அளவு, பிழிந்த கரும்பின் அளவு உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு மற்றும் சராசரி சர்க்கரை கட்டுமானம் பற்றிய விவரம்.

| வரிசை எண்ணும் சர்க்கரை ஆலைகளின் பெயரும். | 1982–83 பருவத்தில் நாள் ஒன்றுக்கு பிழிதிறன். | 1981-82 பிழியப்பட்ட கரும்பின் அளவு. | 1981-82 உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு. | 1981-82 சராசரி சர்க்கரை கட்டுமானம் (விழுக்காடுகளில்.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (டன்களில்) | | (டன்களில்) | |
| (அ) கூட்டுறவுத் துறை— | | | | |
| 1 ஆம்பூர் .. .. .. | 2,200 | 3,03,935 | 29,271 | 9.63 |
| 2 மதுராந்தகம் .. .. | 1,750 | 3,62,345 | 31,390 | 8.66 |
| 3 அமராவதி .. .. .. | 2,000 | 3,80,068 | 35,535 | 9.35 |
| 4 சேலம் .. .. .. | 3,500 | 5,28,367 | 46,968 | 8.89 |
| 5 கள்ளக்குறிச்சி .. .. | 2,000 | 3,64,669 | 32,026 | 8.78 |
| 6 நேஷனல் .. .. .. | 1,500 | 3,08,295 | 28,996 | 9.41 |
| 7 தருமபுரி .. .. .. | 1,250 | 2,64,287 | 25,581 | 9.68 |
| 8 வேலூர் .. .. .. | 1,250 | 3,14,128 | 27,395 | 8.72 |
| 9 திருப்பத்தூர் .. .. .. | 1,250 | 2,30,380 | 21,936 | 9.58 |
| 10 செங்கல்ராயன் (உளுந்தூர்பேட்டை) | 1,250 | 3,12,116 | 25,628 | 8.22 |
| கூட்டுறவு மொத்தம் .. | 16,950 | 33,68,590 | 3,04,726 | 9.04 |



இணைப்பு—தொடர்ச்சி.

தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளின் அரவைத் திறன் அளவு, பிழிந்த கரும்பின் அளவு, உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு மற்றும் சராசரி சர்க்கரை கட்டுமானம் பற்றிய விவரம்—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும் சர்க்கரை ஆலைகளின் பெயரும். | 1982-83 பிழியப்பட்ட கரும்பின் அளவு. | 1982-83 உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு. | 1982-83 சராசரி சர்க்கரை கட்டுமானம். (விழுக்காடுகளில்). |
|---|---|---|---|
| | (6) | (7) | (8) |
| | (டன்களில்) | (டன்களில்) | |
| (அ) கூட்டுறவுத் துறை : | | | |
| 1 ஆம்பூர் .. .. .. .. .. | 3,08,728 | 30,765 | 9.97 |
| 2 மதுராந்தகம் .. .. .. .. | 3,33,199 | 30,274 | 9.09 |
| 3 அமராவதி .. .. .. .. .. | 3,31,813 | 29,401 | 8.86 |
| 4 சேலம் .. .. .. .. .. | 5,87,299 | 52,237 | 8.89 |
| 5 கள்ளக்குறிச்சி .. .. .. .. | 3,14,455 | 28,172 | 8.96 |
| 6 நேஷனல் .. .. .. .. .. | 3.02,565 | 27,791 | 9.19 |
| 7 தருமபுரி .. .. .. .. .. | 2,57,267 | 25,249 | 9.81 |
| 8 வேலூர் .. .. .. .. .. | 2,68,299 | 22,598 | 8.42 |
| 9 திருப்பத்தூர் .. .. .. .. | 2,01,813 | 18,352 | 9.09 |
| 10 செங்கல்வராயன் (உளுந்தூர்பேட்டை) .. | 2,11,986 | 19,007 | 8,97 |
| கூட்டுறவு மொத்தம் .. .. | 31,17,424 | 2,83,846 | 9.11 |

| வரிசை எண்ணும், சர்க்கரை ஆலைகளின் பெயரும். | 1982-83 பருவத்தில் நாள் ஒன்றுக்கு பிழிதிறன். | 1981-82 பிழியப்பட்ட கரும்பின் அளவு (டன்களில்). | 1981-82 உற்பத்தி செய்த சர்க்கரை அளவு. | 1981-82 சராசரி சர்க்கரை கட்டுமானம் (விழுக்காடுகளில்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (ஆ) தனியார் துறை : | | | | |
| 11. ஈ. ஐ. டி. பாரி.. | 4,000 | 7,57,226 | 61,080 | 8.07 |
| 12. டெக்கான் | 1,850 | 4,05,344 | 34,347 | 8.53 |
| 13. சவுத் இந்தியா | 2,700 | 4,04,145 | 32,368 | 8.01 |
| 14. அருணா | 4,000 | 6,96,353 | 60,831 | 8.74 |
| 15. சக்தி .. | 4,000 | 11,21,964 | 1,04,305 | 9.30 |
| 16. மதுரா* | 800 | 2,03,101 | 15,402 | 7.58 |
| 17. கோத்தாரி | 2,000 | 3,99,363 | 34,808 | 8.72 |
| 18. திரு ஆரூரான் | 2,000 | 3,21,029 | 27,518 | 8.57 |
| தனியார் துறை மொத்தம் | 21,350 | 43,08,525 | 3,70,659 | 8.60 |



| | | | |
|---|---|---|---|
| (ஆ) தனியார் துறை : | | | |
| 11. ஈ. ஐ. டி. பாரி.. | 5,56,020 | 46,635 | 8.39 |
| 12. டெக்கான் | 4,24,633 | 34,677 | 8.17 |
| 13. சவுத் இந்தியா | 3,59,570 | 30,187 | 8.40 |
| 14. அருணா | 5,83,381 | 55,164 | 9.46 |
| 15. சக்தி .. | 8,03,716 | 79,295 | 9.87 |
| 16. மதுரா* | 1,09,778 | 7,679 | 7.00 |
| 17. கோத்தாரி | 3,00,464 | 27,098 | 9.02 |
| 18. திரு ஆரூரான் | 3.05,994 | 27,856 | 9.10 |
| தனியார் துறை மொத்தம் | 34,43,556 | 3,08,591 | 8.96 |

| வரிசை எண்ணும், சர்க்கரை ஆலைகளின் பெயரும் | 1982-83 பருவத்தில் நாள் ஒன்றுக்கு பிழிதிறன் | 1982-83 பிழியப்பட்ட கரும்பின் அளவு (டன்களில்) | 1982-83 உற்பத்தி செய்த சர்க்கரை அளவு | 1982-83 சராசரி சர்க்கரை கட்டுமானம் (விழுக்காடுகளில்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (இ) பொதுத் துறை : | | | | |
| 19. தஞ்சாவூர் .. .. .. | 1,250 | 3,24,780 | 27,007 | 8.32 |
| 20. பெரம்பலூர் .. .. .. | 1,250 | 3,03,133 | 27,345 | 9.02 |
| பொதுத் துறை மொத்தம் .. | 2,500 | 6,27,913 | 54,352 | 8.65 |
| (ஈ) மைய அரசின் நிர்வாகத்தில் உள்ளது : | | | | |
| 21. காவேரி .. .. .. | 1,250 | 2,87,998 | 25,333 | 8.79 |
| மொத்தம் .. .. | 1,250 | 2,87,998 | 25,333 | 8.79 |
| தமிழ்நாடு மொத்தம் .. | 42,050 | 85,93,026 | 7,55,070 | 8.78 |

*இந்த ஆலை 1983ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இவ்வரசால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.



| | | |
|---|---|---|
| 2,03,837 | 18,624 | 9.14 |
| 2.28,644 | 22,106 | 9.67 |
| 4,32,481 | 40,730 | 9.42 |
| 2,08,997 | 17,834 | 8.53 |
| 2,08,997 | 17,834 | 8.53 |
| 72,02,458 | 6,51,001 | 9.04 |

[1984 மார்ச் 28

## தமிழ்நாடு பீங்கான் நிறுவனம்.

இம்மாநிலத்தில், பீங்கான் தொழிலின் ஒருமித்த வளர்ச்சிக்காக, பீங்கான் சம்பந்தப்பட்ட 8 தொழில் பிரிவுகளைக் கொண்டு தமிழ்நாடு பீங்கான் நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. இத்தொழில் பிரிவுகள் பெரும்பாலும் தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள விருத்தாசலத்தில் அமைந்துள்ளன. இந் நிறுவனத்தின் தொழிற்பிரிவுகளில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு பொருட்கள் பற்றிய விவரம் வருமாறு :

| தொழிற் பிரிவுகள். | உற்பத்தி செய்யப் படும் பொருட்கள். |
| --- | --- |
| **அ. வர்த்தகப் பிரிவுகள் :** | |
| 1. டாசல் பீங்கான் தொழிலகம், விருத்தாசலம். | துப்புரவு சாதனங்கள். பீங்கான் கோப்பை, தட்டுவகை மற்றும் பீங்கானிலான மின் காப்புப் பொருட்கள். |
| 2. டாசல் கற்குழாய் தொழிலகம், விருத்தாசலம். | கற்குழாய் மற்றும் அதன் சிறப்பு வகைகள். |
| 3. டாசல் இயந்திரச் செங்கற் சூளை, திருமழிசை. | கம்பி அறுவை வகை செங் கற்கள் (Wire cut Brikes |
| **ஆ. பீங்கான் தொழில் வளர்ச்சி நோக்குடைய பிரிவுகள்:** | |
| 4. பீங்கான் தொழிற்பேட்டை, விருத்தாசலம் (முகவர் அடிப் படையில் நடத்தப்படுவது). | .. |
| 5. டாசல் பீங்கான் பணிவசதி நிலையம், விருத்தாசலம். | .. |
| **இ. பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு நோக்கில் நடத்தப்படும் பிரிவுகள்-** | |
| 6. டாசல் கலைப் பொருள் நிலை யம், விருத்தாசலம். | கலை வண்ணமுள்ள பீங் பாண்டங்கள். |
| 7. டாசல் பீங்கான் மையம், ஓமலூர். | பல்வகை வடிவமைப் புள்ள ஊறுகாய்ஜாடி கள் மற்றும் வெப்பந் தாங்கிச் செங்கற்கள். |



1984 மார்ச் 28]

விருத்தாசலத்தில் உள்ள பீங்கான் தொழிற்பேட்டை பீங்கான் சிறு தொழில் முனைவோர்கட்கு குறைந்த வாடகையில் தொழிற் கூடங்களை அளிக்கிறது. இத்தொழில் முனைவோர்களுக்கு பதப்படுத்தப்பட்ட மூலப் பொருட்களை வழங்குவது மூலமாகவும் அவர்களது உற்பத்திப் பொருட்களை நவீன சுரங்கச் சூளையில் சுட்டு கொடுப்பது மூலமாகவும் அந்த பகுதியில் பீங்கான் தொழில் வளர்ச்சி பெற பீங்கான் பணி வசதி நிலையம் பேருதவி புரிகிறது.

டாசல் நிறுவனத்தால் பயிற்சி நோக்கில் நடத்தப்படும் இரு தொழில் பிரிவுகள் குறைந்த படிப்பறிவுடைய கிராமப்புற இளைஞர்களுக்கு பீங்கான் பொருட்களின் மாதிரி வடிவமைப்பு மற்றும் உற்பத்தி பற்றிய தொழில் நுணுக்க உத்திகளில் பயிற்சி அளித்து வருகிறது. ஓமலூரில் உள்ள பீங்கான் பாத்திரம் உற்பத்தி செய்யப்படும் ஊறுகாய் ஜாடிகளும் திருமழிசை இயந் திரச் செங்கற் சூளையில் உற்பத்தியாகும் கம்பி அறுவை வகை செங்கற்களும் தரத்தில் சிறந்தவையாக பெயர்பெற்றுள்ளன.

அண்டை மாநிலங்களில் விற்பனையை விரிவாக்கும் நோக்கத்துடன் டாசல் நிறுவனம் பெங்களூரிலும், எர்ணாகுளத்திலும், விற்பனை நிலையங் களை நடத்தி வருகிறது.

டாசல் நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்கள் நியாயமான விலையுடன் தரத்தில் சிறந்தவையாகவும் இருப்பதால் இம்மாநிலத்திலும் வெளி மாநிலங் களிலும் அங்காடியில் பெரும் மதிப்பைப் பெற்றிருக்கின்றன. இந்நிறுவனம் சுமார் 1,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

1982—83 ஆம் ஆண்டில் டாசல் நிறுவனத்தில் அனைத்து தொழிற் பிரிவு கள், மொத்தம் ரூ. 221.71 இலட்சம் மதிப்புடைய பொருட்களை உற்பத்தி செய்தன. நடப்பு ஆண்டான 1983—84ல் அவற்றின் மொத்த உற்பத்தி மதிப்பு ரூ. 225.79 இலட்சமாகும். இந்த ஆண்டில் மின்வெட்டு, நிலக்கரி விநியோகத்தில் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் ஏற்பட்ட போதிலும், இந்நிறுவனம் தன் உற்பத்தியளவை நிலை நிறுத்தியுள்ளது.

1982-83 ஆம் ஆண்டில் டாசல் நிறுவனத்தின் நிகர இழப்பு ரூ. 20.61 இலட்சம் ஆகும். 1983—84 ஆம் ஆண்டிலும் இந்நிறுவனத்திற்கு சுமார் ரூ. 20 இலட்சம் நிகர இழப்பு ஏற்படும் என திட்டமிடப்பட்டுள்ளது.

டாசல் நிறுவனத்தின் நிதி நிலைமையை
இயக்கும் பொருட்டும், இந்நிறுவனத்தை
துரைக்கப்பட்ட சில நடவடிக்கைகள் அரசின் ட

[1984 மார்ச் 28

1984-85 ஆம் ஆண்டில் ரூ. 30 இலட்சம் செலவில் திருமழிசை இயந்திரச் செங்கற் சூளையை புதுப்பிக்கவும், விருத்தாசலம் பீங்கான் தொழிலகம், ஓமலூர் பீங்கான் மையம், மற்றும் விருத்தாசலம் பீங்கான் கலை நிலையம் ஆகிய தொழிற் பிரிவுகளில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்தவும் டாசல் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் டாசல் நிறுவனத்தின் இழப்புகளை பெருமளவில் குறைக்கும் நோக்குடையது.

## நலிவுற்ற தொழில் நிறுவனங்களுக்கு உதவி அளித்தல்.

நலிவுற்ற தொழில் நிறுவனங்கள் புத்துயிர் பெற்று மீண்டும் இயங்குவதற்கு உதவும் வகையிலும், அவைகளை கலைப்பதற்கான நடவடிக்கைகளை, தவிர்க்கும் பொருட்டும், தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக வேலை வாய்ப்பு அளிப்பதற்காகவும், 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிவாரணம் தேவைப் படுகின்ற நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்தின் விதிகளின் கீழ் இந் நிறுவனங்களை விடுப்பு நிறுவனங்களாக அரசு அறிவிக்கின்றது. விடுப்பு நிறுவனங்கள் நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் உதவியுடன் மீண்டும் புத்துயிர் பெற்று இயங்குவதற்கு இச்சட்டம் வழி செய்கிறது. இச்சட்டத் தின் கீழ் விடுப்பு நிறுவனங்களுக்கு கடன் கொடுத்தவர்களின் பிடியிலிருந்து சிறிது காலத்திற்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மற்றும் தொழிலாளர் களுக்கு தொடர்ச்சியாக வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது. மேலும் விடுப்பு நிறுவனங்களாக அறிவிக்கப்பட்டவை, பின்வருமாறு :— திருவாளர்கள் :

1. ஒமேகா கேபிள்ஸ் லிமிடெட், சென்னை.
2. தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் லிமிடெட் (முன்னாள் லாஸ்—ர்—கோ ஸ்டீல்ஸ் லிமிடெட்), தர்மபுரி.
3. சதர்ன் ஸ்விட்ச்கியர்ஸ் லிமிடெட், சென்னை.
4. சௌத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் தொழிற்சாலை, சேலம்.
5. தமிழ்நாடு எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட், ஓசூர்.
6. மதராஸ் மெஷின் டூல்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.
7. அருணா லெதர்ஸ் அண்டு எக்ஸ்போர்ட் லிமிடெட், சென்னை.
8. காவேரி ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட், புதுக்கோட்டை.
9. மீனாட்சி மில்ஸ் லிமிடெட், மதுரை.
10. பிளாஸ்டிக் ரேஸின்ஸ் அண்டு கெமிகல்ஸ் லிமிடெட், சாருபுரம், திருநெல்வேலி.
11. சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ், இராமநாதபுரம்.
12. மாருதி கிரிஸ்டல் சால்ட் கம்பெனி லிமிடெட், சென்னை.



1984 மார்ச் 28]

13. சதர்ன் ஹைட்ரோ கார்பன் லிமிடெட், உடுமல்பேட்டை.
14. ஜெயலட்சுமி மில்ஸ் பிரைவேட் லிமிடெட், சிங்கநல்லூர்.
15. மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் லிமிடெட், மதுரை.
16. ஸ்ரீஹரி மில்ஸ் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர்.

பின்வரும் நிறுவனங்களுக்கு அவற்றின் நடைமுறை மூலதனத்திற்காக வங்கிகள் வழங்கிய கடன்களுக்கு மாநில அரசு உத்தரவாதம் அளித்துள்ளது :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. சௌத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் ஒர்க்ஸ் லிமிடெட், சேலம் | 14.35 |
| 2. மது ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ், கோயம்புத்தூர் | 30.00 |
| 3. மீனாட்சி மில்ஸ், மதுரை | 56.00 |
| 4. பின்னி லிமிடெட், சென்னை | 100.00 |
| 5. இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட், சென்னை | 47.00 |
| 6. ஜெயலட்சுமி மில்ஸ் பிரைவேட் லிமிடெட், சிங்கநல்லூர் | 30.00 |
| 7. ஜோதி மில்ஸ், கோயம்புத்தூர் | 50.00 |

நலிவுற்ற தொழிற் பிரிவுகள் விற்பனை வரி பாக்கிகளையும், பயன்படுத்திய மின்சாரத்திற்கான கட்டணங்களையும் சுலப தவணைகளில் கட்டவும் அரசு அனுமதி வழங்குகிறது. இத்தொழிற்பிரிவுகள் உற்பத்தி செய்யும் பொருட் களை மத்திய, மாநில அரசு நிறுவனங்கள் முதலியவற்றிற்கு விற்பனை செய்ய அரசு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உதவி செய்கிறது. மேலும், இதற்கான விற்பனை விலைச் சலுகைகளையும் அளிக் கின்றது.

மேற்கு வங்காளம் மற்றும் மஹாராஷ்டிர மாநிலங்களில் செய்துள்ளது போல் இம்மாநிலத்திலும் தமிழ்நாடு நிவாரண உதவிபெறுகின்ற நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்தின் பிரிவு 3-ல் நிவாரணம் தேவைப்படும் நிறுவன மாக அறிவிக்கும் காலவரம்பு 10 ஆண்டுகளிலிருந்து 15 ஆண்டுகளாக மாற்ற ஒரு வரைவு மசோதாவை இச்சட்டப் பேரவைக் கூட்டத்தில் வைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பின்வரும் நிறுவனங்கள் எந்த அளவில் பயனடைந்துள்ளன என்று கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

**1. சௌத் இந்தியா கிளாஸ் அண்டு எனாமல் ஓர்க்ஸ் லிமிடெட், சேலம்.**

கண்ணாடி குவளைகள், கூஜாக்கள், விளக்கு பாகங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்து வந்த இந்நிறுவனம் 10—12—1976 முதல் நிதி இடர்ப்பாடுகள் காரணமாக மூடப்பட்டது. இதனால் 500 தொழிலாளர்கள் வேலையை இழந்தனர். 1983 ஆம் ஆண்டு இந்நிறுவனம் ரூ. 3.78 இலட்சங்கள் நட்டமடைந்தது. 1974 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் இலாபத்தில் இயங்கியது. ஆனால் மீண்டும் 1975-ல் நட்டத்தில் இயங்கியது. இந்நிறுவனத்தை திறப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு இதனை ஆராய்ந்து கடைசியாக 13—10—1977 முதல் இந்நிறுவனம் ஒரு விடுப்பு நிறுவனமாக அறிவிக்கப்பட்டது. மேலும் புத்துயிர் பெறுவதற்காக இந்நிறுவனம் வங்கியிடம் கடனாக பெற்றுள்ள ரூ 14.35 இலட்சங்களுக்கு உத்தரவாதம் அளித்துள்ளது. இதன் காலவரை தற்போது மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது மேலும் இந்நிறுவனம் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு கொடுக்க வேண்டிய பாக்கித் தொகைகளுக்கு குறிப்பிட்ட காலவரையறையை மேலும் ஒத்திப்போடுமாறு கேட்டுக் கொண்டுள்ளது. இத் தொழிற்சாலை 26—10—1980-ல் மீண்டும் திறக்கப்பட்டு 5—9—1981 திரும்பவும் மூடப்பட்டு விட்டது. இந்நிறுவனத்தை விடுப்பு நிறுவனமாக அறிவிக்கப்பட்ட காலவரம்பு மேலும் நீட்டிக்கப்பட்டு கடைசியாக 14—4—1984 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலையை எடுத்து நல்ல முறையில் நடத்துவதற்காக இதனை ஒரு தொழிலதிபரிடம் ஒப்படைப்பதற்கான சாத்தியக் கூறுகளை தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (டி.ஐ.ஐ.சி.) ஆராய்ந்து வருகிறது.

**2. தமிழ்நாடு எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம், ஓசூர்.**

இந்நிறுவனம் முதன் முறையாக 25—11—1980 முதல் ஓர் ஆண்டிற்கு நிவாரணம் தேவைப்படும் நிறுவனமாக அறிவிக்கப்பட்டது. மேலும் இந்த கால வரம்பு நீட்டிக்கப்பட்டு கடைசியாக 24—11—1984 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் செயலாக்கம் 31—3—1981 வரையிலான காலவரையில் நடந்ததைவிட 31—3—1982 முடிய முன்னேற்றம் அடைந்துள்ளது. இந்நிறுவனத்தில் உற்பத்தியான பொருட்கள் 1981-ல் 2 99 இலட்சங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஆனால் 1982-ல் ரூ. 10 57 இலட்சங்களாக உயர்ந்துள்ளது. மேலும், 1981-ல் ரூ. 10.22 இலட்சங்களாக



இருந்த நட்டம் 1982-ல் ரூ. 9.44 இலட்சங்களாக குறைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் இந்திய தொழில் புனரமைப்பு நிறுவனத்தின் நிதி உதவியுடன் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்தொழிற் சாலையின் செயலாக்கம் சீரான முறையில் முன்னேறி வருகிறது.

**3. மதராஸ் மெஷின் டூல்ஸ் மானுபாக்சுரர்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.**

இந்நிறுவனம் முதன்முறையாக 20—8—1981-ல் ஒரு நிவாரணம் தேவைப்படும் நிறுவனமாக அறிவிக்கப்பட்டு இதன் காலவரை 19—8—1984 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்நிறுவனத்தின் தொழிற்சாலை 27—10—1981-ல் திறக்கப்பட்டு, தொழிலாளர்கள் படிப்படியாக வேலைக்கு திரும்பினர்., இத்தொழிற்சாலையில் புனரமைப்பு திட்டத்தின் மூலம் கீழ்க்கண்டவாறு முன்னேற்றமடைந்துள்ளது :—

| உற்பத்தி. | | 1979-80. | 1980-81. | அக்டோபர் 1982, முதல் 31-3-1983 வரை. |
|---|---|---|---|---|
| லேத்துக்கள் .. | .. | 188 | 109 | 153 |
| வார்ப்புக்கள் .. | .. | .. | .. | 39 |
| | | | | மெ. டன் |
| டேனிடம்கார்ட் | .. | .. | .. | 1 |

இம் முன்னேற்றம் சீராக பராமரிக்கப்பட்டது. இந்நிறுவனம் வணிக வரி பாக்கியான ரூ. 2.30 இலட்சங்கள் மற்றும் தண்டத் தீர்வையாக ரூ. 0.50 இலட்சங்களை திரும்ப செலுத்தியுள்ளது. மேலும் தொழிலாளர்களின் வருங்கால சேமிப்பு நிதிக்கான ரூ. 1.33 இலட்சங்களும், மாநில தொழிலாளர்கள் இன்சூரன்ஸ் தொகையாக ரூ. 2.94 இலட்சங்களும் செலுத்தியுள்ளது. இதில் மீதி செலுத்த வேண்டிய தொகைகள் முறையே ரூ. 0.6 மற்றும் ரூ. 2.16 இலட்சங்களாகும் இந்நிறுவனம் தனது உற்பத்தியில் மேலும் முன்னேற்றமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[1984 மார்ச் 28

4. திருவாளர்கள் அருணா லெதர்ஸ் அண்' எக்ஸ்போர்ட்டு லிமிடெட், சென்னை.

இந்நிறுவனம் இராணிப்பேட்டையில் 1974-ம் ஆண்டு நிறுவப்பட்டு இதன் உற்பத்தி 1975-ல் துவங்கப்பட்டது. வெளிநாட்டுச் சந்தையில் தோலின் விலை இறக்கம் காரணமாகவும், பிற காரணங்களினாலும், ரூ. 49.80 இலட்சங்கள் நட்டமடைந்தது. இதனுடைய கடன் தொகையும் ரூ. 150.10 இலட்சங்களாக உயர்ந்தது. இந்நிறுவனத்தின் மூலதனத்தை பாதுகாக்கவும், மேலும் இந்நிறுவனம் முன்னேற்றமடைவதற்கும் 8—12—1982 நாளிட்ட அரசு ஆணை நிலை எண் 144-ல் முதல் முறையாக அரசு இதனை ஒரு நிவாரணம் தேவைப்படும் நிறுவனமாக ஆறு மாதங் களுக்கு அறிவித்தது. இதன் காலவரம்பு கடைசியாக மேலும் 30—4—1984 வரை நீடிக்கப்பட்டுள்ளது. கல்கத்தாவிலுள்ள போதார் நிறுவனம் இந்நிறு வனத்தை ஆரம்ப கட்டமாக ரூ. 30 இலட்சங்கள் செலுத்தி வாங்கியுள்ளது. இத்தொகையைக் கொண்டு இந்திய வங்கி, இந்நிறுவனம் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திடம் வாங்கியிருந்த கடன் பாக்கியை திரும்ப அளித்துள்ளது. இந்நிறுவனம் தற் பொழுது தொடர்ச்சியாக வேலை செய்துவருகிறது.

5. திருவாளர்கள் பிளாஸ்டிக் ரெசின்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட் திருநெல்வேலி.

திருவாளர்கள் பிளாஸ்டிக் ரெசின்ஸ் அண்டு கெமிகல்ஸ் நிறுவனம் தமிழ் நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தின் உதவியுடன் துவங்கப்பட்டது. இதனுடைய தொழிற்சாலை திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சாகுபுரத்தில் அமைந்துள்ளது. இது நாப்தா என்ற கூட்டுப்பொருளும், பி.வி.சி. ரெசினும் உற்பத்தி செய்கிறது. பல்வேறு காரணங்களினால் இந்நிறுவனம் 30—9—1978 வரை நட்டமடைந்துள்ளது. இதனுடைய மொத்த நட்டம் ரூ. 932 இலட்சங்களாகும். இந்நிறுவனம் சிக்கன முறையில் இயங்காததால் 1978-ம் ஆண்டில் பிப்ரவரியில் மூடப்பட்டது. இந்நிறுவனத்தின் துணை நிறுவனமான திருவாளர்கள் தாரங்கதாரா கெமிக்கல்ஸ் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வி. சி. எம். மைய மூலப்பொருளாகக்கொண்டு பி. வி. சி. ரெசின்ஸ் தயாரிக்கும் ஒரு செய்யதக்கமைக்கான அறிக்கை Feasibility repo t ஒன்றை மத்திய அரசிற்கு அனுப்பியது. மத்திய அரசும் அதற்கான ஒப்புதலை அளித்துள்ளது.



1984 மார்ச் 28]

இந்நிறுவனத்தின் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்நிறுவனத்தை ஓர் நிவாரணம் தேவைப்படும் நிறுவனமாக அரசு சட்டத்துறையின் ஆலோ சனையுடன் 20—8—1983 முதல் ஓர் ஆண்டிற்கு நிவாரணம் தேவைப்படும் நிறுவனமாக அறிவித்துள்ளது. இந்நிறுவனம் புத்துயிர் பெறுவதற்காக எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து தொழிற்சாலையை மீண்டும் துவக்கி நடத்தி வருகிறது.

மைய அரசு செய்த முதலீடுகள்.

கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மைய அரசு செய்த முதலீட்டுகள் 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைந்துள்ளது. இங்கு ஏற்பட்டுள்ள சமமின்மையை விரைவில் சரிசெய்யுமாறு மத்திய மாநில அரசை வற்புறுத்தி வருகிறது.

2. புதிய திட்டங்கள் உருவாகும் போதெல்லாம், புதிய திட்டங்களை இம்மாநிலத்தில் அமைக்குமாறு மாநில அரசு மத்திய அரசினை கேட்டுக் கொள்கிறது. எனினும், இம்மாநிலத்தில் மத்திய அரசு தொழிற்சாலைகள் 11 மட்டுமே உள்ளன. இவையனைத்தும் 1967 ஆம் ஆண்டிற்கு முன்னரே நிறு வப்பட்டவை. 1967 ஆம் ஆண்டிற்குப் பின்னர், மத்திய அரசின் நடுத்தர அளவிலான இரு திட்டங்கள் மட்டுமே இம்மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று தொழில் வளர்ச்சியில் பிற்பட்ட பகுதியாகிய இராணிப் பேட்டையில் ரூ. 32 கோடி முதலீட்டில் 1980-81 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ் லிமிடெட்டின் துணை சாதனங்கள் தயாரிக்கும் நிறுவனமாகும். மற்றொன்று சேலத்தில் ரூ. 157 கோடி முதலீட்டில் தொடங் கப்பட்ட துருப்பிடிக்காத உருக்குப் பொருள்களைத் தயாரிக்கும் தொழிற் சாலையாகும். இந்நிலையை மாற்றியமைக்க மத்திய அரசு தமிழ்நாட்டில் அதிக அளவு முதலீடு செய்து திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்பது தெளிவாகிறது.

3. இனி கலர் பாசிடிவ் பிலிம் திட்டத்தைத் தவிர, இந்துஸ்தான் புகைப் படச் சுருள் தயாரிப்பு நிறுவனத்தால் உதகமண்டலத்திலேயே எக்ஸ்-கதிர் தொழில் பிரிவுத் திட்டமும், காந்த நாடா தொழிற்சாலைத் திட்டமும், ஆகிய இவ்விரு திட்டங்களையும் அமைப்பதற்கு மத்திய அரசை நாம் வலியுறுத்தி வருகிறோம். நவீன யுத்த டாங்கிகள் தயாரிப்பதற்கான ஆவடி, கனரக டாங்கிகள் தயாரிக்கும் தொழிற்சாலையின் விரிவாக்கத் திட்டத்தை திருவள் ளுவர் வட்டத்தில் அமைக்குமாறு மத்திய அரசை நாம் வலியுறுத்தி வரு கிறோம்.

[1984 மார்ச் 28

மத்தியத் தொழில் துறைத் திட்டங்களின் சிறப்புக் கூறுகள் வருமாறு.

## இரயில் பெட்டித் தொழிற்சாலை, பெரம்பூர்.

இத்தொழிற்சாலை 1955 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை இத்தொழிற்சாலை மொத்தம் 13,974 இரயில் பெட்டிகளைத் தயாரித்துள்ளது. 1982—83 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட மொத்த இரயில் பெட்டிகள் மதிப்பு ரூ. 70 கோடியாகும். 1983—84 ஆம் ஆண்டில் தயாரிக்கப்படும் மொத்த இரயில் பெட்டிகளின் மதிப்பு ரூ. 74 கோடியாகும். இத்தொழிற்சாலை 1967 ஆம் ஆண்டில் 2 மீட்டர் கேஜ் இரயில் பெட்டிகளைத் தாய்லாந்து நாட்டிற்கு ஏற்றுமதி செய்து தனது ஏற்றுமதி வியாபாரத்தை சிறிய அளவில் தொடங்கியது. உயர்ந்த வேலைப்பாடு அமைந்த 359 இரயில் பெட்டிகளையும், வெவ்வேறு அளவுகளிலும், வடிவமைப்புகளிலும் வசதியான இருக்கைகளும் ஏனைய வசதிகளும் அடங்கிய 298 இரயில் பெட்டிகளையும் பர்மா, தைவான், தாய்லாந்து, ஜாம்பியா, டான்சானியா, பிலிப்பைன்ஸ், உகண்டா, வியட்நாம், நைஜீரியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து இந்நிறுவனம் எல்லா நாடுகளிலும் நற்பெயர் பெற்று தன் புகழை நிலைநாட்டியுள்ளது. இந்நிறுவனம் மொத்தம் சுமார் ரூ. 25.57 கோடி மதிப்புள்ள இரயில் பெட்டிகளை இதுவரை ஏற்றுமதி செய்துள்ளது.

## நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்.

இந்நிறுவனம், 14—11—1956 ஆம் நாளன்று அமைக்கப்பட்டது. இக்கழகத்தில் பின்வரும் தொழிற்சாலைகள் அடங்கியுள்ளன :—

(1) திறந்தவெளி பழுப்பு நிலக்கரி சுரங்கம்.

(2) அனல் மின் நிலையம்.

(3) இரசாயன உரத்தொழிற்சாலை.

(4) நிலக்கரிக் கட்டி தயாரிப்பு கரிம ஆலை.

(5) களிமண் சுத்திகரிப்பு ஆலை.

### 1. உற்பத்தி செய்யப்படும் இனங்கள்.

சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கும் பழுப்பு நிலக்கரி, அனல் மின் நிலையத்திற்கும், நிலக்கரிக் கட்டி தயாரிப்பு கரிம ஆலைக்கும், இரசாயன தொழிற்சாலைகளில் பயன்படுத்துவதற்குத் தேவைப்படும் நீராவியை உற்பத்தி செய்வதற்கும், மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின் சக்தி, நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தின் தேவைகளை பூர்த்தி செய்த பின்னர், தமிழ்நாடு மின் வாரியத்தின் மின்



1984 மார்ச் 28]

இணைப்பிற்கு அனுப்பப்படுகிறது. பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து வெட்டியெடுக்கப்படும் கச்சா வெள்ளைக் களிமண், களிமண் சுத்திகரிப்பு ஆலையில் செம்முறைப்படுத்தப்பட்டு, இதில் ஒரு பகுதி அளாக்கப்பட்டு, தொழிற்சாலைப் பயனுக்காக விற்பனை செய்யப்படுகிறது. லீக்கோ கரியும், நிலக்கரியும் தொழில் எரிபொருளாக விற்பனை செய்யப்படுகின்றன.

### 2. தொழிற்சாலைகளின் நிறுவுத்திறன் :

(1) சுரங்கம் .. ஆண்டொன்றிற்கு 6.5 மில்லியன் டன்.

(2) அனல் மின் நிலையம் .. 600 மெ. வா.

(3) உரத் தொழிற்சாலை ஆண்டொன்றிற்கு 1,52,000 டன் யூரியா.

(4) நிலக்கரிக்கட்டி தயாரிப்பு கரிம ஆலை .. 4,36,000 டன் நிலக்கரி (லீகோ நிலக்கரி).

(5) களிமண் சுத்திகரிப்பு ஆலை .. 6,000 டன் சுத்திகரிக்கப்பட்ட களிமண்.

நிலக்கரி கட்டி தயாரிப்பு கரிம ஆலையின் தார் உற்பத்திப் பொருள் பிரிவிலிருந்து பின்வரும் துணைப் பொருள்களும் பெறப்படுகின்றன :—

(1) தார்.

(2) நியூட்ரல் எண்ணெய்.

(3) கார்போலிக் அமிலம்.

(4) ஆர்தோ க்ரிசல்.

(5) எம். பி. க்ரிசல்.

(6) எக்ஸிலேனால்.

(7) எம். பி. பினாயில்.

3. 31—3—1983 ஆம் நாள் நிலவரப்படி முதலீடு செய்யப்பட்ட தொகை பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| பங்கு மூலதனம் | 49,882 |
| மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன் | 5,296 |
| தமிழ்நாடு அரசிடமிருந்து பெற்ற கடன் | 79 |

4. உடன்உழைப்பு மற்றும் ஏற்றுமதி—இல்லை.

(ரூபாய் இலட்சத்தில்)

1982—83 ஆம் ஆண்டில் எய்திய சாதனைகள்—

(1) பழுப்பு நிலக்கரி (எம்.டி.)

(2) மின் சக்தி (மில்லியன் யூனிட்டுகளில்) 64.01

மின் நிலையம் சம்பந்தப்பட்ட உற்பத்தி—72 சதவிகிதம். 3,333

(3) யூரியா (டன்கள்)

(4) லிகோ—நிலக்கரி (டி.) 1,01,311

(5) சுத்திகரித்த களிமண் (டி.) 1,73,11

3,040

1983 ஆம் ஆண்டின் சிறந்த உற்பத்தித் திறனுக்கான பரிசு நெய்வேலி அனல் மின் நிலையத்திற்கு என்.பி.சி. ஆல் வழங்கப்பட்டது.

பின்வரும் திட்டங்கள் குறித்த பணிகள் நடந்தேறி வருகின்றன :—

இரண்டாம் சுரங்கம் வெட்டுதல், 630 மெ.வா. திறனுள்ள இரண்டாம் அனல் மின் நிலையத்தை ஏற்படுத்துதல் ஆகியவை குறித்த பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றால் 5,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

1982-83 ஆம் ஆண்டில், ரூ. 47.44 கோடி ஆதாயத்தை இக் கழகம் ஈட்டியது.

இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட்.

டெலிபிரிண்டர்களையும், துணைக் கருவிகளையும் உற்பத்தி செய்வதற்காக, இத்தாலியிலுள்ள திருவாளர்கள் இங். சி. ஒலிவெட்டி (M/G.GM.c.) Obivetti) நிறுவனத்தின் உடனுழைப்புடன் 1960 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம் அமைக்கப்பட்டது. 1964 ஆம் ஆண்டிற்குள் ஆண்டொன்றிற்கு 1,500 டெலிபிரிண்டர் யூனிட்டுகளை உற்பத்தி செய்யும் உற்பத்தித் திறனை இந்நிறுவனம் தொடக்கத்தில் எட்டியது. இதன் உற்பத்தித்திறன் படிப்படியாக அதிகரித்தது. தற்போது இந் நிறுவனத்தின் நிறுவுத் திறன் ஆண்டொன்றிற்கு 8,500 யூனிட்டுகள் ஆகும். இத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 244 இலட்சமாகும். அஞ்சல்தந்தித் துறை, பாதுகாப்புப் பணிகள், இரயில்வே, விமானப்பணிகள், செய்தி நிறுவனங்கள் பத்திரிகைத் துறை, மற்றும் ஏனையபோரது தேவைகள் முழுவதையும் இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம் நிறைவு செய்கிறது.





8,500 டெலிபிரிண்டர் யூனிட்டுகளை உற்பத்தி செய்ய இலக்கிடப்பட்டது. ஆனால் இந்நிறுவனம் 1982-83 ஆம் ஆண்டில் 8,996 டெலிபிரிண்டர் யூனிட்டுகளை உற்பத்தி செய்தது. 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 98.6 இலட்சம் மதிப்புள்ள உதிரிப் பாகங்களையும் இந் நிறுவனம் உற்பத்தி செய்தது. 1983-84 ஆம் ஆண்டில், 6,264 முதன்மை இயந்திரங்களையும், ரூ. 57.9 இலட்சம் மதிப்புள்ள உதிரிப் பாகங்களையும் இந்நிறுவனம் உற்பத்தி செய்தது.

பல்திறப்படுத்தும் திட்டங்களில் ஒரு பகுதியாக, மின் தட்டச்சுப் பொறிகளையும், எலெக்ட்ரானிக் டெலிபிரிண்டர்ஸ்களையும் கணக்கிட்டுப் பொறி அமைப்புகளையும் தயாரிக்கும் பணியையும் மேற்கொள்ள இந்நிறுவனம் கருதியுள்ளது.

கிண்டியில் தற்போதுள்ள தொழிற்சாலையில் ஆண்டொன்றிற்கு 15,000 மின் தட்டச்சுப் பொறி உற்பத்தி செய்வதற்காக, இந்நிறுவனத்திற்கு தொழில் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டம், இத்தாலியிலுள்ள திருவாளர்கள் ஒலிவெட்டி நிறுவனத்தின் உடனுழைப்புடன் அமைக்கப்பட்டு வருகிறது. இந் நிறுவனம் 400 எஸ்.கே.டி. மின் தட்டச்சுப் பொறிகளின் பாகங்களை இறக்குமதி செய்து, அவற்றை ஒன்று சேர்த்து, அங்காடிகளில் விற்பனை செய்கிறது. தற்போது, சென்னை-32, கிண்டியிலுள்ள தொழிற்சாலையில் உற்பத்தி செய்து வருகிறது.

இந்நிறுவனம், ஒசூரிலுள்ள தனது புதிய தொழிற் பிரிவில் தற்போது உற்பத்தி செய்யப்படும் எலெக்ட்ரோ மெக்கானிக்கல் டெலிபிரிண்டர்களுக்குப் பதிலாக, எலெக்ட்ரானிக் டெலிபிரிண்டர்களை உற்பத்தி செய்யக் கருதியுள்ளது.

500 எண்ணிக்கை கொண்ட புள்ளி வரை மோடம் (Data Modams) என்ற சாதனத்தை உற்பத்தி செய்வதற்கான உரிமம் இந் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இப் பொருளைத் தயாரிப்பதற்கான தொழில் நுட்பம் இந் நிறுவனத்தால் வகுக்கப்பட்டுள்ளது.

இந்துஸ்தான் புகைப் படச் சுருள் தயாரிப்பு நிறுவனம், உதகமண்டலம்.

இந்துஸ்தான் புகைப் படச் சுருள் தயாரிப்பு நிறுவனம் 1960 ஆம் ஆண்டில் மத்திய அரசால் அமைக்கப்பட்டது. இந் நிறுவனம் 1967 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கியது.

[illegible] முறையில் 6·15 மில்லியன் சதுர மீட்டர் புகைப் படச் சுருள்களையும், காகிதத்தையும் தயாரிக்கும் திறனைப் பெற்றிருந்தது. இந்நிறுவனம் 1967 ஆம் ஆண்டில் வணிக முறையில் உற்பத்தியைத் [illegible]. இந்நிறுவனத்தில் செய்யப்பட்டுள்ள தனி மாற்றங்களையும் அளிக்கப்பட்டுள்ள வசதிகளையும் கருத்தில் கொண்டு, [illegible] 1981 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நிறுவு திறனை 7.7 மில்லியன் சதுர மீட்டராகத் திருத்தியமைத்தது. நிறுவுத் திறனை திருத்தியமைத்த பின்னர், இந்நிறுவனத்தின் மொத்தத் திறன், உதகமண்டலத்திலும், சென்னை அம்பத்தூர் தொழிற்சாலையின் ஒருங்கிணைந்த உற்பத்தியும் பெரிய படச் சுருள்களையும் சிறிய சுருள்களாக மாற்றும் உற்பத்தியும் 15.52[illegible] மி.ச.மீ. என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இந் நிறுவனம் நுட்பமான புகைப் படச் சுருள்களையும், காகிதத்தையும் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனத்தில் இரு தயாரிப்புப் பிரிவுகள் உள்ளன. ஒரு தயாரிப்புப் பிரிவு உதகமண்டலத்தில் உள்ளது. இங்கு எல்லா நிலைகளிலும் புகைப் படச் சுருள்கள்/காகிதம் தயாரிக்கும் பணி நடைபெறுகிறது. மற்றொன்று சென்னைக்கு அருகில் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் அமைந்துள்ள பணி நிறைவு செய்யும் தொழிற் பிரிவாகும். இங்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களைக் கொண்டு எக்ஸ் கதிர் படச் சுருள்களையும், கிராபிக் ஆர்ட் படச் சுருள்களையும் பணி நிறைவு செய்யும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

இந்நிறுவனத்தின் உற்பத்தியை இரு விரிவான வகைகளாகப் பிரிக்கலாம், அவையாவன :—

(அ) ஒருங்கிணைந்த உற்பத்தி—மூலப் பொருள்களிலிருந்து பணி நிறைவு பெற்ற பொருட்களை உற்பத்தி செய்யும் நிலை வரை;

(ஆ) பெரிய படச்சுருள்களை, சிறிய படச்சுருள்களாக மாற்றுதல், பெரிய படச்சுருள் வடிவில் இறக்குமதி செய்யப்பட்ட ஓரளவு பணி நிறைவு பெற்ற பொருள்களை முழுவதும் பணி நிறைவு செய்தல், ஒருங்கிணைந்த முறை மூலம் தயாரிக்கப்படுபவை;

(இ) சினி கலர் பாசிடிவ் படச்சுருள்—கருப்பு மற்றும் வெள்ளை.

சினி படச்சுருள், ஒலி நெகடிவ் படச்சுருள், மருத்துவ எக்ஸ் கதிர் படச் சுருள் புகைப்பட காகிதம்.

பெரிய படச் சுருள்களை சிறியதாக மாற்றி தயாரிக்கப்படுபவைகளில் பின் வருபவை அடங்கும்.



சினி கலர் பாசிடிவ் படச்சுருள் கருப்பு மற்றும் வெள்ளை.

அமெச்சூர் ரோல் திரைப்படச் சுருள் தொழில் எக்ஸ் கதிர் படச்சுருள் கிராபிக் ஆர்ட் படச்சுருள் வரைக் காகிதம். இது தவிர, எக்ஸ் கதிர் படச் சுருள்/கிராபிக் ஆர்ட் படச்சுருள்களுக்கான டெவலப்பர் கெமிகல்ஸ் தயாரிப்பதும் தயாரிப்புப் பணியின் ஒரு பகுதியாகும்.

இந்நிறுவனத்தின் சாதனைகள் பின்வருமாறு :—

| (1) | 1982-83 ஆம் ஆண்டில் உள்ளபடி நிலவரம். (2) | 1983-84 ஆம் ஆண்டில் உற்பத்தி (3) |
|---|---|---|
| | (இலட்சம்) | |
| உற்பத்தி அளவு (மி.மீ. 2) .. .. | 11.332 | 9.430 |
| மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) .. | 8,206 | 7,170 |
| விற்பனை .. .. .. .. | 8,351 | 5,960 |
| ஆதாயம் .. .. .. .. | 425 | 475 |

இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 1,632 இலட்சமாகும். இது தவிர 31—3—1983 ஆம் நாள் நிலவரப்படி இந்திய அரசிடமிருந்து வெளிப்பட்ட நீண்ட காலக் கடன் ரூ. 1,532 இலட்சமாகும்.

இந்நிறுவனத்தில் 31—1—1984 ஆம் நாள் நிலவரப்படி 3,118 பேர் பணி புரிகின்றனர். இவர்களில் 518 பேர் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் ஆவர். இது தவிர சிப்பம் செய்வதற்குரிய பொருட்கள், நேர்த்தியாக இரசாயன பொருட்கள், எந்திரப் பாகங்கள் ஆகியவற்றை வழங்குவதற்காக இந்நிறுவனம் ஏற்படுத்திய 27 துணைத் தொழில் பிரிவுகள் மூலமாக 1,000 பேர்களுக்கு மேலாக வேறு வகையில் வேலை வாய்ப்பை உருவாக்கியுள்ளது. அரசு ஒப்புதலளித்த ரூ. 200 இலட்சம் மதிப்பிட்ட செலவில் உள்நாட்டு படச்சுருள்களுக்கு மேற்பூச்சு செய்யும் தொழிற் பிரிவில் சாதனங்களை நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. இத்தொழிற்சாலை 1984 மார்ச்சுக்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழிற்சாலை செயல்படத் தொடங்கியவுடன், படச் சுருள்களை ஒருங்கிணைந்த முறையில் உற்பத்தி செய்வதைத் தவிர கூடுதலாக 1.8 மில்லியன் சதுர மீட்டர் எக்ஸ் கதிர் படச் சுருள்களையும் தயாரிக்கும். இது மேலும் 192 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்.

**விரிவாக்கத் திட்டங்கள் :**

ரூ. 197 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் முழு ஆராய்ச்சி மேம்பாட்டு நிலையம் அமைப்பதற்கான திட்டம் குறித்த பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டம் 1984 மார்ச்சுக்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்தின் மூலம் கூடுதலாக 115 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

**பரிசீலிக்கப்பட்டு வரும் புதிய திட்டங்கள்.**

சினி பாசிடிவ் படச்சுருள் தொழிற் பிரிவை அமைப்பது தவிர இந்நிறுவனத்திடம் இரு விரிவாக்கத் திட்டங்கள் உள்ளன—அதாவது எக்ஸ்-கதிர் படச் சுருள்களுக்கு மேற்பூச்சு செய்யும் தொழிற் பிரிவையும் காந்த நாடா தொழிற் பிரிவையும் அமைக்கும் திட்டங்கள். இவற்றை உதகமண்டலத்தில் அமைப்பதால் செலவு குறைவாக இருக்குமாதலால் அவற்றை அங்கு அமைக்க மைய அரசு வற்புறுத்தப்பட்டு வருகிறது.

**பாரத கனரக மின்நிறுவனம், திருச்சிராப்பள்ளி.**

இந்நிறுவனம் ரூ. 152.27 இலட்சம் செலவில் 1960 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. 1965 ஆம் ஆண்டில் உற்பத்தி தொடங்கப்பட்டது. ஆண்டொன்றுக்கு 750 மெகாவாட் திறன் கொண்ட கொதிகலன்களைத் தயாரிக்கும் வகையில் இந்நிறுவனம் வடிவமைக்கப்பட்டது. இந்நிறுவனம், மலேசியாவிற்கு 11 கொதிகலன்களையும், லிபியாவிற்கு 4 கொதிகலன்களையும் ஏற்றுமதி செய்தது. 6,317 பேர்களுக்கு இந்நிறுவனம் வேலைவாய்ப்பு அளிக்கிறது. இந்நிறுவனம் 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 6.33 கோடி ஆதாயம் ஈட்டியுள்ளது. 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 380 கோடி மதிப்புள்ள பொருள்களை இந்நிறுவனம் உற்பத்தி செய்தது. இது 1,27,000 மெட்ரிக் டன் கொதிகலன் துணைப் பாகங்களை அனுப்பியுள்ளது. அனல் மின்நிலையங்கள் செயல்படத் தொடங்கும் கால அளவை 90 மாதங்களிலிருந்து 48 மாதங்களாகக் குறைத்துள்ளது. இதனை 42 மாதங்களாகக் குறைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**இந்தியன் டிரக்ஸ் மற்றும் பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட், சென்னை.**

இந்நிறுவனத்தின் சென்னைப் பிரிவு 1965 ஆம் ஆண்டு செப்டம்பரில் ரஷ்யா நாட்டு உடனுழைப்புடன் செயல்படத் தொடங்கியது. இந்நிறுவனம் ரூ. 477 இலட்சம் மொத்தச் செலவில் ஆண்டொன்றுக்கு 2.5 மில்லியன் அறுவைச் சிகிச்சைக் கருவிகளைத் தயாரிக்கும் நிறுவுதிறன் கொண்டதாகும். தற்பொழுது இந்நிறுவனத்தில் 2,272 பணியாளர்கள் பணி புரிகின்றனர்.



1975—76 ஆம் ஆண்டிலிருந்து பின்வரும் பல திறம்படுத்து திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன—

(அ) டிடாக்சயின் ஸ்கால்பெல் பிளேடுகள் 1975—76.

(ஆ) பிராலைன் கண்ட்ரோல் வால்வுகள் 1975—76.

(இ) வேதியல் கருவிகளைத் தயாரித்தல், ஒன்று சேர்த்தல் 1976—77.

(ஈ) வேதியல் கருவிகளைத் தயாரித்தல்.

மருந்துப் பொருள் நிறுவனத்தை வலுப்படுத்தும் நோக்குடன் பின்வரும் ஆண்டு நிறுவு திறனுடன் ஆண்டொன்றுக்கு ரூ. 500 இலட்சம் மொத்த வியாபாரத் தொகையுடன் சென்னையில் இந்தியன் டிரக்ஸ் மற்றும் பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட்டின் தயாரிப்பு பிரிவை அமைப்பதற்காக மத்திய அரசு 1977 ஆம் ஆண்டில் ரூ. 104.45 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்தது.

1. மாத்திரைகள் :

| | |
|---|---|
| 2. உறை மாத்திரைகள் | 10 மில்லியன். |
| 3. கண் மருந்துக் குப்பிகள் | 20 மில்லியன். |
| 4. ஊசி மருந்துகள் | 90 மில்லியன். |
| 5. திரவ மருந்துகள் | 210 கிலோ லிட்டர். |

மாத்திரை, உறை மாத்திரைகள் ஆகியவற்றைத் தயாரிக்கும் பிரிவுகள் 1979 ஏப்ரலில் செயல்படத் தொடங்கியுள்ளன. திரவமருந்து தயாரிக்கும் பிரிவு 1980 மார்ச்சில் செயல்படத் தொடங்கியது. ஊசிமருந்துகள், கண் மருந்துக் குப்பிகள் ஆகியவற்றைத் தயாரிக்கும் பிரிவுகள் 1981 செப்டம்பரில் செயல்படத் தொடங்கின.

சென்னையில் இந்தியன் டிரக்ஸ் மற்றும் பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட்டின் தயாரிப்புப் பிரிவைத் தொடங்கியதன் முக்கிய நோக்கம் குறிப்பாக இம் மாநிலத்தில் அமைந்துள்ள அரசினர் மருத்துவமனைகளின் மருந்துத் தேவைகளை நிறைவு செய்வதாகும்.

பலதிறம்படுத்துதல் திட்டத்தைச் செயல்படுத்தியதன் மூலம் 1975—76 ஆம் ஆண்டில் ரூ. 42.18 இலட்சம் என்றிருந்த உற்பத்தி அளவு சுமார் 15 மடங்கு அதிகரிக்கப்பட்டு, 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 639.18 இலட்சம் அளவுக்கு உயர்ந்தது. இதுபோலவே 1975—76 ஆம் ஆண்டில் ரூ. 58.02 என்ற அளவில் இருந்த விற்பனை 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 623.83 என்ற அளவிற்கு அதிகரிக்கப்பட்டது. இது 10 மடங்குக்கு மேல் அதிகமாகும்.

[1984 மார்ச் 28

## சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை.

இது 1965-ல் அமைக்கப்பட்டது. இந்த ஆலை 1969-ல் உற்பத்தியை தொடங்கியது. இதன் நிறுவு திறன் ஆண்டொன்றுக்கு 2.5 மில்லியன் டன் எண்ணெயை தூய்மைப்படுத்துவதாகும். இது பெட்ரோல், ஸ்பிரிட், மண்ணெண்ணெய், அதிக வேக டீசல், குறைவழுத்த டீசல் எண்ணெய், உலை எண்ணெய், மசகெண்ணெய், எரிவாயு, நாப்தா, முதலிய பெட்ரோலிய பொருட்களை சுத்தப்படுத்துகிறது. இந்தத் தொழிற்சாலை உரம், உரம் தொழிற்சாலை, பெட்ரோ இரசாயனத் தொழிற்சாலை முதலிய துணை தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு தூண்டுகோலாகப் பயன்படுகிறது. இதன் மூலம் 1,500 பேருக்கு நேரடியாகவும், சுமார் 3,000 பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை விரிவாக்கத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை ரூ. 155.8 கோடி மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவில் தனது தற்போதைய உற்பத்தித் திறனான ஆண்டொன்றுக்கு 2.8 மில்லியன் டன்னை ஆண்டொன்றுக்கு 5.6 மில்லியன் டன்னாக இரட்டிப்பதற்கு திட்டம் வகுத்திருக்கிறது. விரிவாக்கத் திட்டம் இரண்டு கட்டங்களாக முடிக்கப்படவுள்ளது. முதல் கட்டம் 1984 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களுக்குள்ளும், இரண்டாவது கட்டம் 1985 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களுக்குள்ளும் முடிக்கப்படும்.

சுற்றுப்புறச் சூழ்நிலை தூய்மை கெடுவதை தவிர்க்கும் பொருட்டு போதுமான உற்பத்தித் திறனுடன் கூடிய கழிவு நீரைத் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீரைத் தூய்மைப்படுத்தி தூய்மைப்படுத்தப்பட்ட நீரை பம்பிங் வெளியேற்றும்.

விரிவாக்கத் திட்டம் ஆண்டொன்றுக்கு 90,000 டன் திரவமாக்கப்பட்ட பெட்ரோலியம் வாயு, 6,45,000 டன் மண்ணெண்ணெய், 10,01,000 டன் டீசல் எண்ணெய், 1,14,000 டன் எரி எண்ணெய் ஆகியவற்றை அதிக அளவில் உற்பத்தி செய்யும் வகையில் வரைவமைக்கப்பட்டுள்ளது.



1984 மார்ச் 28]

சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை, ஆண்டொன்றுக்கு 20,000 டன் மெழுகை உற்பத்தி செய்வதற்காக திட்டம் ஒன்றையும் மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் முடியுந்தறுவாயில் உள்ளது. இது விரைவில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தார் (Asphalt) உற்பத்தியை ஆண்டொன்றுக்கு 2,40,000 டன்னிலிருந்து 4,50,000 டன்னாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கான மொத்த செலவு சுமார் ரூ. 15.91 கோடி அளவில் இருக்கக் கூடும். இதற்கு மத்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

மசகெண்ணெய் விரிவாக்கத்திட்டம், மசகெண்ணெய் உற்பத்தித் திறனை ஆண்டொன்றுக்கு 2,70,000 டன்னாக அதிகரிப்பதன் அடிப்படையில் அமைந்துள்ளது. சுமார் 50,000 டன் [illegible] இருப்பு இதில் அடங்கும். மத்திய அரசின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

ரூ. 12.60 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஆண்டொன்றுக்கு 15,000 டன்னிலிருந்து 16,000 டன் வரை பிரோபைலின் உற்பத்தி செய்வதற்காக சாத்தியக் கூறு அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை, மணலி.

சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை 1966 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் சட்டப்படி இணைக்கப்பட்டது. அதன் மூலதனப் பங்கில் மத்திய அரசு 51 சதவீதமும், அமெரிக்காவின் அமோகோ எண்ணெய் கம்பெனி 24.5 சதவீதமும், இரான் நாட்டின் நேஷனல் இரானியன் எண்ணெய் கம்பெனி மூலதனப் பங்கில் 24.5 சதவீதமும், பங்கு முதலீடு செய்துள்ளனர். இத் தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 750 மெட்ரிக் டன் அமோனியா, 885 மெட்ரிக் டன் யூரியா, 1,800 மெட்ரிக் டன் கலப்பு உரங்களை உற்பத்தி செய்யும் நிறுவு

திறன் உடையது. வணிக உற்பத்தி 1971 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப் பட்டது. கடந்த 2 ஆண்டுகளில் சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை யின் முக்கியமான கூறுகள் பின்வருமாறு :—

| (1) | 1981-82. (2) | 1982-83. (3) | 1983-84. (1983-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரை). (4) |
|---|---|---|---|
| (உற்பத்திச் சாதனை அளவு மெட்ரிக் டன்களில்). | | | |
| அமோனியா .. | 214.762 | 202.422 | 70.395 |
| யூரியா .. | 269.057 | 241.850 | 81.727 |
| என். பி. கே. (கலப்பு உரங்கள்). | 581.180 | 603.560 | 330.560 |
| சாதனை அளவு (சதவீதத்தில்). | 101 | 99 | 68 |
| விற்பனை அளவு (000 மெட்ரிக் டன்னில்) | 630.9 | 641.4 | 487.80 |
| வியாபாரத் தொகை (ரூபாய் கோடியில்). | 156.13 | 171.95 | 128.01 |
| ஆதாயப் பங்குத் தொகை (சதவீதத்தில்). | 25 | 25 | .. |
| தேசிய கருவூலத்திற்கு பங்குத் தொகை. (ரூபாய் கோடியில்). | 36.3 | 28.4 | தகவல் இல்லை. |
| வரி விதிக்கப்படுவதற்கு முன் ஆதாயம். (ரூபாய் கோடியில்). | 8.29 | 16.5 | 1.58 |

அனைத்து நாட்டு போட்டிக்கிடையில் சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை ஸ்ரீலங்கா பணியாளரை இயக்குவதற்கும், பராமரிப்பதற்கும் பயிற்சி அளித்து ஆலையின் வணிக உற்பத்தியை தொடங்கவும், 1980 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா இராசயன உரத் தயாரிப்பு நிறுவனத்திடமிருந்து திருவாக ஒப்பந்தத்தைப் பெற்றது.



சென்னை இராசயன உரத் தொழிற்சாலை முதல் முறையாக 1982 ஆம் ஆண்டு எப்ரல் திங்களிலிருந்து தமிழ்நாட்டிலும், பாண்டிசேரியிலும் நேரடி விற்பனை முறையைச் செயல்படுத்தியது. சென்னை இராசாயன உரத் தொழிற் சாலையில் 1,275 பணியாளர்கள் பணிபுரிகிறார்கள். மின்சாரத்திற்காக மாநில மின்சார வாரியத்தின் மீது சார்ந்திருப்பதைக் குறைப்பதற்காக சென்னை இராசயன உரத்தொழிற்சாலை ஒவ்வொன்றும் 2.5 மெ. வா. திறனுடைய 2 டர்பைன் மின் உற்பத்தி இயந்திரங்களை நிறுவியது.

படைக்கலக் கருவிகள் தயாரிப்புத் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.

இத்தொழிற்சாலை 1966-ல் ஆண்டொன்றுக்கு 5,000 சிறுபடைக்கலன் களை உற்பத்தி செய்வதற்காக அமைக்கப்பட்டது. 31—3—1983 அன்றுள்ள படி உற்பத்தி இலக்கு 102 சதவீதத்தை எய்தியுள்ளது. இது 2,753 பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது.

சேலம் உருக்காலை, சேலம்.

சேலம் உருக்காலைத் திட்டத்திற்கு 1977-ல் இந்திய அரசு ஒப்புதல் அளித்தது. இத்தொழிற்சாலையின் முதல் கட்டப்பணி 13—9—1981 அன்று தொடங்கப்பட்டது. இவ்வுருக்காலை ஆண்டொன்றுக்கு 32,000 டன் எவர் சில்வர் உருக்கு சுருள்கள், தகடுகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் திறனைக் கொண்டிருந்தது.

மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவு ரூ. 181.19 கோடியில் 1984 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் வரையில் ரூ. 167.70 கோடி செலவிடப்பட்டது. இதில் பணி நடைபெறும் இடங்கள், பராமரிப்பு பொது நிர்வாகப் பணிகள், கட்டு மானப் பணிகள் ஆகியவற்றில் பயிற்சியாளர்கள் உட்பட 1,229 பேர்கள் பணி புரிகிறார்கள்.

கட்டிட கட்டுமானப் பணி மும்மரமாக நடைபெற்ற சமயத்தில் 4,000 முதல் 6,000 வரை பணியாளர்கள் அமர்த்தப்பட்டனர். இவர்களைத் தவிர தற்போது கட்டிடப் பணிகள், அமைப்பு சாதனங்களை நிறுவும் பணிகளில் சுமார் 400 பணியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

சேலம் உருக்காலை 1981 ஆம் ஆண்டு செப்டம்பரில் உற்பத்தியை தொடங் கியது. அந்நாள் முதற்கொண்டு இந்த உருக்காலை 15,000 டன் எவர்சில்வர் உருக்கு சுருள்கள், தகடுகள் ஆகியவற்றைச் செய்தன. அவற்றில் 4,000 டன் தொழிற் துறைப் பிரிவிற்காக உற்பத்தி செய்யப்பட்டது.

## பொருளடக்கம்


பக்கங்கள்

1 வினாக்கள்—விடைகள்

2 அறிவிப்புகள்— 197—211

(1) ஆளுநரிடமிருந்து செய்தி .. 211

(2) பேரவையிலிருந்து செய்தி .. 211

(3) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு .. 212

3 கவன ஈர்ப்பு—

அரசு மேல்நிலைப் பள்ளிகளில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப் பட்டு வருவதால் அவ்வாசிரியர்களுக்கு ஏற் பட்டுள்ள இன்னல் குறித்து .. 213—214

4 அரசின் சட்ட முன்வடிவுகள்—

(1) தமிழ் நாடு 1984ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1984) .. 214—216

(2) தமிழ்நாடு 1984ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1984) 216—248

5 அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. 248



143899

V2 11, 32'N84

N84, 208.1-2

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

**வியாழக்கிழமை, 1984 மார்ச் 29.**

**பங்குனி 16, ருத்ரோத்காரி, திருவள்ளுவர் ஆண்டு—2013.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### குறிக்குறியிட்ட வினாக்கள்.

#### சுருக்கெழுத்து வாசிப்பாளர்களுக்கு மதிப்பூதியம்.

*** 131 வினா திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் நடத்தப்படும் சுருக்கெழுத்துத் தேர்வுகளில் வாசிப்பாளர்களுக்கு (Shorthand Dictators) அளிக்கப்படும் மதிப்பூதியம் குறைவு என்பதை அரசு அறியுமா ?

(இ) அதனை தற்பொழுது உயர்த்துவதுடன், அவர்களுக்குப் போக்கு வரத்துச் செலவுத் தொகையினையும் உயர்த்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) மற்றும் (இ) சுருக்கெழுத்துத் தேர்வுகளில் சுருக்கெழுத்து வாசிப்பாளர்களாக அமர்த்தப்படுபவர்களுக்கு 1974-ல் இருந்து வழங்கப்பட்டு வந்த மதிப்பூதியம் அக்டோபர்/நவம்பர் 1981-லிருந்து உயர்த்தப்பட்டுள்ளது. சுருக்கெழுத்து வாசிப்பாளர்களாக உள்ளூரிலேயே நியமிக்கப்பட்டால் அவர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியத்திலேயே பிரயாணப்படியும் (Conveyance allowance) அடங்கியுள்ளது. வெளியூர்களிலிருந்து நியமிக்கப்படுபவர்களுக்கு மதிப்பூதியத்துடன் தமிழ்நாடு பயணப்படி விதிகளின்படி, அவ்வப்போது நடைமுறையில் உள்ள பயணச் செலவும் வழங்கப்பட்டு வருகின்றது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சுருக்கெழுத்துத் தேர்வுகளில் வாசிப்பவர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற மதிப்பூதியம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்நிலை—ஆங்கிலம் மற்றும் தமிழ்—15 ரூபாய், மேல்நிலை—ஆங்கிலம் மற்றும் தமிழ்—தாள் ஒன்றுக்கு 20 ரூபாய். தாள் இரண்டுக்கு 10 ரூபாய். தாள் மூன்றுக்கு 10 ரூபாய், இடைநிலை—ஆங்கிலம்—தாள் ஒன்றுக்கு 20 ரூபாய், தாள் இரண்டுக்கு 10 ரூபாய், உயர்வேகம்—ஆங்கிலம்—நிமிடத்திற்கு 160 வார்த்தைகள்—35 ரூபாய், நிமிடத்திற்கு 180 வார்த்தைகள்—35 ரூபாய், நிமிடத்திற்கு 200 வார்த்தைகள்—35 ரூபாய், உயர்வேகம்—தமிழ்—நிமிடத்திற்கு 100 வார்த்தைகள் 35 ரூபாய். நிமிடத்திற்கு 120 வார்த்தைகள்—35 ரூபாய், நிமிடத்திற்கு 150 வார்த்தைகள்—35 ரூபாய் என்று கொடுக்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட மதிப்பூதியம் அக்டோபர் 1981-லிருந்து கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, சென்னை நகரப் பகுதிகளுக்கென்று ஒருவிதமான மதிப்பூதியம் என்றும், சென்னை நகரத்தில் இல்லாதவர்களுக்கு வேறுவிதமான மதிப்பூதியம் என்றும் ஏதேனும் வேறுபாடு இருக்கிறதா? சென்னை நகர்ப்புறத்தில் இருப்பவர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்குப் போக்குவரத்துச் செலவு இருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்கு கூடுதலாக மதிப்பூதியம் தரப்பட வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இருக்கின்றது. அதையும் அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே குறிப்பிடப்பட்டிருப்பது, உள்ளூரிலிருக்கின்றவர்களுக்கு ஒன்றும் வெளியூரிலே இருக்கின்றவர்களுக்கு ஒன்றுமாக இருக்கின்றது. உள்ளூரிலேயிருந்து வருகின்றவர்களுக்கு சிறப்பூதியத்திலேயே பிரயாணப்படியும் இருக்கிறது. வெளியூரிலேயிருந்து வருகின்றவர்களுக்கு பிரயாணப்படி தமிழ்நாடு பயணப்படிகள் விதிகளின்கீழ் தரப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சென்னையிலே இருக்கின்றவர்களுக்கு ஏதேனும் பாதிப்பு இருக்குமானால், அவர்கள் தங்கள் கோரிக்கைகளை அரசுக்குத் தெரிவித்தால், அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.





சிறந்த விளையாட்டு வீராங்கனைகள்.

*132. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ்நாட்டில் சிறந்த விளையாட்டு வீராங்கனைகளுக்கு அரசு என்னென்ன சலுகைகள் அளித்து வருகிறது?

(இ) மேலும் சலுகைகளை அளிக்கும் கொள்கைக்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(உ) ஆம் எனில், அது எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ), (இ), (உ) விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் ஆண்டுதோறும் கோடைகாலப் பயிற்சி முகாம்களை விளையாட்டுத் துறை நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது. அப்படிப்பட்ட பயிற்சி முகாம்கள் எங்கெங்கு நடைபெறுகின்றன. அடுத்து ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 1979-80 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறதென்று சொல்லி, மேற்படி திட்டத்தின் கீழ் 25 பேர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதை விரிவாக்கி இந்த ஆண்டும் தரப்பட்டிருக்கின்றதா என்கிற விவரத்தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, கோடைக் காலத்தில் மாணவ, மாணவிகளுக்கு விளையாட்டுப் பயிற்சி முகாம் சென்னையிலேயும்—சென்ற ஆண்டு திருச்சியில் என்று கருதுகின்றேன்—இதுபோன்ற இடங்களிலும் நடத்தப்படுகிறது. அந்தப் பயிற்சி முகாம்களிலே மாணவ மாணவிகளுக்கு நடைமுறையில் பயிற்சி தந்து சிறந்த விளையாட்டு வீரர்களாக வைக்குவிக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கின்றார்கள். இந்த ஓய்வூதியம் 1979-80 ஆம் ஆண்டில் 25 பேருக்குத் தரப்பட்டிருக்கிறது. இப்போது ஆண்டுக்காண்டு நாம் என்ன என்ன திட்டத்தை வைத்திருக்கின்றோமோ அதன்படி அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

---

@ 249-250 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, டென்னிஸ் விளையாட்டில் சிறந்து விளங்கும் செல்விகள் அம்ருதா அலுவாலியா, விக்டோரியா, நம்ரதா அப்பாராவ் ஆகியோர் அமெரிக்க நாட்டுக்குச் சென்று டென்னிஸ் விளையாட்டில் முதல்தரமாகப் பயிற்சி பெறுவதற்காக தலா ரூபாய் 10,000/- மானியம் வழங்கப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலுள்ள பெயர்களைப் பார்த்தால், இவர்கள் தமிழ் நாட்டின் மண்ணின் மைந்தர்கள் இல்லை என்பது தெரிய வருகிறது. தமிழர்களில் அப்படிப்பட்டவர்கள் உருவாகவில்லையா அல்லது அதற்குரிய பாதை போடவில்லையா? அப்படிப்பட்ட தமிழர்களை உருவாக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு இன்னும் ஒன்றைச் சொல்கிறேன். இதற்கு முன்னால் கேட்கப்பட்ட கேள்விக்கு மேலும் ஒரு செய்தியைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தத் தொகையை மேலும் உயர்த்தி வழங்கவும் தொடர்ந்து அதிகம் பேர்களுக்கு இதை விரிவு செய்யவும் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

டென்னிசைப் பொறுத்தமட்டில், அநேகமாக இந்தியாவிலேயே தமிழ் நாடுதான் சிறந்து விளங்குகிறது என்று கருதுகிறேன். தமிழ் நாடு தான் அதில் தலைமை தாங்கிக் கொண்டிருக்கிறது என்று கருதுகிறேன். அதனாலே தமிழ் நாட்டிலே உள்ள இந்தப் பெண்கள் முதல் நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் தமிழ் நாட்டிலே இருக்கின்ற பெண்கள்தான். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மண்ணின் மைந்தர்கள் என்று சொன்னார்கள். டென்னிஸ் விளையாட்டைப் பழகி, அதில் சிறந்தவர்களாக இருந்தால், அவர்களும் இந்த மானியத்தைப் பெறலாம், வெளிநாடுகளுக்குச் சென்று பயிற்சியும் பெறலாம். நாம் மண்ணின் மைந்தர்களாக இருந்துகொண்டு, விளையாட்டுத் தெரியாமல் இருந்தால், நாம் எந்தவிதமான உதவியும் செய்ய முடியாது.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, ஒலிம்பிக் விளையாட்டு வீராங்கனைகளை உருவாக்குவதில் தமிழ்நாடு பாதிக்கப்பட்டுள்ளது. உடற்பயிற்சிக் கல்லூரிகள், பள்ளிகளின் கான்ட்ரிபியூஷன் என்ன? இவைகள் மூலமாகப் பயிற்சி பெற்றவர்கள் அகில இந்திய அளவிலே அல்லது தேசிய அளவிலே நடைபெறும் போட்டிகளிலே கலந்துகொண்டு வீராங்கனைகளாக வெற்றி பெற்றிருக்கிறார்களா? இல்லையென்றால், அந்தக் கல்லூரிகளின் தரத்தை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இங்கே குறிப்பிட்டிருக்கிற விவரங்களை வைத்துப் பார்க்கிறபோது, பள்ளி, கல்லூரி என்ற அந்த அடிப்படையிலே தரப்படவில்லை. பொதுவாக விவரங்களைத் தந்திருக்கிறார்கள். அதில் கல்லூரிகளைச் சேர்ந்தவர்களும் இருக்கலாம். இன்னும் சிறந்த முறையிலே கல்லூரிகளிலிருந்தும், பள்ளிகளிலிருந்தும் மாணவர்கள் வர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். அதற்குச் சிறப்பான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது. அதைப்பற்றி நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். குறிப்பாகக் கல்லூரிகளிலே உள்ள மாணவர்கள் அதிகமான அளவுக்குப் பயிற்சி பெற்று இந்தப் போட்டிகளில் பங்கு பெற வேண்டுமென்ற நிலையை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் அரசு விரும்புகிறது. அதைப்பற்றிச் சிந்தித்து, ஒரு திட்டத்தைத் தீட்ட விரும்புகிறோம். ஆனால் உயர் நிலைப் பள்ளி, என்ற பெயரிலே நான்கு இடங்களிலே ஆரம்பித்திருக்கிறோம். ஒய்.எம்.சி.ஏ. ஒன்று; இரண்டாவது எஸ். ஆர். பி. மாருதி விளையாட்டுப்பள்ளி, கோயம்புத்தூர் என்று கருதுகிறேன்; மூன்றாவது அண்ணாமலை நகர்; நான்காவது பெண்களுக்கான பி.எஸ்.ஜி.ஆர். பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கோயம்புத்தூர். இந்த நான்கு செகண்டரி படிப்போடு விளையாட்டிலும் சிறப்புப் பயிற்சி தருகிறார்கள். அதற்காக அந்த மாணவர்களுக்கு இலவசச் சாப்பாடும், தங்கும் வசதியும் தந்து, அந்தப் பள்ளிகளை நடத்திக் கொண்டிருக்கிறோம். அந்தப் பள்ளிகள் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போதுகூட, போலீசுக்குத் தேர்ந்தெடுப்பது போல, இராணுவத்திற்குத் தேர்ந்தெடுப்பதுபோல சில போட்டிகளை வைத்து அதன்மூலம் சிறந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பள்ளிகளில் அனுமதிக்கிறோம். அங்கே அவர்கள் பயிற்சி பெறுகிறார்கள், அதே சமயத்தில் அவர்கள் படிப்பும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இது நாம் எடுக்கும் சிறப்பான முயற்சியாகும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: நான் மண்ணின் மைந்தர்கள் என்று கேட்டபோது, தமிழினத்தைச் சேர்ந்தவர்கள் இப்படிப்பட்ட விளையாட்டுகளிலே வெற்றி பெற்று வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடிய வாய்ப்பு வரவேண்டுமென்ற ஆதங்கத்தின் அடிப்படையிலேதான் கேட்டேன். அமிர்தத்தில் [illegible] பயிற்சி பெற வாய்ப்பு இல்லாமல் இருக்கக் [illegible] என்பதைக் கருதித்து, அவர்களும் பயிற்சி பெறுவதற்கு [illegible] அரசு முன்வருமா? மேலும் விளையாட்டுத் [illegible] அமைச்சகம் [illegible] இருந்ததே, அது எந்த அளவுக்கு இருக்கிறது?

[1984 மார்ச் 29

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ் நாட்டைச் சேர்ந்த பெண்கள், மன்னின் மைந்தர்களாக வர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கும் அதே அளவுக்கு ஆர்வம் நமக்கும் இருக்கிறது. பெயர்களைப் பார்க்கும்போது வெளி மாநிலங்களிலிருந்து வந்தவர்களைப்போல் அந்தப் பெயர்கள் இருப்பதால், தமிழ் நாட்டுப் பெண்கள் வரவில்லையே என்ற ஆதங்கம் எங்களுக்கும் இருக்கிறது. ஆனால் விளையாட

(மூற்பகல் 10-10)

இந்த அளவுக்கு ஆர்வத்தோடு முன்வர வேண்டும். டென்னிஸ், கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்கள் எல்லாம் சென்னையில் பிரபலமாக இருப்பது போல் மாநிலத்தின் இதர இடங்களில் பிரபலமாகவில்லை. இதில் அவர்கள் முனைந்து நிற்கவில்லை என்பதற்காக மற்ற எல்லா விளையாட்டுக்களிலும் அவர்கள் சரியில்லை என்ற அர்த்தத்திலும் செய்திகளை தயவுசெய்து எடுத்துக் கொள்ள வேண்டாம். மற்ற விளையாட்டுக்களில் மண்ணின் மைந்தர்களாக உள்ள நம்முடைய பெண்களில் பலர் பல பரிசுகளை வாங்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

திரு. மு. மாசிலாமணி : வயோதிகம் அடைந்து இன்னலுற்று முடியாத நிலையில் இருக்கும் சிறந்த விளையாட்டு வீராங்கனைகளுக்கும் வீரர்களுக்கும் ரூபாய் 75 கொடுக்கப்படுகிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அது மேலும் உயர்த்தப்படுமா ? அதுபற்றி ஏதாவது மனுக்கள் வந்திருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்தக் கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. பா. ரா. தாமஸ் : சிறந்த பயிற்றுவிப்பாளர்கள் பயிற்சி பெறுவதற்காக பாட்டியாலாவிலுள்ள ஜான்சிராணி கல்லூரிக்குத்தான் தமிழகத்திலிருந்து நாம் பயிற்றுவிப்பாளர்களை அனுப்பிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய மாநிலத்திலேயே 'நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் ஸ்போர்ட்ஸ்' என்கிற பட்டத்தை வழங்கும் அளவிலான பயிற்சியைக் கொடுக்கும் ஒரு ஸ்போர்ட்ஸ் கல்லூரியை அமைக்கும் திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கிறதா ? அதன் மூலம் நாம் சிறந்த பயிற்றுவிப்பாளர்களை உருவாக்கலாம் அல்லவா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட ஒரு எண்ணம் அரசுக்கு இருக்கிறது. ஆனால் நிதி ஆதாரங்கள் சரியாக இல்லாததால், அது கொஞ்சம் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது. மற்றபடி கோச்சஸை, பயிற்சியாளர்களை உருவாக்குகின்ற ஒரு பயிற்சி நிறுவனம் தமிழ் நாட்டில் இருக்க வேண்டுமென்ற அவசியத்தை இந்த அரசு உணர்கிறது.



1984 மார்ச் 29]

திரு. சி. ரா. வெங்கடரமணிகாந்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூன்று ஸ்போர்ட்ஸ் ஸ்கூல்ஸ் என்று சொல்லக்கூடிய விளையாட்டுப் பயிற்சிப் பள்ளிகளைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதில் ஒன்று அண்ணாமலை நகரில் இருக்கிறது. அங்கே நான் நேரடியாகக் கண்ட அனுபவத்தைச் சொல்கிறேன். அங்கே பயிற்சி பெறுகிற மாணவர்கள்மீது தலைமையாசிரியருக்கு நேரடியாகக் கட்டுப்பாடு இல்லாததால் மாணவர்களிடையே கட்டுப்பாடு நிலையை நிலைநிறுத்த முடியாமல் அவதிப்படுவதாகத் தலைமையாசிரியரே சொல்கிறார். இதுபோல் மற்ற இரு பள்ளிகளிலும் இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே மாணவர்களுக்கும் தலைமையாசிரியருக்கும் இடையே கட்டுப்பாடு, ஒழுங்கு போன்றவற்றை நிலை நிறுத்தக்கூடிய வகையில் இது குறித்து அரசு பரிசீலனை செய்து, அதற்குத் தக்க அதிகாரங்களை வழங்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசைப் பொறுத்தவரையில், இதுவரை அப்படிப்பட்ட புகார் ஒன்றும் வரவில்லை. ஆகவே அப்படி ஏதாவது இருந்தால், குறிப்பிட்டுத் தருவார்களேயானால், அதுகுறித்து தலைமை ஆசிரியரோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரியோ தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

## பள்ளிகளில் கழிப்பிட வசதிகள் ஏற்படுத்துதல்.

* 133. வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—3—1983 அன்றுள்ளவாறு, தமிழகம் முழுவதும் உள்ள மேல் நிலை, உயர்நிலைப் பள்ளிகளில், கழிப்பிட வசதி இல்லாத பள்ளிகள் எத்தனை?

(இ) அவ்வசதி இல்லாத பள்ளிகளில், வசதி ஏற்படுத்துவதற்கென செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 574.

(இ) தமிழகம் முழுவதுமுள்ள அனைத்து அரசினர் உயர்நிலை மேல் நிலைப் பள்ளிகளுக்கும், கழிப்பிட வசதிகள் செய்து கொடுப்பதற்கு 1982-83 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி படிப்படியாக நிறைவேற்றும் வகையில் ரூபாய் 5 கோடி ஒதுக்குவதென்று அரசால் தீர்மானிக்கப்பட்டு, அதன்படி 1982-83-ல் ரூபாய் 1.50 கோடியும், 1983—84 ல் ரூபாய் 1.75 கோடியும் செலவினம் அனுமதிக்கப்பட்டுள்ளன. இத்தொகையைக் கொண்டு கழிப்பிட வசதி பொதுப் பணித் துறையினரால் செய்யப்பட்டு வருகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பொதுப் பணித் துறையால் பள்ளிக்கூடங்களுக்காக கட்டி முடிக்கப்பட்ட கழிப்பிடங்களில் சில இன்றும் பூட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. பள்ளித் தலைமையாசிரியர்களிடத்தில் இன்னும் அவை ஒப்படைக்கப்படவில்லை. அதுபற்றி அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அவைகளில் சில பள்ளியை விட்டு மிகுந்த தூரத்தில் கட்டப்பட்டிருப்பதால், மாணவர்கள் அதைப் பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறதே, அதுபற்றி அரசுக்குத் தெரியுமா? முதலில் பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்கு முன்னர் கழிப்பிடங்களைக் கட்டும் நிலை இருப்பதால், பிறகு பள்ளிக்கூடங்களை வேறு இடங்களில் கட்டி, அதன்மூலம் ஏற்கனவே கட்டிய கழிப்பிடங்களை உபயோகப்படுத்தாமல் வீணாகின்ற நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலை எல்லாம் தவிர்க்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட செய்தி அரசுக்கு வரவில்லை. அப்படி ஏதாவது குறிப்பிட்ட பள்ளிகளில் இத்தகைய குறைபாடுகள் இருக்கின்றன என்று தெரிவித்தால், அதுபற்றி அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கழிப்பிட வசதியில்லாத பள்ளிகளில் கழிப்பிடங்களை ஏற்படுத்தும் திட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு முக்கியமான குறைபாடு இருக்கிறது. கழிப்பிடங்களைக் கட்டி முடிக்கிறபோது, மேல்நிலைத் தண்ணீர் தொட்டி வசதியில்லாத வகையில் கட்டி விடுகிறார்கள். ஆகவே தண்ணீர் வசதியில்லாத கழிப்பிடங்களை சரியான முறையில் பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்வார்கள் என்று கருதுகிறேன். ஆகவே தண்ணீர் வசதியையும் இணைத்து, அதாவது ஓவர் ஹெட் டேங்க் (Over Head Tank) வசதியையும் ஏற்படுத்தி கட்டிக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்பிரச்சினையைப் பொறுத்தவரையில், இடத்திற்கு இடம் பரிசீலனை மாறுபடும். ஆனால் தக்கபடி பிரச்சினையை எழுப்பி பிரச்சினையை கவனத்திற்குக் கொண்டு வந்தால் நான் இது பற்றி ஏதாவது செய்ய முடியும்.





## MATHEMATICS TEXT BOOK.

* 134 Q. Thiru P. R. THOMAS (on behalf of Thiru D. Santosham): Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether there was a change of Text Book in Mathematics for S.S.L.C. (X Std.) Public Examination for March, 1983, with new syllabus;

(*b*) whether any representations were received from public organisations requesting the authorities concerned to have two different kinds of question papers, one from the old Text Book and the other from the new Text Book; and

(c) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) அந்தப் பாடப்புத்தகம் புதியதாயினும் பழைய பாடத்திட்டத்தின் படி எழுதப்பட்டதுதான். எனவே பழைய பாடப்புத்தகத்திற்கு ஒன்றும் புதியதற்கு ஒன்றுமாக தனித்தனிக் கேள்வித்தாள்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்குத் தேவையில்லை என கணிதப்பாட வல்லுநர்கள் தெரிவித்தனர். அக்கருத்து ஏற்கப்பட்டுள்ளது.

## FIXATION OF PAY UNDER F.R. 22-B.

* 135 Q. Thiru P. R. THOMAS and Thiru D. Santosham) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether it is a fact that as per G.O. Ms. No. 1071, Personnel and Administrative Reforms (FR) Department, dated 11th November, 1982, Government Servants are eligible for the fixation of pay under Fundamental Rule 22-B, exercising option for the fixation of pay, after accrual of next increment in the lower post; and

(b) if so, the steps taken to extend this benefit to Aided School Teachers also?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) இது உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

திரு. பா. ரா. நாமல்: தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இந்தச் சலுகையை விரிவாக்கியமைக்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக அரசு ஆணைகள் வெளியிடும்போது, தனித் தனியாக அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் என்று போடப்பட்டு, இவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் பிறகுதான் விரிவாக்கப்படுகின்றன. ஆகவே வருங்காலத்திலாவது, ஆணையை வெளியிடும் போதே, ஆசிரியர்கள் என்ற ஒரே தலைப்பில் எல்லோருக்கும் பொதுவானது தான் என்று இந்த யோசனையை முன்வைத்து நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, முடிந்த அளவுக்கு முயற்சிகள் எடுக்கப்படும்.

## TAMIL NADU HOUSING BOARD

*136. Q. Thiru S. J. SADIQ PASHA & DR. JANARTHANAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(*a*) whether it is a fact that the State Government have ordered an enquiry into the irregularities in the functioning of the Tamil Nadu Housing Board; and

(*b*) if so, the details thereof?



மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: (அ) மற்றும் (இ) கடந்த ஐந்து ஆண்டுகளில் வீட்டு வசதி வாரியத்தால் செயல்படுத்தப்பட்ட குறிப்பிட்ட சில பணிகளில், அப்பணி தொடர்புடைய விதிகள் பின்பற்றப்பட்டனவா என்பதை விரிவாக ஆராய்ந்து 23—8—1963 லிருந்து ஆறு மாதங்களுக்குள் அரசுக்கு ஒரு அறிக்கையை அளிக்கும்படி திரு. பி. விஜயராகவன், இ. அ. ப., தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்கள் சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

### ஏ. ஜி. பிளாக், அண்ணா நகர், சென்னை.

*137. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 12—2—1983 அன்று சட்டமன்ற மேலவையில் வினா எண் 95-க்கு அளிக்கப்பட்ட விடையையொட்டி, கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) சென்னை அண்ணா நகரில், ஏ. ஜி. பிளாக்கில் வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமானதும், அங்காடி கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டதுமான மனை எண். 3128-ஏ-ல் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள குடிசையை அகற்றும் நடவடிக்கையை நிறுத்தி வைக்க, நீதி மன்றம் எப்போது உத்தரவிட்டது?

(இ) அந்த உத்திரவை நீக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: (அ) ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள குடிசையை அகற்றும் நடவடிக்கையை நிறுத்திவைக்க நீதிமன்றம் 13—11—1981 அன்று உத்தரவிட்டது.

(இ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அவ்வழக்கை எதிர்த்து ஏற்கனவே எதிர்மனுவைத் தாக்கல் செய்துள்ளது. தற்போது இவ்வழக்கு நீதி மன்றத்தின் விசாரணையில் உள்ளது. நீதி மன்ற இடைக்காலத் தடையை நீக்கவோ அல்லது வழக்கை கூடிய விரைவில் முடிவுக்குக் கொண்டுவரவோ தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சட்ட ஆலோசகர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். மேற்கூறிய நீதிமன்ற ஆணையினால் ஆக்கிரமிப்பை அகற்ற முடியவில்லை.

திரு. கி.ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, 13—11—1981 ல் நீதிமன்றம் தடையுத்தரவைப் பிறப்பித்தது. நம்முடைய வாரியம் அது குறித்து எந்தத் தேதியில் மேல் முறையீடு செய்தது? இந்தத் தடையை அகற்ற என்ன நடவடிக்கை எடுக்கிறது? காரணம் பிரச்சினைக்குரிய இந்தப் பகுதியில் மேலும் தற்போது குடிசைகள் போடப்பட்டிருக்கின்றன. அந்தத் தகவல் மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி வரவில்லையென்றால், நான் இங்கே சொல்வதையே ஒரு கோரிக்கையாக வைத்து, அரசு அதற்குத் தக்க முறையில் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, நீதிமன்ற இடைக்காலத் தடையை நீக்க வேண்டுமென்பதற்காக உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நீதிமன்றம் இதை விசாரிக்க வேண்டுமென்று 14-2-1984-ல் விசாரணை வைத்து, மீண்டும் அது ஒத்தி வைக்கப்பட்டு, 30-3-1984-ல் விசாரணை வரவிருக்கிறது. ஆகவே திரும்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் ஆக்கிரமிப்பு நடைபெற்றிருக்கிறது என்பது குறித்து அரசின் கவனத்திற்கும் வந்திருக்கிறது. நீதிமன்றம் எந்த அளவுக்கு ஆக்கிரமிப்பை அனுமதிக்கிறதோ அதை மட்டும் வைத்துக் கொண்டு, மீதமுள்ளவைகளை அகற்ற வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, இதே பிரச்சினை உறுதி மொழிக் குழுவில் விவாதிக்கப்பட்டது. இந்த இரண்டரை ஆண்டுகளாக இந்த ஆக்கிரமிப்பை அகற்ற முடியவில்லை. ஆகவே எஞ்சியுள்ள இடத்திலாவது மார்க்கெட்டைக் கட்டிவிட்டால் மேற்கொண்டு ஆக்கிரமிப்பைத் தடுக்கலாமே? மார்க்கெட் கட்டாததாலேதானே இந்த ஆக்கிரமிப்பே வந்திருக்கிறது. விரைவில் அந்த மார்க்கெட்டைக் கட்டினால், இந்த ஆக்கிரமிப்பைத் தவிர்த்து விடலாம். அந்த அளவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து தொடர்ந்து மேலவையில் இரண்டு முறைகள் கேள்விகள் கேட்கப்பட்டு, குழுவின் கவனத்திற்கும் வந்திருப்பதைச் சுட்டிக்காட்டி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நீதிமன்றத்தினைக் கோரி, வழக்கை விரைவுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நீதிமன்ற நடவடிக்கையும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. அதே





நேரத்தில் மார்க்கெட் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, 10 நாளைக்கு முன்பு வாரியத்தால் ரூ. 19 லட்சம் அனுமதிக்கப்பட்டு, அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

விரைவில் அதற்காக டெண்டர்கள் கோரப்பட இருக்கின்றன. டெண்டர்கள் பெறப்பட்டதும், கட்டிடங்களைக் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. ஏனென்றால் ஒரு பகுதியில் மட்டும்தான் நீதிமன்றத் தடை உத்தரவை வாங்கியிருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதியை மட்டும் விட்டுவிட்டு மீதமிருக்கிற பகுதிகளில் கட்டிடங்களைக் கட்டுவதற்கான முடிவு வாரியத்திற்குத் தெரிவிக்கப்பட்டு அவர்களும் அதன்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஆகவே விரைவில் அந்தப் பகுதியில் மார்க்கெட் உருவாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, நலிந்த பிரிவினருக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக வீட்டு வசதி வாரியம் சில இடங்களை ஒதுக்கியிருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தரும் உத்தேசம் அரசுக்கு உண்டா? கிட்டத்தட்ட 5 லட்சம் நெசவாளர்கள் தமிழகத்தில் இருந்தார்கள். அவர்களுக்கு 5,000 வீடுகளைக் கட்டித் தருவதாக மத்திய அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. அப்படிப்பட்ட நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தால் அவர்கள் அங்கேயே தறிகளை வைத்துக் கொண்டு தொழிலை நடத்துவார்கள். மற்றவர்கள் வெளியே சென்று வேலை பார்த்துவிட்டு, இருப்பதற்கு மட்டுமே வீட்டிற்கு வருவார்கள். எனவே இருக்கிற இடத்திலிருந்தே தொழில் நடத்துகிற நெசவாளர்களுக்கு வீடு கட்டித் தரும் சாத்தியக் கூறுகளை அரசு ஆராயுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்ட வினா அண்ணா நகரில் இருக்கிற ஒரு குறிப்பிட்ட இடத்தில் மார்க்கெட் கட்டுவது பற்றியதாகும். ஆனால், நெசவாளர்களின் பிரதிநிதியாகவே விளங்குகிற மாண்புமிகு உறுப்பினர் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் இதில் நெசவாளர்களைக் கொண்டு வந்து என்னைச் சங்கடப்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லை என்றால், அமைச்சர் அவர்கள் அதற்கு பதிலளிக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை.

மாண்புமிகு திரு. எல். ஆர். இராதா: என்றாலும் தவிர்த்த பிரிவினருக்கு வீடுகட்டுவது என்ற வகையில் நெசவாளர்களுக்காக வியாசர்பாடியில் கட்டப் பட்டிருக்கிறது. அது இல்லாமல் வேறு குறிப்பிட்ட இடத்தைச் சொன்னால், அங்கேயும் கட்டுவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, குடிசைகளைப் போட்டு ஆக்கிரமிப்புச் செய்வதில் இரண்டு வகை இருக்கிறது. ஏழைகளாக இருப்பவர்கள் வேறு வழியில்லாமல் ஆக்கிரமிப்பு செய்வது என்பது ஒரு வகை. இன்னொரு வகை ஆக்கிரமிப்பு என்பது, பிறர் துணையோடு, பிறர் உதவியோடு, அவர்களின் பண உதவியோடு ஆக்கிரமிப்பு செய்து, பிறகு உதவி செய்தவர்களே அதை எடுத்துக் கொள்வது. எனவே இதையெல்லாம் பரி சீலித்து, வேறு யாருடைய தூண்டுதலும் இல்லாத நிலையில் ஏழைகளாக இருப்பவர்கள் மட்டும் குடிசைகள் போட்டிருந்தால், அவர்களுக்கெல்லாம் மனிதாபிமான அடிப்படையில் மாற்று இடத்தைக் கொடுத்துவிட்டு, அத்தகைய ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எல். ஆர். இராதா: குடிசைகளைப் போட்டு எப்படி ஆக்கிரமிப்பு செய்யப்படுகிறது என்று அதிகாரிகளை வைத்து ஆராய்ந்தால், அவர்கள் எல்லா இடத்திலும் ஏழைகளைக் கொண்டு வந்து முன்னாலே நிறுத்தி மனிதாபிமானத்தைக் கொண்டு வருகிறார்கள். அரசியல்வாதிகளைப் பொறுத்தவரையில் குடிசை போடுகிறவர்கள் அவர்களுக்குச் சாதகமாக இருந்தால் அங்கே அவர்களுக்கும் மனிதாபிமானம் வந்து விடுகிறது. சாதகமாக இல்லையென்றால், ஆக்கிரமிப்பு என்று சொல்கிறார்கள். எனவே, எது மனிதாபிமானம் என்று முடிவு செய்த பிறகுதான், நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரு. ஜேப்பியார் அவர்கள் மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாகக் கேட்க வேண்டும்.

திரு. ஜேப்பியார்: சில அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அரசுக்குச் சொந்தமான இடங்களில் தங்கள் கட்சிகளின் கொடிகளைப் போட்டு, அந்த இடத்தை விட மாட்டோம் என்று முடிவெடுக்கிறார்களே, எனவே அப்படிப் பட்ட அரசியல் கட்சிக் கொடிகள் இருந்தாலும், அதைப்பற்றிக் கவலைப் படாமல் அரசு இந்தப் பிரச்சினையை அணுகி ஆக்கிரமிப்புகளை அப்புறப் படுத்துமா?



மாண்புமிகு திரு. எல். ஆர். இராதா: இந்த இடத்திலும் அரசியல் வந்து விடுகிறது. கொடிதான் போட்டிருக்கிறார்களே தவிர, எந்த அரசியல்வாதியும் இதற்குத் துணையாக இருப்பதில்லை. ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க் கட்சியாக இருந்தாலும் எந்த அரசியல் கட்சி ஆக்கிரமிப்பு செய்தாலும், ஆக்கிரமிப்பு என்று தெரிந்தால், அதை அகற்ற நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு:— உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஆளுநர் அவர்கள் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை ஆய்விற்கு எடுத்துக் கொள்வதற்கு தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்:

(1) தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு.

(2) தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு.

### (2) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்டப் பேரவையால் நிறைவேற்றப் பட்டு, அரசியலமைப்புச் சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிடப்பட்டு கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

(1) தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1984)

(2) தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1984).

(3) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களே இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விவரம் முடிவு செய்யப்பட்டது :—

| | |
|---|---|
| 30—3—1984 | 1. பழங்குடியினர், ஆதி திராவிடர் மற்றும் பிற்பட்டோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். |
| | 2. ஓய்வு பெறவிருக்கும் உறுப்பினர்களுக்குப் பாராட்டுரை பகர்தல் (கேள்வி நேரம் இல்லை). |
| 31—3—1984 முதல் 22—4—1984 வரை | கூட்டம் இல்லை. |
| 23—4—1984 | 1. புதிய உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளுதல். |
| | 2. நீதி, நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். (கேள்வி நேரம் இல்லை). |
| 24—4—1984 | நுகர்பொருள் வழங்கல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். |
| 25—4—1984 | மருத்துவமும், மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். |
| 26—4—1984 | சமுதாய வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். |
| 27—4—1984 | பின்வாரிய நிதிநிலை அறிக்கை. |
| 28—4—1984 | நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு. |

மேலவை வழக்கம்போல் காலை 10-00 மணிக்குக் கூடும்.



கவன ஈர்ப்பு.

அரசு மேல்நிலைப் பள்ளிகளில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டு வருவதால் அவ்வாசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து.

திரு. கி. சா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

" அரசு மேல்நிலைப் பள்ளிகளில் அண்மையில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டு வருவதால் அவ்வாசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து ".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கி. சா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, தற்காலிக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் நீக்கப்படுவதற்கான காரணங்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன என்றாலும், அந்த ஆசிரியர்கள் பல மாதங்கள் அல்லது ஒரு சில ஆண்டுகள் பணியில் இருந்தவர்கள். அவர்களை திடீரென்று கடந்த பிப்ரவரி மாதம் மூன்றாவது வாரத்தில் வேலை நீக்கம் செய்ததால், அவர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி, அது ஒரு வாழ்க்கைப் பிரச்சினையாக ஆகியிருக்கிறது. இதைப்போலவே ஓராண்டுக்கு முன்பு இந்தியக் கலாச்சாரப் பாடத்தை நடத்திக் கொண்டிருந்த முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் நான்கு பேர் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். ஆகவே இப்படிப்பட்ட ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கொடுக்கிற வகையில் அவர்களுக்கு மறுநியமனம் செய்கிற வகையில் ஏதேனும் ஏற்பாடுகளைச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அந்த ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இல்லை. பணியிடங்கள் இல்லாதபோது, வேலை நீக்கம் செய்ய வேண்டியதாகயிருக்கிறது. அப்படியில்லையென்றால், அவர்களுக்குத் தரப்படுகிற

---

@ 250 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சம்பளத்திற்கும் பதில் சொல்ல வேண்டும். ஆகவே அந்த முறையிலேதான் பாதிக்கப்படுகிறார்கள். ஏதோ பத்து பேர், பதினைந்து பேரை வேலை நீக்கம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அரசுக்குக் கிடையாது. பணிப் பாதுகாப்பு தர முயற்சி செய்கிறோம். முடியாத நிலைமையிலே இந்த மாதிரி நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் பாட வேளை என்பது சில பள்ளிகளில் மிக அதிகமாக இருக்கின்றது. ஒரு சில இடங்களில் பாட வேளைகள் குறைவாக இருக்கின்றது. முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 18 பாட வேளைகள் என்று வைக்கப்படுமானால், பாடங்களையும் சரியான முறையில் நடத்தி மாணவர்களைத் தயார் செய்ய வாய்ப்பாக இருக்கும். அதே சமயத்தில் வேலை நீக்கப் பிரச்சினை ஏற்படுவதையும் தடுக்க உதவியாக இருக்கும். ஆகவே கல்விக் கண்ணோட்டத்திலும், நிர்வாகக் கண்ணோட்டத்திலும் பணிச் சுமையைக் குறைக்க 18 பாட வேளையாகக் குறைக்க வேண்டும் என்ற கருத்து முன்பே அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதுகுறித்து அமைச்சர் அவர்கள் ஒரு முடிவை எடுத்தால், இந்தப் பிரச்சினை வருங்காலத்திலே தீர்க்கப்படும் என்று நம்புகிறேன். இதுபற்றி அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து முடிவு எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பாட வேளையைப் பொறுத்த வரையில், பல்வேறு ஆசிரியர்களுக்கு பல்வேறு முறைகளிலே நிர்ணயித்து வருகிறோம். அந்த முறையில் அவர்களுடைய பிரச்சினையைப் பரிசீலித்த அரசு தக்க முடிவு எடுக்கும்.

### 4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 25/1984).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1984 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்



வடிவு @ (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 25/1984) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1984 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 25/1984) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை எதுமில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1984 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 25/1984) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

---

@ 251-253 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1984 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மாறுதல் அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 25/1984) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(முற்பகல் 10-30)

(2) தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 26/1984).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1984 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 26/1984) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1984 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 26/1984) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

பொதுவாக இதன் மீது மாண்புமிகு உறுப்பினர் யாரும் பேசுவதற்குப் பெயர் கொடுப்பதில்லை; ஆனால் இப்போது பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே சுருக்கமாகப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

@ 254-256-ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.





* திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இதிலே நான் அதிகம் பேசுவதற்கு விரும்பவில்லை என்றாலும், இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் நிதி அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு செய்தியைச் சொல்ல வாய்ப்பிருக்க முடியாது என்றும் கருதி, நான் இந்தச் சந்தர்ப்பத்திலே உங்களை வேண்டிக் கேட்டுக்கொண்டேன். நிதி அமைச்சர் அவர்கள் 23—11—1983 அன்று நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசியபோது, என்னுடைய கோரிக்கை ஒன்றுக்கு அவர்கள் பதில் சொன்னார்கள். அதாவது ஆசிரியர்களுக்கு கூடுதல் ஊக்க ஊதியம் அளிக்கின்ற வகையிலே அண்ணா அவர்கள் காலத்திலே கொண்டுவந்த ஊக்க ஊதியத் திட்டம், அண்ணாவினுடைய தம்பிகள் என்று சொல்லப்படுகிறவர்கள் ஆட்சி செய்துகொண்டிருக்கக் கூடிய இந்த நேரத்திலே, மாற்றி அமைக்கப்பட்டு, நட்டம் ஏற்படத்தக்க வகையிலே அமுல்படுத்தப்பட்டிருக்கிறது; அப்படிச் செய்யலாமா என்று நான் கேட்டேன். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் எழுந்து பதில் சொன்னார்கள். அவர்கள் சொல்கின்றபோது, "திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் ஏற்கனவே அறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் இருந்தது என்று சொன்னார்கள். அறிஞர் அண்ணா காலத்தில் இருந்த அத்தனையும் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்; இல்லாததையும் செய்ய வேண்டுமென்று விரும்பும் இந்த அரசு இருக்கிறது. ஏற்கனவே ஊக்க ஊதியம் தந்து கொண்டிருந்ததை இப்போது நிறுத்தி இருந்தால், அதை மீண்டும் பரிசீலித்து நிலைநாட்டத் தேவையான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்" என்று சொன்னார்கள். "அதனால் இழப்பு ஏற்படாமலிருக்க அதை மீண்டும் நிலைநாட்ட என்ன நடவடிக்கை வேண்டுமோ அதைச் செய்ய இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றும் சொல்லியிருக்கிறார்கள். இது செய்யப்படாத நிலையிலே 3 மாதங்கள் கழித்த பிறகு நான் பேசுகிற போது, 16—2—1984 அன்றும் பேசினேன்; அதற்குப் பிறகு 26—3—1984 அன்றும் கேட்டேன். துணை மதிப்பீட்டின்மீது விவாதம் வந்தபோது இங்கே அதைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசினேன். அதற்கு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். அந்த நேரத்திலே நான் இங்கில்லை. "ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்கும் முறை பாதிக்கப்பட்டு விட்டதாக இங்கே

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1984 மார்ச் 29

திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார். ஊக்க ஊதிய முறையைப் பறித்து விடவில்லை. ஊதியம் வழங்கும் முறையில் மாறுதல் செய்து அதை ஒட்டுமொத்தமாக அரசு தந்து வருகிறது" என்று நிதி அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லியிருக்கிறார்கள். நான், ஒன்றை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அண்ணா அவர்கள் தந்த அடிப்படையிலே தராததன் காரணத்தால், ஆசிரியர்களுக்குப் பேரிழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று நான் சொன்னேன். ஊக்க ஊதியத்தினை இப்போது லம்ப்சம்மாகத் தருகிறார்கள். 3 ஆண்டுகளுக்கு என்ன தருகிறார்களோ அந்த ஊதியத்தினுடைய மொத்தத் தொகைதான் அது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு 40 ரூபாய் ஊக்க ஊதியம் 3 ஆண்டுகளுக்கு 1,440 ரூபாய் வருகிறது. இந்த 1,440 ரூபாயிலே, புத்தகம் வாங்க, டியூஷன் படிக்க, தேர்வுக் கட்டணம் செலுத்த, போக்குவரத்துச் செலவு செய்யச் செலவாகிறது. இதனையும் செய்த பின்பு பார்த்தால், நீங்கள் தரும் 'லம்ப் சம்' அதில் பாதித் தொகை கூட வரவில்லை. பணிக் காலம் முழுவதும் பெற்று வந்த அந்தப் பயன், அண்ணா தந்து வந்த அந்தப் பயன் இப்போது பறிக்கப்பட்டு விட்டது. அதனாலே ஆசிரியர்கட்கு கிராஜுட்டி குறைகிறது; பென்ஷன் பெனிபிட் குறைகிறது. இது மிகப் பெரிய இழப்பு. மற்ற சமுதாயத்தினருக்கு, மற்றப் பிரிவினருக்கு இந்த ஊக்க ஊதியத்தை அறிமுகப்படுத்துகிறபோது வேண்டுமானால் இந்த லம்ப் சம் தொகையைச் சொல்லலாம். குறிப்பாகக் கல்வித் துறையைப் பொறுத்தவரையிலே, ஒரு உதாரணத்தைச் சொன்னால், ஏற்கனவே கல்வி அமைச்சராக இருந்த நிதி அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எஸ்.எஸ்.எல்.சி. ஸ்டாண்டர்டிலுள்ள ஒரு செகண்டரி கிரேடு டீச்சர் அப்போது போதிக்கின்ற போதிப்புக்கும், அவரே பி.ஏ. படித்து; எம்.ஏ. படித்து, எம்.எட். படித்து, அதற்குப் பிறகு இந்த ஊக்க ஊதியத்தை மட்டும் பெற்றுக்கொண்டு, அதே வகுப்பிற்குப் போதிக்கின்ற அந்த கற்பிப்புத் தரத்திற்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கும், தர உயர்வு இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு நமக்கு அந்த இடத்தைத் தர முடியாவிட்டாலும், அந்தப் பதவி உயர்வைத் தர முடியாவிட்டாலும், அந்த ஊக்க ஊதியத்தை அளித்தால், அந்தத் தரம் நாட்டுக்கு, மக்களுக்குப் பயன்படுமே என்ற பொது நோக்கத்தின்



1984 மார்ச் 29] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

அடிப்படையிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டுவந்த அந்தத் திட்டத்தினை மாற்றி இப்போது நட்டம் ஏற்படுகின்ற அளவில், யாரும் படிக்கவே தேவையில்லை என்கின்ற அளவிலே புதிய ஆணை கொண்டு வந்திருக்கிறீர்கள். "அதை நீங்கள் நீக்கம் செய்து பழைய முறையிலே தாருங்கள்" என்று கேட்டேன். அஃதத்தான் நட்டம் ஏற்படாமல் தருவோம் என்ற உறுதிமொழியை நிதியமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். ஆனால் "இன்றைக்கு மாற்றம் நான் செய்திருக்கிறோம்; அதை நாங்கள் ஒதுக்கிவிட வில்லை" என்று சொல்வதன் மூலமாக . . . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஒன்றை நான் தெளிவுபடுத்திக் கூறினேன். இந்த ஊக்க ஊதியம் பெறுவது ஆசிரியர்கள் மட்டுமல்லாது அரசுப் பணியிலே ஈடுபட்டவர்களுக்கும் எம்.ஏ., எம்.எஸ்சி., பி.ஹெச்.டி. இப்படிப் பட்டங்கள் வாங்கும் போது ஊக்க ஊதியம் கொடுக்கப்பட்டது. அன்றைக்குச் சொல்கின்றபோது அண்ணா காலத்திலே இருந்தது பறிக்கப்பட்டது என்ற அளவோடு நிறுத்தி இருந்தார்கள். அதனால்தான் எனக்கு விவரம் தெரியவில்லை என்று சொன்னேன். ஒட்டுமொத்தமான தொகை கணக்கிடப்பட்டது என்ற கருத்தை அவர்கள் சொல்லவில்லை; யாரும் எனக்குச் சொல்லவில்லை. எனக்கு அந்த நிலையிலும் விவரம் தெரியவில்லை. ஆக நான் அறிந்து சொல்கிறேன் என்றேன். அறிந்ததற்குப் பிறகு ஏன் இந்த நிலை வந்தது என்பதற்கான காரணங்களை—அன்று மாண்புமிகு உறுப்பினர் இருந்து கேட்டு இருப்பார்களானால் தெரிந்திருப்பார்கள்—முழு விவரங்களை நான் படித்துக் கூடக் காட்டினேன். அந்த வகையிலே, கீழே இருப்பவர்களுக்கு அதிகமான சம்பளம் என்ற சூழ்நிலை ஏற்பட்டு, சீனியராக இருப்பவர்களுக்கு குறைந்த சம்பளம் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் காரணமாக நிர்வாகச் சீர்திருத்தத் துறையினர், ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபோது, லம்ப்சம் ரூபாய் 7,500, ரூபாய் 6,000, ரூபாய் 5,000 என்ற அளவுக்குக் கொடுத்து விடலாம் என்று முடிவு எடுத்ததன் காரணமாக, ஆசிரியர்களையும் சேர்த்து, அரசு ஊழியர்களாக பாவிக்கப்பட வேண்டும் என்ற உணர்வை மன்ற உறுப்பினர்கள் அடிக்கடி எடுத்துச் சொன்னதன் காரணமாக, எல்லோருக்கும் சேர்த்து ஒட்டுமொத்தமாக முடிவு எடுக்கும்போது, அந்த மாறுதல் செய்யப்பட்டது. திருப்பித் திருப்பி அண்ணா, அண்ணா என்று சொல்கிறார்கள், அண்ணாவினுடைய கருத்துக்களை, சட்டங்களை நாங்களும் திருத்திக் கொண்டு வந்திருக்கிறோம், ஆர்டிக்கொண்டு வந்திருக்கிறோம். அண்ணா

செய்வதில்லையா ? எனக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. அப்படி ஒன்று ஏற்படுகின்றபோது, குறிப்பாக ஆசிரியர் சமுதாயத்திற்கு அதிலே தொல்லை ஏற்படும். இழப்பு வருகிறது என்று சொன்னதற்குப் பிறகுகூட, அந்த [illegible]லை நான் நிவர்த்தி செய்துவிடுகிறேன் என்று உறுதி சொன்ன பிறகு [illegible]றைக்கு நிதி அமைச்சர் அவர்கள், "நான் ஆராய்ந்து பார்த்தேன், அது [illegible]டபெறவில்லை, எல்லோருக்கும் உண்டாவது" என்று செய்வது பொறுப்பைத் தட்டிக் கழிப்பதாக எனக்குப் படுகிறது. ஆசிரியர் சமுதாயத்தை அலட்சியப்படுத்துவதாகத் தெரிகிறது. ஆகவே சொன்ன [illegible] மொழியை நிறைவேற்ற முடியாமல், சொன்ன உறுதி மொழியை நிறைவேற்றாமல், வற்புறுத்துகின்றபோது, அதை மறுத்துப் பேசிக்கொண்டிருக்கக் கூடிய. . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் அன்றைக்கே அவை [illegible]றையாக மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்துக்களின் அடிப்படையிலே [illegible]ன்னுடைய கருத்தைச் சொன்னேன். இன்றைக்குத்தான் முழுத் தன்மை [illegible]ந்தது. ஒட்டு மொத்தமாகக் கொடுக்கப்படுகின்ற அந்தக் கருத்தை [illegible]ன்றைக்கு அவர் தெரிவிக்கவில்லை. தெரியாத நிலையில் நான் ஒன்றைச் [illegible]சான்னேன். அதற்குப் பிறகு, அதையே நான் மாற்றவேண்டிய அவசியம் [illegible]ந்தது. என்றாலும் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்கிறேன். உறுதி [illegible]மாழி, உறுதிமொழி என்கிறார்கள். கட்டாயம் கொடுத்தே தீர வேண்டும் [illegible]ன்று நான் சொல்லவில்லை. 'பரிசீலிக்கிறேன்' என்று சொன்னேன். [illegible]ப்படி இழப்பு இருக்குமானால்' என்று நான் சொல்லியிருக்கிறேன். ஆக [illegible]தற்குப் பிறகு அவர்கள் ஒட்டுமொத்தமாகச் சொல்கின்றார்கள். நேற்று [illegible] சொன்னேன். ரூ. 7,500 என்று அப்படியே பிக்சட் டெப்பாசிட்டிலே [illegible]ட்டால் ரூ. 114, 120 என்று மாதம் வந்து கொண்டுதானிருக்கும். ஆக [illegible]லே கூட இழப்பு ஏற்படும். அப்படி ஒரு கணக்குப் போட்டுப் பார்த்தாலும் [illegible], இழப்பு ஏற்படும் என்பதற்குக் காரணங்களைச் சொல்லியிருக்கிறேன். [illegible]ண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் [illegible]னுடைய நிலையில் மாறமாட்டார், பிடிவாதக்காரர் என்று எனக்கு [illegible]றாகத் தெரியும். அரசும் அதனுடைய நிலைமைகளை ஆராய்ந்து எடுக்க [illegible]ண்டிய முடிவுகளை முறைப்படி எடுக்கும்.



(முற்பகல் 10—40)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 7,500 ரூபாய் வரும் என்று எந்த Cadre-ஐ வைத்துச் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. இங்கே கொண்டு வந்திருக்கக்கூடிய திட்டத்தின்படி, செகண்டரி கிரேட் ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு ஒட்டுமொத்தமாக ரூ. 1,440 தான் கிடைக்கும். அதையாவது மறுபரிசீலனை செய்து, அந்தத் தொகையினை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன் என்றுகூட அமைச்சர் அவர்கள் இங்கே சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் முதலிலேயே கூறியிருக்கிறேன். இந்தக் கருத்துக்களை யெல்லாம் கல்வித் துறைக்குச் சொல்லி, கல்வித் துறை சிபாரிசு செய்யுமானால், பரிசீலிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் கல்வித் துறை மூலமாக வரட்டும் என்று சொன்னதற்குப் பிறகும், மீண்டும் மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதையே சொல்லிக்கொண்டிருப்பாரேயானால் இப்போதிருக்கிற நிலைமைதான் அடுத்த முடிவு வரும் வரைக்கும் இருக்கும்.

(உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திருப்பித் திருப்பி இதையே பேசினால் எப்படி ?

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் இன்று வேறு சப்ஜெக்டே பேசப் போவதில்லை. இது ஒன்றுக்காகத்தான் இன்றைக்கு 'ஸ்டேட்' பண்ண வேண்டுமென்று நினைத்தேன். வேறெதுவுமே இல்லை. [illegible] குறித்து கல்வித் துறையில் நாங்கள் கேட்கிறபோது, "இது நிதித் துறையிலே பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, இதற்கும் எங்களுக்கும் சம்பந்தமே இல்லை" என்று சொல்கிறார்கள். நிதித் துறையிலே வந்து கேட்டால், "கல்வித் துறையினர் பரிசீலனைக்கு அனுப்பினால் செய்கிறோம்" என்று சொல்கிறார்கள். ஆகவே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் "அன்று நல்ல எண்ணத்திலே உறுதியாகச் சொன்னீர்களே, அதைச் செய்யுங்கள்" என்று கேட்டால், அவர் உறுதிமொழியே அளிக்கவில்லை என்று சொல்கிறார். இதனால் ஆசிரியர்கள் சமுதாயத்திற்காக நாங்கள் வாதாடவே இல்லை என்று சொல்லக்கூடிய சூழ்நிலையை, நாங்கள்

இந்த அரசாங்கத்தை எதிர்க்க வேண்டுமென்ற ஆத்திரத்திலோ அல்லது உணர்விலோ சொல்லவில்லை. ஆசிரியர் சமுதாயத்தின் உணர்வுகளைப் பிரதிபலிக்க வேண்டியது இன்னும் கொஞ்சம் நாளைக்கு, ஏப்ரல் 20 தேதி வரை, எனக்குக் கடமையாக இருக்கிறதென்பதால், சில விஷயங்களை, நிர்வாகம் என்று இருப்பதால், சொல்கிறேன். தயவுசெய்து அதை ஏற்று தக்கது செய்க என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

அடுத்து, இங்கு தேர்தல்களைப் பற்றி கூட சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது ஒரு அங்கோரச் சட்ட முன்வடிவு. ஒவ்வொரு விஷயமாகப் போக வேண்டுமென்ற அவசியமில்லை. வழக்கமும் இல்லை.

திரு. செ. முத்துசாமி: போலீஸ் நிர்வாகம் பற்றியெல்லாம் இதிலே சொல்லியிருக்கிறார்கள். நான் அன்றைக்குக்கூட ஒன்றைச் சொன்னேன். எனக்கு ஒதுக்கியிருக்கிற நேரம் எவ்வளவு என்று சொல்லுங்கள். அந்த நேரத்திற்குள் நான் பேசி முடித்து விடுகிறேன். ஒவ்வொன்றுக்கும் நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்களோ அதையே நான் பேசிக் கொண்டிருக்க முடியாது. சொல்லுவது உறுப்பினருடைய உரிமை. நான் சொல்ல வந்த விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினருக்குச் சொல்கிறேன். இனம் இனமாகச் சொல்வதற்கு இது ஒன்றும் 'ஜெனரல் டிஸ்கஷன்' அல்ல. கட்சித் தலைவர்கள் கூட பேச பெயர் கொடுக்கவில்லை. ஆசிரியர் பிரதிநிதிகள் தாம் பெயர் கொடுத்திருக்கிறார்கள். நானும் அனுமதிக்கிறேன். ஆனால் ஒரு ஜெனரல் டிஸ்கஷன் மாதிரி 'ஐடம் பை ஐடம்' விவாதம் பண்ணுவதற்கு நான் எப்படி அனுமதிக்க முடியும்?

திரு. செ. முத்துசாமி : சட்டசபையின் மரபுகளையொட்டித்தான் நானும் பிரச்சினைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறேன். சில நேரங்களில் சில விஷயங்கள் வரும்போது மட்டும் தான் தாங்கள் தடுக்கிறீர்கள். இருந்தாலும் நான் ஏற்கிறேன். தாங்கள் ஆணையிடுவதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சில விஷயங்களைச் சொல்கிறபோது மட்டும் நான் தடுக்கிறேன் என்று சொன்னால் எந்த விஷயத்திலோ எனக்கு அக்கறை மாதிரி உறுப்பினர் சொல்வது தவறு. இப்படி எல்லாம் உறுப்பினர் சொல்லக்கூடாது. அது தப்பு.



திரு. செ. முத்துசாமி : தவறு என்று தலைவர் சொன்னால் தவறுதான். சபை நடவடிக்கை காரணமாக அது தவறுதான். அதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் ஒன்று சொல்கிறேன் * * * சபையில் சொன்னேன். அதை நான் சொல்லக்கூடாது என்று எக்ஸ்பஞ்ச் செய்திருக்கிறார்கள். இது எந்த விதத்தில் தர்மம்?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினருக்குக் கண்டிப்பாகச் சொல்கிறேன். போன தடவை அவையில் நடந்ததை 'எக்ஸ்பஞ்ச்' பண்ணியதை இப்போது உறுப்பினர் பேசுகிறேன் என்று சொன்னால், அதை நான் எப்படி அனுமதிப்பது? இந்த சபையினுடைய மரபுகளைக் காக்க உறுப்பினர் கடமைப்பட்டிருக்கிறார். வெளியே ஒருவர் சொல்லியதை அவையிலே வந்து சொல்லக்கூடாது என்பதால்தான் 'எக்ஸ்பஞ்ச்' பண்ணப்பட்டது. அது உறுப்பினருக்குத் தெரியும். அந்த முறையிலே இங்கே பேசியதைப்பற்றி வெளியிலே பேசினால், உறுப்பினருக்குப் பாதுகாப்பு கொடுக்கத் தயார். ஆனால் எங்கோ பொதுக்கூட்டத்தில் பேசியதை இங்கே வந்து யார் எடுத்துச்சொன்னாலும் சரி - அமைச்சராக இருந்தாலும் சரி - தடுப்பேன், 'எக்ஸ்பஞ்ச்' பண்ணுவேன். அதையே உறுப்பினருக்கும் நான் சொன்னேன். ஏற்கெனவே 'எக்ஸ்பஞ்ச்' பண்ணியதையே திரும்பவும் திரும்பவும் உறுப்பினர் எடுத்துச் சொன்னால் இன்னொரு முறையும் நான் அதை 'எக்ஸ்பஞ்ச்' பண்ணிக்கொண்டிருக்க வேண்டுமா? இப்படி எல்லாம் பேசுவது மரபு அல்ல.

திரு. செ. முத்துசாமி : அமைச்சர் அவர்கள் கூட்டத்தில் பேசியதாக நான் சொல்லவில்லை. உங்கள் மேலான கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவருகிறேன் * * என்றால் நாங்கள் எங்கே சென்று சொல்வது? போலீஸ் ஸ்டேஷனில் மட்டும்தான் போய்ச் சொல்வதா? ஆகவே தான் நான் ஒன்றைச் சொல்கிறேன். * *

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினருக்கு ஒன்று சொல்கிறேன். இப்படி எல்லாம் உறுப்பினர் சொல்வதை நான் அனுமதிக்க முடியாது. எக்ஸ்பஞ்ச் பண்ணப்பட்டதை மீண்டும் சொல்லியே தீர வேண்டுமென்ற பிடிவாதத்தில் சொல்கிறார்கள். அது தப்பு. நான் அனுமதிக்க முடியாது. இன்னொரு முறையும் நான் 'எக்ஸ்பஞ்ச்' பண்ண முடியாது.

திரு. செ. முத்துசாமி : *

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

...போய்ச் சொல்வது ?

...மாண்புமிகு மேலவைத் தலைவர் : எங்கெங்கோ தேர்தல் மேடையிலே ...பேசியதற்கு நான் எப்படி பாதுகாப்பு கொடுப்பது ?

திரு. செ. முத்துசாமி : தேர்தல் மேடை அல்ல. * * அதை இங்கே பதிவு செய்து விடுகிறேன். பின் ஏதாவது நடந்தால், . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பதிவு செய்ததை இன்னொரு முறையும் நீக்குகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : உறுப்பினர் அவர்கள் மீண்டும் மீண்டும் தலைவர் அவர்கள் இந்த அவையிலே எடுத்துக் கொள்ள முடியாது என்று தீர்ப்பு அளித்த ஒரு பிரச்சினையை வற்புறுத்திக் கொண்டிருப்பது சபையினுடைய மரபுக்கும் உகந்ததல்ல, மாண்புமிகு உறுப்பினருக்கும் உகந்ததல்ல என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். தேர்தல் நேரங்களிலோ வேறு பிரச்சினைகளிலோ வெளியிலே பல கருத்துக்கள் விவாதிக்கப்படலாம். அதற்கு ஆதாரங்கள் என்றும் காட்ட முடியாது. அதையே மீண்டும் மீண்டும் இப்பொழுது ஒரு குறிப்பிட்ட அளவுக்குள்ளே விவாதிக்க வேண்டிய பிரச்சினையில் அவர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து கொஞ்சம் அமைதியாகவும் பொறுமையாகவும் சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்வார்களானால், இந்தச் சபையினுடைய நேரத்தையும் நாம் பாதுகாப்பதற்கு உதவியாக இருக்கும்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்ன நல்ல ஆலோசனையை நான் ஏற்கிறேன். நான் தேர்தல் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன்னவர் அதிருப்பட்டாலி.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்கள் சொன்ன ஆலோசனைகளை நான் ஏற்றுக்கொண்டேன். ஆனால் நீங்கள்தான் பேர்கொண்டும் பேர் கொண்டும் நீக்கிக்கொண்டே இருப்பேன் என்கிறீர்கள். நீங்கள் நீக்கிக் கொண்டே இருங்கள். அது வேறு சமாச்சாரம். நான் தேர்தல் என்று சொல்லவில்லை. அதை விட்டுவிடுகிறேன் * * * அதை அவையிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினருக்குச் சொல்கிறேன். இப்படி எல்லாம் பேசுவது முறையல்ல. இனிமேல் உறுப்பினர் இப்படிப் பேசுவதை நான் அனுமதிக்க முடியாது. நான் ஏற்கெனவே 'எக்ஸ்பஞ்ச்' பண்ணியதையே திரும்பத் திரும்ப உறுப்பினர் சொல்கிறார்கள் என்றால் என்ன அர்த்தம் ?

திரு. செ. முத்துசாமி : நீங்கள் சொல்லிவிட்டீர்கள் என்பதற்காக நியாயம் கேட்பதற்கு எனக்கு உரிமை இல்லையா ? சரி, நீங்கள் நியாயம் கேட்க உரிமை இல்லை என்றாவது சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நியாயம் கேட்பது என்பது இந்த விஷயத்தில் அல்ல.

திரு. செ. முத்துசாமி : நான் ராஜ்ஜதான் சட்டசபையினுடைய ஒரு முன் உதாரணத்தை இங்கே சுட்டிக்காட்டிப் பேசுகிறேன். ஒரு உறுப்பினர் மிரட்டப்பட்டபோது, அவர் சபையிலேதான் வந்து சொன்னார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட அச்சுறுத்தல்கள் வந்தால் காவல் துறை மூலமாகப் புகார் செய்து அதற்கான நடவடிக்கைகளை வெளியே எடுத்துக்கொள்ள வேண்டும். சட்டமன்ற வளாகத்திற்குள் உறுப்பினர்கள் பாதுகாப்பிற்கு மாறுபாடான நிலைமைகள் ஏதாவது ஏற்பட்டால், அப்போது அதை உரிமைப் பிரச்சினையாக அவைக்குள் எழுப்பி தங்க பாதுகாப்பு வேண்டுமென்று கேட்க எல்லோருக்கும் உரிமை உண்டு. அப்போது அவையும் நடவடிக்கை எடுக்க முடியும். ஆகவே இது வெளியில் நடந்த விவகாரம் என்று சொல்லப்படுவதால், நாட்டில் உள்ள எல்லோருக்கும் என்ன உரிமைகள் இருக்கின்றனவோ அதற்கு என்ன முறைகள் உள்ளனவோ அதே உரிமைகள், அதே முறைகள் மாண்புமிகு உறுப்பினருக்கும் மற்ற மேலவை பேரவை உறுப்பினர்களுக்கும் உண்டு. முறைப்படி காவல் துறைக்கு இந்தப் புகாரைத் தெரிவித்து காவல் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், எந்த முறையில் பாதுகாப்பு வேண்டும் என்றும் சொல்லி, காவல் துறை மூலமாக அதைப் பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பிரச்சினையை அவையில் எழுப்புவதென்றால், அது சரியாக வராது.

திரு. செ. முத்துசாமி : நான் அதை ஒத்துக்கொள்கிறேன். மாண்புமிகு தலைவர் அவர்கள் ஐந்து நிமிடம் அளிக்க வேண்டும். பொதுவாகத் தேர்தல்களில் வாக்கு அளிப்பதற்கு நல்ல சுதந்திரமான நடைமுறைகள் இருக்க வேண்டும். நான் ஒரு விஷயத்தை தங்கள் கவனத்திற்குக் கொண்டு

வர் விரும்புகிறேன். முத்துசாமி தேர்தலைப்பற்றிச் சொல்லவில்லை. பொதுவாகச் சொல்கிறேன். ஆசிரியர்-பட்டதாரி ஆசிரியர்கள் தொகுதி தேர்தல்கள் நடைபெற்றன. அப்படி நடக்கிறபோது, வாக்காளர்களுக்கு அடையாள அட்டை அனுப்பப்பட்டிருக்கிறது. வாக்குச் சாவடியில் அந்த அடையாளக் கார்டுகளைக் கேட்கவில்லை. ஏன் கேட்கவில்லையென்றால், கேட்க வேண்டிய அவசியம் இல்லையென்று அங்கே உள்ள பிரசைடிங் ஆபீசர் சொல்கிறார். இது நடந்திருக்கிறது. தேர்தலில் அங்கு உள்ள பெண்கள் ஹையர் செகண்டரி பள்ளியின் தலைமையாசிரியை அவர்களுடைய வாக்கு காலையிலேயே வேறு ஒரு பெண்ணால் போடப்பட்டுவிட்டது. அங்கு பொறுப்பில் உள்ள டெபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ், ஒரு கல்வித்துறையின் அதிகாரியின் பொறுப்பில் மூன்று பெண்கள் மேல்நிலைப்பள்ளிகள் தான் இருக்கின்றன. அவருக்கு அங்குள்ள தலைமையாசிரியைகளின் பெயர்கள் தெரியும். அவர்களையும் தெரிந்திருக்கும். அப்படியானால் இந்தத் தலைமையாசிரியை யார் என்று அடையாளம் காட்டத் தெரிந்திருக்காதா? அப்படித் தெரியாமல் இருந்திருக்கிறார். மாலையில் இந்த அம்மையார் வாக்கு போட வந்திருக்கிறார்கள். "உங்களுடைய வாக்கு பதிவாகிவிட்டது" என்று சொல்கிறார்கள். இது என்ன நியாயம்? சேலத்தில் ஒரு தொகுதியில் இருக்கிற இரண்டு பூத்துக்களை எடுத்துக்கொண்டால் - பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆனால், ஆதாரபூர்வமாகச் சொல்கிறேன். ஓட்டுப் போடும்போது கையெழுத்து பேலட் பேப்பரின் அடிக்கட்டையில் இட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஓட்டுபோடும் ஒவ்வொருவரும் கையெழுத்து போட்டிருக்கிறார்கள். இரண்டு பூத்துக்களில் கையெழுத்து போட்டவர்கள் அந்த ஆசிரியர்கள்தானா? அவர்களை என்கொயரி செய்தால், நீதிபூர்வமாக விசாரணை நடத்தினால், எத்தனை தவறான கள்ள ஓட்டுகளைப் போட்டிருக்கிறார்கள் என்பது தெரியவரும். தயவுசெய்து ஜனநாயகத்தின் பெயரால் நல்ல நேர்மை நிலையோடு விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்கள் பூத்துக்களுக்கு வரும்போது, சில நேரங்களில் மிரட்டப்பட்டிருக்கிறார்கள். நான் அதிகமாக அதைக் குறித்துப் பேசப் போவதில்லை. அதற்குள்ளே நுழையவும் விரும்பவில்லை.

(மணியடிக்கப்பட்டது)



**திரு. ஆர். டி. சீத்தாபதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தேர்தல் சம்பந்தமாக குற்றம் குறைகள், தவறுகள் நடந்திருந்தால், தனியாக வழக்கு தொடுக்கலாம். இங்கே அதைச் சொல்லலாமா? வழக்குமன்றத்தில் வழக்கு தொடரலாம் என்பதைத் தங்கள் மூலமாக அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** ஒவ்வொரு பிரச்சினைக்கும் கோர்ட்டுக்குச் செல்லலாம், அல்லது மற்ற இடங்களுக்குச் செல்லலாம். (மணியடிக்கப்பட்டது) ஒரேயொரு சின்ன விளக்கம் சொல்ல அனுமதியுங்கள். அந்தப் புகார்களை இங்கே சட்டமன்றத்தில் சொல்ல எனக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே சொல்கிறேன். நீங்கள் வேறுவிதமாக எடுத்துக்கொள்ள வேண்டாம். ஆசிரியர்கள் மத்தியில் நடக்கும் தேர்தல்களில் இப்படி ஒரு நிலைமை ஏற்படலாமா என்று மட்டும் தயவு செய்து சிந்தித்து, அந்த இரண்டு பூத்துக்களைப் பற்றி விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று அதே பூத்துக்களில் பென்சிலால் மார்க் செய்த 1100 ஓட்டுக்கள் செல்லுபடியாகவில்லை என்று அறிவிக்கப்பட்டது. டிபார்ட்மெண்ட் பால்பாயிண்ட் பேனாவுக்குப் பதிலாக பென்சிலை சப்ளை செய்திருக்கிறார்கள். பூத்துக்குள் அந்தப் பென்சில்தான் வைக்கப்பட்டிருந்தது. ஆகவே அந்தப் பென்சிலால் அடிக்கட்டையில் கையெழுத்து போட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக அந்த ஓட்டுகள் 1100 செல்லுபடியாகாத நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக ஆசிரியர்களுக்கு ஓட்டு போடத் தெரியவில்லை என்ற கெட்ட பெயர் ஏற்பட்டிருக்கிறது. அப்படி ஒரு நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது. இப்படி குறிப்புகள் வரும்போது, அதிகாரிகளாகச் செயல்படுகிறவர்கள் சரியாகச் செயல்பட வேண்டாமா?

(முற்பகல் 11-00)

அரசு ஊழியர் தேர்தலில் வேட்பாளருக்காகப் பணியாற்றினால், அவருடைய தேர்தல் செல்லாது என்கிறார்கள். அன்னை இந்திரா காந்தி அவர்கள்—இந்தியாவின் பிரதமருடைய தேர்தலில் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை அளித்தது. அப்படியானால் அரசு ஊழியர்களாக இருப்பவர்கள் தேர்தலில் ஈடுபட்டால், அந்த ஊழியர்களுக்கு என்ன தண்டனை? அமைச்சர்

[illegible] பொறுத்தவரையில், அவர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு உண்டான [illegible]ப்பு உண்டு என்கிறார்கள். இது சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் கிடைக்கிற பாதுகாப்பு. ஆனால் இது எம்.எல்.ஏ. மற்றும் எம்.எல்.சி.-க்களுக்குக் கிடையாது. அப்படியானால் அமைச்சர்கள் தேர்தலில் ஈடுபட்டால், என்ன ஆவது? இவற்றிற்கெல்லாம் தெளிவான நடைமுறைகள் இருக்க வேண்டாமா? இதைத்தான் நான் இங்கே பணிவன் போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கட்சி அரசியல் என்பது வேறு, அண்ணா அவர்கள் ஆட்சியில் இருந்த போது, திரு. ராஜா ஐயர் அவர்கள் மேலவை உறுப்பினர் தேர்தலில் போட்டி யிட்டார்கள். அப்போது பேராசிரியர் திரு. அன்பழகன் அவர்களின் தம்பி திரு. திருமாறன் அவர்களைக் கட்சி சார்பாக நிறுத்த வேண்டுமென்று கேட்ட போது, அண்ணா அவர்கள் சொன்னார்கள். தயவுசெய்து ஆசிரியர்கள் தொகுதியில் கட்சி அரசியலைப் புகுத்தாதீர்கள் என்றார்கள். அதைத் தெளி வாகவே சொன்னார்கள். அதன் காரணமாக மீண்டும் திரு. ராஜா ஐயர் அவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே உறுப்பினராக வந்தார்கள். எனவே ஆசிரியர் தொகுதியைப் பொறுத்தவரையில், எந்தக் கட்சியானாலும் சரி, தயவுசெய்து கட்சி அரசியலாக ஆக்காமல் இருப்பதுதான் ஒரு புனிதமான தன்மையை உருவாக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இது அண்ணா அவர்களே தெரிவித்து, உருவாக்கிய கருத்து. அண்ணா அவர்கள் ஒரு தேர்தலின் போது தெரிவித்தாலும்கூட, அது காலாகாலத்திற்கும் கடைப்பிடிக்கப்படலாம். அதனாலே எங்கேயும் தவறு ஏற்பட்டுவிடாது. இதன் காரணமாக மந்திரி சபைக்கு ஒரு சங்கடமும் வந்துவிடாது. அசெம்பிளி தேர்தல் என்றால், கட்சிகள் தங்களுடைய முழுமையான சக்தியையும் பயன் படுத்தி வேலை செய்யலாம். அது ஜனநாயகத்தில் சரி. தகாது என்று யாரும் சொல்ல முடியாது.

இன்றைக்குக்கூட சட்ட மன்றம் பெரிதா, சுப்ரீம் கோர்ட் பெரிதா என்ற ஆந்திர மாநிலத்தில் பிரச்சினை வந்திருக்கிறது. பாராளுமன்றத்தில்கூட அதை எழுப்பியிருக்கிறார்கள். ஏற்கனவேகூட இங்கே ஒரு முறை வந்த போது, பாராளுமன்றம் தான் பெரிது என்று நாமே ஒப்புக்கொண்டு பிரச் சினையை முடித்து வைத்திருக்கிறோம். அதைப்பற்றிக் கருத்துக்கள் தெரி விக்கலாம், தீர்மானம் போடலாம். பாராளுமன்றம்தான் ஜனநாயகத்தில் உயர்ந்த அதிகாரம் பெற்றதாகும். சட்டங்களை அமுல்படுத்துவதற்காக





இருக்கிற நீதிமன்றங்களை "வாட்ச் டாக்ஸ்" என்கிறார்கள். ஆனால் அந்த
'வாட்ச் டாக்கு'கள் சில நேரங்களில் எஜமானர்களையே விரட்டக்கூடிய
நிலைக்கு வந்துவிடக்கூடாது என்பதுதான். இப்போது ஆந்திர மாநிலத்தில்
லேட்டஸ்ட்டாக நடந்திருப்பது. எனவே இந்த விஷயங்களையெல்லாம்
தன்மையோடு கவனித்து, அரசியலில் ஈடுபடும் அதிகாரிகள் யாராக இருந்
தாலும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கி
றேன்.

டி. ஈ. ஓ. ஆக இருப்பவர் ஒருவர் ஓட்டலிலே சென்று ஒருவரைப் பார்க்கி
றார். அங்கே அவர் தேர்தலைப்பற்றிப் பேசுகிறார். தேர்தலுக்காக என்று
வசூல் செய்திருக்கிறார். இது என்னுடைய தொகுதியிலே நடந்திருக்கிறது.
கல்வி அதிகாரிகளாக இருப்பவர்கள் ஆசிரியர்களுக்கு மேலே அதிகாரிகளாக
இருப்பவர்கள், ஆசிரியர்கள் மீது டிசிப்ளினரி ஆக்ஷன் எடுக்க, ஆசிரியர்களை
சஸ்பெண்டு செய்ய, டிரான்ஸ்பர் செய்ய அதிகாரம் பெற்றவர்கள், "நீ டிரான்ஸ்
பர் செய்யப்படுவாய்" என்று மிரட்டியிருக்கிறார்கள். பள்ளி பள்ளியாகச்
சென்று ஒரு வேட்பாளருக்காக நன்கொடை வசூல் செய்திருக்கிறார்கள்.
இதெல்லாம் எப்படி நியாயமாக அமைய முடியும்? கல்வித் துறையின் நிர்வாக
இயந்திரமே, அதில் பணியாற்றக்கூடிய அதிகாரிகளே, இன்னும் சொல்லப்
போனால் செக்ஷன் சூப்பரின்டென்டுகளே தேர்தல் பூத்துக்கு முன்னாலே
வந்து நின்றிருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு இடத்திலும் ஆசிரியர்களை
மிரட்டியிருக்கிறார்கள் என்பதை இங்கே பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன். காரணம் எதிர்காலத்திலாவது இத்தகைய அநியாயங்கள்
நடவாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நிர்வாக இயந்திரத்தில்
இருப்பவர்கள் தங்களுக்குப் பதவி உயர்வு வேண்டும் என்பதற்காக, தாங்கள்
சென்று தங்களுக்கு மேலே இருப்பவர்களைத் திருப்தி செய்ய வேண்டுமென்ப
தற்காக இப்படிப்பட்ட தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.
அதனாலேதான் தலைமை ஆசிரியர்களாக இருப்பவர்கள், சி.ஈ.ஓ.-க்கள், டி.ஈ.
ஓ.க்கள் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்க
ளெல்லாம் இத்தகைய முறைகளில் ஈடுபட்டால் ஆசிரியர்களாக இருப்பவர்கள்
அச்சமின்றி வாக்களிக்க முடியுமா? ஆசிரியர்களைப்பற்றி நீங்கள் அறிய
மாட்டீர்களா?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இது மசோதா மீது பேசுகிற விஷயம்
தானா? எதைத்தான் பேசுவது என்று இல்லையா? இந்தச் சட்ட
முன்வடிவின் மீது பேசுகிற விஷயம்தானா? இதெல்லாம் மாண்புமிகு உறுப்
பினருக்கே தெரியாதா? இப்படிப் பேசுவது அவருக்கே பெருமை தருமா?

இத்தனைக்காலம் அவையில் உறுப்பினராக இருந்து அனுபவம் பெற்ற ஒருவராக இருக்கிற அவர் எதைப் பேசுவது என்று இல்லையா? பெருமை தேடிக் கொள்ளுகிற வகையில் பேச வேண்டாமா?

(மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் பேச எழுந்தார்.)

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தாங்களே மணி அடித்திருந்தால், நானேகூட நிறுத்தியிருப்பேன், இப்போது அமைச்சர் அவர்கள் எழுந்த உடனே என்னை இத்தனை தடவை போட்டு வெட்டுகிறீர்களே? இதற்கு மேல் ஒரு வார்த்தைக்கூட வேண்டாம் என்று தாங்களே சொல்லியிருந்தால், நானே முதலிலேயே உட்கார்ந்திருப்பேனே. இப்போது நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் எழுந்ததும் தாங்கள் இப்படிக் கோபப்படுவது நியாயம்தானா?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதற்காக ஒரு குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 5 நிமிடங்கள் கேட்டு 5 நிமிடங்கள் எப்போதோ கடந்துவிட்டது, அதற்குப் பிறகு ஆந்திரா கவுன்சில் விவகாரம் வந்துவிட்டது, நாடாளுமன்றம் வந்துவிட்டது. சுப்ரீம் கோர்ட் வந்துவிட்டது. இப்படியெல்லாம் வரவேதான் இந்தச் சட்டமுன்வடிவு சம்பந்தமாகப் பேச வேண்டும் என்று சொல்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: சம்பந்தமில்லை என்று சொன்னால்; பரவாயில்லை. அதை விட்டுவிட்டு பேசியதையெல்லாம் குறைவாகச் சொல்லலாமா என்றுதான் தங்களிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் கொஞ்சம் அனுதாபத்தோடு நடக்க வேண்டும் என்று என்னுடைய அறிவும் அனுபவமும் சொல்கிறது. அதற்காக விட்டால் அதையே தவறாக உபயோகப்படுத்துவது முறையா என்றுதான் கேட்க விரும்புகிறேன் . .

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, நீங்களே அனுமதித்து நான் பேசிய கருத்தை மோசமான கருத்து என்று நீங்களே சொல்லலாமா? நியாயமா? நீங்கள் பெரிய மனது வைத்து என்னைப் பேச அனுமதித்தீர்கள். இது நான் பேசிவிட்டேன். அதிலே குற்றம் குறை சொல்லலாமா? இவ்வளவு பெரிய பொறுப்பிலே இருக்கக்கூடிய தாங்களே அப்படிச் சொன்னால் நான் எங்கே போய் முறையிடுவது? பெரிய பொறுப்பிலே இருக்கிற நீங்கள், அது சரியோ, தப்போ, அனுமதித்துவிட்டீர்கள், நான் பேசிவிட்டேன், நீதிபதியாக இருக்கக்கூடிய நீங்களே அதை விமர்சனம் செய்தால் நான் எங்கே பேசுவேன்?





தயவு செய்து என்னைத் தப்பாகக் கருத வேண்டாம். என்னுடைய வயது அளவிற்கு உங்களுக்கு அரசியல் வாழ்க்கை உண்டு. பேசுவதற்காக மேலும் கொஞ்ச நேரம் எடுத்துக்கொண்டேன். அதற்காகக் குறைத்துச் சொல்லாதீர்கள். தாங்கள் மன நிறைவோடு "அனுமதித்தேன்" என்று தயவு செய்து கூறி மறுபடியும் பதிவு செய்யுங்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அனுமதித்தேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, டி.எஸ்.ஓ.க்கள் தலையிடுவதாக மாண்புமிகு உறுப்பினர் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: விவாதம் முடிந்தாகிவிட்டது.

செல்வி. ஆ. லீலாவதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1984ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின் மீது சில கருத்துக்களைக் கூற அனுமதித்ததற்காக நன்றி கூறிக்கொள்கிறேன்.

இன்சென்டிவ் இன்கிரிமென்ட் பற்றி வாதம் நடந்தது. அது மிகவும் அவசரமான, அவசியமான ஒரு கொள்கை என்பதை நான் இங்கே கூறிக்கொள்கிறேன். அவர்களது கோரிக்கை இன்சென்டிவ் இன்கிரிமென்ட் கொடுக்க வேண்டும் என்பதுதான். பல்லாயிரக்கணக்கான ரூபாயைச் செலவழித்து, இந்த இன்சென்டிவ் பெற வேண்டும் என்று, எம்.ஏ., எம்.எட். படித்து பல ஆசிரியர்கள் பட்டம் பெற்று விட்டார்கள். இன்னும் ஒரு சில ஆசிரியர்கள் பெறாமல் இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். ஒரு சாராருக்குக் கொடுத்துவிட்டு மற்றவர்களுக்குக் கொடுக்காமல் இருப்பது நியாயம் இல்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறியதுபோல, மீண்டும் பரிசீலனை செய்வார்கள் என்று ஆசிரியர்கள் அனைவரும் மிகவும் ஆவலாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அறிவிப்பு வராததால், ஆசிரியர்கள் சமுதாயத்திற்கு மிகப் பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. மீண்டும் கல்வித் துறை அதற்குச் சிபாரிசு செய்தால், அதைப் பரிசீலனை செய்வதாக அவர் கூறியதற்காக ஆசிரியர்கள் சமுதாயத்தின் சார்பாக நான் நன்றி தெரிவித்துக்கொண்டு, அதற்கான நல்ல உத்தரவை வெளியிட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பதவி உயர்வு இல்லாத ஆசிரியர் பதவியில் அமர்ந்திருக்கிறார்கள். அநேக ஆசிரியர்கள் எம்.ஏ., எம்.எட். படித்துவிட்டார்கள். இதை அறிவிப்பதால், ஒரு சிலரே இலாபம் பெற்றிருப்பதால், இதைக் கொடுப்பதால், அரசுக்கு அதிகம் செலவு இருக்காது என்று நான் நினைக்கிறேன்.

மிக வருத்தத்தோடு ஒன்றைக் குறிப்பிடுகிறேன். கல்விக் கொள்கைக் குறிப்பின் மீதான விவாதத்தில் 12 உறுப்பினர்கள் பேசினார்கள். 11 பேர் பேசியது இரண்டு இரண்டு வரிகளில் பத்திரிகையிலே போடப்பட்டிருக்கின்றன. ஆனால் என்னுடைய பெயர் மட்டும் விடப்பட்டிருக்கிறது. ஒருவேளை பெண் என்பதால் எல்லோரும் ஏளனமாக நினைப்பார்கள், அதைப் போல் ஏளனமாக நினைத்து விட்டுவிட்டார்களோ என்னவோ தெரியவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்களின் பெயர் இருந்தது. சென்னை—செங்கற்பட்டு மாவட்ட ஆசிரியர் பிரதிநிதியாக பல ஆயிரக்கணக்கான வாக்குகளைப் பெற்று வந்த வீராங்கனை என்றுதான் நான் கூறிக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட ஒரு ஆசிரியர் பிரதிநிதியாக நான் இங்கே விளங்குகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வீரத்திற்கு வயது கிடையாது. பால் வேற்றுமை கிடையாது.

செல்வி ஆ. லீலாவதி: என்னுடைய பெயரை மட்டும் விட்டு மற்ற 11 பேர்கள் பேசியதை விளம்பரப்படுத்தியிருப்பதை நான் இந்த நேரத்தில் மிக வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குரிய ஓய்வூதியத்தைப் பற்றி விளக்கப்படவில்லை. இப்போது ஓய்வு பெறும் அரசு ஊழியர்கள், அரசு ஆசிரியர்கள் ஐந்தாயிரம் ரூபாய் பெறுகிறார்கள்.

(முற்பகல் 11-10)

ஆனால் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்த அரசு ஆணையில் இது குறித்து தெளிவாக விளக்கப்படவில்லை. அவர்கள் மிகவும் வேதனைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். "நாங்களும் ஆசிரியர்கள் தானே. அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும்போது அவர்களுக்கு மட்டும் உடனடியாக 5 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகின்றது. ஏப்ரல், மே மாதங்களில் ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்கும் அது கொடுக்கப்படுமா" என்ற ஒரு ஆவலோடு ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஏப்ரல், மே மாதங்களில் ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கும் இதனை உடனடியாக விரிவுபடுத்த வேண்டுமென்று கோரி, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, அமைகிறேன்.





திரு. இ. ரா. வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்
வடிவின் மீது சில கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரி
வித்துக் கொள்கிறேன். மற்ற உறுப்பினர்கள் கூறியதைப்போல, ஆசிரியர்
களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இன்சென்டிவ் சம்பந்தமான இந்தப் பிரச்சினை
குறித்து நிதி அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு இங்கு நடை
பெற்ற துணை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, ஒரு நல்ல நம்பிக்கை
ஏற்படுத்தக்கூடிய ஒரு சில அறிவிப்பைக் கொடுத்தார்கள். அவர்கள் ஒரு
கருத்தில் ஆணையைக் குறிப்பிட்டுச் சொல்லும்போது, சீனியர், ஜூனியர்
பிரச்சினை, இன்சென்டிவ், இன்கிரிமெண்ட் கொடுப்பதன் காரணமாக ஏற்பட்
டிருக்கிறது என்று சொன்னார்கள். அந்தப் பிரச்சினையைச் சரி செய்வதற்கு
இந்தப் புதிய முறை பொருந்தும் என்ற வகையில், ஒரு குறிப்பிட்ட தொகை
யைக் கொடுக்கலாமென்று அரசு முடிவு செய்திருக்கிறதென்று எடுத்துச் சொன்
னார்கள். அதற்கும்கூட நாங்கள் வேறு வழி கூறினோம். சீனியர்,
ஜூனியர் பிரச்சினையைக்கூட வேறு வகையில் அரசு ஒரு ஆணையின்
மூலமாக எவ்வாறு சமாளித்தது என்பது குறித்தும் நான் இதற்கு
முன்பே மேலவையில் எடுத்துச் சொன்னேன். அந்த சீனியர் ஜூனியர்
பிரச்சினை மட்டும்தான் அதற்குக் காரணமென்றால், அதை வேறுவகையில்
சரி செய்து, அதற்குத் தக்க நிவாரணம் கொடுத்து, ஆணைகள் பிறப்பிப்ப
தற்கு நல்ல முன் உதாரணங்கள் இந்த அரசிலேயே இருந்திருக்கின்றன.
ஆகவே நிதி அமைச்சர் அவர்கள் கொடுத்த ஒருசில அறிவிப்புகளை நாங்கள்
கேட்டபோது, சற்று நம்பிக்கை ஏற்பட்டு ஆசிரியர்களுடைய ஒரு
அதிருப்தியை, ஆசிரியர்களிடையே ஏற்பட்டிருக்கின்ற இந்த எதிர்ப்பு
உணர்வை அரசு புரிந்துகொண்டிருக்கிறதென்பதை மட்டும் எங்களால் நல்ல
முறையில் தெரிந்துகொள்ள முடிந்தது. ஆகவே நிதி அமைச்சர் அவர்கள்
கூறியவாறு கல்வித் துறையின் சார்பாக, தனியாக இப்படி ஒரு ஏற்பாடு,
பழைய ஏற்பாடு நீட்டிக்கவேண்டுமென்று சொன்னால், அதற்கு கல்வித் துறை
தக்க முன்மொழிவுகளை அனுப்பினால், அது குறித்து ஆராயலாம் என்று
அவர்கள் சொன்னார்கள். அதை நான் அப்போதும் வரவேற்றேன்;
இப்போதும் நாங்கள் முழு மனதுடன் வரவேற்கின்றோம். அவ்வாறு
கல்வித் துறையிலிருந்து தக்க முன்மொழிவுகளை நிதித் துறை விரைவாகப்
பெற்று, 3 லட்சம் ஆசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்கிற இந்த அதிருப்தியை நீக்கு
வதற்கு உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிச்சய
மாகச் செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அவர்கள் கொடுத்த அந்த

[திரு. கி. ரா. லெட்சுமிகாந்தன்] [1984 மார்ச் 29

நம்பிக்கையைச் செயலாற்றும் வகையில் நிதித் துறை அதிகாரிகளும் செயல்
பட்டு, நல்ல ஒரு ஆணையை மிக விரைவாக வெளியிட்டு இந்தப் பிரச்
சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய
கோரிக்கை.

அதைப்போலவே இன்னொன்றையும் நாங்கள் மீண்டும் மீண்டும் சொல்லிக்
கொள்ள விரும்புகிறோம். அரசு ஊழியர்களுக்கு ஒரு சலுகையை அறிவிக்
கும்போது, ஒரு சில சமயங்களில் அந்தச் சலுகை தனியார் பள்ளி, தனியார்
கல்லூரி, நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்துமென்று சில
ஆணைகள் வருகின்றன. ஒரு சில சமயங்களில் அரசு ஊழியர்களுக்கு
அறிவிக்கப்படுகின்ற சலுகைகள், தனியார் பள்ளி, தனியார் கல்லூரி, நகராட்சிப்
பள்ளி ஆசிரியர்களுக்குப் பொருந்தாதவகையில், ஆணைகளில் வாசகங்கள்
விடப்பட்டுப் போய்விடுகின்றன. இதன் காரணமாக சில சலுகைகளை உண்டு
என்று சொல்வதும், சில சலுகைகளை இல்லை என்று சொல்வதும் ஆசிரி
யர்களுடைய உள்ளத்திலும், தனியார் பள்ளி, தனியார் கல்லூரி, நகராட்சிப்
பள்ளி ஆசிரியர்களுடைய உள்ளத்திலும் ஒரு மிகப் பெரிய ஆழமான வேதனை
யையும், அதிருப்தியையும் ஏற்படுத்தி வருகின்றது என்றும் சொன்னேன்.
ஆதலால் தான் என்னுடைய அன்பான ஒரு வேண்டுகோளை வைக்கிறேன்.
இவ்வாறு சில சலுகைகளைக் கொடுக்கும்போது, அரசு இறுதியாக திட்ட
வட்டமான ஒரு கொள்கை முடிவினை எடுக்க வேண்டும். இந்தச் சலுகை
யானது இன்று தனியார் பள்ளி, தனியார் கல்லூரி, நகராட்சிப் பள்ளி
ஆசிரியர்களுக்கும் பொருந்துமென்று ஒரேவிதமான கொள்கை முடிவை
எடுத்து விடுவோமானால், அதற்கேற்ற வகையில் அந்த ஆணையை வெளி
யிட்டுவிடுவோமானால், எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினை வாராமல் தடுக்க
முடியும். ஆகவே இந்தக் கருத்தை அரசு ஆராய்ந்து ஒரு நல்ல கொள்கை
முடிவை அறிவிக்க வேண்டுமென்று 3 லட்சம் ஆசிரியர்கள் சார்பாக நான்
வலியுறுத்த விரும்புகிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு
நம்முடைய அரசின் சார்பாக ஒரு Finance Officer- 'deputation -ஐ என்ற
அடிப்படையில் நாம் அனுப்பியிருக்கிறோம். பொதுவாக எந்த அரசு அதி
காரியாக இருந்தாலும், குறிப்பிட்ட கால அளவுக்குமேல் அவரை அந்த
இடத்தில் நீடிக்க வைப்பது என்பது சரியானதல்ல என்று முதலமைச்சர்
அவர்களும் சட்டமன்றத்திலே சொல்லியிருக்கின்றார்கள். அதுவும் பல
அதிகாரங்களை அதிகமான அளவில் கையிலே வைத்திருக்கின்ற அதிகாரிகளை,
குறிப்பிட்ட கால அளவுக்குமேல் இங்கே நீடிக்க வைப்பது என்பது பிரச்சினை
களை உருவாக்கும் என்பதை அரசு நன்கு அறியும். ஆக அரசு அண்ணா



1984 மார்ச் 29] [திரு. கி. ரா. லெட்சுமிகாந்தன்]

மலைப் பல்கலைக் கழகத்திற்கு அரசின் சார்பில் அனுப்பப்பட்டிருக்கின்ற
நிதி அதிகாரியைப் பொறுத்தவரையில், அவரை அனுப்பி கிட்டத்தட்ட
மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன என்று நினைக்கிறேன். ஆகவே
அங்கே வேறு மாற்றம் ஏற்படுத்துவது பல்கலைக்கே நல்லது என்று கருக்க
மாக எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். அது குறித்தும் அரசு தக்க
முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில், இரண்டு முக்கியமான
கோரிக்கைகள் நீண்டகாலமாக இருக்கின்றன. அதனுடைய நிர்வாகத்தைச்
செம்மைப்படுத்துவதற்காக ரெவின்யூ வட்டவாரியாக, ஒவ்வொரு வருவாய்
வட்டத்திற்கும் ஒரு சப்-டிவிஷன், அதாவது ஒரு துணைக் கோட்டம்
இருக்க வேண்டும் என்பது அரசினுடைய நியதி. அரசினுடைய கொள்
கையின் காரணமாக, இரண்டு மூன்று ஆண்டுகளில் பல வட்டங்கள் புதிதாகப்
பிரிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி புதிதாகப் பிரிக்கப்பட்டிருக்கின்ற வருவாய்
வட்டங்களில், துணைக் கோட்டங்கள் உருவாக்கப்படாததன் காரணமாக,
நெடுஞ்சாலைப் பணி சரியான முறையில் நடைபெற முடியவில்லை. ஆகவே
வருவாய் வட்டத்திற்கு ஒரு துணைக் கோட்டம் உருவாக்க வேண்டும்.
ஒவ்வொரு உதவிக் கோட்டப் பொறியாளருக்கும், ஒரு வாகன வசதி தேவைப்
படுகிறது. அங்கே அந்தப் பணியைச் சரியான முறையில் நிறைவேற்ற,
ஒவ்வொரு துணைக் கோட்டப் பொறியாளருக்கும் ஜீப் வண்டி, அளிக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்
கிறேன். நம்முடைய திட்டங்கள் எல்லாம் நன்றாக இருக்கின்றன. திட்டங்
களுடைய நோக்கங்கள், ஏழையெளிய நடுத்தர மக்களுக்கும், வாய்ப்பு
இல்லாத, வசதி இல்லாத மக்களுக்கும் நலன்களைக் கொடுப்பதற்காக இருக்
கின்றன. ஆனால் அந்தத் திட்டங்களைச் செயல்படுத்தும்போதுதான்
பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதற்கு மிக முக்கியமான காரணம்,
விடுதலை அடைந்த பிறகு நாம் அதிகமாகச் சிந்தித்துச் செயல்படுத்தாத,
கவனம் செலுத்தாத ஒரு துறை இந்த நிர்வாகத் துறை. நிர்வாகத் துறை
யிலே இருப்பவர்களுக்கு ஒரு சரியான பயிற்சி கொடுக்காததால்தான், அது
நன்கு செயல்படவில்லை. இந்த நிர்வாகத்திலே இரண்டு வகையானவர்கள்
இருக்கின்றார்கள். ஒன்று Work minded ஆக இருப்பவர்கள். இன்
னொன்று Service minded ஆக இருப்பவர்கள். இன்றைய நாட்டில் 70
சதவிகிதத்திற்குமேல் படிக்கத் தெரியாத பாமர மக்கள் மிகுந்த இந்த நாட்டில்
Service minded என்று சொல்லக்கூடிய, சேவை செய்யும் மனப்பான்மை

[திரு. கெ. சா. லெட்சுமிகாந்தன்] [1984 மார்ச் 29

யுடைய அதிகாரிகள் மூலமாகத்தான், ஏழைஎளிய மக்களுக்கு நாம் சரியான முறையில், அரசினுடைய திட்டங்களைக் கொண்டு சேர்க்க முடியுமே தவிர, Work minded என்று சொல்லக்கூடிய, வெறும் வறட்டு விதிமுறைகளை வைத்துக்கொண்டு அதைக் கடுமையாகப் பின்பற்றிக் கொண்டு, அதை ஒட்டியே வியாக்கியானங்கள் செய்து கொண்டிருக்கின்ற, அதிகாரிகளால் ஏழைஎளிய மக்களுக்கு நன்மைகளை நிச்சயமாகச் செய்ய முடியாது. ஆதலால்தான், விடுதலை அடைந்த பிறகு நாம், இதுவரையிலே சிந்தனை செலுத்தாமல் இருந்தாலும்கூட, இனிமேலாவது அதற்கான சிந்தனையைச் செலுத்தி, அதற்கான கவனத்தைச் செலுத்தி, இந்த அதிகாரிகளுக்கு 'சர்வீஸ் மைண்ட்டட்னஸ்', சேவை மனப்பான்மை வரக்கூடிய அளவில் பயிற்சி அளிக்கத் தகுந்த நடவடிக்கைகளை நம் அரசு செய்தால்தான் நல்லது. இல்லையெனில் எவ்வளவு கோடிக்கணக்கான ரூபாயை நாம் செலவழித்து, திட்டங்களைத் தீட்டினாலும், அந்தத் திட்டங்களின் பலன்கள் நாம் எதிர் பார்க்கக்கூடிய சமுதாயத்தினுடைய மக்களுக்கு, அடிப்படை மக்களுக்குச் சென்று சேராது என்பதை மீண்டும், மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அந்த ஏற்பாடுகளைச் செய்யாத வரையில், பல பிரச்சினைகள், குறைபாடுகள் பற்றி நாம் நிரந்தரமாகச் சிந்திக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதை நான் எடுத்துச் சொல்லி, இந்த நிர்வாகத்தில் தாமதம் போன்ற குறைபாடுகளுக்கெல்லாம் அந்த 'சர்வீஸ் மைண்ட்டட்னஸ்' இல்லாததுதான் காரணம் என்று கூற விரும்புகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், வருகின்ற ஆண்டிலேயாவது, அரசு ஊழியர்களுக்கு இப்படிப்பட்ட, ஒரு நல்ல பயிற்சி கொடுப்பதற்கு தகுந்த பயிற்சி கொடுப்பதற்கு நல்ல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், நான் அன்று சொன்ன காரணத்தையே திரும்பிச் சொல்கிறேன். சட்டமன்ற உறுப் பினர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க வேண்டும், இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்கவில்லை. நான் மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் உட்பட சொல்கிறேன். பேரவை உறுப்பினராக இருந்தாலும், மேலவை உறுப்பினராக இருந்தாலும், ஒரு சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய கடமைகளைச் சரியாக, செம்மையாக, முழுமையாகச் செய்ய வேண்டுமென்றால், அதற்கு சில உதவிகளை அரசு செய்ய வேண்டும். அவ்வளவுதான். அப்படிப்பட்ட பல உதவிகளை நான் கேட்கின்ற அந்த நோத்தில் ஒரு உதவியை நான் சுட்டிக் காட்டுகிறேன்.



[திரு. கெ. சா. லெட்சுமிகாந்தன்]

984 மார்ச் 29]

நான் பலமுறைகள் சுட்டிக்காட்டியதைப்போல், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், அது மேலவையாக இருந்தாலும், பேரவையாக இருந்தாலும், ஒவ்வொரு உறுப்பினரும் தன்னுடைய சட்டமன்றக் கடமைகளைச் சரியான முறையிலே நிறைவேற்றுவதற்கு ஒரு அலுவலகம் இருக்க வேண்டும் என்ற கருத்தினை நான் மீண்டும் வலியுறுத்திக்கொள்ள விரும்புகிறேன். ஏழை எளிய மக்களையும், வாய்ப்பு இல்லாத, வசதி இல்லாத மக்களையும், படிக்கத் தெரியாத பாமர மக்களையும், சட்டமன்ற உறுப்பினர்கள், கேட்டுத் தெரிந்து நேரடி நடவடிக்கை எடுப்பதற்கு அந்த அலுவலகம் உறுதுணையாக இருக்கும் என்ற அடிப்படையிலே, இந்த உதவியும் செய்து தருமாறு மீண்டும் நான் இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டு, இந்தக் கருத்துக்களைச் சொல்லு வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

(முற்பகல் 11-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவைப்போட்டி, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கருத்துக்களைத் தெரி வித்தார்கள். கல்வித் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது இந்த மன்றத்திலே விவாதம் நடைபெற்றபோது, விரிவான விவாதத்தை நடத்தாமல், இந்த நான்கு உறுப்பினர்களும் ஆசிரியர்களுக்காகவே இருந்து, அதுபற்றிக் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கருத்துக்களை அன்றைக்குக் கல்விக் கொள்கையாக வரும்போதே தெரிவித் திருப்பார்களேயானால், கல்வி அமைச்சரும் இதற்குரிய பதிலை அன்றைக்கே சொல்லியிருப்பார்கள். இன்றைக்கு நிதி ஒதுக்கத்தோடு நான் சென்றிருப் பேன். ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் பல கருத்துக்களை, ஏற்கெனவே வற்புறுத்திய கருத்துக்களை, இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஊக்கத் தொகை கொடுப்பதுபற்றிக் குறிப்பிட்டார்கள். இதுகுறித்து அன்றே தெளிவுபடுத்தினேன். மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

ஊக்கத் தொகை பெற்று வருகிறவர்கள் தொடர்ந்து பெற்று வருவார்கள். அதை நிறுத்திவிட மாட்டார்கள். சென்ற ஆண்டு இறுதி செப்டம்பர் திங்க ளிலேதான் இந்த உத்தரவு போடப்பட்டது. ஏன் இந்த நிலை வந்தது என்று சொன்னால், இவ்வாறு ஊக்கத்தொகை கொடுப்பதன் மூலம் சில சமயங்களில் ஜூனியருக்கு அதிகச் சம்பளம் வந்து, சீனியர் குறைவாக வாங்குகின்ற ஒரு தன்மை இருக்கும் காரணமாக, மாற்ற வேண்டிய அவசியம் வந்ததென்று நிர்வாக சீர்திருத்தத் துறையினர் சொன்னார்கள். " கல்வித்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 29

றையைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட ஒருநிலை வராது. சீனியர் -
ஜூனியர் பிரச்சினை மற்ற அரசுத் துறைகளில் இருப்பதுபோல்,
துறையில் இல்லை. கல்வித் துறையில் அந்தக் குறைபாடுகள் வராது. ஆகவே
இந்தத் துறையைத் தனியாகவே கவனித்து, ஏற்கெனவே இருக்கின்ற அந்த
ஊக்கத் தொகை முறையையே நீட்டிக்கலாம் என்கிற அளவுக்கு மாண்புமிகு
உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். மேற்படி கருத்தை கல்வித் துறை
சிபாரிசு செய்யுமானால், பரிசீலிக்கிறேன் என்று அன்று சொன்னேன். இப்
போதும் திரும்பத் திரும்ப அதையே சொல்கிறேன். ஒட்டுமொத்தமாக அரசு
ஊழியர்களுக்குப் போடப்பட்ட உத்தரவு ஆசிரியர்களுக்கும் சேர்த்து போடப்
பட்டிருக்கிறது. ஆக ஆசிரியர்களுக்கு ஏற்கெனவே இருக்கும் நிலையே
நீடிக்கலாம், அந்தக் கருத்தைத் தனியாகவே பரிசீலிக்க வேண்டுமென்று
மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகின்ற கருத்துக்களின் அடிப்படையில் கல்வித்
துறை தெரிவிக்குமேயானால், மீண்டும் பரிசீலிக்கிறேன் என்று அன்று
சொன்னேன். அதையே திரும்பத் திரும்ப இப்போதும் சொல்கிறேன்.

கல்வித் துறையினர் ஊக்கத் தொகையா அல்லது ஒட்டுமொத்தத்
தொகையா என்பதிலே இன்னமும் திட்டவட்டமான முடிவு எடுக்கவில்லை
என்றுதான் கருதுகிறேன்.

அடுத்து, அணுகுமுறையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்
சொன்னார்கள். சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள், பேரவை உறுப்பி
னர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எந்த ஒரு அமைச்சருக்கும்
ஏதேனும் ஒரு கருத்தைப் பற்றித் தெரிவித்து, அவைகளைப்பற்றி
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால், முறைப்படி அவர்களுக்கு
உரிய பதிலை அனுப்ப வேண்டுமென்று பொதுவான அறிவுரைகள் எல்லா
அமைச்சர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக சட்ட
மன்ற மேலவை உறுப்பினர்கள், பேரவை உறுப்பினர்கள், சட்ட
மன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களிடமிருந்து கடிதம் வந்தால், அதன்மீ
எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எல்லது நடவடிக்கை எடுக்கப்பட்ட முழு
விவரங்கள் அவர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டுமென்று ஏற்கெனவே சொல்
லப்பட்டிருக்கிறது. ஆனாலும் அமைச்சர்களிடத்திலே கொடுக்கின்ற அவ்வளவு
மனுக்களுக்கும் ஒவ்வொருவருக்கும் பதில் சொல்வது என்பதை
அமைச்சர்கள் மட்டத்திலே ஒத்துக்கொள்வோமேயானால், பிறகு சாதாரண
வேண்டுகோளுக்குக்கூட யாரும் தாசில்தார்களிடத்திலே போக மாட்டார்கள்.



1984 மார்ச் 29] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

எனவே, சட்டமன்ற
எல்லோரும் அமைச்சர்களிடத்திலேதான் வருவார்கள். எனவே, சட்டமன்ற
மேலவை, பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏதாவது
புகாரோ அல்லது கோரிக்கையோ அல்லது தெரிக்கவோ வைப்பார்
களானால், அதற்குரிய பதில் அனுப்ப வேண்டுமென்றுதான் சொல்லியிருக்
கிறோம்.

அடுத்து, ஆசிரியர்கள் அதிகாரிகளைக் காணச் சென்றால், அதிகாரிகள்
உரிய முறையில் பதில் சொல்ல மறுக்கிறார்கள் என்று சொன்னார்கள். பொது
வாக ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எந்தவொரு அதிகாரியாக
இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்கள், பேரவை உறுப்பினர்கள், மேலவை
உறுப்பினர்கள் அவர்களை அணுகி அவர்களிடத்திலே ஒரு குறையைக் கேட்கப்
போனால், அவர்கள் எழுந்து நின்று, மரியாதை செலுத்தி, உட்கார வைத்துப்
பதில் சொல்ல வேண்டுமென்று பொதுவான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்
கிறது. பண்பாடு உள்ளவர்கள் சிலர் செய்கிறார்கள். பண்பாடற்றவர்கள்
செய்யவில்லை. செய்ய வேண்டுமென்பதுதான் அரசின் எண்ணம். சட்ட
மன்றப் பேரவை, மேலவை நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று வரும்போது,
அவர்கள் பொது மக்களின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு
உரிய மரியாதை தர வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.
மீண்டும்கூட அது நினைவுபடுத்தப்பட்டிருக்கிறது. அந்த முறை வருமென்று
கருதுகிறேன்.

மாற்றுப் பணிக்கு அனுப்பி வைத்தல்பற்றி மாண்புமிகு உறுப்பினர்
திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். சாதாரணமாக
ஒரு துறையிலிருந்து, குறிப்பாக கணக்குத் துறை, ஆய்வுத் துறையிலிருந்து
அனுப்பும்போது மூன்று ஆண்டுகளுக்கு மேல் இருக்கக்கூடாது என்பது
பொதுவான விதிமுறை. ஆனால் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அனுப்பப்
பட்டவர் திரும்பி அழைக்கப்படுவது, வேறு ஒருவர் அனுப்பப்படுவது என்பது
கையாளப்பட்டு வருகிறது. சில நேரங்களில் 4 ஆம் ஆண்டுக்கு நீட்டித்துக்
கொடுங்கள், 5 ஆம் ஆண்டுக்கு நீட்டித்துக் கொடுங்கள் என்று அங்கேயிருந்து
பரிந்துரை வரும்போது, எதிர்பாராத நிலையில், சில இடங்களில் 4 ஆம்
ஆண்டு, 5 ஆம் ஆண்டு என்று நீட்டிக்கப்படுகிறது. நாங்களாக அப்படி
நீட்டிப்பதில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதுபோல,
குறிப்பிட்ட பிரச்சினையைப் பொறுத்தவரையில், என்ன நிலை என்று
எனக்குத் தெரியவில்லை. அனுப்பப்பட்டவர்கள் திரும்பி அழைக்கப்பட
வேண்டுமென்பதுதான் அரசினுடைய கொள்கை, என்னுடைய கொள்கையும்
கூட அதுதான். என்னிடத்தில் கோப்பு வரும்போது, மூன்று ஆண்டுகள்
ஒருவர் இருந்துவிட்டார்களானாலும், அவரை ஏன் மீண்டும் விரும்பு

கிறார்கள் என்பதற்குக் காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்; இவர் ஏன் இருக்க விரும்புகிறார் என்பதற்கும் காரணத்தைக் கண்டு பிடிக்க வேண்டும்; எந்தக் காரணங்களானாலும் அவரை மாற்றிவிட்டால் நல்லது என்று நானே சொல்லுகின்றேன். சில நேரங்களில் அவர்களாகக் கேட்கிறார்கள். அந்தத் தன்மையைத் தவிர, வேறு வகையிலே அவை மேற்கொள்ளப்படுவதில்லை. இவை மட்டுமல்லாமல் வேறு பல பிரச்சினைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். தேர்தல்கள் எப்படி நடைபெற வேண்டுமென்பதற்கு விதி முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. மேலவைத் தேர்தல்கள், பட்டதாரித் தொகுதித் தேர்தல்கள், ஆசிரியர் தொகுதித் தேர்தல்கள், சட்டமன்றப் பொதுத் தேர்தல்கள் நடத்த விதி முறைகள், ஒழுங்கு முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. மாற்று வாக்கு போடக்கூடாது என்பதற்கு பல்வேறு முறைகள் வைத்திருக்கிறார்கள். மாற்று வாக்கு போடும்போது, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சட்டங்கள் இருக்கின்றன. எல்லாம் ஒழுங்காக நடைபெற வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் விதிமுறைகள் இருக்கின்றன. சில நேரங்களில் அதை மீறும்போது, நடவடிக்கை எடுக்கும் அவசியம் வந்து, சில பேர்களைக் கைது செய்வது அவசியம், அவர்களைப் பொறுத்து நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்று ஏற்படுகிறது. தேர்தல் கமிஷன், தேர்தலை நடத்துகிறவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அரசாங்கத்தின் சார்பிலும் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை வரும்போது, அரசாங்கமும் நடவடிக்கை எடுக்கிறது. இந்தியப் பேரரசு ஒவ்வொரு வாக்காளருக்கும் போட்டோ கொடுக்க முடியுமா என்பதை ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. அதற்குப் பெரும் செலவு ஏற்படுமென்பதால், அதைத் தள்ளிப் போட்டிருக்கிறார்கள். ஓட்டு போடுவதற்கு எலக்ட்ரானிக் மெஷின்களைப் பயன்படுத்தலாமென்று சொல்லி, அவைகளைப் பயன்படுத்தி, கோர்ட் அதைப் பயன்படுத்தக் கூடாது என்று தீர்ப்பு வந்திருக்கிறது. அது குறித்து அப்பீல் செய்திருக்கிறார்கள். தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டுமென்ற அடிப்படையிலே அந்த முறை வந்திருக்கிறது. ஒவ்வொருவருக்கும் போட்டோ ஒட்டிய ஐடென்டிபிகேஷன் கார்டைக் கொடுத்துவிட்டால், ஓட்டு போட வரும்போது அவர் தானா இவர் என்பதைத் தெரிந்து கொள்ளலாம் என்பதால், அது மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை வரும்போது, இந்தக் குறைபாடுகள் ஏற்படாதென்று கருதுகிறேன்.



பகுதி நேர ஆசிரியர்களாக வேலை பார்க்கிறவர்கள் 150 ரூபாய் பெறுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களும், மற்றவர்களும் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல தடவை வற்புறுத்தியிருக்கிறார்கள். வொகேஷனல் டீச்சர்ஸ் நாலாயிரத்து இல்லை பேர்கள் அதில் வருகிறார்கள். அவர்களுடைய சம்பளம் 150 ரூபாய் என்பதை 300 ரூபாயாக உயர்த்த அரசு ஏற்பளித்திருக்கிறது. அதற்கான ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும். அதனால் நாலாயிரத்து மில்லை ஆசிரியர்கள் பயன் பெறுவார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றைத் துறையினர் தக்க முறையிலே ஆராய்ந்து, தக்க வகையிலே நடவடிக்கை எடுப்பார்கள் என்று கூறி, இந்த நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11—30)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1984) பரிசீலனை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிசீலனை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை எதுமில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1984 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 26/1984) திருப்பி அனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் ; அவை முன் உள்ள பிரச்சினை— "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1984) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர் அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(முற்பகல் 11-30)

5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

இல்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

* 89. 1984-85 ஆம் ஆண்டிற்கான புள்ளியியல் மற்றும் சரக்கத்துறை பற்றிய செயலாக்கத் திட்டம். (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

£ 90. பிற்பட்டோர் நலத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1984-85. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

£ 91. 1984-85 ஆம் ஆண்டிற்கான பிற்பட்டோர் நலத்துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

£ 92. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1984).

£ 93. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1984).

---

* 27—3—1984 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.

£ 28—3—1984 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.



## இணைப்பு I

(199 ஆம் பக்கத்தில் குறிப்பிட்ட வினா 132-க்கான விடையைக் காண்க.)

1979 ஆம் ஆண்டு முதல் அரசு ஆண்டுதோறும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு விருது வழங்கும் விழாவினை நடத்தி, தேசிய, பன்னாட்டு, உலக அரங்குகளில் வெற்றி வாகை சூடிய விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகளுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கி சிறப்பிக்கிறது.

1979-80 ஆம் ஆண்டில் 14 வீராங்கனைகளும்.

1980-81 ஆம் ஆண்டில் 5 வீராங்கனைகளும்.

1981-82 ஆம் ஆண்டில் 48 வீராங்கனைகளும்.

இச்சிறப்பைப் பெற்றனர்.

பள்ளியில் பயின்றுவரும் 16 வயதுக்குட்பட்ட விளையாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் ஆண்டுதோறும் கோடைகால பயிற்சி முகாம்களை விளையாட்டுத்துறை நடத்தி வருகிறது. இப்பயிற்சி பெறும் மாணவ மாணவிகளுக்கு போக்குவரத்து உள்ளிட்ட இலவச உணவும், இடவசதியும் அளிக்கப்படுகிறது. 1979-80-ல் 22 மாணவிகளும், 1980-81-ல் 45 மாணவிகளும் இப்பயிற்சி முகாம்களில் பயிற்சி பெற்றனர்.

வயோதிகம் அடைந்து ஏழ்மையில் இன்னலுறும் சிறந்த விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகளுக்கு மாதம் ரூ. 75 வீதம் ஓய்வூதியமாக வழங்கும் திட்டம் 1979-80 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு பெண் உட்பட 25 பேர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

டென்னிஸ் விளையாட்டில் சிறந்து விளங்கும் செல்விகள் அம்ருதா அலுவாலியா, வித்தியாபிரியா, நம்ரதா அப்பாராவ் ஆகியோர் அமெரிக்க நாட்டிற்குச் சென்று டென்னிஸ் விளையாட்டில் முதற்தரமாக பயிற்சி பெறுவதற்காக தலா ரூ. 10,000 மான்யம் வழங்கப்பட்டது.

சிறந்த விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகள் மூன்றாவது/நான்காவது பிரிவு அரசுப் பணிகளில் நேரடியாக வேலையில் அமர்த்த வேலைவாய்ப்பகத்தின் விதிகளைத் தளர்த்தியுள்ளது.

விளையாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும், அரசுத் துறை களிலும், அரசு மேற்கொள்ளும் பொது நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பெறாமல் நேரடியாக வேலையில் அமர்த்தவும், அரசுப் பணியாளர் தேர்வுக்குழு நடத்தும் தேர்வுகளில் சலுகைகள் அளிக்கவும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

1982-83-ம் கல்வி ஆண்டில் பெண்களுக்கென தனியாக ஒரு விளையாட்டுப் பள்ளி, கோவை பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தொடங்கப்பட அரசு அனுமதி அளித்துள்ளது.

குடியரசுத் தினப் போட்டிகள், பாரதிப் பொங்கல் விழாப் போட்டிகளில் கலந்து கொண்டு முதலாவது, இரண்டாவது பரிசு பெறும் விளையாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் ரூ. 600, ரூ 400 (முதல், இரண்டாவது இடம்) உபகாரச் சம்பளம் (ஸ்காலர்ஷிப்) வழங்கும் திட்டம் ஒன்றை 1982-83-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்த அரசு அனுமதியளித்துள்ளது.

இணைப்பு II

(213 ஆம் பக்கத்தில் இனம் 5-க்கான விடையைக் காண்க.)

1983-84 ஆம் கல்வி ஆண்டில் மாறுதல் மூலம் நியமனம் செய்யப்பட வேண்டியவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்களில், 15 முதுகலை கணிதப் பாட ஆசிரியர்கள், பள்ளி மாணவர்களின் நலன் கருதி, இடைக்கால ஏற்பாடாக, தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டார்கள். இவர்களுக்கு வழங்கப்பட்ட ஆணையில் "இந் நியமனங்கள் நிலையான ஆசிரியர்களுக்கான பணியிடத்தில் தற்காலிக பதிலி ஆசிரியர் (Substitute) அடிப்படையில் செய்யப்படுகின்றது. என்றும் நிலையான ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படும்போது இவர்களுடைய மாறுதல் மூலம் முடிவு பெறும்" என்றும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டது. தற்காலிக நியமனங்கள் மூலம் இப் பணியிடங்களில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் மாறுதல் போது, இத் தற்காலிக நியமனங்களில் பணி செய்த 15 ஆசிரியர்கள் பணி ஏற்ற முடிவு பெற்றது. இந்தத் தற்காலிக ஆசிரியர்கள், நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் பணி போது பதிலி ஆசிரியர்கள் (Substitutes) என்று தெளிவாகத் தெரிவிக்கப் பட்டு விட்டதால் இவர்களைப் பணியில் நீடிக்க வழி இல்லை.



இணைப்பு III

(215 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL NO. 25 OF 1984.

(As passed by the Assembly.)

*A Bill to provide for the withdrawal of certain sums from and out of the Consolidated Fund of the State for the services of a part of the financial year commencing on the 1st April 1984.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fifth Year of the Republic of India as follows:—

1. *Short-title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (Vote on Account) Act, 1984.

2. *Withdrawal of certain sums from and out of the Consolidated Fund of the State for a part of the financial year commencing on the 1st April 1984.*—The State Government may withdraw from and out of the Consolidated Fund of the State sums not exceeding seven hundred and forty-five crores, fifty-one lakhs and thirty-four thousand rupees being moneys required to meet—

(*a*) the grants made in advance by the Tamil Nadu Legislative Assembly for a part of the financial year commencing on the 1st April 1984 as set forth in column (3) of the Schedule; and

(*b*) the expenditure charged on the Consolidated Fund of the State for the same part of the same financial year, as set forth in column (4) of the Schedule.

3. *Appropriation.*—The sums authorized to be withdrawn from and out of the Consolidated Fund by this Act shall be appropriated for the services and purposes expressed in the Schedule in relation to the said year.

## THE SCHEDULE.

| Demand number. | Services and purposes. | Sums not exceeding — Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 1 | Land Revenue Department .. | 3,39,25,000 | .. | 3,39,25,000 |
| 2 | State Excise Department .. | 94,80,000 | .. | 94,80,000 |
| 3 | Motor Vehicles Acts—Administration .. .. .. | 64,95,000 | .. | 64,95,000 |
| 4 | General Sales Tax and Other Taxes and Duties—Administration .. .. | 2,85,20,000 | 6,000 | 2,85,26,000 |
| 5 | Stamps—Administration .. | 24,70,000 | .. | 24,70,000 |
| 6 | Registration .. .. .. | 1,32,85,000 | 1,000 | 1,32,86,000 |
| | *Debt Charges* .. .. | .. | 37,21,93,000 | 37,21,93,000 |
| 7 | State Legislature .. .. | 34,60,000 | 80,000 | 35,40,000 |
| 8 | Elections .. .. .. | 74,75,000 | .. | 74,75,000 |
| 9 | Head of State, Ministers and Headquarters Staff .. .. | 6,37,62,000 | 35,74,000 | 6,73,36,000 |
| 10 | Milk Supply Schemes .. .. | 32,03,000 | .. | 32,03,000 |
| 11 | District Administration .. | 7,14,88,000 | 17,000 | 7,15,05,000 |
| 12 | Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. .. .. .. | 70,03,000 | 10,000 | 70,13,000 |
| 13 | Administration of Justice .. | 3,01,35,000 | 40,68,000 | 3,42,03,000 |
| 14 | Jails .. .. .. .. | 1,80,64,000 | 1,000 | 1,80,65,000 |
| 15 | Police .. .. .. .. | 21,58,87,000 | 25,000 | 21,59,12,000 |
| 16 | Fire Services .. .. .. | 1,62,25,000 | 1,000 | 1,62,26,000 |
| 17 | Education .. .. .. | 1,00,58,51,000 | 2,000 | 1,00,58,53,000 |
| 18 | Medical .. .. .. .. | 24,82,77,000 | 1,000 | 24,82,78,000 |
| 19 | Public Health .. .. .. | 41,08,47,000 | .. | 41,08,47,000 |
| 20 | Agriculture .. .. .. | 22,75,60,000 | 2,000 | 22,75,62,000 |
| 21 | Fisheries .. .. .. | 1,45,21,000 | 3,000 | 1,45,24,000 |
| 22 | Animal Husbandry .. .. | 5,99,42,000 | 1,000 | 5,99,43,000 |
| 23 | Co-operation .. .. .. | 2,77,81,000 | .. | 2,77,81,000 |
| 24 | Industries .. .. .. | 57,33,000 | .. | 57,53,000 |
| 25 | Cinchona .. .. .. | 76,98,000 | .. | 76,98,000 |
| 26 | Handlooms and Textiles .. | 3,12,00,000 | .. | 3,12,00,000 |
| 27 | Khadi .. .. .. .. | 57,25,000 | .. | 57,25,000 |
| 28 | Community Development Projects and Municipal Administration .. .. | 52,23,91,000 | 1,000 | 52,23,92,000 |
| 29 | Labour including Factories .. | 2,79,47,000 | .. | 2,79,47,000 |
| 30 | Social Welfare .. .. .. | 17,16,73,000 | .. | 17,16,73,000 |
| 31 | Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. | 12,00,80,000 | 3,76,000 | 12,04,56,000 |
| 32 | Welfare of the Backward Classes, etc. .. .. .. | 2,74,66,000 | 1,000 | 2,74,67,000 |
| 33 | Housing .. .. .. .. | 3,91,69,000 | .. | 3,91,69,000 |
| 34 | Urban Development .. .. | 6,80,44,000 | .. | 6,80,44,000 |
| 35 | Civil Supplies .. .. .. | 24,51,22,000 | 11,000 | 24,51,33,000 |
| 36 | Irrigation .. .. .. | 13,06,92,000 | 3,000 | 13,06,95,000 |
| 37 | Public Works—Buildings .. | 93,46,000 | 13,000 | 93,59,000 |
| 38 | Public Works—Establishment and Tools and Plant .. | 4,04,61,000 | .. | 4,04,61,000 |
| 39 | Roads and Bridges .. .. | 17,92,66,000 | .. | 17,92,66,000 |
| 40 | Road Transport Services and Shipping .. .. .. | 1,08,33,000 | 1,000 | 1,08,34,000 |
| 41 | Relief on account of Natural Calamities .. .. .. | 3,000 | 2,14,75,000 | 2,14,78,000 |
| 42 | Pensions and Other Retirement Benefits .. .. .. | 11,29,56,000 | 37,48,000 | 11,67,04,000 |
| 43 | Miscellaneous .. .. .. | 19,21,94,000 | 3,43,000 | 19,25,37,000 |
| 44 | Stationery and Printing .. | 3,79,08,000 | 84,000 | 3,79,92,000 |
| 45 | Forest Department .. .. | 3,02,90,000 | 2,000 | 3,02,92,000 |
| 46 | Compensations and Assignments .. .. .. .. | 6,12,58,000 | 5,63,000 | 6,18,21,000 |
| 47 | Information, Tourism and Film Technology .. .. | 59,28,000 | .. | 59,28,000 |
| 48 | Rural Industries .. .. | 2,35,96,000 | .. | 2,35,96,000 |
| 49 | Capital Outlay on Agriculture.. | 1,25,70,000 | 1,000 | 1,25,71,000 |
| 50 | Capital Outlay on Industrial Development .. .. | 4,02,83,000 | .. | 4,02,83,000 |
| 51 | Capital Outlay on Irrigation .. | 14,40,74,000 | .. | 14,40,74,000 |
| 52 | Capital Outlay on Public Works—Buildings .. .. | 12,21,19,000 | 1,01,000 | 12,22,20,000 |
| 53 | Capital Outlay on Roads and Bridges .. .. .. | 6,93,43,000 | 1,000 | 6,93,44,000 |
| 54 | Capital Outlay on Road Transport Services and Shipping .. | 33,92,000 | .. | 33,92,000 |
| 55 | Capital Outlay on Forests .. | 4,34,38,000 | .. | 4,34,38,000 |
| 56 | Capital Outlay on Rural Industries .. .. .. .. | 32,34,000 | 1,000 | 32,35,000 |
| 57 | Miscellaneous Capital Outlay. | 3,32,73,000 | 2,000 | 3,32,75,000 |
| 58 | Loans and Advances by the State Government .. .. | 86,34,98,000 | .. | 86,34,98,000 |
| | *Public Debt—Repayment* .. | .. | 1,08,05,43,000 | 1,08,05,43,000 |
| | GRAND TOTAL .. | 5,96,78,79,000 | 1,48,72,55,000 | 7,45,51,34,000 |

I Certify that this is a Money Bill.

Fort St. George,
Madras

Date 28—3—1984.

SPEAKER,
K. RAJARAM,
Tamil Nadu Legislative Assembly.

[39-ஆம் பக்கத்தின் இனம் 4(2)-க்கான அறிக்குறிப்பைக் காண்க]

## L.A. BILL No. 26 OF 1984.

(As passed by the Assembly.)

*A Bill to provide for the appropriation of certain further moneys out of the Consolidated Fund of the State for the service of the financial year which commenced on the 1st April 1983.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty fifth Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation Act, 1984.

2. *Supplementary appropriation out of the Consolidated Fund for the financial year which commenced on the 1st April 1983.*—The State Government may appropriate out of the Consolidated Fund of the State for the financial year which commenced on the 1st April 1983, a further sum not exceeding one thousand one hundred and thirty crores nine lakhs and sixty-eight thousand rupees being moneys required to meet —

(*a*) the supplementary grants made by the Tamil Nadu Legislative Assembly for that period, as set forth in column (3) of the Schedule; and

(*b*) the supplementary expenditure charged on the Consolidated Fund of the State for that period, as setforth in column (4) of the Schedule.



## THE SCHEDULE.

(*See* section 2)

| Demand number. | Services and purposes | *Sums not exceeding* Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 1 | Land Revenue Department .. | 5,54,54,000 | .. | 5,54,54,000 |
| 2 | State Excise Department .. | 3,07,34,000 | .. | 3,07,34,000 |
| 4 | General Sales Tax and Other Taxes and Duties—Administration .. | 1,26,54,000 | *15,000* | 1,26,69,000 |
| 5 | Stamps—Administration .. | 12,78,000 | .. | 12,78,000 |
| | *Debt Charges* .. .. | .. | *15,60,84,000* | 15,60,84,000 |
| 7 | State Legislature .. .. | 6,14,000 | .. | 6,14,000 |
| 8 | Elections .. .. .. | 1,92,73,000 | .. | 1,92,73,000 |
| 9 | Head of State, Ministers and Headquarters Staff .. .. | 3,07,36,000 | *22,03,000* | 3,29,39,000 |
| 10 | Milk Supply Schemes .. | 3,42,000 | .. | 3,42,000 |
| 11 | District Administration .. | .. | *5,84,000* | 5,24,000 |
| 12 | Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. .. .. | 1,68,000 | .. | 1,68,000 |
| 13 | Administration of Justice .. | 42,22,000 | *9,78,000* | 52,00,000 |
| 14 | Jails .. .. .. .. | 1,000 | .. | 1,000 |
| 15 | Police .. .. .. .. | 7,000 | *2,04,000* | 2,11,000 |
| 16 | Fire Services .. .. .. | 38,01,000 | *1,08,000* | 39,09,000 |
| 17 | Education .. .. .. | 38,69,50,000 | *1,66,000* | 38,71,16,000 |
| 18 | Medical .. .. .. | 4,90,62,000 | *25,000* | 4,90,87,000 |
| 19 | Public Health .. .. .. | 11,000 | .. | 11,000 |
| 20 | Agriculture .. .. .. | 15,61,30,000 | .. | 15,61,30,000 |
| 21 | Fisheries .. .. .. | 1,000 | | 1,000 |
| 22 | Animal Husbandry .. .. | 3,000 | .. | 3,000 |
| 23 | Co-operation .. .. .. | 39,15,000 | .. | 39,15,000 |
| 24 | Industries .. .. .. | 4,41,99,000 | .. | 4,41,99,000 |
| 25 | Cinchona .. .. .. | 2,49,000 | .. | 2,49,000 |
| 26 | Handlooms and Textiles .. | 14,07,79,000 | .. | 14,07,79,000 |
| 27 | Khadi .. .. .. | 83,000 | .. | 83,000 |
| 28 | Community Development Projects and Municipal Administration .. .. | 21,51,78,000 | .. | 21,51,78,000 |
| 29 | Labour including Factories .. | 64,71,000 | .. | 64,71,000 |
| 30 | Social Welfare .. .. | 2,000 | .. | 2,000 |
| 31 | Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. | 2,65,38,000 | *16,16,000* | 2,81,54,000 |

| Demand number. | Services and purposes. | Sums not exceeding — Voted by the Legislative Assembly. | Sums not exceeding — Charged on the Consolidated Fund of the State. | Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 33 | Housing .. .. .. | 1,000 | .. | 1,000 |
| 35 | Civil Supplies .. .. .. | 22,14,13,000 | .. | 22,14,13,000 |
| 36 | Irrigation .. .. .. | 2,52,12,000 | .. | 2,52,12,000 |
| 37 | Public Works—Buildings .. | 5,81,000 | 16,84,000 | 22,65,000 |
| 38 | Public Works—Establishment and Tools and Plant .. | 98,25,000 | .. | 98,25,000 |
| 39 | Roads and Bridges .. .. | 15,59,31,000 | .. | 15,59,31,000 |
| 40 | Road Transport Services and Shipping .. .. .. | 22,34,000 | .. | 22,34,000 |
| 41 | Relief on Account of Natural Calamities .. .. .. | 22,09,30,000 | .. | 22,09,30,000 |
| 42 | Pensions and Other Retirement Benefits .. .. .. | 15,85,99,000 | 26,27,000 | 16,12,26,000 |
| 43 | Miscellaneous .. .. .. | 1,000 | 1,85,000 | 1,86,000 |
| 45 | Forest Department .. .. | 2,21,84,000 | .. | 2,21,84,000 |
| 46 | Compensations and Assignments | 2,31,93,000 | .. | 2,31,93,000 |
| 47 | Information, Tourism and Film Technology .. .. | 16,50,000 | .. | 16,50,000 |
| 48 | Rural Industries .. .. | 54,04,000 | .. | 54,04,000 |
| 49 | Capital Outlay on Agriculture | 20,72,000 | | 20,72,000 |
| 50 | Capital Outlay on Industrial Development .. .. | 10,18,41,000 | .. | 10,18,41,000 |
| 51 | Capital Outlay on Irrigation | 4,000 | .. | 4,000 |
| 52 | Capital Outlay on Public Works—Buildings .. | 9,000 | .. | 9,000 |
| 54 | Capital Outlay on Road Transport Services and Shipping .. .. .. | 9,09,34,000 | | 9,09,34,000 |
| 55 | Capital Outlay on Forests .. | 1,63,88,000 | .. | 1,63,88,000 |
| 56 | Capital Outlay on Rural Industries .. .. .. | 85,94,000 | .. | 85,94,000 |
| 57 | Miscellaneous Capital Outlay | 19,51,26,000 | 3,000 | 19,51,29,000 |
| 58 | Loans and Advances by the State Government .. | 99,35,43,000 | | 99,35,43,000 |
| | *Public Debt—Repayment* | .. | 7,69,00,22,000 | 7,69,00,22,000 |
| | GRAND TOTAL .. | 3,44,45,24,000 | 7,85,61,34,000 | 11,30,09,68,000 |

I Certify that this is a Money Bill.

Fort St. George,
Madras

Date 28—3—1984.

K. RAJARAM,
Tamil Nadu Legislative Assembly.

143899

D
V211,32 N84
N84.208.1-2